# நாவலன்

## சைவாசிரிய கலாசாலை மாணவர் சங்கம்

## யாழ்ப்பாணம்

y of Jaffna
).73
AI
R; MAIN)

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

ARCHIVES

370.73
CAI AR
JUN 9 - 1936
JAFFNA COLLEGE LIBRARY 1872.

உ

சிவமயம்.

# நாவலன்.

சைவாசிரிய கலாசாலை

மாணவர் சங்க வெளியீடு.

UNIVERSITY OF JAFFNA LIBRARY

திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தாது௵ ஆனி௴.

நூலகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
University of Jaffna
250044
Library
250044
250044
ARCHIVES

# விஷய சூசிகை

# CONTENTS


| | | பக்கம். |
|---|---|---|
| 1 | வாழ்த்துப்பா<br>A Poem of Benediction | |
| 2 | நாம் .... ....<br>Ourselves | 1 |
| 3 | மணிநீர்த்தடாகம் .... ....<br>The Pond as seen by the Poet | 6 |
| 4 | பள்ளிப் பாடமும் வீட்டு வேலையும் ....<br>Home-work in Schools | 10 |
| 5 | ஒரு வாய்பாடு .... ....<br>An Arithmetical Table | 18 |
| 6 | புணர்ச்சிக்காரணம் .... ....<br>Causes of Inflections in Tamil | 20 |
| 7 | குறிஞ்சி .... .... ....<br>Love in the Hills | 23 |
| 8 | பாலரும் புலப்பயிற்சியும் ....<br>Children and Sense training | 27 |
| 9 | விவேகத்தை மட்டிடுதல்: பினேற்முறை ....<br>Measurement of Intelligence: Binet's Method | 32 |
| 10 | ஒரு எலேக்சன் கதை .... ....<br>An Election Story | 35 |
| 11 | கரும்பலகைச் சித்திர விளக்கம் ....<br>Illustrations on the Black-Board | 45 |
| 12 | தேரிவதிகாரம் .... ....<br>A Chapter on the Elections (Verse) | 48 |
| 13 | பாலர்பகுதிச் சித்திரம் .... ....<br>Drawing in the Infant-Class | 49 |
| 14 | எமது பிரயாணம் .... ....<br>Our Excursion | 53 |
| 15 | தமிழரும் ஆரியரும் .... ....<br>The Tamils and the Aryans | 57 |

பக்கம்

16 சிசுவளர்ச்சி .... .... 63
The Growth of a Child

17 எனது கனவு .... .... 68
My Dream: a Scheme for the Schools of the Future

18 யாண்டு பலவாக நரையிலவாகுதல் .... 75
What enabled the Poet to be Ever Young

19 பாடசாலையும் தேகப்பயிற்சியும் .... .... 76
Physical Training in Schools

20 திருக்குறள் விகடம் .... .... 81
Peculiar Uses of Kural: Wit to Humour

21 சதுரங்கத்தின் கல்விப்பயன் .... .... 82
Educative Value of Chess

22 தமிழ் .... .... 85
A Poem on Tamil

23 மாதிரி விவேகப் பரீட்சைகள் .... .... 87
Sample Tests of Intelligence

24 பள்ளன் சேர்த்த கள் .... .... 99
A Poem on the Extraction of Toddy

25 நிஜ-மத்திய காலாந்தரம் .... .... 101
Equation of Time.

26 பாடசாலையின் நான்கு உபபருவங்கள் ... 108
The Four Stages of School Life

27 தசமபின்னங் கற்பிக்க மூன்று முறைகள் .... 113
Three Methods of Teaching Decimals

28 பாலர்கழக வரலாறு .... .... 117
History of the Kindergarten

29 பாலர்பகுதிக்குக் கூட்டல் கற்பிக்கும் முறை .... 123
The Teaching of Addition in the Infant Classes.

30 நாவலன் பிள்ளைத்தமிழ் .... 141
Hail ! Navalan

31 சங்க அறிக்கை .... .... 142
The Report of the School Literary Association

32 பத்திராசிரியர் குறிப்புக்கள் .... 143
Editorial Notes

# படங்கள்

# ILLUSTRATIONS

பக்கம்

1 கௌரவ வை. துரைசாமி அவர்கள் (Hon'ble Mr. W. Duraiswamy) .... முகப்பு

2 ஆசிரிய மாணவர் சங்கம் (The School Literary Association) .... .... 5

3 விசேஷ சித்தி யடைந்தவர்கள் (Our Students who distinquished themselves in External Examinations) .... 84

4 எங்கள் புதிய சாதனு பாடசாலை (The Practising School—New Building) .... 117

5 ஆசிரியரும்-ஆசிரிய (விடுகைவகுப்பு) மாணவர்களும் (The Principal, Staff and the Final Students) 141

உ

# தோத்திரம்.

"சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென்றேது
மதம்பூத்தவிநாயகன்றுள் வணங்கிவாழ்வாம்"

— ( ஆறுமுகநாவலர் )

# இளவேனில்

க. "புன்காஞ்சித் தாதுதன் புறம்புதையக் கிளியெனக்கண்
டன்புகொண் மடப்பெடை யலமந்தாங் ககல்வதனை
யென்புருகு குரலழைஇ யிருஞ்சிறகர் குலைத்துகுத்துத்
தன்பெடையைக் குயில்தழுவத் தலைவந்த திளவேனில்"

உ. "தண்காஞ்சித் தாதாடித் தன்னிறங் கரந்ததனைக்
கண்டாளு மடப்பெடை கிளியெனப்போய்க் கையகல
நண்டுவி யிளஞ்சேவ னேக்கோடு விளிபயிற்றித்
தன்சிறகாற் பெடைதழுவத் தலைவந்த திளவேனில்"

௩. "குறுத்தாட் குயிற்சேவல் கொழுங்காஞ்சித் தாதாடி
வெறுத்தாங்கே மடப்பெடை விழைவகன்று நடப்பதனை
மறுத்தாங்கே சிறகுளர்ந்து மகிழ்வாளுக் கொளத்தேற்றி
யுறப்பினு லடிபணியத் தலைவந்த திளவேனில்".

# வாழ்த்துப்பா

## நேரிசை யகவல்

(அ. முருகேசு)

கலைவள ரிலங்கையின் கண்ணென மிளிரும்
வளமுடை யாழ்நகர் வடபா லமைந்து
மாங்கனி வாழை மதுரப் பலாக்கனி
தேங்கனி நிறைந்த திருநெல் வேலி
நன்னகர் நடுவண் நவையற விளங்கி
எம்மவர் நாவினில் இன்புட னாடிடும்
தமிழ்ப்பே ரன்னையைத் தகைபெற விளக்கும்
ஆர்வ மோங்கி யலகில்பல் கலைகளாஞ்
சீர்பெறு பால பண்டித பண்டித
சித்தாந் தத்தொடு மொத்த கலைகளும்
இன்னு மநேக மினியநற் கலைகளும்
அன்புட னூட்டி யகவிரு ளோட்டி
எவ்வெவர் தம்மையு மெழில்பெற விளக்கி
உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவ ரான்ற தொழிலெனு
முரைக்கிலக் காகு முத்தம வோசரை
நற்கலை யூட்டி நலனுற விளக்கும்
இக்கலா சாலை யெனுமெழிற் கோயிலும்
இக்கலா சாலையை யீன்றெடுத் தணைத்து
உச்சிமோந் துணவு நச்சி யருத்தித்
தண்டமிழ் வரைப்பினிற் றுங்குநர்ப் பெறுது
பண்டைநா வலரைப் பற்றுட னினைந்து
கண்ணீர் சோரக் கலுழ்ந்து திரிந்த
தண்டமிழ் சைவம் தகைபெறு மிவற்றை
யெண்டிசை யேற்று மெழில்பெறு சங்கமும்,
அச்சங் கந்தனி லன்பு கொடமர்ந்து
நன்னெறி காட்டி நலியிரு ளோட்டும்

மிக்கபல் கலைகள் மிகையுற வூட்டும்
ஆரா அறிவுடைப் பேரா சிரியரும்,
அன்னவர் வாக்கை யன்பொடு போற்றி
மன்னிய கல்வி மாண்புறக் கற்று
மனவிரு ளிரியும் மாண்புடைச் சிறாரும்
இன்னோர் கூடி யிசைபெற நடாத்தும்
தன்னிகர் தோன்றாத் தகைபொதி கழகமும்,
அக்கழ கத்தை யன்னையாய்ப் பெற்றுத்
தோன்றிற் புகழொடு தோன்றுக வென்னும்
இன்னெறி தனக்கோ ரிலக்கா யமைந்து
வயாவும் வருத்தமும் ஈன்றக்கால் நோவும்
கவான் மகற்கண்ட தாய்மறந் தாங்குத்
தன்றாய் மகிழத் தலந்தொறும் விளங்கிப்
பல்லோ ரகந்தொறும் பயின்று திரிந்து
ஒப்பா ரின்றி யொருவனாய் நிற்கும்
நாவல னென்னும் நாயகக் குழவியும்
வாழ்க வாழ்க வாழ்க வாழ்க
இன்னிசை சிவணி யிருளற வாழ்க
மன்னு வுலகத்து மன்னிய புகழை
நன்னிலம் பரப்பி நலனுற வாழ்க
வாழ்க வாழ்க வாழ்க வென்
றீசன் றிருவடி யாந்தொழு வோமே.

---

காசில் பொற்சிலம் பின்சிக ரத்தைக்
கால்ப றித்தே யெறிந்திட வந்த
மாசில் தென்கோண மாமலையைச் சூழும்
மாவலி கங்கை நாடெங்கள் நாடே.

[கதிரமலைப்பள்ளு: செய். 8]

# நாம்

**நா**ம் இன்று ஆசிரிய மாணவர்கள்; நாளை ஆசிரியர்கள். இப்பொழுது இந்த நிலையில் எமக்கு வழிகாட்டியாயிருப்பது, எமது மூத்த சகோதரர்கள் ஸ்தாபித்து வளர்த்து வந்த ஆசிரிய மாணவர் சங்கம். இப்பொழுதைய ஒழுகலாறுகளே இனிவருங்கால வாழ்க்கைக்கு அஸ்திபாரமுமாகும். ஆகவே, இச்சங்கந்தானே வருங்கால வாழ்க்கையைச் சீர்ப்படுத்தற்குக் கருவியாயுந் திகழுகின்றது. இங்ஙனம் நிகழ்கால வருங்கால வாழ்க்கை முறைகளைச் சீர்ப்படுத்துதற்குரியதொரு சாதனத்தை உதவிய அன்பார்ந்த சகோதரர்களுக்கு முதலில் எமது வணக்கத்தைச் சமர்ப்பிக்கின்றோம்.

மேற்குறிப்பிட்ட எமது சங்கத்துக்கு ஒரேயொரு குழந்தை; பச்சைப் பசுங்குழந்தை; ஆண்குழந்தை. அதன் பெயர் முன்னமே எல்லாரு மறிந்தது. எல்லாருமறிந்த ஒருவருக்கு வழங்கும் பெயர் தான் அதற்கும் பெயர். அது நாவலன். நாவலனுக்கு இப்பொழுது வயசு எட்டு. அவன் ஆறு வயசு முடியும் வரை வீட்டுப் படலைக்கப்பால் அடியெடுத்து வைக்கவில்லை; அவனுடைய இளம் நண்பர்சிலர் பன்முறை கேட்டும் வெளியிலே போய் விளையாடச் சம்மதிக்கவில்லை. இதனால், "நாவலன் நாணக்காரன்; வெளியிலே வரமாட்டான்" என்று எல்லாரு மெண்ணி யிருந்தார்கள். ஆனால் சென்ற வருடம் அவன் தனது ஏழாம் பிராயத்தில் எழுந்து தலைநிமிர்ந்து வெளியிலே சென்று கெம்பீரமாக உலாவத் தொடங்கினான்; பலவேறு விளையாட்டுக்களையும் தனது இளம் பருவத்துக்கு ஏற்ப விளையாடிக் காட்டினான். அன்பர்கள் பலர் அவனை அழைத்து மடியிலிருத்தி உச்சிமோந்து உபசாரங்கள் செய்துவைத்தார்கள்; அன்றியும் பலவேறு பரிசில்களும் வழங்கினார்கள்.

"பல்லிலே பட்ட நரி பளையிலே கிடவா" தல்லவா? நாவலனுக்கு வயசு எட்டு என்று முன்னமே சொல்லிவிட்டோம். இந்த எட்டாவது வயசிலும் தான் ஒருமுறை வெளியிலே உலாவி விளையாடி வரவேண்டுமென்பது நாவலனது விருப்பம். தன்னை வளர்த்து வைத்த பழைய தந்தையர்களையும், சென்ற ஆண்டில் பழகிவைத்த நண்பர்களையும் தான் போய்த் தரிசிக்கவேண்டுமென்று அடிக்கடி

சொல்லுவான். யாராவது தடை சொன்னால் அவனுக்கு அழுகை கோபம்—முகமே ஒருவிதம். அவனுடைய பழைய தந்தையருள் ளும் சிலர் அவனுக்குச் சிலபல ஆடை யாபரணங்கள் இனிப்புக்கள் அனுப்பி, "அவனை வருடமொருமுறையாவது வெளியிலே வர விடுங்கள்" என்று அடிக்கடி கடிதமெழுதுவது வழக்கம். இதனால், ஏதோ சொற்பமான எங்கள் கைச்சரக்குக்கேற்ப அலங்காரஞ்செய்து "இங்கே வா அப்பா! சிணுங்காதே; உன்னுடைய இச்சையைப் பூர்த்தி செய்துகொண்டுவா" என்று சொல்லி நாவலனை வெளியிலே அனுப்பியிருக்கின்றோம். அவனுடைய தந்தையர்களும் நண்பர் களும் அவனை உவந்து வரவேற்பார்கள் என்பதில் எங்களுக்கு எள் ளளவுஞ் சந்தேகமில்லை.

ஆனால் ஒரு பயம். "பிள்ளைபோ வயசின் மூத்தால் பிதாவின் சொற் புத்தி கேளான்" என்று சொல்லுவார்கள். நாவலன் சில சமயங்களில் அட்டாதுட்டிக்காரன்; சொல்வழி கேளான்; தான் புத்தி சொல்லத் தொடங்கி விடுவான்; அவனைத் தடுக்க முடியாது. தனக்கு எத்தனையோ பல லக்ஷியங்கள் உண்டு என்று அடுக்கிக் கொண்டேபோவான். அன்பர்கள் அனைவரும் அவனைத் தத்தங் குழந்தையாகப் பாவித்தால்—அவன் மொழிகளை மழலை மொழிகளாகப் பாவித்தால் எங்களுக்கு அவன் விஷயத்தில் பயமே இல்லை. அவனுக் குத் தன்னுடைய பெயரில் ஒரு பெரிய பிராந்தி. ஸ்ரீலஸ்ரீ நாவலர் அவர் கள் சமயத்துக்கும் பாஷைக்கும் தேசத்துக்குமாகத் தமது உடல் பொருள் ஆவிகளை அர்ப்பணஞ் செய்தவர்களாம். அவ்வழியைத் தான் ஆசிரியர்களும் பின்பற்றவேண்டுமென்பது நாவலனுடைய பிரசங்கம்.

சமயபாடம் சமயோசிதபாடமாகத்தான் இப்பொழுது நடை பெறுகின்றதென்பது நாவலனுடைய கருத்து. ஆசிரியர்கள் சமய பாடத்தை மாணவர்களுக்குள் புகுத்திவிடவேண்டுமென்று நாவலன் உபதேசிக்க வரவில்லை. அவன் மன்றாடிக் கேட்பது மற்றொன்று. ஆசிரியர்கள் சித்தாந்த சாஸ்திரம் பதினான்கினும் பன்னிரு திருமுறை களிலும் கந்தபுராணத்திலும் திருவள்ளுவரிலும் நன்கு பயிற்சி யடையவேண்டும்; தாம் சிந்திக்கும் ஒவ்வொரு சிந்தனையிலும் சொல்லிலும் செயலிலும் இறைவன் திருவருள் கலந்திருப்பதை அநுபவத்திற் காண முயலவேண்டும்; அன்றி அம்மூன்றிலும் நீதி அநீதி எவ்வளவுக்கு எவ்வளவு கலந்திருக்கின்றன என்பதைச் சதா பரிசோதனை செய்துகொள்ளவேண்டும். இவ்வளவுஞ் செய்தாற்

போதும். மாணவர்களுக்குச் சமயபாடம் என்று ஒன்று படிப்பிக்க வேண்டாம். அது தானே ஆசிரியருடைய உடம்பைப் பீறி எழுந்து மாணவருடைய ஆத்துமாவைக் குளிரச்செய்யும்; நல்ல வழியில் நடத்தும். இதுதான் சமயபாடம்.

இனி, பாஷாபிவிருத்தியைப்பற்றி நாவலனுடைய கருத்தைப் பார்ப்போம். மாணவர்கள் தாம் கருதுவதைத் தெளிவாகச் சொல்லவும் எழுதவும் பயிலுவதுதான் பாஷாபிவிருத்தி. அதற்கு என்ன செய்ய வேண்டும்? "சீர்பூத்த கருவிநூலுணர்ச்சி" வேண்டுமென்று நாவலர் அவர்கள் அருளியிருக்கின்றார்கள். நிகண்டு, அந்தாதி சிலேடை வெண்பா, பிள்ளைத் தமிழ் முதலிய பிரபந்தங்கள், இலக்கணம், தருக்கம், கணிதம், ஓசையும் தெளிவுமுள்ள வசனங்கள், சுவையுள்ள செய்யுள்கள் என்னும் இவற்றைப் பயிலுவதனாலேதான் கருவி நூலுணர்ச்சி உண்டாகுமென்பது நாவலனுடைய கருத்து. 5-ம் 6-ம் வகுப்பில் உள்ள பிள்ளைகளுக்கு ஒருவாரத்தில் ஒரு அந்தாதிப்பாட்டு ஒரு சிலேடை வெண்பாப் பாட்டுப் படித்துக் கொள்வது கஷ்டமான வேலையன்று. இலக்கணமென்றால் சூத்திரங்களையும் உரைகளையும் உதாரணங்களையும் நெட்டுருப்போடுவதன்று. முதலிற் தனிச் சொற்களுக்கு இலங்கணங்களையும், பின் அல்வழி வேற்றுமைத் தொடர்களையும், அதன்மேல் சொற்கள் ஒன்றோடொன்று புணர்தற்குரிய காரணங்களையும் புணர்ச்சிவிதிகளையும் கற்பிக்க வேண்டும். இதற்குப் பிறகுதான் பகுபத பகாப்பதங்கள். தனிச் சொல்லிலக்கணம் படிப்பிக்கும்போது பெயர்ச்சொல்லிலக்கணம் படிப்பித்தபின், பங்கீகரணம் பண்ணப் பயில்விக்க வேண்டும். பங்கீகரணத்தில் i வாக்கிய விபாகம் ii வாக்கியங்களில் முக்கியமான பயனிலை iii பயனிலையை அவாவும் எழுவாய் முதலிய வேற்றுமைகள் iv பயனிலையையும் வேற்றுமைகளையும் விசேடிக்கும் விசேடணங்கள் v விசேடணங்களில் பயனிலை எழுவாய் முதலிய அம்சங்கள் என்பன அடங்கும். இவ்விஷயம் வசனங்களிலும் செய்யுளிலும் பயிலவேண்டியது. இது 7-ம் வகுப்புத் தொடக்கம் மேல் வகுப்புப் பிள்ளைகளுக் கின்றியமையாதது. படிப்பிக்கும் எந்த இலக்கண விஷயமும் இலக்கியத்தின் அமைதிதான் என்பதைப் பிள்ளைகள் உணரவேண்டும். தருக்க கணிதங்களின் இன்றியமையாமையைச் சொல்லவேண்டியதில்லை. சங்கரபண்டிதர் அவர்கள் எழுதிய சைவப்பிரகாசன முகப்பில் உள்ள தருக்க விஷயம் மேல்வகுப்புப் பிள்ளைகளுக்கு மிக இன்றியமையாதது. நாவலருடைய வசனங்கள் டாக்டர் சாமிநாதையருடைய வசனங்கள் ஓசையுந் தெளிவும் உள்ள

வைகள். அவ்வசனங்களை மாணவர்கள் வசனத்திற்குரிய ஓசை யோடு தெளிவாக வாசிக்கப் பயிலவேண்டும். அவ்வசனங்களை மன னஞ் செய்வது மிகவும் நல்லது. கம்பர், புகழேந்தி, சயங்கொண் டார், காளமேகம் முதலிய புலவர்களின் பாடல்களில் சுவை ததும் பும் பாடல்களைத் தெரிந்தெடுத்துச் சுவை பிறக்கும்படி இடை யிடையே படிப்பிக்கவேண்டும். படிப்பிக்கும்போது புலவர்களின் சரித்திரத்தையும் சுவைபடச் சொல்லிச் சந்தர்ப்பத்தையும் தெரிவிக்க வேண்டும். நிகண்டைப்பற்றி நாவலன் ஒன்றுஞ் சொல்லவில்லை. நிகண்டு படிப்பது மிகவும் நல்லது. எதையும் விபரித்துச் சொல்லுவ தற்குச் சமயமில்லை. இங்கே பாஷைசம்பந்தமாகக் காட்டப்பட்ட விஷயங்கள் பாடத்திட்டத்தில் இல்லையேயென்று பதறவேண்டாம். இவ்விஷயங்கள் திட்டத்திலுண்டுமாம்; இல்லையுமாம்; உண்டுமில்லையு மாம். மனமுண்டானால் இடமுண்டு. குறித்த விஷயங்களைப் படிப் பிக்கும் ஆசிரியர்களைத் தடுப்பார் எவரும் இல்லை. இது நிற்க;

இனித் தேசம்: "சமயத்தைப்பற்றிப் பாஷையைப்பற்றிச் சொல்லச் சொல்லப் பொறுத்துக்கொண்டிருந்தோம். இந்தத் தேசச்சுமைக்கும் எங்கள் தலைதானோ" என்று யாருக்காவது கோபம் வந்துவிட்டால் நாவலனுக்கும் கோபம் வந்துவிடும். மூவகைத் தொண்டுகளிலும், தற்காலத்து ஆசிரியர்கள் முதலிற் செய்யவேண்டிய தொண்டு தேசத்தொண்டுதான் என்பது நாவல னுடைய இறுகிய அபிப்பிராயம். "ஆசிரியர்கள் மாசந்தோறும் எடுக்கும் சம்பளம் எங்கேயிருந்து வருகிறது" என்று நாவலன் ஆதி மூலத்திலிருந்து கேள்வியை ஆரம்பிக்கின்றான். கிராமங்கள்தோறும் மலேரியாப்பூச்சிகள் உண்டு உமிழ்ந்துவிடுகின்ற பரம ஏழைகளின் வேர்வைத் திவலைகள் ஒன்றுகூடி உருண்டு திரண்ட பிண்டந்தான் ஆசிரியர்களுடைய வேதன உபகாரவேதன பண்டம். இனி இதற்கு மேலே நாவலன் ஒன்றும் சொல்லப்போவதில்லை. "கல்வியறிவைப் பெறுதற்கு வசதியில்லாத சனங்கள் கள்ளினால் மயங்கிக் கல்வியறி வுள்ள டப்பாச்சாரிகளான மகாபூதங்களினால் விழுங்கப்பட்டுக் கொடிகட்டிய மோட்டோர் ரதங்களிற் பவனிவரும்போது ஆசிரியர் களுக்கு யாரைப் பார்த்து நகைச்சுவை உண்டாகின்றது?" என்பது நாவலனுடைய மகாபாணங்களுள் ஒன்று. துக்கவீட்டில் அறி வாளிகளுக்கு நகைச்சுவை பிறப்பதில்லை. நாவலனுடைய அம்பறாத் தூணியில் இன்னும் அநேக பாணங்கள் இருக்கின்றன. "என்னைப் பெற்று வளர்த்த எனதருமைத் தந்தையர்களே! உங்களை உண்டு




ஆசிரிய மாணவர் சங்கம் (1936)

PLÂTE LTD

உடுத்து வாழச்செய்யும் பரம ஏழைகளின் சுகாதார வசதிகளைப்பற்றி எப்பொழுதாவது சிந்தித்ததுண்டா? ஆண்களும் பெண்களும் முதிர்ந் தவர்களும் குழந்தைகளுமான ஏழைகளின் தொழில் விருத்தி, அறிவு விருத்திக்கு என்ன செய்திருக்கின்றீர்கள்? என்ற வினுக்கள் அவ னுடைய ஏனைய சில பாணங்கள்.

இன்னும் ஒரேஒரு வார்த்தைதான் நாவலன் சொல்லப்போகி ருன். "இனி வருங்கால உலகம் ஆசிரியர்களுடைய இருதய கமலங் களில் கரு இருக்கின்றது" என்பதுதான் அவ்வார்த்தை.

"பத்திரிகாசிரியர்"

---

## நம்பிக்கை

"ஸ்ரீ இராமன் கடலைக் கடக்கப் பாலம் கட்டினர். ஆனல் அனுமார் என்ன செய்தார்? அதே கடலை இராமநாமத்தை உச் சரித்துக்கொண்டு தாவிவிட்டார். குருவினுல் முடியாத காரியங்களை யும் சிஷ்யன் நம்பிக்கையினுல் சாதித்துவிடுகிருன்".

"பரமஹம்சர்"

---

## சத்தியம்

"சாவினின்று ஒரு சமயம் தப்பினுலும் தப்பலாம். தீவினையி னின்றும் தப்ப முடியாது. சாவினும் தீவினையே வன்மையுடையது. கிழவனுகிய என்னைச் சாவு வந்து சூழ்ந்துளது. என்மீது குற்றஞ் சாட்டியவரையும் தீர்ப்பளித்தவரையுமோ தீவினை சூழ்ந்துகொண் டுள்ளது. சத்தியம் அவர்களைச் சும்மா விடாது. சத்தியத்தை முன் னிட்டுச் சாகிறேன் நான். யார்மீதும் எனக்கு வர்மம் கிடையாது. தீர்ப்பளித்தோரும் குற்றஞ் சாட்டினேரும் தங்களுக்கு வர்மம் இல்லை என்று கூற முடியுமா? நல்லது! நாம் பிரிந்து போதல் வேண்டும்".

"சோகிறேற்றிஸ்"

*

# மணிநீர்த் தடாகம்

(க. பரமசிவம்)

மலர் நிறைந்த தடாகமும் மீன் நிறைந்த வானமும் என்ஞான்றும் கவிஞர் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் இயற்கையழகு வாய்ந்தன. காலையில் தோன்றும் சூரியன் ஒளியால் களித்து விரியும் கமலமலரைக் கண்ட கவிஞர் உள்ளமும் கனிந்து மலர்வதாகும். இவ்வாறு இயற்கையழகினை அருந்திக் களித்த கவிஞர் மொழிகளை ஈண்டு ஆராய்வாம்.

ஒருநாள் காலைப்பொழுதில் நீலத்திரை விரித்த வானத்தே சூரியன் எங்கும் தன்னொளியை வீசி எழுந்தான். அவன் வரவைக் கண்ட தாமரை மலர்களெல்லாம் மலர்ந்தன. கார்வண்டுகளெல்லாம் மலர்களின் அழகையும் மணத்தையும் கண்டு தடாகத்தின் மருங்கே சுற்றிச் சுழன்று இன்னிசை பாடின. சூரியன் ஒளியால் கண்போல் மலர்ந்த தடாகத்தின் நடுவே இதழ்விரிந் திலங்கிய தாமரை மலரில் ஓர் வெள்ளை அன்னம் இனிது அமர்ந்திருந்தது. காலைப்பொழுதில் வீசிய இளங்காற்றின் இனிமையை நுகர்ந்த அவ்வன்னம் நறுமலர்ப் பள்ளியில் நன்கமைந்து தெளிந்த திரைகள் தாலாட்ட இனிது உறங்கிற்று. இவ்வாறு மென்மையான சேக்கையில் உறங்கிய அன்னத்தின் அழகினை,

"தாய்தன் கையின்மெல்லத் தண்ணென் குறங்கினெறிய
வாய்பொன் அமளித்துஞ்சும் மணியார் குழவிபோல
தோயும்திரைகள் அலைப்பத் தோடார் கமலப்பள்ளி
மேயவகையில் துஞ்சும் வெள்ளையன்னம் காண்மின்"

என்று சிந்தாமணி ஆசிரியர் செஞ்சொற்களாற் கூறி மகிழ்ந்தார். தன் அன்பார்ந்த குழவியை அழகிய மஞ்சத்தி லமைத்து அதன் தொடையைத் தன் மென்மையான தூய கைகளாற் றடவித் துயில்விக்குந் தாயேபோல் அழகுவாய்ந்த தடாகம் அன்னத்தை அலைகளால் துயில்வித்ததென்று கவி அமைத்துள்ள உவமை மிகவும் அழகியதாகும். தண்மை வாய்ந்த தடாகம் தலையாய அன்புவாய்ந்த

தாயை ஒத்தது. என்ஞான்றும் தடாகத்தைவிட்டு நீங்காதுறைந்த அன்னம் தாயினின்றும் பிரியாத குழவியை ஒத்தது. இளங்காற்றின் இயக்கத்தா லெழுந்த இனிய திரைகள் அன்பினு லியங்கும் தாயின் மெல்லிய கைகளை ஒத்தன. அத்திரைகள் தோய்தலால் அன்னம் அடைந்த இன்பம் தாயின் கை தோய்தலால் அருங் குழவி யடையும் இன்பம் போன்றது. இங்ஙனம் அன்னம் துயில்வதற்கு அமைந்த நறுமணங் கமழும் நன்மலர்ச்சேக்கை மெல்லிய வெண்பட்டு விரித்த விழுமிய மஞ்சம் போன்றது என்று கவிஞர் கூறிப்போந்தமை கற்போர் மனத்தைக் கவர்வதாகும். தன் மெல்லியல் வாய்ந்த மதலை இனிது துயிலும்வண்ணம் பொன்னுலாகிய அமளியில் நறுமணம் கமழும் பட்டாடை விரிக்கும் அன்னையேபோல் அன்னத்தின் மென்மையை யறிந்த தடாகமும் செம்மை வாய்ந்த மலரில் மெல்லிய இதழ்களை அடுக்கடுக்காய் விரித்து மகரந்தந்தூவி ஓர் அழகிய சேக்கை அமைத்தது. மெல்லிய சேக்கையில் மதலையை அமைத்தபின்னரும் அருகே அமர்ந்து அன்பொடு தட்டித் துயில்விக்கும் அன்னைபோல் அடுக்கடுக்காய் எழுந்து தாமரைப்பள்ளியைத் தட்டி அசைத்துச் சென்ற தெள்ளிய திரைகளால் தடாகம் அவ்வன்னத்தைத் துயில்வித்தது

இத்தகைய சிறப்புப்பொருந்திய தடாகத்தில் நீலத் துகிலுடுத்த ஓர் மங்கை நீராடச்சென்றாள். அவளுடையிற் பதித்த அழகிய மணிகளில் சூரியன் ஒளி வீசியபொழுது அம்மணிகளின் சுடர்கள் தடாகத்தின் நீர்ப்பரப்பில் விழுந்து நெருங்கிப் பூத்த செந்தாமரையை நிகர்த்தன. அச்செஞ்சுடர்களைத் தூரத்தே கண்ட ஓர் மட அன்னம் அவற்றைச் செந்தாமரைப்பூவென்று மயங்கி விரைந்தோடிச் சென்று ஆர்வத்தோடு கௌவிற்று. அழகிய மணிகளின் நிழலாய சுடர்கள் வாயி லகப்படாமை கண்டு தன் மடமையை நினைந்து நாணிய அன்னம், வந்த வழியே விரைந்து சென்றது. இத்தகைய இனிய இயற்கைக் காட்சியை

''நீலத் துகிலிற் கிடந்த நிழலார் அழலம் மணிகள்
கோலச் சுடர் விட்டுமிழக் குமரி அன்னம் குறுகி
சால நெருங்கிப் பூத்த தடந் தாமரைப் பூவென்ன
வாலிச் சுடர்கள் கௌவி அழுங்கும் வண்ணங் காண்மின்''

என்று கவிஞர் நயம்படக் கூறிப்போந்தார். நீலத்துகிலின் இடையே இலங்கிய செம்மணி, நீலநிறம் வாய்ந்த இலைகளின் நடுவே விளங்கிய செம்மலர்போல் திகழ்ந்தது. ஒளியிற் சிறந்த அம்மணிகளின் மீது

சூரிய ஒளி வீசியபோது அம்மணியின் நிழல்கள் அருகே விழுதல் இயல்பாகும். நீராடப் போந்த மங்கையின் நீலவுடையில் மணிகள் நெருக்கமாகப் பதிந்திருந்தமையால் அவற்றின் நிழல்கள் நெருங்கி விழுந்து, மிக நெருங்கிப் பூத்த செந்தாமரையை நிகர்த்தனவென்று கூறுவது இயற்கைக்கு மிகப் பொருத்தமுடையதாகும். எஞ்ஞான்றும் தடாகத்திலே வாழ்ந்து செங்கமல மலர்களைச் செவ்வையாய் அறிந்திருந்த அன்னமே, அவ்வழகிய மணிகளின் சுடர்களைச் செந்தாமரை என்று மயங்கிற்றென்றால், அம்மணிகளின் ஒளி சொல்லாமலே விளங்குமன்றோ? அச்சுடர்களைத் தாமரை என்று கருதி அன்னம் விரைந்து சென்று கௌவிய ஆர்வமும், அச்சுடர்கள் வாயிலகப்படாமையால் அவ்வன்னம் அழுங்கும் தோற்றமும் நன் குற்றுணர்வார்க்கு நகைச்சுவை பயப்பனவாகும். ஆகவே மங்கை புனைந்திருந்த நீல ஆடையின் சிறப்பையும், அவ்வாடையிற் பதித்த மணிகள் சூரியன் ஒளியால் சுடர் உமிழ்ந்த செம்மையையும், நீலநிறத்தினடுவே அமைந்த செஞ்சுடர்கள் தாமரை இலைகளின் நடுவே இலங்கும் மலர்போ லிருந்த மாண்பையும் சிந்தாமணிக்கவிஞர் நன்றாக உணர்த்திப் போந்தார்.

இவ்வாறு தெளிந்த நீரில் இறங்கி நீராடிய மங்கை அத்தடாகத்தின் அழகையும், நீரின் தன்மையையும், இளங்காற்றின் இனிமையையும் நுகர்ந்து நெடுநேரம் கரையேறாது களித்து நீராடுவாளாயினாள். தடாகத்தின் சுகத்தை அறிந்த மங்கை பசியையும் மறந்தாள். தன்னொடு தடாகத்துக்கு வந்து காத்திருந்த கிளியையும் மறந்தாள். இவ்வாறு தன்னை மறந்து தாமரைத் தடாகத்தில் இன்புற்று விளையாடிக் கொண்டிருக்கிற மங்கையைக் கரை யேற்றுவதற்காகக கிளி ஓர் சூழ்ச்சி செய்தது. தன்னைக் காதலித்து வளர்த்த தலைவியை நோக்கி, "பாம்பு, பாம்பு" என்று பதறிக் கூறிற்று. பாம்பு என்ற சொற்கேட்ட மங்கை மனம்பதைத்துக் காதில் அணிந்த தோடு கழல விரைந்தோடிக் கரை சேர்ந்தாள் மலர் நிறைந்த தடாகத்தில் மீன் முதலாய உயிர்களும், அன்னம். நாரை முதலிய பறவைகளும் நிறைந்திருப்பினும் தன்னை வளர்த்த தலைவிக்கு பாம்பினிடத்துள்ள பயம் மிகப் பெரி தென்றெண்ணிய கிளியின் மதி நலம் மிக்க மாண்புடையதாகும்.

இவ்வாறு கரையேறிய மங்கை நனைந்த துகிலோடு தன்மனையை நோக்கி நடந்து சென்றாள். நனைந்த பட்டாடை உடலிற் படிந்தமையால் தன் மேனியின் நிறம் வெளியே தோன்றக் கண்ட மங்கை

நாணத்தால் தலைகவிழ்ந்து ஒல்கி ஒதுங்கி நடந்து சென்றாள் அப்பொழுது அம்மங்கையினிடையில் அமைந்த மணிமேகலை தலைவிக்கு நேர்ந்த அவமானத்தைத் தனக்கு நேர்ந்ததாகக் கருதி தன் மணி ஒலியை அடக்கி இடையைத் தழுவிக் கிடந்த தென்று கவிஞர் கூறும் மொழிகள் இயற்கை நலம் வாய்ந்தனவாம். மங்கையரது மேனியின் நலத்தையும் நிறத்தையும் மறைக்கும் தன்மை வாய்ந்த பூந்துகில், நீரில் நனையின் உடலிற் படிந்து ஒட்டிக்கொள்வது இயல்பாகும். மணிச் சதங்கை யார்ப்ப மங்கையர் இடையில் விளங்கும் மணிமேகலை நீரில் நனைந்தமையாலும், நனைந்த ஆடையின்மீது கிடந்தமையாலும் ஒலியாத தன்மையை மானத்தால் மௌனமாயிருந்ததாகக் கருதுதல் கவிநயமாகும்.

> "நாண நீரிற் கலந்து நலங்கொள் பூம்பட் டொளிப்ப
> மேனி தோன்ற விளங்கி வெளிப்பட் டதற்கு நாணி
> மான மகளிர் போல மணி மேகலைகள் பேசா
> தானந் தழுவிக் கிடப்பச் செல்வோள் தன்மை காண்மின்"

என்று சிந்தாமணி ஆசிரியர் கூறிய செஞ்சொற் கவி சிறந்த இன்பம் பயப்பதாகும்.

---

> வேணிச் சங்கரர் தொண்டர்க ளென்று
> வீடு தோறு மிரப்பவர்க் கெல்லாம்
> மாணிக்க மள்ளிப் பிச்சை கொடுத்திடும்
> மாவலி கங்கை நாடெங்கள் நாடே.

[க. ம. ப: செய். 20]

---

> அணி யிளங்கதி ராயிர முள்ள
> வருக்கன் போய்க்குட பாலிடை மேவ
> மணி கொணர்ந்து மணிவிளக் கேற்றிடு
> மாவலி கங்கை நாடெங்கள் நாடே.

[க. ம. ப: செய். 18]

*

# பள்ளிப் பாடமும் வீட்டு வேலையும்

## HOMEWORK IN SCHOOLS

(கா. தம்பிப்பிள்ளை)

பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் அறிவு வளர்ச்சிக்குச் சாதகமாயுள்ள எவற்றையும் வீட்டிலேனும், விடுதி மாணவர்களாயின் ஆசிரியர் மேற்பார்வையின்றி விடுதியிலேனும் தாமாகச் செய்யின், அவை வீட்டுவேலை யெனப்படும். அவ்வேலைகள் பாட ஆயத்தமாயும், படித்த பாடங்களில் மீட்டலாயும், அப்பாடங்களில் பாட புத்தகங்களல்லாத பிற புத்தகங்கள் வாயிலாகக் கூடிய அறிவைப் பெறுதலாயும், அப்பியாசங்களைப் பயிற்சிக்காகச் செய்தலாயும், அவ்வப் பாடங்களுக்குச் சாதனமான விநோதத்தொழிலாயும் [Hobby] இருக்கும். பொதுவாகச் சொல்வோமானால், அவ்வேலைகள் யாவும் சுவமுயற்சியை வளர்க்கக்கூடிய ஆராயுந்தன்மை யுடையனவா யிருக்க வேண்டும்.

ஒரு மாணவனின் அறிவு வளர்ச்சிக்கு வீடும் ஒரு சாதனம். வீட்டின் செல்வாக்கும் பள்ளிக்கூடத்தில் மாணவனின் சீவியத்தை உருப்படுத்தும். அவ்விரண்டுக்கும் மிகவும் நெருங்கிய தொடர்புண்டு. ஒரு பள்ளிக்கூடத்துக்குப் போகும் இருமாணவருக்கிடையில் பொது அறிவு, பேச்சு, ஒழுக்கம், கவர்ச்சிப்பொருள் முதலியவற்றில் அதிக பேதம் காணலாம். வீட்டினது செல்வாக்குத் தவறானவழிகளில் மாணவனைக் கொண்டு செல்லுமேயானால், அம்மாணவனுக்குப் பள்ளிக்கூடம் யாதொரு துணையும் செய்துகொள்ள முடியாது. இதனால், வீட்டாரின் ஒத்துழைப்பு மாணவனுடைய சீவியத்தை உருப்படுத்துவதில் அவசியம் வேண்டற்பாலது. அவ்வொத்துழைப்பைப் பெறுவதற்கு பெற்றோர்தினக் கொண்டாட்டம் போன்றன நடத்துவது வழக்கம்; ஆசிரியர் மாணவருக்கு நல்ல சிறந்த முறையில் வீட்டு வேலைகள் கொடுப்பதினாலும் உண்டாக்கலாம்.

வீட்டு வேலையில்லாது மாணவர் பள்ளிக்கூடம்போய்ப் படித்து வருவாரேயானால், அவர்கள் பள்ளிக்கூட ஆசிரியரை ஒரு கடைக்காரனாகவும், தாம் சாமான் வாங்குபவர்களாகவும் கருத இடமுண்டு.

அதனால் அவர்கள் பள்ளிக்கூடக் கல்வியை ஒரு விலைப்பொருளென வும், அங்கு நடப்பன ஆசிரியருடைய வேலையெனவும் எண்ணுவார்கள். இதனால் பெருந்தீங்கு நேரிடும். அவர்களுடைய சீவியத்தில் கல்வி ஒருதுணையும் செய்யாது மாணவர் பள்ளிக்கூடவேலையைத் தம் சொந்தவேலையென நினைத்துச் செய்யவேண்டும். அவர்கள் அவற்றைத் தாமாகவே செய்யவேண்டும். இவற்றை மாணவரின் மனத்தில் உதிக்கச் செய்வதற்கு வீட்டுவேலை மிகவும் அவசியம். மேற்படி பிழையான எண்ணங்கள் மாணவரின் மனத்தில் தோற்றியதுபோல் மாணவரது பெற்றோருடையமனத்திலுமுண்டாகும். வீட்டு வேலையினால் வரும் நன்மை, பள்ளிக்கூடத்தை வீட்டுடன் சம்பந்தப்படுத்துவதிலும், பிள்ளைகள் அவ்வேலைகள் செய்வதற்கு வீட்டார் ஒழுங்குகள் செய்வதிலும் அமைந்திருக்கின்றது. இன்னும் உற்பத்தித் தொழிற்சாலைகள் யாவும் இக்காலத்தில் யந்திரசாதனங்கள் மூலமாகவே தொழிற்படுகின்றன. அதனால் அவற்றில் தொழில் செய்வோருக்கு நேர அவகாசம் மிகுதியுமுண்டு. இக்காலக்கல்வியின் இலக்கு தொழிற்கல்வியை ஊட்டுவதுமன்று; மேற்படி நேர அவகாசத்தையும் ஓய்வு நேரங்களையும் சிறந்த வழிகளில் உபயோகப்படுத்தக்கூடிய எதிர்கால மனிதரை ஆக்குவதிலே முற்படவேண்டும். இந்த ஓய்வு நேர உபயோகம் பழக்கத்தினாலேயே ஏற்படக்கூடும். இப்பழக்கத்தை உண்டுபண்ணவே, மாணவராயிருக்குங்காலத்தில், அவர்கள் அவசியம் வீட்டுவேலை செய்ய முற்படவேண்டும். பள்ளிக்கூடங்களில் சித்திரம் கைப்பணி சங்கீதம் போன்றபாடங்கள் நடத்துவதும் இதற்காகவே.

வீட்டுவேலை அவசியமென்றதற்கு மேற்சொல்லிய காரணங்களை விட, பரீக்ஷைகளிற் சித்திபெறுதல் மிகவும் முனைப்பானதும், யாவரும் ஒத்துக்கொள்ளக்கூடியதுமான காரணமாகும். உயர்தர பரீக்ஷை வகுப்புக்களுக்கு, வீட்டுவேலையை நீக்கினால், பள்ளிக்கூடகாலத்தை நாள்வீதமும் வருடவீதமும் நீட்டவேண்டும். அந்நீட்சி பள்ளிக்கூடத்துக்குத் தினமும் வந்துபோகிறவர்களுக்கு சரீரக் களைப்பையும் மனக்களைப்பையும் உண்டாக்கும். அவர்களுக்கு, வீடு படுக்கைக்கும் உண்டிக்கும் உரிய இடமாய்விடும். அதனால் வீட்டார் பள்ளிக்கூடத்துடன் ஒரு உறவும் வைத்துக்கொள்வதற்கு இடமில்லை. ஆசிரியர்களுக்கு, இது மாணவனுக்குக் கொடுக்குங் களைப்பிலும் பார்க்கக் கூடிய களைப்பை உண்டுபண்ணும். பள்ளிக்கூட முகாமைக் காரரும், தலைமையாசிரியரும், ஏனைய ஆசிரியர்களில் குற்றங்கள்

சுமத்துவதற்கும் இலகுவாகும். இக்காலநீட்டத்தை விரும்புவோர், ஆசிரியர்கள் நீண்ட விடுதலைகளை விரும்புகிறார்கள் என்றும் மணி அடித்ததும் ஆசிரியர் கடமைகள் முடிந்துவிட்டனவென்றும் எண்ணிக்கொள்கின்றனர். அவை மிகவும் தவறான விளக்கமாகும். செவ்வனே கடமைபார்க்கும் ஒரு ஆசிரியனுக்கு ஒரு வாரத்தில் 60 — 70 மணித்தியாலங்கள்வரை வேலையுண்டு. பரீட்சைக்குரிய படித்து முடியாத பகுதிகளும், கடின பாடங்களும், மாணவருடைய விருப்பத்திற் கியைய நடத்தவேண்டிவரும். இவற்றினால் நீண்ட தவணைகள் ஏற்புடைத்தன்றென்பதும் பரீட்சை வகுப்புக்களுக்கு வீட்டுவேலை அவசியமென்பதும், விடுதிப் பாடசாலைகளே சிறந்தன வென்பதும் அறியக்கிடக்கின்றன. பரீட்சைகாலங்கள் நெருங்க நெருங்க மாணவர் தாமாக மீட்டல்செய்யவும் மனனஞ்செய்யவேண்டியன செய்யவும் வேண்டும். அதற்குத் தொடக்கத்திலிருந்தே வீட்டுவேலையினால் படிக்கும் பயிற்சியை அளித்துக்கொண்டு வர வேண்டும்.

வீட்டுவேலை கொடுப்பதற்கு ஒரு பொது விதி அமைத்தல் மிகக் கஷ்டம். ஒரு ஆரம்ப பாடசாலையில் புதிதாகச் சேரும் மாணவருக்கும் அப்பாடசாலையைவிட்டுச் சர்வகலாசாலைக்கும் சீவனோபாயந் தேடுவதற்கும் நீங்கும் மாணவருக்கும் உரிய வீட்டுவேலைகள் பேதப் படுமென்பது தெள்ளிதிற் புலப்படும். இதைவிட வெளிவிஷயங்களும் வீட்டுவேலை கொடுப்பதற்குத் தடையா யிருக்கின்றன. பள்ளிக் கூடத்துக்குத் தினமும் வந்துபோகும் பிள்ளைகளுக்கு ஒரு மணித்தியாலத்துக்குமேல் பள்ளிக்கூடம் போய் வருவதில் செலவாகின்றது. அன்றையநாள் வேலையினா லுண்டான மனக்களைப்பும், வழிநடையால் உண்டான தேகக்களைப்பும் சேர்ந்து சிறுபிள்ளைகளுக்கு வீட்டு வேலை செய்வதில் சோர்வையுண்டாக்கும். மனக்களைப்பை உண்டாக்காத வாசிப்பு, விளையாட்டு முதலியவற்றிலேயே அவர்களுடைய மனஞ் செல்லும். வீட்டு வசதியீனங்களாலும் பிள்ளைகளுக்கு வீட்டு வேலை செய்வதற்குத் தடைகள் ஏற்படும். வறிய குடும்பத்தினர் தம்முடைய சீவனத்தொழிலில் உதவிசெய்யும்படி தம்பிள்ளைகளை வேண்டுவர். மற்றைச் சாதாரண வீடுகளொழிந்த ஏனை வீடுகளில் பாடுங்கருவி ஆகாய வசனி வீட்டுச் சத்தம் முதலியன மாணவர் வீட்டில் வேலை செய்வதற்குத் தடையாய் இருக்கின்றன.

துர் அதிஷ்டவசமாக வீட்டுவேலை அநேக இடங்களில் மிகவும் சீர்கேடான முறைமையில் நடக்கின்றது. நாள்வீதம் ஐந்தாறு

மணித்தியாலங்கள் கடுமையாக மூளை வேலைசெய்தபின்னரும் ஒரே நாளில் அன்று படித்த அதே பாடங்களில் வீட்டுவேலை கொடுப்பது இயல்பாயே இருக்கின்றது. கல்விநூலாரால் இம்முறை பலமாக எதிர்க்கப்படுகின்றது. வைத்தியப்பகுதியினரும் இம்முறையைக் கண்டியாது விடவில்லை. விளக்கமில்லாத விஷயங்களில் வேலை கொடுப்பதனாலும், அவர்களுடைய ஆற்றலுக்கு மிஞ்சிய வேலை கொடுப்பதனாலும், பெற்றோராலும் கண்டிக்கப்படுகின்றது. இங்கும் பிரபல பெண்கல்லூரிப் பிரதம ஆசிரியையான சிஸ்ரர் மேறி கத்லீன் (Sister Mary Kathleen) என்பவர் தமது விடுதி மேற்பார்வையின் அநுபவத்தினால் பின் வரும் முடிவுக்கு வந்தார். வீட்டிலிருந்து வரும் பிள்ளைகளும் வீட்டுவேலை செய்யக்கூடாது என்று கட்டாயப்படுத்திய விடுதிப் பிள்ளைகளும் பரீட்சைகளில் ஒரே திறமை காட்டுகின்றார்களானபடியால் வீட்டுவேலையை நீக்குவது நலம் என்பது. அவர் தம் விடுதியிலே வீட்டுவேலையைக் கட்டுப்படுத்தியதினால் அவர்களோடு கூடப் படிக்கும் மாணவிகளும், அவர்களுடைய கூட்டுறவினால் வீட்டுப் படிப்பை அலட்சியம் செய்வார்கள் என்பதை அறியார் போலும். ஒருசாரார் வீட்டுவேலை ஓய்வுநேரங்களைத் தக்க வழியில் உபயோகிக்கவும் விநோதத் தொழிலில் ஈடுபடவும் வீட்டுத் தொண்டில் ஈடுபடவும் விடாது அவற்றிற்குப் பெருந் தடையாய் இருக்கிறதென்றும் பிள்ளையின் பிற்காலத்தில் சரீரப் பெலவீனங்களும்—கண் வருத்தம், அசீரணம்—உண்டாதற்குக் காரணமென்றும் சொல்வர்.

மேற்படி கண்டனங்கள் வாராமல் செய்வதற்கு நாம் வீட்டு வேலையை நல்ல முறையில் நடத்தவேண்டும். முதலில் நாம் சிறு பிள்ளைகளுக்கென்றும், நடுத்தரவயதுப் பிள்ளைகளுக்கென்றும், உயர்தர வகுப்புப் பிள்ளைகளுக்கென்றும் மூன்று பிரிவாக வீட்டு வேலையை அதன் தன்மைநோக்கிப் பிரிவுபடுத்திக்கொள்ளலாம். சிறு பிள்ளைகள் விளையாட்டையே விரும்புவார்கள். அவர்களுக்கு வீட்டுவேலை விளையாட்டுமூலம் சுவ முயற்சியை வளர்க்கக்கூடியனவாயிருத்தல் வேண்டும். அவர்களுக்கு வேறு வீட்டுவேலை கொடுப்பதிலும்பார்க்க பள்ளிக்கூடநேரத்திலே ஒரு பாடநேரம் கூட்டி மத்தியான ஓய்வு நேரம் கொடுத்து வேலை செய்வித்துக்கொள்ளலாம். இவர்கள் வீட்டு வேலைக்குத் தகுதியாகவில்லை. ஆனால் மேற்சொல்லிய விளையாட்டுச் சம்பந்தப்பட்டன செய்விக்கலாம். இன்னும் அரை மணித்தியாலங் கூட்டி அந்நேரத்தில் மௌனவாசிப்பு இலகுவான கணக்கு எழுத்து முதலியன ஆசிரியர் மேற்பார்வையுடன் நடத்தலாம். 12 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு நேரசூசியில் இன்னும் அரைமணித்தியாலங்

கூட்டி வீட்டுவேலை கொடுப்பதற்கென உபயோகிக்கவேண்டும். மேல் மௌன வாசிப்பு முதலியவற்றிற்கு விடப்பட்ட நேரங்களை இதற்கு உபயோகப்படுத்தக்கூடாது. பள்ளிக்கூடத்தில் ஒவ்வொரு வகுப்புக்கும் அவ்வவ் வகுப்புக்கேற்ற புஸ்தகங்களும் பள்ளிக்கூடத்துக்குப் பொதுவாக அறிவுக்குரிய புஸ்தகங்களும் அடங்கிய புஸ்தகசாலைகள் ஏற்படுத்தவேண்டும் கொடுக்கப்படும் வேலைகள் அளவுக்கு மிஞ்சாமலும் பிள்ளைகளின் விவேகத்துக்கு உட்பட்டதாயு மிருக்கவேண்டும்.

பகல் முழுவதும் ஐந்தாறு மணித்தியாலங்கள் வேலைசெய்தபின், பின்னேரத்தில் விளையாட்டு விநோதம் ஓய்வு என்பவற்றில் ஒன்றையே விரும்புவார்கள். தனித்தனியாக வீட்டுவேலை செய்வதற்கு முன்வருவதற்குத் தக்க நடைமுறைகளை ஆசிரியர் கையாளுவாரானுல் மேற்படி விருப்பத்திற்கியைய நடக்கவேண்டியதில்லை. ஒவ்வொரு பிள்ளைக்கும் அவரவர் விரும்பும் பாடங்களில் வீட்டுவேலையை ஒழுங்குபண்ணி ஆசிரியர் தம் மேற்பார்வையில் நடத்துவாரானுல் அதிக நன்மை உண்டு, தம்மிஷ்டப்படி திரியவாவது பந்து விளையாடவாவது விரும்பும் பிள்ளைகளுக்கு வகுப்பிற் செய்த கணக்குகள் போன்றன கொடுப்பின் பிள்ளைக்காவது மற்றையோருக்காவது ஒரு நன்மையும் செய்யாது. பரீக்ஷையெடுப்போருக்கன்றி மற்றையோருக்கு வீட்டுவேலை கட்டாயமாயிருக்கக்கூடாது. ஆனுல் அவற்றில் கவர்ச்சியை உண்டுபண்ணவேண்டும். இதில் தலைமையாசிரியர் அதிக சிரத்தை பெடுக்கவேண்டும். ஏனையாசிரியருக்கு, வீட்டு வேலையினுல் வரும் சுவ முயற்சி என்ற நன்மையையும் கூட்டுவேலையால் வரும் தீங்குகளை நீக்க அநுபோகத்தையும் விளக்கவேண்டும். புஸ்தகசாலையை உபயோகிக்கவும் விரும்பிய வேலைகள் செய்ய வசதிகள் அளிக்கவும் திட்டம் ஒன்று வகுத்துக்கொள்ளவேண்டும். வகுப்புக்களை அவர் மேற்பார்வையிடும்போது அவர்களை என்ன என்ன வேலை செய்கிருர்கள் என்பதை அடிக்கடி விசாரிக்கவேண்டும் வீட்டுவேலை செய்ய முன்வாருங்கள் அல்லது வரச்செய்வேன் என்ற கட்டாயம் இருக்கக்கூடாது. ஆனுல் பிள்ளைகளில் வீட்டு வேலையில் கவர்ச்சியுண்டுபண்ணுவதற்கு ஆசிரியரே பிரதானமானவர். அவர் தம் பாடத்தைப் படிப்பிக்கும் திறமையினுல் அப்பாடத்தில் கவர்ச்சியை உண்டுபடுத்தலாம். இவ்வீட்டுவேலையைப்பற்றிக் கூறும்போது மேனுட்டார் கையாண்டுவரும் விநோதம் (Hobby) என்பது முக்கியமான இடம்பெறக்கூடியது. இப்பருவத்தினர் அதாவது நடுத்தரவயது மாணவர் இதனுல் அதிக நன்மை பெறுவார்கள். எம்

நாட்டுப் பிள்ளைகள் மேனாட்டாருடைய பிரதான விநோதத் தொழில்களாகிய புகைப்பட மெடுத்தல், முத்திரை சேகரித்தல் முதலியனகையாள்வதற்கு வறியவர்களா யிருக்கின்றனர். ஆனால் பணச்செலவில்லாத அனேக விநோதத் தொழில்கள் பள்ளிக்கூடப் பாடங்களோடு சேர்ந்தனவாய்த் தெரிந்துகொள்ளலாம். இயற்கைப்பொருட்பாடம், பூவகசாஸ்திரம், தாவரசாஸ்திரம் முதலியவற்றில் கொத்துவேலை, மாதிரி உருவம் செய்தல், மரவேலை, படம், சித்திரம் முதலியன வரைதல் என்பன கைக்கொள்ளலாம். இவற்றை எம் ஆசிரியர் வீட்டுவேலையாகக் கொடுப்பதற்குச் சக்தியற்றவர்களா யிருக்கின்றனர். அதற்குக் காரணம் அவர்கள் அவற்றில் திறமையற்றவர்களாயிருப்பதே இனி, உயர்தரப் பரீக்ஷைகளுக்குத் தோற்றுவோருக்கு வீட்டுவேலை மிகவும் பேதப்படும். அவர்கள் பாடபுத்தகங்களில் அடுத்தநாட் பாடத்திற்கு வேண்டியனவற்றைத் தேடி அறிதலும் முன்னடந்த பாடத்தில் எடுத்த குறிப்புக்களை அல்லது புஸ்தகங்களிலிருந்து எடுத்த குறிப்புக்களைப் பின்னரும் உபயோகமாம்படி விரித்தெழுதுதலும் அப்பியாசங்கள் செய்தலும் பிறவுமாம்.

இனி, நாம் சில விசேஷபாடங்களில் வீட்டுவேலை அமைக்கும் முறையைக் கவனிப்போம். கணித பாடத்தில் மிகுதியும் செய்கையமைந்த அப்பியாசங்களாயும், நிரூபணங்கள் கூடியதாயுமிருக்க வேண்டும். இவற்றால் பிள்ளைகளில் விரைவும், திட்டமும் ஏற்படும். பிழை சரியைத் தாமாக அல்லது தம் கூட்டத்தினராக அறிந்து கொள்ளலாம். பாஷையில் இலக்கண விதிகளமைந்த அப்பியாசங்களும், இலக்கிய நயத்தைக் காட்டக்கூடிய சிறு செய்யுட் பகுதி வசனப் பகுதிகளைத் தம்பாட புத்தகங்களில் பொறுக்கித் திரட்டுதலும் அவற்றை மனனஞ் செய்தலும் அடங்கும். வியாச பாடத்தில் தெரிந்தெடுத்த விஷயத்துக்கு வேண்டிய குறிப்புக்களைத் திரட்டுதலும், திருத்தப்பட்ட வியாசத்தைத் திருப்பி எழுதுதலும் அடங்கும். சாஸ்திரவகைகள், சரித்திரம் போன்ற பாடங்களில் படித்த விஷயங்களைப் பிற புத்தகங்களிலிருந்து விரிவாக அறிதலும், எடுத்த குறிப்புக்களை விரிவாக எழுதுதலும், காட்டுப் படங்கள் வரைதலும், அட்டவணைகள் (Date Charts etc.) உண்டாக்கலும், சில உண்மைகளை வரிசைப்படுத்தலும் பிறவுமடங்கும். வரைதற்பாடத்தில் பள்ளிக்கூடத்திற் கீறியதொன்றை ஞாபகத்திலிருந்து வரைதலும், கிடைக்கக்கூடிய சித்திரமொன்றின் வெளியுருவம் கீறுதலும் அடங்கும். இவற்றைப்போல எல்லாப் பாடங்களுக்கும் பயன்தரக்கூடியதும்

ஊக்கமளிக்கக் கூடியதுமான வேலைகளை வீட்டுவேலைகளாகக் கொடுக்கலாம்.

மேற்சொல்லிய வீட்டுவேலைகளை நாம் நடத்துதற்குச் சிலவிதிகளை அமைத்துக்கொள்ளலாம்.

1. வீட்டுவேலையில் ஒவ்வொரு பாடத்துக்கும் செலவாகும் நேரத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். அது தொடக்கத்தில் அரை மணித்தியால அளவில் தொடங்கி சிரேட்ட மாணவருக்கு இரண்டு மணித்தியாலம்வரை நீடிக்கலாம்.

2. விவேகமான பிள்ளைகளுக்கு வாசிப்பு, யோசனைக்கணக்கு, கைவேலை முதலியன செய்வதற்குத் தக்கவசதிகள் அளிக்க வேண்டும். விவேகங்குறைந்த வகுப்பிற் சராசரி வயதிற் கூடிய பிள்ளைகளுக்கு அதிகமான வேலை கொடுக்க வேண்டும்.

3. வீட்டுவேலைகள் வரையறுத்துக் கொடுக்கப்பட வேண்டும். மாணவனின் தினசரிக்குறிப்புப் புத்தகத்திலே ஒவ்வொருநாள் வேலையும் குறிப்பிக்கப்பட வேண்டும். அதனல் வீட்டாரும் வீட்டுவேலையில் ஊக்கங்காட்ட இடமுண்டு.

4. வீட்டாரின் ஊக்கத்தை வளர்ப்பது அவசியமாயிருந்தபோதிலும் அவர்கள் பிள்ளைகளின் வேலையைத் தாமாகச் செய்வார்களானல் மேற்சொல்லிய முறை நிராகரிக்கப்பட வேண்டும்.

5. வேலைகளை ஒழுங்குபண்ணிக் கொடுப்பதோடமையாது பிள்ளை செய்த வேலைகளைப் பரிசிலனை செய்தும் பிழை திருத்தம் செய்தும் அம்சங்களிட்டும் வரவேண்டும். பிழைதிருத்தத்தில் ஆசிரியர் அதிகநேரம் எடுக்கக் கூடாது. அப்பியாசங்கள் மீட்டலாயின் அல்லது திருத்தி எழுதுவதாயின் ஆசிரியர் வகுப்பை ஒருமுறை சுற்றி வந்து அவ்வேலையைப் பார்த்து முடிக்கலாம். ஞாபகவேலை சம்பந்தமுடையதாயின் ஞாபகத்திலிருந்து எழுதுவித்துச் சொல்வதெழுதலைத் திருத்துவதுபோலத் திருத்தவும் வேண்டும்.

6. வேலைகளை அசட்டை செய்பவர்களுக்குக் கடுந் தண்டனை யிட வேண்டும். ஆரம்ப பாடசாலையில் தண்டனைமுறை உபயோகிக்கக் கூடாது. அங்கே மாணவர்களைக் கிளர்ச்சிப்படுத்தி வேலை செய்வித்தல் வேண்டும். அது கட்டாயச் செய்கையிலும் பயனளிக்கும். ஒருமுறை காட்டிவிட்ட வேலை செய்து முடியாதபோது வேறு புது வேலை கொடுப்பது கூடாது.

7. கொடுக்கும் வேலையை ஒரு பிள்ளை திரும்பத்திரும்ப அசட்டை செய்வானேயானால் பெற்றோருக்கு அறிவிக்க வேண்டும். அவ்வேலைகளைச் செய்வதற்கு அவர்களால் ஏதும் தடை நேரின் அவர்களை ஆசிரியருக்கு அறிவிக்கச் செய்யவேண்டும். மீதியான நேரத்தைப் பிள்ளை பள்ளிக்கூட வேலையிலேயே செலவழித்தானென்பதையும் அறிவிக்கச் செய்யவேண்டும்.

8. வீட்டுவேலை கொடுக்குமுன் அவைபோன்ற வேலைகளை வகுப்பிற் கொடுப்பது, அவர்கள் அவற்றைச் செய்வதற்கு எடுக்கும் நேரத்தையும், செய்யும் முறைகளையும் அவதானிப்பதற்குச் சிறந்த முறையாகும்.

---

"இயற்கை ஒவ்வொரு காரியத்திற்கும் ஏற்ற ஏற்ற காலத்தை நோக்கிக் கொண்டிருக்கும்.

உதாரணம்:-பட்சிகள், மிகக் குளிரான மாரிகாலத்தையாவது, வரட்சி மிக்க கோடை காலத்தையாவது, வரவரச்சாய்ந்துகொண்டே போகும் சூரியகிரணங்களையுடைய இலையுதிர்காலத்தையாவது தன் இனத்தை விருத்தி செய்துகொள்வதற்குத் தெரிந்துகொள்வதில்லை. அவை இதற்கு அநுகூலமான வசந்தகாலத்தையே நோக்கிக்கொண்டிருக்கும். அக்காலத்தில் சூரியன் எல்லாவற்றுக்கும் வலிமையையும் சீவசத்தையும் அளித்துக்கொண்டிருப்பான்.

இம்முறையைப் பின்பற்றியே தோட்டக்காரனும் தன் கருமங்களை அவற்றுக்கேற்ற காலங்களில் செய்கின்றான்.

இவ்விதிக்குமாறாக ஆசிரியர்கள் பள்ளிக்கூடங்களில் இரு பெரும் பிழைகளைச் செய்கின்றனர்.

1. மனனபாடங்களுக்குரிய நேரத்தைத் தெரிந்தெடுப்பதில்லை.
2. அப்பியாச பாடங்களை சரியான முறையில் விருத்திக்கிரமமாக அமைப்பதில்லை.

இவ்விதியை யொட்டி ஆசிரியர் செய்யவேண்டியன.

1. ஒருவனின் வசந்தகாலமாகிய இளம்பராயத்திலேயே கல்வி ஊட்டல் வேண்டும்.
2. ஒரு நாளிலே வசந்தகாலமாகிய காலை நேரத்தை கல்வி புகட்டற்குரிய நேரமாகத் தெரிய வேண்டும்.
3. மாணவனின் வயதுக்கேற்கப் பள்ளிக்கூடப் பாடங்களை வகுக்க வேண்டும். அவனது விளக்கத்துக்கு அப்பாற்பட்டனவற்றைப் படிப்பிக்கக்கூடாது".

"கொமெனியஸ்"

# ஒரு வாய்பாடு

## AN ARITHMETICAL TABLE

(அ. குமாரசாமி)

இது ஒரு வருஷத்திலுள்ள ஒரு தேதி தொடக்கம் அதே வருஷத்திலுள்ள இன்னோர் தேதி வரையுள்ள நாட்களைப் பார்த்த மாத்திரத்திலேயே அறிந்து கொள்வதற்கு உதவியாகும்.

| மாசங்கள் | தை | மாசி | பங்குனி | சித்திரை | வைகாசி | ஆனி | ஆடி | ஆவணி | புரட்டாதி | ஐப்பசி | கார்த்திகை | மார்கழி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தை | 366 | 32 | 60 | 91 | 121 | 152 | 182 | 213 | 244 | 274 | 305 | 335 |
| மாசி | 335 | 366 | 29 | 60 | 90 | 121 | 151 | 182 | 213 | 243 | 274 | 304 |
| பங்குனி | 307 | 338 | 366 | 32 | 62 | 93 | 123 | 154 | 185 | 215 | 246 | 276 |
| சித்திரை | 276 | 307 | 335 | 366 | 31 | 62 | 92 | 123 | 154 | 184 | 215 | 245 |
| வைகாசி | 246 | 277 | 305 | 336 | 366 | 32 | 62 | 93 | 124 | 154 | 185 | 215 |
| ஆனி | 215 | 246 | 274 | 305 | 335 | 366 | 31 | 62 | 93 | 123 | 154 | 184 |
| ஆடி | 185 | 216 | 244 | 275 | 305 | 336 | 366 | 32 | 63 | 93 | 124 | 154 |
| ஆவணி | 154 | 185 | 213 | 244 | 274 | 305 | 335 | 366 | 32 | 62 | 93 | 123 |
| புரட்டாதி | 123 | 154 | 182 | 213 | 243 | 274 | 304 | 335 | 366 | 31 | 62 | 92 |
| ஐப்பசி | 93 | 124 | 152 | 183 | 213 | 244 | 274 | 305 | 336 | 366 | 32 | 62 |
| கார்த்திகை | 62 | 93 | 121 | 152 | 182 | 213 | 243 | 274 | 305 | 335 | 366 | 31 |
| மார்கழி | 32 | 63 | 91 | 122 | 152 | 183 | 213 | 244 | 275 | 305 | 366 | 366 |

இதைக் கொண்டு ஒரு குறித்த மாதம் ஓர் தேதி தொடக்கம் இன்னோர் மாதம் அதே தேதிவரையுள்ள நாட்களைக் கணக்கிடும்

பொழுது முன்னைய மாதத்தின் திகாந்தத்திலும் பின்னைய மாதத்தின் லம்பத்திலும் பொருந்தும் இலக்கத்தை நாட்டொகையாகக் கொள்ளவேண்டும். உதாரணமாக சித்திரை 10 தொடக்கம் மார்கழி 10 வரையுள்ள நாட்களின் தொகையை மேற்கூறியவாறு பார்த்து 245 என்பதையறிக.

ஓர் மாதம் ஓர் தேதி தொடக்கம் இன்னோர் மாதம் இன்னோர் தேதிவரையுள்ள நாட்களைக் கணக்கிடும்பொழுது மேற்கூறியவாறு திகாந்தமாயும் லம்பமாயும் வந்து பொருந்தும் இலக்கத்திலிருந்து பின்னைய திகதி முன்னையதிலும் கூடியிருப்பின் மேலதிகமாகக் கூடிய தொகையை அவ்விலக்கத்துடன் கூட்டியும், குறைந்தால் அக்குறைந்த தொகையை அவ்விலக்கத்திலிருந்து கழித்தும் நாட்டொகையைக் கணக்கிடலாம். உதாரணம்.

(1) சித்திரை 20—மார்கழி 27 வரை நாட்கள் 245+7=252

(2) ஆவணி 3—பங்குனி 1 வரை நாட்கள் 213−2=211
மாசியில் 29 நாட்களாயின் வருந்தொகைபுடன் ஒன்றைக் கூட்டுக.

---

மனத்திற் றவமுற் றிருந்த தொண்டரை
வளர்த்துப் பொருள்கள் கொடுப்பவன்
வான் றென் கதிரை மலையில் வேலன்
மாவலி கங்கை வயலிலே
கனத்த தனத்தி யனத்தின் நடைச்சி
கந்தி சந்தி சுந்திசீர்
கன்னி பொன்னி யன்ன மென்னி
கமலி யுலகி கமலத்தி
அனத்தி னினங்கள் என்னக் கூடி
அருகிப் பெருகிப் புருவத்தை
அசைத்து நெளித்து நகைத்துக் களித்து
ஆடிப் பாடி நடுகையில்
சினத்து மலங்கு கலங்கு புனலிற்
சிறுத்த கெண்டைகள் சிதறியே
தேரை பாய நாரை பறக்கும்
சித்திரம் பாரும் பள்ளிரே.

[க. ம. ப: செய். 99]

# புணர்ச்சிக் காரணம்

(வ. நடராசா)

தமிழ் என்ற சொல் இனிமை, மென்மை யெனப் பொருள் படும். தமிழ்ப்பாஷை இந்த இரண்டு தன்மையும் ஒருங் கமைந்தது. தமிழிலுள்ள எழுத்துக்கள் சொற்கள் தொடர்களெல்லாம் அவ்விரு தன்மையு மமைந்தவை. தமிழ் எழுத்துக்களுக்குள்ளே சில எழுத் துக்களை வல்லெழுத்துக்கள் என்று சொன்னாலும் உண்மையில் அவை வல்லெழுத்துக்களல்ல. ஏனைய மெல்லெழுத்துக்கள் இடையெழுத் துக்களை நோக்கியே அவைகள் வல்லெழுத்துக்க ளெனப்பட்டன. எழுத்துக்களைப்போலவே இவ்வெழுத்துக்களா லாகிய சொற்களும் இனிமையும் மென்மையு முடையன. இனிமை மென்மைகள் பெரும் பாலும் கேட்கும் செவியானும் உச்சரிக்கும் நாவானும் அறியக்கூடிய வைகள். சொற்களிலுள்ள எழுத்தோசைகள் ஒவ்வொன்றும் தொடருங்கால் பிளந்துவிட்டிசைப்பதில்லை. நீரும் நீருஞ் சேர்ந்தாற் போல ஒன்றுபட்டிசைக்கும். "கண்டான்" என்னுஞ் சொல்லில் "க்" என்ற மெய்யும் "அ" என்ற உயிரும் "ண்" என்ற மெய்யும் "ட்" என்ற மெய்யும் "ஆ" என்ற உயிரும் "ன்" என்ற மெய்யும் ஒன்று பட்டு நடப்பது செவியானும் நாவானும் முறையே கேட்டும் உச்சரித் தும் அறியப்படும். "ல்" என்ற மெய்யோடு "த்" என்ற மெய் ஓசையாலியைந்துவரும் ஒருசொல் தமிழில் இல்லை. இங்ஙனமே உயிரோடு உயிர் இயைந்துவரும் மொழியும் தமிழிலில்லை. இதற்குக் காரணம் இங்கே காட்டப்பட்ட ஓசைகள் தம்முள் இயையாமையாம்.

இன்ன எழுத் தோசையோடு இன்ன எழுத் தோசைதான் நீரும் நீருஞ் சேர்ந்தாற்போல் ஒன்றுபட்டிசைக்கு மென்பதை இற் றைக்கு எண்ணாயிரம் ஆண்டுகட்கு முன்னரேயே தமிழர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். தொல்காப்பியத்தில் இடைநிலை மயக்கமென்ற விஷயம் இதுபற்றித்தான் எழுந்தது. நன்னூலில் "கசதபவொழிந்த" என்ற சூத்திரம் தொல்காப்பியத்தின் வழிவந்ததே.

இங்ஙனம் ஒருசொல்லில் எழுத்துக்கள் ஓசையால் ஒன்றுபட்டு நடப்பதேயன்றி சொற்கள் தம்முட்டொடருங்காலும் பிளவுபடாமல் ஒன்றுபட்டே நடக்கும். "அவன்கண்டான்" என்ற தொடரில் நிலை

மொழியீற்றிலுள்ள "ன" கரமெய்யும் வருமொழிமுதலிலுள்ள "க" கரமெய்யும் ஒன்றுபட்டுநடக்கும் என்பது உச்சரித்தும் கேட்டும் உணரப்படும். அவ்விரு எழுத்துக்களும் ஓசையான் ஒன்றுபடுமென்பது "ணனமுன்னினங்கசமய" என்னும் சூத்திரத்தானறியப்படும். "அணி"—"அழகு"; "அவல்"—"தின்றான்;" "தாள்"—"தலை"; என்னும் இவைபோன்ற தொடர்கள் தமிழில் இல்லை. தமிழர்களது நா இப்படியான தொடர்களை உச்சரித்துப் பழகியதில்லை. மேற்காட்டிய உதாரணங்களில் "இ+அ"; "ல்+த்;" "ள்+த்;" என்பனதம்முள் ஓசையியைதலில்லை. இங்ஙனமாதல் மயங்குதற்கு விதியின்மையானறியப்படும்.

மேற்படி தொடர்களை வழங்கவேண்டுமாயின் நிலை மொழி இறுதி, வருமொழிமுதல் ஓசைகள் மயங்குதற்கு உரிய எழுத்தோசைகளாக மாற்றப்படவேண்டும். இன்றேல் இடையில் ஓர் எழுத்தோசை தோன்றி நிலைமொழி வருமொழி ஓசைகளைச் சேர்த்துக்கொள்ளும். அங்ஙனமாதல் "அவறின்றான்" "அணியழகு" "தாடலை" எனவழங்குவதா லறியலாம்; இதுகாறும் கூறியவாற்றால் சொற்கள் ஒன்றோடொன்று தொடருங்கால் நிலைமொழி யிறுதியிலோ, வருமொழிமுதலிலோ, அன்றியவற்றினிடையிலோ எழுத்துக்கள், தோன்றியும், திரிந்தும் கெட்டும் புணர்தற்குக் காரணம் மயக்கவிதியின்மையென்பது பெறப்பட்டது

"அவன்+கண்டான்" என்பதில் "ன"கர மெய்யும் "க"கர மெய்யும் தம்முள் மயங்குமாதலின் "அவன் கண்டான்" என்றே இயல்பாகப் புணரவேண்டும். அவ்விரு சொற்களும் அங்ஙனம் இயல்பாகப் பயின்று வழங்குவதைக் காணலாம். ஆனால் சில இடங்களில் "அவன்+கண்டான்" "அவற்கண்டான்" என வழங்குகின்றது. "ன"கரமெய் "க"கரமெய்யோடு மயங்குதற்கு விதியிருந்தும் அங்ஙனம் மயங்காமல் அம்மெய்யோடு மயங்குதற்குரிய மற்றொரு மெய் (றகரமெய்) ஆக திரிதற்குரிய காரணம் விசாரிக்கற்பாலது. "ன"கர மெய்யோடும் "க"கரம் மயங்கும்; றகர மெய்யோடும் மயங்கும். இங்ஙனமாகவும் "ன"கர மெய் "ற"கர மெய்யாகத் திரிந்ததன் பயன் யாது? என்பதுதான் கேள்வி. இக்கேள்விக்கு விடை "அவன் கண்டான்" "அவற் கண்டான்" என்ற தொடர்களின் பொருள்களை விசாரிப்பதனான் அறியக் கூடியதா யிருக்கும். "அவன் கண்டான்" என்ற தொடருக்குப் பொருள் வெளிப்படை. "அவன்" என்றது எழுவாய்ப்பொருளில் வந்தது. பிந்தியது அவனைக் கண்டானென்பது.

இத்தொடரில் "அவன்" என்பது செயப்படுபொருளில் வந்தது. முந்திய தொடர்ப்பொருள் அல்வழிப்பொருள். பிந்திய தொடர்ப்பொருள் வேற்றுமைப் பொருள். ஆகவே "ன" கரம் "ற" கரமாகத் திரிந்தது ஓசையை ஒன்றுபடுத்துவதற்கன்று; அத்தொடர்ப் பொருளை அல்வழிப்பொருளினின்றும் விலக்கி வேற்றுமைப் பொருளைத் தருவதற்கென்பது நன்கு புலனாகிறது.

இதனால் ஓசை யொன்றுபட்டு நடக்கும் தொடர்களின் இடையிலும் தோன்றல் முதலிய விகாரங்கள் பொருணோக்கம் பற்றியுண்டாமென்பது பெறப்படும். அப்பொருணோக்கந்தான் அல்வழிப் பொருணோக்கம் வேற்றுமைப் பொருணோக்கமென இருவகைப்படுமென்பது மேற்காட்டிய தொடர்களின் பொருளை விளக்குமுகத்தாற் பெறப்பட்டது. மற்றுமோர் உதாரணம். "வாழை+பழம்" ஐகாரம் பகர மெய்யுடன் மயங்கும். 'வாழை பழம் கொண்டு வா' என்று ஏவிய வழி இலக்கணநூலுணர்ந்த மாணவன்—புணர்ச்சி விதியறிந்த மாணவன்—வாழையும் பழமும் கொண்டுவருவான்; 'வாழைப்பழம் கொண்டுவா' என்றவழி வாழையைப் பழுதுபண்ணாமல், வாழையினது பழத்தை மாத்திரம் கொண்டுவருவான். வாழைப்பழம் என்ற தொடரில் "ப" கர மெய் வேற்றுமைப் பொருணோக்கம் பற்றித் தோன்றியது.

வேற்றுமைப் பொருணோக்கம் செயப்படுபொருள் முதலாக ஆறுவகைப்படும். அல்வழிப் பொருணோக்கம் வினைத்தொகை முதலாகப் பதினான்குவகைப்படும். மொத்தம் பொருணோக்கத்தி விருபது வகை.

இனிப் புணர்ச்சிக்குரிய காரணம் மயக்கவிதியின்மையும் பொருணோக்கமுமா மென்பது வெளிப்படை.

---

மேன்மை யெந்தன் முன்னின்று பேசாதே போடி—கரு
வேழமதமும் பிணத்தி விட்ட ரிசிதானும்
தேனும் வெள்ளைக் குன்றிமணி வேருநாரு மிலையுங்—கன்னித்
தென்னைமுன்ன மீன்றதொரு தேங்காயும் சேர்த்தே
கானமீது நிறைகள்ளிப் பாலுடனே வேருங்—கருங்
காக்கணங் கொவ்வை விரையுங் காக்கை நாக்கும்
ஆனபடி உண்டை கூட்டிப் பள்ளனுக்கிட்டே—பின்னும்
ஆறிவா ரென்றுசொன்ன தாரடி பள்ளி.

[க. ம. ப: செய். 18]

# குறிஞ்சி

(க. பரமசிவம்)

மனிதருக்கு உறுதிபயப்பன அறம், பொருள், இன்பம், வீடென்னும் நான்குமாம். இங்ஙனம் வகுத்துக் கூறுவது வடநூல் வழக்கு; இவற்றைப் புருஷார்த்தமென்பர். தமிழ் நூலார் அகம், புறமென இரண்டாக வகுப்பர். இங்கே அகமென்றது முற்கூறிய நான்கனுள் இன்பத்தை. இன்பம் தானே யுணர்தலன்றிப் பிறர்க்கு இன்னதன்மைத்தெனக் கூறலாகாமையின் அகமெனப் பட்டது. உருவும், திருவும், பருவமும், குடியும், குணனும், அன்பும் முதலியவைகளால் தம்முள் ஒப்புமையுடையராய தலைவனும் தலைவியும் பிணி மூப்பாதியனவின்றி நுகரும் இன்பமே அகம் எனக் கூறப்படும் இன்பமென்க.

அவ்வின்பத்துக்குக் காரணமாய ஒழுக்கம் அகத்திணை எனப் படும். அது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை, கைக்கிளை என எழுவகைப்படும். இவற்றுள் குறிஞ்சி என்பது கூடலும் கூடல் நிமித்தமுமாம். இவ்வொழுக்கத்திற்கு நிலம் மலையும், மலைசார்ந்த இடமுமாம். பெரும்பொழுது ஐப்பசியுங் கார்த்திகையுமாகிய கூதிர்ப்பருவமாம். சிறுபொழுது அப்பருவங்களது இரவின் நடுக்கூறாகிய யாமமாம். கருப்பொருள் முருகவேள் ஆகிய தெய்வமும், குறவர் முதலிய மக்களும் மயில் முதலிய புட்களும், வேங்கை முதலிய மரங்களுமாம். குறிஞ்சி முதலிய அகவொழுக்கமெல்லாம் களவு, கற்பு என இருவகைப்படும். இவற்றில் களவின்றிக் கற்பு நிகழுமாறில்லையெனவும் களவே சிறப்புடைத்தெனவும் கூறுப. களவாவது முற்கூறிய உருவும், திருவும், முதலியவற்றால் தம்முள் ஒப்புடையராய தலைவனும் தலைவியும் கொடுப்பாரும் அடுப்பாருமின்றி ஊழ்வினையால் தாமே யெதிர்ப்பட்டு இன்பம் துய்த்துவருவது.

முதலில் இவ்வாறு ஒரு பொழிலில் எதிர்ப்பட்டுச் சேர்வது இயற்கை எனவும், அதன்பின் அவர்கள் பிரிந்து சென்று முன்போன்று மீட்டும் அவ்விடத்தே கூடப்பெறின் அது இடந்தலைப்பாடெனவும், பாங்கனாற் கூடப்பெறின் அது பாங்கற்கூட்டமெனவும்,

தோழியாற் கூடப்பெறின் அது தோழியிற் கூட்டமெனவும் கூறப் பட்டுக் களவு நால்வகைப்படும். பாங்கனும் தோழியும் தலைமகட்கு உயிர்போற் சிறந்தாராகலின் அவர்க ளறிவது பிறரறிவதாகாது. தலைமக்க ளறிவதே போலும்.

தலைவனுக்கும் தலைவிக்குமிடையில் முதல் இயற்கைக்களவே நடைபெறும். பின்பாங்கன் அல்லது தோழி முதலியோராற் கூட்டப் பெற்று கள வொழுக்கம் நடைபெறும். இவர்களின் உதவியால் தலை வன் இராக்காலத்திலும் வந்து தலைவியைச் சந்தித்துச் செல்வான். இங்ஙனம் தலைவன் இரவுக் குறியிடை யீடுபட்டுத் திரியுங் காலத்தில் பன்முறை வாராமல் இருப்பின் தலைவி வருந்துவாள். அவன் பிரிவின் காரணமாகவும், அவன் வரும் வழி காட்டுமார்க்கமாகையால் சிங்கம், புலி முதலிய காட்டு மிருகங்கள் அவனைக் கொன்றனவோ? அல்லது பகைவர்கள் அவனுக்கு ஏதுந் தீங்கு விளைத்தார்களோ என்று ஐய முற்று பலவாறாக எண்ணியும் மனம்வருந்துவாள். பின் அவனையே எஞ்ஞான்றும் மனத்திலெண்ணி இளைத்துச் சோகத்தால் இரவும் பக லும் கண் துயில் அறியாள். கொஞ்சிக்கொண்டு நெருங்கும் பைங்கிளி யின் பவளவாயில் பாலுணவை யூட்டாள். தானும் உண்ணாள். மார் பில் சந்தனம் அணியாள். மலர்க்கண்களுக்கு மை எழுதாள். அன் போடு நெருங்கும் பூவையை ஆசையோடு நோக்குவதை விட்டு வெறுப்போடு நோக்குவாள். அதி விருப்புடன் விளையாடும் பந்து களையும் பதுமைகளையும் மூலையில் எறிந்துவிடுவாள். சிலசமயங்களில் பித்துப் பிடித்தவளைப்போல் பெருநகை புரிவாள். விழிகளிலிருந்து நீர் அருவிபோல் பெருகி வழிய நின்று கலங்குவாள். இங்ஙனம் இவள் மேற்கூறிய தொழில்களை மனவேறுபாட்டாற் செய்ய, அவ ளுடைய அழகிற்சிறந்த மாந்தளிர் போன்ற மேனியும் வெள்ளை வெளே லென்று வெளுத்துவிடும். தேகமெங்கும் பசலை பூத்துப்பரவி விடும். இங்ஙனம் இவளது உளவேறுபாட்டையும் உடல்வேறுபாட்டையும் கண்ட தாயானவள், தலைவியின் இளைப்புக்குக் காரணமான நோய் இன்னதென அறியும்பொருட்டு குறி சொல்லுவாரை வினவி, அவர் கள் தெய்வத்தாலுயிற்று எனக்கூறலின் தெய்வங்கட்குச் சிறப்புச் செய்வாள். பின்னும் நோய் நீங்காமையால் மனம் வருந்துவாள். அந்நிலையில் தலைவி மேலும் ஆற்றாமையுடையளாய் எமக்குள் நிகழ்ந்த நிகழ்ச்சியை நாம் தாய்க்கு அறிவுறுத்துவதால் பழியும் வருவ துண்டோ? என்று தோழிக்கு உணர்த்த, அவள் உடனே தலைவனுக் கும் தலைவிக்கும் இடையில் நடந்த கூட்டத்தை வெளிப்படுத்துவாள்.

தோழியானவள் உயர்குடிப்பிறந்த தலைவியினது களவொழுக்கத்தை வெளிப்படுத்தும்போது தாய்க்குச் சினமுண்டாகாதவாறும், தலைவியிடத்தாதல், தன்னிடத்தாதல், தலைவனிடத்தாதல், அவளிடத்தாதல் சிறிதும் குற்றமின்றென அவளுணருமாறும் இங்ஙனம் நிகழ்ந்தது நல்வினைப் பயனே யெனத் தோற்றுமாறும் பெரிதும் வியக்கத்தக்க மாதிரியாகக் கூறுவாள்.

அம்மே! நீதான், "விளைந்த தினையின்கண் வீழும் கிளிகளை யோட்டி மாலைப்பொழுதில் வருவீராக" எனச் சொல்லி அனுப்பினீர். நாங்கள் சென்று ஓர் மரத்தினுச்சியில் மேலிருந்த பரணிலே யேறிக் கவண், தட்டை முதலியவற்றை முறை முறை கைக்கொன்டு கிளிகளை யோட்டினோம். பின்பு சூரியனின் வெம்மையால் வானிற் பறக்கும் பறவைகளெல்லாம் தாம்தாம் இருக்கும் இருப்பிடஞ் செல்ல நாங்கள் பரணிலிருந்தும் இறங்கி தெளிந்த நீரையுடைய சுனையிலே குடைந்து விளையாடினோம். விளையாடுங்கால் எங்கள் மனத்திற்கு விருப்பமான பல பாடல்களைப் பாடினோம். பின்பு எமது பின்னிய கூந்தலின் நீரைப் பிழிந்து ஈரம்புலர்த்தினோம். பன்னிறமுள்ள பலவகையான பூக்களைக் கொய்வதற்காகப் பலவிடமுஞ் சென்று, ஆம்பல், அனிச்சம், செங்கழுநீர், குறிஞ்சி முதலியபூக்களை மிக்க வேட்கையுடன் பறித்து வந்து பரிசுத்தமான அகன்ற பாறையிலே குவித்தோம். பின்னர் கிளிகளை யோட்டியும், பூக்களின் புற இதழ்களைக் களைந் தெறிந்து அழகமைந்த மாலைகளை யுண்டாக்கி, கழுத்திலும் மார்பிலும் தலையிலும் சூடியும் எம்மை அலங்கரித்துக்கொண்டு, நெருப்புப்போலும் நிறத்தை யுடைய அசோகினது தாது உதிர்கின்ற தண்ணிய நிழலிலே மேவி யிருந்தோம். அங்ஙனம் இருக்கையில் ஓர் ஆண்டகை, பன்னிறமுள்ள பூக்களால் தொடுக்கப்பட்ட மாலையை யணிந்தவனும், மார்பில் சந்தனம் பூசப்பெற்றவனும், கச்சினை உடையின்மேல் இறுகக் கட்டியவனும், கையிலே வில்லையும் அம்பையும் ஏந்தியவனும், நடக்கும்பொழுதெல்லாம் பொன்னாற் செய்த வீரக்கழல் ஒலிசெய்ய அவ்விடம் வந்தான். அவனைக் கண்டதும் நாங்கள் நாணி எழுந்து நின்றோம். அப்போது அவன் நாங்கள் அஞ்சுதற்குத் தான் அஞ்சி மென்மையும் இனிமையுமுடைய சொற்களை எமக்குப் பொருந்துமாறு சொல்லி, எம் கூந்தலையும் அழகையும் புகழ்ந்து, "ஒள்ளிய தொடையும், மெல்லிய சாயலும், அழகிய உந்தியும், மதரிய கண்ணு முடையீரே! என்னைத் தப்பி இவ்விடத்துக்குப் போந்த யானையைக் கண்டீரோ"? என வினவினன். அதற்கு நாங்கள் மறுமொழி யொன்

றும் பகராது நாணிக் குனிந்து நின்றோமாகையால், அவ்வாண்டகை நெஞ்சழிந்து "நீவிர் காட்டித்தாரீராயினும் எம்முடன் ஒரு சொல் சொல்லுதலும் உமக்குப் பழியாமோ? எனச் சொன்னான். அப்பொழுது வேறு புனத்திலே ஓர் வேழமானது தினையைத் தின்று அழித்ததினாலே அங்குள்ள வேடர்கள் வில்லை வளைத்து அம்பைத் தொடுத்து காடெல்லாம் கல்லென்னும் ஓசை பிறக்கக் கூச்சலிட்டு அதனைப் புனத்தினின்றும் ஓட்ட அவ்வேழம் மதச் செருக்கினை யுடைத்தாகி இடியேறுபோல் முழங்கி மரங்களை முரித்துக் கையைச் சுருட்டி நிலத்திலே யெறிந்து எங்கள்மீது கடுக வந்தது. நாங்கள் உயிர்கொண்டு பிழைப்பதோரிடம் அங்கு வேறுணரோமாகி உலைவுற்ற மனத்துடன் உயிரினுஞ் சிறந்த நாணினைப் பாதுகாத்தலை மறந்து வளைகளொலிக்கும்படி விரைந்து சென்று அவனைச் சேர்ந்தோம். உடனே அவன் பல அம்புகளை அவ்வேழத்தின்மீது எய்யவும் அது ஆற்றாது புறங்கொடுத் தோடிற்று. அதன்பின் நாங்களும், அவ்வாண்டகையும் முருகவேளுக்கு வரைமகளிர் கைகோத் தாடுவது போன்று கூத்தாடினோம். ஆற்றின் பெருக்கிலே குதித்து விளையாடினோம். விளையாடும்பொழுது தலைவி, இடிகரையினின்ற வாழைபோலக் கால் தளர்ந்து நீரிற் செல்லலுற்றாள். அப்பொழுது அவ்வாண்டகை விரைந்து போய் அவளை எடுத்து, "யான் நினது நலத்தை நுகர்வேன். நின்னை நீங்குவேனெனச் சிறிதும் அஞ்சாதே" என்று சொல்லி அவளுடைய ஒளிபொருந்திய நுதலினைத் துடைத்து, நெடுநாள் இக்களவொழுக்கம் நிகழவேண்டுமென நினைத்து என் முகத்தை நோக்கிச் சிரித்தான். பின்னர் அவன் அன்று பகற்பொழுதெல்லாம் எம்முடன் போக்கி மாலைப்பொழுது வந்ததும் எங்களை விட்டுப் பிரியானாய் நின்ற நிலையிலே கையா லணைத்து இவள் மார்பு தன் மார்பிலே யொடுங்கும்படி தழுவி ஆவைப் புணர்ந்த ஏறுபோல எம்முடன் சிறிது தூரம் வந்து பின் மீண்டான். அதுமுதலாக, அன்றுபோலும் விருப்பத்தோடு எந்நாளும் இரவுக்குறியில் வருதலைத் தனக்கியல்பாக வுடையன். அங்ஙனம் வரும்போதெல்லாம் அயலார் கடுகிக் காத்தாராயினும், சினத்தினை யுடைய நாய் குரைத்ததாயினும், நீ துயிலுணர்ந்தாயாயினும் மூங்கிலையொத்த மென்றோளிற் பெறும் இன்றுயில் பெறாது போவன். இதன் காரணமாகத்தான் தலைவி அவ்வாண்டகையை நினைந்து கலங்குகின்றாள்போலும். இந்நிகழ்ச்சியை யெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த தாயானவள் பின் சுற்றத்தாருக்கு இச்சம்பவத்தைச் சொல்லி கற்பொழுக்கம் நடக்குமாறு நன்மணஞ் செய்து வைப்பாள்.

370.73
CAI
AR

# பாலரும் புலப் பயிற்சியும்

(சு. முருகேசு.)

உலகிற் காணப்படும் பலவேறு நிகழ்ச்சிகளையும் கிரகித்தற்குப் பொறிகள் வாயில்களாகின்றன. இப்பொறிகளால் புலன்களை நுகருகின்றோம். இவ்வழியாக விஷயங்களை யறிவதில் நாமெல்லா மொத்திருப்பதில்லை. இதை நாம் ஒவ்வொருநாளும் புரியுங் கருமங்களின் ஜெய அபஜெயங்களே காட்டுவன. ஒரு பொருளைத் தூக்கி அதன்நிறையை மதிப்பதில் பேதமுறுவோம். ஒரு பதார்த்தத்தைச் சுவைப்போர் பலருக்கு அதன்சுவை ஒருவாறிராது பேதமுறுவதுண்டு. ஒருகாட்சி யாவர்மனத்தையுங் கவருவதுமன்று ஒருவருடைய எழுத்தை எல்லோரும் நல்லதென்று அல்லது கூடாதென்று கூறுவதில்லை. இவையெல்லாம் புலனுகர்ச்சியளவின் வேறுபாடுகளே. இவ்வேறுபாடு இவ்வுலகிற் பெறும் பலவேறு இன்பதுன்பங்கட்குக் காரணமாகின்றது. பொருள்களின் பருப்பம், நிறம், ஓசை, சுவை, சீதோஷ்ணம், பாரமாதியவற்றை யறியும் அறிவு நாள்தோறும் நமக்கு அவசியம் வேண்டியிருக்கின்றது. இவற்றை அறிதற்கேற்ற ஆற்றல்கள் கடவுளால் அருளப் பட்டவை என்பதுண்மையே. ஆயின் இவற்றினளவு பிறப்பிலே பூரண மடைந்திருப்பதில்லை. ஆரம்ப நிலையிலிருந்து நாம் பெறும் பலவேறு அநுபவங்களின் அளவிற் கேற்ப விரிவடைகின்றன. அஃதின்மையால் விருத்தி குன்றுகின்றன. மிக்க பயிற்சியால் விசேட தேர்ச்சியடைகின்றன. குழந்தைகளினியல்பறிந்தார்க்கு இவை வெளிப்படை. காதுகேளாத ஒருவன் தன் கட்புலனை அதிகமாக உபயோகித்து ஒருவர் பேசும்போது அவர் உதட்டின் குறிப்பால் விஷயங்களைக் கிரகிப்பன். ஆனால் என்றும் காதினால் விஷயங்களைக் கேட்டும் கிரகித்தும் வந்த யாம் காதுகளை இறுகப் பொத்திக்கொண்டு பிறர் உதடுகளை அவதானித்துச் செவிடர் போலக் கிரகிக்கமாட்டோம். இதனாற் செவிடரின் கட்புலன்விரிவும் எமது குறைவும் பெறப்படும். கண்ணில்லா வொருவன் எம்மினும் பார்க்கப் பரிச உணர்ச்சி மிக்கிருத்தலைக் காண்போம். இவையெல்லாம் அன்னார்தம் ஒரே புலன்களைப் பற்றிப் பெற்ற விசேட தேர்ச்சியே. குருடர்களுக்கு ஸ்பரிச உணர்ச்சியே கண்ணாக ஓரளவிற் குதவு கின்றது.



250041

ARCHIV

இவர்களைப்போலவே ஏனையோரும் புலன்களைத் தக்கவாறு உபயோகித்தலினால் விசேடதேர்ச்சி பெறமுடியும்.

சாதாரண சனங்கள் புலன்களின் பயிற்சி விஷயமாய்க் கவனிப்பதில்லை. இயல்பிலே பூரண முடையதெனக் கருதுவர். இது தவறு. இவரிவ்வாறு கருதுவதனாலும்; குழந்தைகளினியல்புகளை யறிந்து புலன்களை யேற்றவாறு உபயோகியாமையாலும்; இயற்கையாகக் கட்புலனும் செவிப்புலனுமே ஓரளவிற்கு விருத்தியடைய ஏனைய மந்தமடைந்துள்ளன. தக்கவாறு பயிற்சி பெறாது நாலாவது வயதிற் பாடசாலைக் கனுப்பப்படுஞ் சிறுவர்களுக்கு அதன் மேலாயினுந் தக்க பயிற்சியளித்தல் நல்லாசிரியர்கடன். இன்றேல், துருப்பிடித்த ஆயுதம் போன்று பழுதுறும். உதாரணமாகச் சிறுவயதிலே ஓசையின் பேதங்களைப் பகுத்துணரும் பயிற்சியை அளித்துப் பலவித இராகங்களைப் பயிற்றல் உசிதம். அப்படிச் செய்யாது விட்டு முதிர்ந்த வயதில் இராகத்தை ஓரளவிற்குப்பழகினும் அது இளமையிற் பெறும் அத்துணைச் சிறந்த தன்மையாக விருத்திபெறாது. விசேடமாக மூன்றாவதாண்டுமுதல் ஏழாவதாண்டுமுடியவுள்ள காலமே புலப்பயிற்சிக்கேற்ற சிறந்த காலம் எனச் சிறுவரினியல்பறிந்தார் கூறுவர். பாலர் பாடசாலைக்கு வந்தவுடன் அவரின் உடல் நலனின் குறை நிறைகளை அறிந்து சிரமப்பயிற்சி, விளையாட்டு, நல்லுணர்வு, நற்பழக்கம், சுகாதார அநுசரணை இவற்றால் அக்குறைகளைத் திருத்துவதோடு அவருள்ளத்தை விருத்தியாக்குதற்குப் புலன்க ளினின்றியமையாமையை உணர்ந்து அவை ஏற்றவாறு விருத்தியாதற்குரிய செயல்முறைகளையும் கைக்கொள்ள வேண்டும். இவ்விதம் புலன்களைக் கவனியாது செவிப்புலனையே ஆதாரமாகக் கொண்டு கற்பிப்பின் மாணவர் கல்வியிற் கவன மில்லாதவராயும், மந்தராயும். உளவிருத்தி குன்றியவருமாயிருப்பர். அதுவுமன்றி அவர் பின் அபஜெயங்களுக்காளாக நேரிடும். ஆகையாற் பாலரின் க்ஷேமமும் நாட்டின் நலனுங் கருதித் தொண்டாற்றும் நல்லாசிரியர்கள் பாலர் பாடசாலைக்கு வந்தபோது அவர் குறைகளையறிந்து அவற்றைத் திருத்துதற்கு வேண்டிய அம்சங்களிற் பெற்றோருடைய ஒத்துழைப்பையும் பெற்று, அவர் புலன்களையும் அவை வாயிலாய்க் கல்வியையும் விருத்தி செய்யவேண்டும். இது காரணமாகவே பாடசாலைகளிற் பெற்றோர் தினக்கொண்டாட்டம் முதலியவற்றை நடாத்துகின்றனர். ஆரம்பத்திலிருந்தே நேர சூசிக்கும் பாடத்திட்ட வேலைக்கும் சிறுவரை இலக்காக்காது இயற்கையாய் அவர் விரும்பிச் செய்யும் முயற்சிகளிலிருந்தே பாடத்தைக் கற்றுக் கொடுக்கவும் புலனைப் பயிற்றவும் முயலவேண்டும். இயற்கையாய்

வீட்டில் என்ன மனோபாவங்களோடு ஓர் பிள்ளை இருக்கிறதோ அதே மாதிரிப் பாடசாலையிலும் இருக்கக்கூடிய வசதிகள் செய்யவேண்டும். ஆயின் பிள்ளைகள் செய்யும் ஒவ்வோர் கருமங்களின் மூலம் அன்னார் புலன்களைப் பயிற்றவும் எண், பேச்சு, எழுத்து, வாசிப்பு, விளையாட்டு, சித்திரம் என்பவற்றைச் சந்தர்ப்பம் நோக்கிக் கற்பிக்கவும் வேண்டும்.

புலப்பயிற்சி யவசியமென்றும் வஸ்துக்களைத் தொட்டும் தடவியும் மோந்தும் பார்த்து மறியும் சக்தியை விருத்திசெய்வது மிகப் பயன்படுமென்றும், ஆரம்பத்தில் எடுத்து உலகிற்குச் சொல்லியவர் டாக்டர் மொன்ரெசூறி அம்மையாரே. இற்றாலியில் உரோமாபுரியில் பிறந்த இவர் கல்விமுறைகளை யாராய்ந்து குழந்தைகளின் பயிற்சிக்காக நிறுவிய முறை மொன்ரெசூறி முறை எனப்படும். கண்களில்லாதவர்க்கே ஸ்பரிச உணர்ச்சி அதிகமுண்டு. குருடர்கள் தம் பாடசாலையில் எழுத்தி னுருவத்தைப் பரிசித் தறிவர். அதேபோலக் கண் தெரிந்தவர்களும் உருவத்தைக் கண்ணாற் பார்த்தறிவதை விடக் கையாற் பரிசித்து மறியவேண்டு மென்பது மொன்ரெசூறியம்மையி னபிப்பிராயம். இதனாலவர் குழந்தைகட்குப் பின்வருமாறு எழுத்துக்களைக் கற்பிக்கின்றார். ஆரம்பத்தில் எழுத்துக்களைக் கண்ணாற் பார்க்கச் செய்தல்வேண்டும். பிறகு குழந்தையின் கண்களை ஒரு துணியாற் கட்டிக் காகிதமட்டையில் வெட்டிய எழுத்தை அல்லது மரக்குழியா லமைந்த எழுத்தின் வடிவத்தைக் குழந்தைகளிடம் கொடுத்துப் பரிசித் துணர்ந்துகொள்ளச் செய்கிறார். இதனாற் கட்புலனும் பரிசமும் எழுத்துணர்ச்சிக்கு வழியாதலன்றி விளையாட்டாயும் உற்சாகமாயு மிருக்கும். இப்படியான பயிற்சிகளினாற் புலன்களை விருத்தியாக்கவேண்டும். இப்படிச் செய்தலாற் புலப்பயிற்சி பெறுவதுடன் வேண்டிய கல்விப்பயன்களையும் மாணவர் பெற முடியும். உளத்தை விருத்தியாக்குதற்குப் புலன்களே ஏற்ற வாயில்கள். சாதாரண பாடங்களைவிட இவற்றைப் பயிற்றுவதற்கு வேறு வழிகள் தனிமையாக வேண்டியனவல்ல. இப்புலப்பயிற்சியை வளர்க்குமாறறிந்த ஆசிரியருக்கு இதன் பயனையும் மேன்மையையும் விருத்தியாக்கும் விஷயத்தில் சாதாரண பாடசாலைகளிலேயே பல சந்தர்ப்பங்கள் நேரும். அச்சந்தர்ப்பங்களைப் பயன்படுத்துவதனால் பாடங்களின் பயன் முன்னுளினு மதிகமாயும் வேலை இலகுவாயும் அமைவதைக் காணலாம். சாதாரண பாடங்களைக் கற்பித்தற்கண்ணும் சிறிது சிந்தித்துப் பாலரின் உளப்போக்கு, கற்பிக்கவேண்டிய விஷய மிவற்றிற்கேற்ற உபகாணங்களையும், மாணவருந் தாமும் புரியும் பலவேறு செயல்களையும் ஆயத்தம் செய்தலே வேண்டப்படுவது. இங்ஙனம்

சிந்தித்து முடிவுசெய்த ஒரு விஷயமூலம் மாணவர் பெறவேண்டிய சகல பாடங்களையும் இன்பமாகக் கற்கவும் உரியவாறு புலப்பயிற்சி பெறவும் முடியும். உதாரணமொன்று கூறுவோம்:—

சிறுவர்க்கு உலாவுவதிலும் மலர் கொய்து விளையாடுவதிலும் ஆர்வ மதிகம். அவர்களை மலர் உள்ள இடங்களை வினவி அவ்விடங்கட்குச் சென்று அல்லது பாடசாலைத் தோட்டத்துட் சென்று பலவினப் பூக்களையும் கூடியும் தனித்தும் பறித்துவரவும் பின் அவற்றை எண்ணிப் பயிற்சிபெறவும், அவற்றின் பெயரை அறிந்தோரும் அறியாதோரும் கலந்து பேசியும், பிறரை விசாரித்து மறியவும், அவற்றினிறங்களை யறிந்து அந்நிறங்கட் கேற்பப் பகுக்கவும், பின் அவற்றை நிறப்படி தனித்தனி எண்ணவும், நிறங்களின் பலவேறு பெயர்களையுங் கூடுமாயின் அவற்றின் அற்ப பேதங்களையும் அறியச்செய்யலாம். (உ—ம்): சிவப்பு, வெண்சிவப்பு, றோஸ்சிவப்பு எனப் பல நிறத்திலுமுள்ள பூக்களை மாணவர் மோந்தறிந்தபின் கண்களைக் கட்டி அவற்றை மோந்து மோந்து ஒவ்வொருவரு மின்னபூவெனச் சொல்ல விடலாம். இப்படி மாறி மாறிச் செய்தல் புலனைப் பயிற்றும் விளையாட்டாகும். பின் கண் கட்டப்பட்ட மாணவர் பூக்களைப் பரிசித்து இன்ன பூவெனச் சொல்ல முயல்வர். இதனாற் பரிசஉணர்ச்சி பெறுவதுமன்றி வெற்றி தோல்வி யமைந்த விளையாட்டுமாகும். இதன் பின் பூக்களை மாலையாகக் கோத்துப் படம், பொம்மை, அறை இவற்றுள் யாதானும் ஒன்றை அலங்கரித்து விளையாடலாம். நிறக்கட்டிகளாற் குறித்த பூக்களை அந்நிறமமையக் கீறலாம். பூ என்ற எழுத்தை எழுதலாம். பூக்களைப்பற்றி அமைக்கப்பட்ட ஓர் பாட்டை அபிநயத்துடன் பாடலாம். மாணவர் தாம் செய்தவைகளைப்பற்றிக் கலந்து பேசலாம். இப்படி ஒரு பாடத்தை நடத்துவதனால் எண், பேச்சு, சொற்பயிற்சி, சித்திரம், பாட்டு முதலிய சகல பாடங்களையுங் கற்பதுமன்றிப் பல புலன்களுக்கும் பயிற்சியளிக்கும். இது போல இலை, பழம், வித்து இவற்றைக்கொண்டும் பாடங்கள் நடத்தலாம். இவற்றைவிடப் புலன்களைப் பயிற்றுதற்குரிய வேறு சில நெறிகளையும் கூறுவர். செவிப்புலனைப் பயிற்றுவதற்குப் பல வித்தியாசங்களையுடைய ஒலிக்கருவிகளான் ஒலியெழுப்பிக் காட்டிப் பின் கண்ணைக் கட்டிப் பின் ஒவ்வொன்றாகச் சத்தம் செய்து அவற்றின் பெயரைச் சொல்லச்செய்யலாம். கண்கட்டியபின் ஒருவ ரொருவராக வகுப்பிலுள்ளவர் சத்தம்செய்ய அவரை யறியும்படி தூண்டலாம். பீங்கான், மண், செம்பு, பித்தளை, மரம், அலுமினியம், தகர

மிவற்றி லடிக்கும் தொனியின் பேதமறிந்து கூறும்படி தூண்டலாம். மணியடித்துக் கொண்டு வட்டத்துள் ஒருவன் சுற்றிவர ஏனையோர் வட்டமத்தியில் நின்று அவனைப் பிடிக்க முயற்சி செய்யலாம். வித்தியாசமான இசைகளைப் பகுத்துணர்ந்து கூறச் செய்யலாம். பரிசத்தை அறிதற்குக் கண்கட்டிப் பரிசமூலம் பலவினக் காகிதங்களையும் மரக்குற்றிகளையும் தடவியறியச் செய்யலாம். மணல் சீனி முதலியவற்றைப் பரிசித்து அறியச்செய்யலாம். பலவித சேலைத் துண்டுகளை யறியச்செய்யலாம் பலவித உபயோகத்திற் செய்த பொருட்களைத் தடவி எதனாற் செய்ததென அறியச்செய்யலாம். பலவின இலைகளை, பலவினப் பூக்களை, பலவினப் பழத்துண்டுகளை, பலவின எண்ணெய்களை, பலவின மாவகைகளை மோந்து மோப்ப உணர்ச்சியை விருத்தியாக்கலாம். இங்ஙனம் புலப்பயிற்சிக்குரிய அப்பியாசங்களைத் தனித்தும், ஏனைய பாடங்களைக் கற்பித்தலிற் சம்பந்தப்படுத்தியும் கற்பித்து வருவதால் புலன்களும் அவை சம்பந்தமான அறிவும் விருத்தியடையும். மேற்கூறியவற்றையும் அவைபோன்ற பிறவற்றையும் ஆராய்ந்து ஏற்றவாறு அமைத்துக்கொள்ளவேண்டும். குழந்தைகளின் வாழ்க்கை தேவைக்கும் சுற்றுச்சார்புக்கு மேற்க இவற்றைக் கண்டறிவது ஆசிரியர்களது கடனே. இடைவிடாது எமது கவனத்தை இவ்விஷயத்துச் செலுத்துவதால் புதுப்புது வழிவகைகள் நமது புத்திக்குத் தென்படும். எத்தனையோ நல்ல விஷயங்கள் ஆய்ந்து சிந்திப்பதன் பயனாகவே கிடைக்கின்றன. குழந்தைகளின் கல்விவிஷயத்தில் யாம் அம் மாதிரி முயன்று வருவோமாயின் இன்றைக்குக் கற்பித்தமாதிரி நாளைக்குக் கற்பியாது விஷய மொன்றாக இருப்பினும் அதனைப் பெறுதற்குரிய வேறு வழிவகைகளை ஆக்க இயலும். ஆகையால் ஆசிரியராகிய யாமெல்லாரும் தக்கவாறு முயன்று சீரிய வழிகளை நாடி எம்மை வந்தணையும் சிறுவரின் விருத்திக் காதாரமாகிய புலப்பயிற்சியை வளர்ப்பதுடன் ஏனைய கல்விப் பயன்களையும் அடைவிக்க முயல்வோமாக.

---

"இயற்கையை எமது வழிகாட்டியாகக் கொண்டோமேயானால் அவள் எம்மைத் தூர்வழியிற் கொண்டு செலுத்தமாட்டாள். அவளது துணையின்றால் நாம் தூர்வழிகளில் புக முடியாது".

"சிசரோ"

*

# விவேகத்தை மட்டிடுதல்: பினெற்முறை

# MEASUREMENT OF INTELLIGENCE: BINET'S METHORD

(அ. குமாரசுவாமி.)

பினெற் முறையிலடங்கியுள்ள பயிற்சிகள் ஒருவனுக்கு இயற்கையாயமைந்துள்ள விவேகத்தை அளவிடுதற்கே ஆக்கப்பட்டன. இப்பயிற்சிகள் மூன்றுவயது தொடங்கிப் பதினைந்து வயது வரையிலுமுள்ள பிள்ளைகளினுடைய விவேகத்தைச் சோதிப்பதற்காகப் படிமுறையாக அமைக்கப்பட்டிருக்கின்றன. விவேகம் ஒரே அங்கத்தையுடைத்தாயிராமல் அனேக அங்கங்களை யடக்கியிருப்ப தென்பதையும் ஒரேஒரு மாதிரியான பரிசோதனை இவ்வங்கங்கள் யாவற்றையும் நன்ருக வெளிப்படுத்த மாட்டாதென்பதையும் பினெற் என்பவர் பூரணமாக இரசித்தார். இப்பயிற்சிகளை மூன்று வயது தொடங்கிப் பதினைந்து வயதீருகவுள்ள இருநூறு பிள்ளைகளில் பரிசோதித்து மாணவர்களின் கஷ்டத்துக்கேற்றவாறு அமைத்திருக்கின்ருர். பினெற் முறை தோன்றுதற்கு ஏறக்குறைய இருபது வருஷங்களுக்கு முன்மானத சாஸ்திரிகள் விவேகப் பயிற்சிகளிற் பரிசோதனை செய்திருக்கின்றனர். ஆனல் பினெற் முறை தோன்றியதன் பின் அம்முறையே சிறந்ததென்று எல்லோருமுணர்ந்தனர்.

இவ்வாறுணர்தற்கு மூன்று முக்கிய காரணங்களுள. முதலாவதாகப் பிள்ளைகளினுடைய விவேகத்தை யளவிடுதற்கு அவர்களுடைய வயதுக் கேற்பப் பயிற்சிகள் அமைந்தமை. ஒருபிள்ளையைச் சோதித்து இவனுக்குச் சாதாரண எட்டுவயதுப் பிள்ளையின் விவேகமிருக்கிற தென்று சொல்வது முறையாகும். அப்பிள்ளை 8 வயதுக்குக் கூடியுமிருக்கலாம்; குறைந்துமிருக்கலாம். ஆனல் பினெற்றுக்கு முந்திய மானத சாஸ்திரிகள் இம்படி யோரளவை ஆக்கவில்லை. இம்முறையைப் பினெற்றுங் கண்டுபிடிப்பதற்குப் பதினைந்து வருடங்கள் சென்றன. இரண்டாவதாகப் பினெற்றினுடைய பயிற்சிகள் பிள்ளைகளின் உள்ளபடியான தனிப்பான்மைகளை அளவிடுதற்கல்லாது அவர்களுடைய மேலான மானசிகப் பான்மைகளை அளவிடுதற்கேற்றவாறமைந்திருத்தல். இதனலேயே அவருடைய விசாரங்கள் பிள்ளைகளினுடைய ஞாபகசத்தியையும் சடுதியான பதிலியக்கத்தையும் போன்ற

தனிப்பான்மைகளை அளவிடாது அவர்களுடைய நியாயிக்குஞ் சக்தியையும் கற்பனு சக்தியையும் போன்ற மேலான பான்மைகளை யளவிடும் பான்மையுடையதாயிருக்கின்றன. மூன்ருவதாக இம்முறை மனேசக்தி சம்பந்தமான மானத சாஸ்திரத்தை முற்ருக நீக்கிப் பொது விவேகத்தைப் பரீட்சிப்பதனுல் சிறப்படைந்திருக்கின்றது.

விவேகத்தின் ஓர்பகுதியை அல்லது நிலையை அளவிடுதல் சுலபம் என்ற கொள்கை ஓர் போலிக் கொள்கையாகும். ஏனென்ருல் இப் பகுதிகளெல்லாம் பிரிக்கக்கூடாத நிலைமையில் ஒன்ருேடொன்று பின்னப்பட்டிருக்கின்றன. உதாரணமாக ஞாபகத்தைச் சாவதானத்திலிருந்து வேருகப் பரீட்சிக்க முடியாது. இதுபற்றியே பினெற் ஒவ்வொரு நிலையையும் வெவ்வேருகப் பரீட்சிக்காது எல்லாவற்றையும் ஒருமித்துப் பரீட்சிக்கக் கூடிய பயிற்சிகளை ஏற்படுத்தியுள்ளனர். பினெற்றினுடைய மானத சாஸ்திரத்தைச் சக்தி சாஸ்திரமென்று சொல்லலாம்.

விவேகத்தைப்பற்றி பினெற் என்பவர் கொண்ட கொள்கையானது எண்ணங்களின் நெறிக்கட் டங்கிய மூன்று தன்மைகளை வற்புறுத்துகின்றது. முதலாவது ஒன்றை நிதார்த்தமான வழியில் எடுத்து நிலைநிறுத்தும் சுபாவம். இரண்டாவது விரும்பிய முடிபைப் பூர்த்திசெய்யும் நோக்கமாகத் தகுதிசெய்வதற்குரிய ஆற்றல். மூன்ருவது சுயகண்டனஞ் செய்யும் வன்மை. இதற்குப் பகுதியாக்கப்பட்ட ஓர் நீளவட்டத்தின் ஒழுங்கற்ற பகுதிகளை ஒன்றுபடச் சேர்த்தல் ஓர் உதாரணமாகும். பினெற் விபரித்தபடி இச்செய்கை கீழ்க் காணும் மூலவஸ்துக்களை யுடையது. முதலாவது அடையவேண்டிய முடிபை மனதில் வைத்திருத்தல். அதாவது அமையவேண்டிய பாடத்தை மனதி லமைத்தல். இரண்டாவது உண்மையை உணராத போதிலும் ஒருவனுடைய சீரான யத்தனங்களைப் பொருந்திய இந்த எண்ணத்தினுல் பாதிக்கப்பட்டுப் பலவிதமாக ஒழுங்குபடுத்திப் பார்த்தல். மூன்ருவது இப்படியாகத் தான் செய்ததைச் சீர்தூக்கிப் பார்த்தல். அதைச் சட்டத்துடன் ஒத்துப் பார்த்து ஈற்றில் அதுதான் சரியானதோவென்று தீர்த்தல். இதைப்போன்றனவும் இன்னும் விவேகத்தின் பல நிலைகளையும் அளவிடக்கூடிய பலவிதமான பயிற்சிகள் பினெற் முறையில் அடங்கியிருக்கின்றன.

ஆனுல் இம்முறையினுல் ஒருவனுடைய பொது விவேகத்தை அளவிடலாமேயொழிய அவனுடைய முழு மனப்பான்மையையும் அளவிட முடியாது. பினெற் பயிற்சிகளை ஓர் பிள்ளையில் உபயோ

கிக்கும்பொழுது ஓரநுபவமான சாஸ்திரி அப்பிள்ளையி லெழும் மெய்ப்பாடுகளையும் சங்கற்ப சக்திகளையு மறியக்கூடும். இம்முறையினுல் ஒருவனுடைய சிறப்பு வல்லபங்களை அறிதல் முடியாதென்பதை யாவரு மறிதல்வேண்டும். இது ஓர் கபால லக்ஷண வித்தையல்ல வென்பது மறியத்தக்கது. ஆனுல் ஒருவன் என்ன கருமத்தைக் கொண்டால் சித்தியெய்துவான் என்பதை ஓரளவுக்கு இம்முறையிற் பரீக்ஷிப்பதனுல் விளங்கக்கூடும். கடைசியாக ஓர் பையனுடைய விவேகத்தின் நிலை இன்னதென் றறிதற்கு இம்முறையையேயன்றி வேறு முறைகளையு முபயோகிக்கவேண்டும். எனினும் ஒரு பிள்ளை திருத்தமடைவாளு அடையமாட்டாளு வென்பதைப் பினைற் பயிற்சிகள் பிற வழிகளிலும் பார்க்க எடுத்துக்காட்டுந் தன்மை யுடையன. ஆகவே ஒரு பிள்ளையைப்பற்றி யறிவு மிவ்வறிவு ஆசிரியருக்கு மிகவும் இன்றியமையாததா யிருக்கின்றது. இவ்வறிவுள்ள ஆசிரியர்களே பிள்ளைகளின் கல்வியைச் சரியான வழிகளில் நடாத்துவார்க ளென்பது எளிதிற் புலப்படும்.

---

காரைப் பொருந்துங் குவடு புடைசூழ்
　　கதிரைப் பதியிற் கந்தவேள்
கானக் குறத்தி கணவன் கலக்கக்
　　கலங்கு மவுணர் குலங்களின்
மார்பைப் பிளந்த மாலின் மருகன்
　　மஞ்ஞைப் பரியில் வருகுகன்
மதுரைக் கவிஞர் புகழும் வேலன்
　　மாவலி கங்கை வயலிலே
சேரத் திரண்டு நிரைத்துப் பரந்து
　　சிரித்துப் புருவம் நெரித்துக்காற்
சிலம்பு புலம்ப வோடிக் கூடிச்
　　செவ்வையாக நடு கையில்
தாரைப் பொருந்து மார்பிலே யிரு
　　தனத்தி லேகுழைக் கனத்திலே
தகைப் பிலேசின்னச் சிரிப்பிலே பள்ளன்
　　தயங்கி ருனடி பள்ளிரே.

[க. ம. ப: செ. 100]

# ஒரு எலெக்ஷன் கதை

(சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்)

1

கோட்டூர் ஜில்லாவுக்குத் தலைநகரமாகிய கோட்டூரில் முன்பு காட்டாஞ்சேரி என்று சொல்லி வந்து இப்போது சில வருஷமாய் ஜேம்ஸ்பேட்டை என்று புதுப்பெயர் கொண்ட ஆதிதிராவிடத் தெருவில் ஸப்ளையர் சீரங்கன் என்பவன் அவ்விடம் குடியிருந்த முப்பது ஹரிஜன குடும்பங்களுக்குள் கொஞ்சம் நல்ல ஸ்திதியிலிருந்தான். அநேகமாய் ஜேம்ஸ்பேட்டையில் குடியிருந்தவர்கள் அனைவரும் சோனை மலையில் கூலிவேலை செய்து ஜீவனம் நடத்திவந்தார்கள். சீரங்கன் கூலிவேலை செய்யவில்லை. மலையில் காப்பி, தேயிலைத் தோட்டங்கள் வைத்திருந்த வெள்ளைக்காரர்கள் வீட்டுக்கு வேண்டிய சாமான்கள் கோட்டூரிலும் சந்தைகளிலும் விலைக்கு வாங்கி அவர்களுக்குக் கொண்டுபோய்க் கொடுத்து அதில் கொஞ்சம் லாபம் சம்பாதித்து யோக்கியமாய் ஜீவனம் செய்துவந்தான். மலையில் எல்லாத் துரைமார்களும் துரைசானிகளும் அவனிடம் வெகு பிரியமாயும், நம்பிக்கைவைத்தும் வந்தார்கள்.

கோட்டூர் ஜில்லா கலெக்டருக்குங்கூட ஸப்ளையர் சீரங்கனுடைய யோக்கியத்தையும் நல்ல குணங்களையும்பற்றி சமாசாரம் எட்டியிருந்தது. முனிஸிபாலிடியில் ஒரு ஹரிஜன அங்கத்தினர் நியமிக்க வேண்டி வந்தபோது, கோட்டூர் போலீஸ் ஸூப்ரிண்டெண்டும், ஜில்லா டாக்டரும், லண்டன் மிஷன் பாதிரியாரும் எல்லாரும் சேர்ந்து வெளைக்காரக் 'கிளப்' பட்லர் சுவாமிப் பிரியன் என்பவரை நியமிக்கவேண்டுமென்று ஜில்லா கலெக்டரை வற்புறுத்தினார்கள். இந்த யோசனையைக் கலெக்டர் மனைவி தடுத்துவிட்டாள். ஸப்ளையர் சீரங்கனுக்குத்தான் அந்த ஸ்தானம் கொடுக்கவேண்டுமென்று மலையிலுள்ள வெள்ளைக்கார துரைசானிகள் சிபார்சு செய்திருக்கிறார்கள். அதுதான் சரி என்று கலெக்டர் மனைவி பலமாகத் தன் புருஷனிடம் சொன்னதே நிறைவேறிற்று. "உங்களுக்குத் தெரியாது. கிளப்பு பட்லரை நியமித்தால் ஊரில் தேசியப் போக்கிரிகள் பெருங் கிளர்ச்சி செய்வார்கள். காலத்தின் நிலைமையை யனுசரித்துப் போகவேண்

டும்" என்று கலெக்டர் மற்ற உத்தியோகஸ்தர்களுக்குச் சமாதானம் சொல்லி சிரங்கனையே சிபார்சு செய்து நியமனம் செய்துவைத்தார்.

அதுமுதல் சிரங்கன் நிலைமை கெட ஆரம்பித்தது. பெரிய மனுஷன் ஆகிவிட்டான். கலெக்டரும் உத்தியோகஸ்தர்களும் அவனுடன் கைகுலுக்கிப் பேசிவிட்டார்களல்லவா? தன் வியாபாரத்தைச் சரியாய்க் கவனிக்கவில்லை. சாமான்களைத் தானே சென்று வாங்குவதற்குப் பதில் தன் சிற்றப்பன் மகன் வரதனை அனுப்புவான். மலைக்கும் ஒவ்வொருநாள் தான் போவான். ஒவ்வொருநாள் வரதனையே அனுப்புவான். வரும் லாபத்தில் அவனுக்கு ஒரு பங்கு கொடுத்தான். கவனம் குறைந்தது. லாபமும் குறைந்தது. குடும்பச் செலவுக்குப் போதிய வருமானமில்லாமல் துரைசானிமார்கள் கொடுக்கும் முன்பணத்தில் சில பாகத்தை வீட்டுச் செலவுகளுக்கு உபயோகித்துவிடுவான். பிந்தி கஷ்டப்படுவான். கடைகளில் கடனாக சாமான் வாங்க ஆரம்பித்தான். பலநாள் வியாபாரம் யோக்கியமாகச் செய்து வந்திருந்தபடியாலும், முனிஸிபல் அங்கத்தினர் பதவி கிடைத்திருந்த புது கவுரவத்தினாலும் கடைக்காரர்கள் கடனாகச் சாமான்கள் கொடுத்தார்கள். துரைசானிகளிடம் கணக்கு ஒப்புவிப்பதில் சில பொய்களும் சொல்லவேண்டியதாயிற்று.

முறை கெட்டுவிட்டால், சின்ன வியாபாரமானாலும் சரி, பெரிய வியாபாரமானாலும் சரி, சிக்கல்கள் வரவர வெகு வேகமாய் அதிகரித்துக் கடைசியில் மனிதனைக் குழியில் தள்ளிவிடுவது தெரிந்த விஷயம். ஊரில் சிரங்கனுக்கு முன் இருந்த மதிப்புக் குறைந்துவிட்டது. முதலில், மற்ற நகரபரிபாலன அங்கத்தினர்களைவிடச் சிரங்கனே யோக்கியன் என்று பாதி வேடிக்கையாகவும் பாதி உண்மையாகவும் ஊரில் சொல்லிவந்த பேச்சு இப்போது மாறிவிட்டது.

2

முனிஸிபல் சேர்மன் கோபால் செட்டியார் திடீர் என்று இறந்துவிட்டபடியால், மறு சேர்மன் தேர்தல் நடைபெற ஏற்பாடுகள் நடந்தன. அந்த ஸ்தானத்திற்குப் பிரபல நூல்வியாபாரி தனபாலசெட்டியார் ஓர் அபேட்சகராக நின்றார். போட்டியாக வக்கீல் இராமசுவாமிமுதலியார் நின்றார். ஊரில் வக்கீல்களுக்குள்ளும் கடைத்தெருவிலும் ஒரு மாதமாக இதே பேச்சு.

வாக்கு வேட்டை ஆரம்பித்துவிட்டது. தேர்தலுக்கு நான்கு நாளிருக்கப் பணப் பேச்சும் ஆரம்பித்தது. "செட்டியார், அங்கத்

தினர் ஒன்றுக்கு ரூபா 1000, 2000 எடுத்து வைத்திருக்கிறார்'' என்றார்கள். இதில் பாதி உண்மை, பாதி புளுகு. ஆயினும் இராமசுவாமி முதலியார் தாம் அந்தத் துறையில் இறங்குவதாக உத்தேசமே இல்லை என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். அவருடைய நண்பர்களுக்கு உற்சாகம் குறைந்துபோய்விட்டது. அவர்கள் எவ்வளவோ சொல்லியும் "பணம் செலவழித்தாவது இந்தப் பதவி சம்பாதிக்கவேண்டும் என்று எனக்கு இஷ்டமில்லை'' என முதலியார் பிடிவாதஞ் செய்தார்.

திங்கட்கிழமை காலை 8 மணிக்குத் தேர்தல். ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணி; இராமசாமி முதலியார் வீட்டில் நண்பர்கள் கூடினார்கள்.

"இப்படிச் செய்தால் தங்களுக்கு என்ன, ஒன்றுமில்லை. எங்களுக்குத்தான் அவமானம்'' என்றார் பொடிக்கடை ரங்கபிள்ளை.

"இனி ஊரில் நாம் இருக்க முடியாது. எங்கேயாவது போய்த் தான்விடவேண்டும்'' என்றார் மளிகைக்கடை சீதாராமையர்.

"எங்களையெல்லாம் இப்படி அவமானத்தில் இழுத்துவிடுவது உங்களுக்கு நியாயமா?'' என்றார் வீரராகவசெட்டியார். இவர் அபேட்சகர் தனபாலசெட்டியாரின் மைத்துனர். முந்தி அவருடன் வியாபாரத்தில் கூட்டாகவிருந்து பிரிந்துபோய், அதுமுதல் இருவருக்கும் ரொம்ப விரோதம்.

முதலியார் ஒன்றும் பேசாமலிருந்தார். மறுபடி சீதாராமையர் "இப்படிப் பணம் கொடுத்து ஊரைக் கெடுத்து முனிசிபாலிடியை நாசம் செய்துவிடுவதை நாம் பார்த்துக்கொண்டிருப்பதா''? என்றார்.

"அதற்கு நாம் என்ன செய்ய முடியும்? காலம் கெட்டுப் போச்சு. முந்தியிருந்த சேர்மன்கள் எல்லாம் எவ்வளவோ கவுரவமாயிருந்தார்கள். யோக்கியர்களுக்கு இனி இடமில்லை'' என்றார் முதலியார்.

"விஷத்திற்கு விஷந்தான் மருந்து. முதலியார்வாள்! நீங்கள் இந்தக் காரியத்தில் இம்மாதிரி இருக்கலாகாது. கொஞ்சம் சிரத்தை காட்டவேண்டும்'' என்றார் ஆயுர்வேத பண்டிதர் இராகவாசாரியார்.

இரண்டு நிமிஷம் கழிந்து கடிகாரத்தில் மணி 9 அடித்தது. "நல்ல சகுனமாயிற்று. இனி என் தாமதம்?'' என்று சீதாராமையர் எழுந்தார். எழுந்து, முதலியார் கையைப் பிடித்து உட்கார்ந்திருந்த

வரை எழுப்பி, ஒரு கை அவர் தோள்மேல் போட்டு வெகு அபிமான மாக ஆபீஸ் அறைக்குள் தனியாக அழைத்துப் போனார்.

ஒரு நாழிகை கழிந்தது. பிறகு சீதாராமையர் சிரித்த முகமாக வந்து, கூடியிருந்தவர்களைப் பார்த்து, "சரி, காரியம் முடிந்தது. இனி செய்யவேண்டிய வேலைகளைச் செய்யலாம். ஒரு இராத்திரி தான் இருக்கிறது" என்றார். எல்லாருக்கும் ஒரே சந்தோஷம். ஆரவாரித்தார்கள்.

3

அன்றிரவு மோட்டார் கார்கள் பறந்ததற்குக் கணக்கில்லை. இரவு 2 மணிக்கு முதலியார் வீட்டுச்குச் செய்தி வந்தது. 35 அங் கத்தினர்கள் வோட்டு செய்யவேண்டியதில், 17 அங்கத்தினர்கள் முதலியார்பக்ஷம் என்று முடிவாகச் சொல்லிவிட்டார்கள். அதில் 10 பேர்கள் செட்டியாரிடம் வாங்கியிருந்த பணமும் திருப்பிக் கொடுத்துவிட்டார்கள். ஏழு ஆசாமிகள், "யாரிடமும் பணம் வாங்கமாட்டோம்; முதலியாருக்குத்தான் வோட்டு செய்வோம்; நீங்கள் ஏன் சந்தேகப்படுகிறீர்கள்?" என்றார்கள். இன்னும் ஒரு வோட்டு வந்தால் போதும். பாக்கி 18 ஆட்களில் ஒருவர் நாக பட்டினத்திற்குக் கோர்ட்டு அலுவலாகப் போயிருக்கிறார் அவர் நாளைக்குள் வரமாட்டார். 16 பேர்கள் தனபாலசெட்டியார் கட்சி. அவர்களை அசைக்க முடியாது. சிரங்கன் ஒருவன்தான் சந்தேக மாய் நிற்கிற வோட்டு. அவனை எங்கே தேடினாலும் அகப்படவில்லை. வீட்டில் விசாரித்தால் மலைக்குப் போய்விட்டான் என்கிறார்கள்.

"அவன் தம்பி வாத்தியார் முனிசாமியைக் கேட்டீர்களா?" என்றார் பொடிக்கடை ரங்கபிள்ளை.

"கேட்டோம். அவன் இப்படியும் அப்படியும் சொல்லுகிறான். ஒருசமயம் மலைக்குத்தான் போயிருக்கலாம் என்கிறான். ஒரு சமயம் 'வீட்டிலேயே ஒளிந்துகொண்டிருக்கலாம்; ஏழைகளுக்கு இந்தக் கஷ்டம் என்னத்திற்கு? எங்கேயும் தாக்ஷிணியம், எப்படிப் போனா லும் விரோதம்' என்கிறான்".

"இவ்வளவு செய்தும் வீணாய்ப் போகும்போலிருக்கிறதே" என்றார் சீதாராமையர்.

"ஆமாம், இம்மாதிரி மூக்கால் அழுதாலா காரியம் ஆகும்?" என்று பொடிக்கடை ரங்கபிள்ளை மிக்க கோபத்துடன் சொல்லி எழுந்தார்.

"நீர்தான் பார்த்துச் செய்யுமே!" என்றார் சீதாராமையர்.

"எங்களையெல்லாம் யார் நம்புவார்கள்? நாங்கள் ஏழையாச்சே!" என்றார் ரங்கபிள்ளை.

"முதலியார்வாள்! ரங்கபிள்ளைதான் எல்லாம் செய்யட்டும். நான் இத்துடன் இந்த விஷயத்தை விட்டேன்!" என்றார் சீதாராமய்யர்.

"நன்றாயிருக்கிறது! நல்லவேளை பார்த்தீர்கள் சண்டைக்கு!" என்று வீராகவ செட்டியார் எழுந்திருந்த சீதாராமய்யரை மறுபடி உட்காரவைத்தார். உட்கார வைத்து, முதலியாரிடம் வந்து: "இதில் இறங்கியிருக்கக்கூடாது. இறங்கினபின் எல்லாம் சரியாய்ச் செய்து முடிக்கவேண்டும். கைக்கு எட்டினது வாய்க்கு எட்டாமல் விட்டு விடுவதா? தயவுசெய்து ரங்கபிள்ளையிடம் இந்தச் சீரங்கன் விஷயம் ஒப்புவித்துவிடுங்கள். பகவான் இருக்கிறார். நம்ம கட்சி ஜெயிக்கும்!" என்றார்.

முதலியாருக்கும் உற்சாகம் பிறந்துவிட்டது. வீட்டுக்குள் நுழைந்தார். பெட்டி திறந்து மூடிய சத்தம் கேட்டது. ஒரு பையுடன் வெளியே வந்து ரங்கபிள்ளையை அழைத்துக்கொண்டு வேறு ஒரு அறைக்குள் சென்றார்.

4

பொடிக்கடை ரங்கபிள்ளை ஜேம்ஸ்பேட்டைக்குச் சென்றார். சீரங்கன் தம்பி முனிசாமியைக் கண்டு ரூபா 100 ஒரு காகிதத்தில் 5 பொட்டலமாகக் கட்டி அவனிடம் பேசாமல் கொடுத்தார். முனிசாமி இவ்வளவு தொகை வெள்ளி ரூபாயாக ஒரே தடவை அதற்கு முன் கனவிலும் தொட்டது கிடையாது. பிரமித்து, கண்களில் ஒரு பித்தப் பிரகாசத்துடன் ரங்கபிள்ளையைப் பார்த்துக்கொண்டு சும்மா நின்றான்.

ரங்கபிள்ளை, "யார்யாரோ உன்னை வந்து கண்டிருப்பார்கள். இக்காலத்தில் ஏழையை யார் நம்புகிறார்கள்? யார் உதவுகிறார்கள்? உங்களுக்கு இருக்கும் கஷ்டங்கள் யாருக்குத் தெரியும்? தம்பி, இந்தப் பணம் உன்னுடையது. காரியம் ஜயித்தாலும் சரி, தோற்றாலும் சரி. சீரங்கன் எங்கே? உண்மை யென்ன?" என்றார்.

வாத்தியார் முனிசாமி, "உங்களிடம் நான் பொய்பேசக்கூடாது. சீரங்கனைத் தனபாலு செட்டியார் வீட்டில் குதிரைக் கொட்டகையில்

பூட்டிவைத்துக் காவலிருக்கிறார்கள். அவன் செட்டியாருக்கு ரூ. 150 வரையில் முந்தியே கடன் பட்டிருக்கிறான், தெரியாதா? நாளை நேராக முனிஸிபல் ஆபீசுக்குப் போகும்போது அவனைக் கூடவே கூட்டிப்போவார்கள்'' என்றான்.

''முனிசாமி! இதில் என்ன செலவானாலும் சரி. நான் சொல்லுகிறபடி செய்'' என்றார் ரங்க பிள்ளை.

பிறகு கொஞ்சநேரம் குசுகுசுவென்று பேசினார்கள். ''சரி, தாங்கள் இங்கே இருங்கள்'' என்று சீரங்கன் வீட்டுக்குள் முனிசாமி நுழைந்தான்.

உள்ளே சீரங்கன் தாயார் கிழவியிடம் அவன் கொஞ்ச நேரம் பேசிவிட்டு, மறுபடி வெளியே வந்து ரங்க பிள்ளையை மாரியம்மன் கோயில் திண்ணையில் உட்காரவைத்துவிட்டு, அவர் கொண்டு வந்திருந்த குதிரை வண்டியில் தான் ஏறி, தனபாலு செட்டியார் வீட்டுக்குப் போனான்.

செட்டியாரும் அவர் வீட்டு வாசல் திண்ணையில் தம் நண்பர்களுடன் உட்கார்ந்திருந்தார். ஒரு 'ஹரிகேன்' விளக்கும் காகிதமும் பென்ஸிலுமாக இருந்தார்கள். முனிசாமி வண்டியிலிருந்து இறங்கி, செட்டியார் காலில் விழுந்தான். ''சாமி! எஜமான் மன்னிக்க வேண்டும். சீரங்கன் தாயார் சாகிற தறுவாயிலிருக்கிறாள். நாங்கள் போவதற்குள் தீர்ந்து விடுமோ, என்னவோ. சீரங்கனை எப்படியாவது அனுப்ப வேண்டும்'' என்றான்.

''கிழவிக்குத் திடீர் என்று என்ன வந்து விட்டது? திருட்டுத் தனம்! முதலியார் ஏதாவது சொல்லி யனுப்புவித்தாரா, என்ன?'' என்றார் செட்டியார்.

''ஐயோ! கடவுள் மேலே பார்த்துக்கொண்டிருக்கிறார். பொய் சொல்லிப் பிழைக்க முடியுமா! உண்மையாகக் கிழவிக்குப் பேதி. அவள் பிழைக்க மாட்டாள். நேற்றுமுதல் 20 தடவை ஆய்விட்டது. பேச்சு மூச்சில்லை எப்படியாவது அண்ணனை அனுப்புங்கள். இல்லாமல் போனால் ஜீவன் துடிச்சுப் போகும்'' என்று கண்ணீர் விட்டு விம்மி விம்மி அழுதான்.

''சரி, ஸ்ரீனிவாசய்யரே, நீங்களும் போங்கள். சீரங்கனைக் கூட்டிப் போய், என்ன சமாசாரம் பார்த்து வாருங்கள்'' என்றார் செட்டியார் தம் குமாஸ்தாவுக்கு.

"இது ஏதோ மோசம். செட்டியார் எல்லாரையும் ஒரே மாதிரி நம்புவது சுபாவம்" என்றார் அங்கே ஒருவர்.

குமாஸ்தா ஸ்ரீநிவாசய்யர் வீட்டுக்குள் போய், குதிரைக் கொட்டகையிலிருந்த சீரங்கனை அழைத்துக் கொண்டு புழக்கடை வழியாய் வந்து வண்டி நின்ற இடத்தை அடைந்தார். முனிசாமியும் போய் அவர்களுடன் நின்றான்.

"என்ன யோசிக்கிறீர்கள், ஐயரே? ஏறும் வண்டியில் என்றார் தனபால செட்டியார்.

தீண்டாமை கீண்டாமை எல்லாம் பறந்து போய்விட்டது. தேர்தலில் அதெல்லாம் பார்த்தால் ஆகுமா? வண்டியில் எல்லாரும் ஏறினார்கள்.

5

ஜேம்ஸ் பேட்டையில் சீரங்கன் வீட்டு வாசலில் வண்டி நின்றதும், வீட்டுக்குள் "ஐயோ! ஐயோ!" என்று கூப்பாடு கிளம்பிற்று.

"கதை பொய்யல்ல, உண்மையே" என்று ஸ்ரீனிவாசய்யர் தமக்குள் சொல்லிக்கொண்டு, "சீரங்கா, உள்ளே போய் விசாரித்து வந்து சொல்" என்றார்.

சீரங்கனும் முனிசாமியும் உள்ளே போனார்கள். கொஞ்சநேரம் கழித்து முனிசாமி வெளியேவந்து ஐயர் பக்கத்தில் வந்து, "உயிர் போய் விட்டது" என்று மெதுவாகச் சொல்லி, உடனே மறுபடி வீட்டுக்குள் போனான்.

"ஐயையோ! போய்விட்டாயே! ஐயையோ! குடிகெட்டுதே!" என்று பலத்த கூப்பாடு எல்லாரும் வீட்டுக்குள்ளே போட்டார்கள்.

"என்ன இந்த வீட்டில் சமாசாரம்?" என்று ஸ்ரீனிவாசய்யர் தம் பக்கத்தில் வந்து நின்ற ஒரு பையனைக் கேட்டார்.

"என்ன சமாசாரம், வாந்தி பேதிதான், கிழவி செத்து விட்டாள்" என்றான் பையன்

ஸ்ரீனிவாச ஐயருக்குப் பயம் பற்றிக்கொண்டது. தீண்டாதார் தெருவு, கூட வாந்தி பேதி, கேட்க வேண்டுமா? "சரி, இனி இங்கே இருப்பது சரியில்லை" என்று தீர்மானித்தார். முனிசாமியும் வெளியே வந்தான்.

"சாமி! கிழவி செத்தாப்போல் தானிருக்கிறாள். மூச்சே இல்லை. சிரங்கனுக்கு நான் ஜவாப்தாரி. நீங்கள் போங்கள்" என்றான். ஐயர் அவசரமாய் வீடு திரும்பினார்.

உள்ளே, படுக்கையில் கிடந்த கிழவி மகனைக் கிட்டேவர சமிக்ஞை காட்டினாள். சிரங்கன் தன் காதைத் தாயார் வாயிடம் வைத்தான். "அப்பா, சிரங்கா! 1000 ரூபாய் கொடுக்கிறேன் என்கிறார்களே. யாராவது வேண்டாம் என்பார்களா? பைத்தியக்காரனாய்ப் போகாதே. கிழவி பேச்சுக் கேள்" என்றாள்.

சிரங்கன், "இதென்ன மோசம்! இதற்குத்தானா கூப்பிட்டீர்கள்?" என்றான்.

"ஐயையோ!" என்றான் முனிசாமி. கூட வேறு சிலரும் கூப்பாடு போட்டுப் பேரிரைச்சல் போட்டார்கள்.

"மகனே!" என்றான் மறுபடி கிழவி. "எனக்குப் பேதியுமில்லை, ஒன்றுமில்லை. ஆனால் என்னமோ போலிருக்கிறது. இந்த 1000 ரூபாய் பொடிக் கடைக்காரர் கொண்டு வந்திருக்கிறதை வாங்கிக் கொண்டு இந்தப் பாழும் உத்தியோகத்தை விட்டுவிட்டுக் கடன்கள் தீர்த்துவிட்டு மானமாய் வாழு. நான் எத்தனை நாள் இருப்பேன்" என்று மெதுவாக, தடுமாறித் தடுமாறிச் சொன்னாள்.

சிரங்கனுக்குக் கோபம், வியப்பு, பயம் எல்லாம் சேர்ந்தாற்போல் பொங்கி, பிரமை யுண்டாகி ஒன்றும் பேசாமல் நின்றான்.

"ஐயோ! குய்யோ!" என்று முனிசாமி தூண்டுதலின்மேல் வீட்டிலுள்ளவர்கள் எல்லாரும் கத்தினார்கள்.

6

பிறகு சிரங்கன் ரங்க பிள்ளை யண்டை வந்து நின்றான். "ஏறு வண்டி, சிரங்கா! முதலியார் வீட்டில் எல்லாம் பேசுவோம்" என்றார் ரங்கபிள்ளை.

வண்டி ஏறினதும், "சிரங்கா! அடித்தது உனக்கு அதிர்ஷ்டம். எல்லாரும் பணம் சம்பாதிக்கிறார்கள். நீ மட்டும் என்ன பாவம் செய்தாய்? ஏன் இப்படி உதாசீனமாயிருக்கிறாய்? உனக்கு என்ன வேண்டும், சொல்? நானுச்சு, அதற்கு ஜவாபு" என்றிவ்வாறெல்லாம் முதலியார் வீடு சேரும்வரை ரங்க பிள்ளை சொல்லிக் கொண்டே வந்தார்.

ரங்கபிள்ளை முதலியாருடன் தனியாகச் சில நிமிஷம் பேசினர். பிறகு ஒரு வெள்ளைத் துணி முடிப்புடன் வெளியே வந்து, திண்ணை மேல் உட்கார்ந்திருந்த சீரங்கன் முன் அதை வைத்து, "சீரங்கா! இதோ, உன் ஆயுளெல்லாம் நீ கஷ்டப் பட்டால் இது கிடைக்காது. உன் கடன்கள் எல்லாம் தீர்த்துக்கொண்டு, வியாபாரம்செய். இன்னும் எவ்வளவோ இருக்கிறது. முதலியார் உனக்கு வேண்டியதெல்லாம் செய்வார்" என்றார் ரங்கபிள்ளை.

சீரங்கன் மௌனமாயிருந்தான்.

வீரராகவ செட்டியார் பையை எடுத்து சீரங்கன் மடியில் வைத்து, "எழுந்திரு. சத்தியம் செய். எல்லாம் முடிந்து விட்டது. இனி ஏன் தாமதம்?" என்றார்.

சீரங்கன் பணப்பையை எடுத்துக் கீழேவைத்து, ஒரு நிமிஷம் யோசிப்பதுபோல சும்மா இருந்தான். எல்லாரும் மௌனமாய் அவன் ஏதோ சொல்லுவான் என்று காத்திருந்தார்கள்.

திடீர் என்று சீரங்கன் எழுந்திருந்து ஒரே குதியாய்த் திண்ணையிலிருந்து தெருவில் குதித்து ஓடிவிட்டான். சிலர் துரத்திப்போனர்கள். ஆனல் சீரங்கன் அவர்கள் கண்ணுக்குக் கூடச் சிக்கவில்லை. திரும்பிவந்து "ஓடியேபோய் விட்டான்" என்றார்கள்.

முதலியார் பணப்பையை எடுத்து உள்ளே வைத்துவிட்டு, "பார்த்தாயா! ஏமாற்றிவிட்டான், திருடன்" என்றார்.

"என்ன இருந்தாலும் ஜாதி சுபாவம் காட்டிவிட்டான்!" என்றார்கள் எல்லோரும்.

அடுத்த நாள் முனிசிபல் ஆபீசில் தேர்தல் கூட்டம். மீட்டிங்கில் சீரங்கனைக் காணவில்லை.

"தாயார் செத்து விட்டாள்" என்றார் சிலர்.

"இல்லை, இல்லை, எல்லாம் மோசம்" என்றார் வேறுசிலர்.

நாகபட்டினம் போனவர் திரும்பிவந்து தயாராக இருந்தார்.

"தனபால செட்டியாருக்கு 26 வோட்டு வரும்" என்றார் ஒருவர்.

"இல்லை, இல்லை முதலியாருக்கு 17, செட்டியாருக்கு 17 வரும். சீட்டுத் தான் போடவேண்டுமாகும்" என்றார் மற்றொருவர்.

"எல்லாம் பணம்" என்றார் ஒருவர்.

"பணம் வாங்கியும் மோசம் செய்வார்கள், திருடர்கள்" என்ருர் இன்னெருவர்.

முடிவில் தனபாலு செட்டியாருக்கு 22 வோட்டும், முதலியாருக்கு 10 வோட்டும், வெறுங் காகிதம் ஒன்றும் விழுந்தன. இந்த முடிவு சொன்னவுடன், "தனபாலு செட்டியாருக்கு ஜேய்!" என்று வெளியில் கூட்டத்தில் சப்தம் போட்டார்கள்.

"லஞ்சம்! லஞ்சம்!" என்று எதிர்க்கட்சியார் கூப்பாடு போட்டார்கள்.

"சிரங்கன் ஒருவன்தான் யோக்கியன்" என்ருர் முதலியார்.

"ஆனந்தவிகடன்"

---

ஆசிரியர்: திருவள்ளுவர் எந்த நூற்ருண்டில் சீவித்தார்?

மாணவன்: கி+பி 16ம் நூற்ருண்டில் சீவித்தார் ஐயா

ஆசிரியர்: ஏதடா நீ சொல்வது விகடமாயிருக்கின்றது. அதற்கு ஏதாவது ஆதாரமிருக்கின்றதா?

மாணவன்: அவர் செய்த திருக்குறளே ஆதாரம் ஐயா

ஆசிரியர்: அப்படியா அதில் எங்கே கூறியிருக்கின்ருர்?

மாணவன்: "துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉமழை" என்ற குறளில் துப்பாக்கியைப் பற்றிக் கூறியிருக்கின்ருர். நம் நாட்டிற்கு ஆங்கிலர் ஆட்சிக் காலத்திற்ருன் துப்பாக்கி முதன் முதல் வந்தது. அவர்கள் 16ம் நூற்ருண்டிற்ருன் இங்கு வந்தனர். ஆகவே திருவள்ளுவர் 16ம் நூற்ருண்டில் இருந்திருக்கின்ருர் சேர்.

* * * *

பண்டிதர்: பிள்ளைகளே! இன்றைக்கு நாலடி யார் வாங்கப் போகின்றீர்கள்

மாணவர்: ஐயா! ஐயா! எதற்காக நாங்கள் நாலடி வாங்கவேண்டும்

பண்டிதர்: இல்லை, இல்லை. நாலடியார் என்ற புஸ்தகம் அல்லவோ வாங்கச் சொன்னேன்.

# கரும்பலகைச் சித்திரவிளக்கம்

## (ILLUSTRATIONS ON THE BLACK-BOARD)

(சே. சரவணமுத்து.)

மிகப் பழையகாலந் தொடங்கி அழுத்தமான தளங்களில் பல நிறக் களிமண் கட்டிகளால் சித்திரவிளக்கங்களைக் கீறிவந்தார்கள். ஆனால் இக்காலத்தில் நாங்கள் கரும்பலகைகளில் பலநிறச் சுண்ணக் கட்டிகளினுதவியைக் கொண்டு கீறிவருகின்றோம். இக்கரும்பலகை களையும் சிலர் புறக்கணிக்கின்றார்கள். ஏனென்றால் கரும்பலகை களைக் காட்டிலும் இருண்ட பச்சைநிறப் பலகைகளே மிகவுஞ் சிறந்த தென்கிறார்கள். நிற்க.

நாங்கள் கீறும் ஒவ்வொரு உருவமும் பிள்ளைகளுக்கேயுரியது. எனவே எங்களுடைய விருப்பப்படி ஒருபொருளைக் கீறிக் காட்டுவ திலும் பார்க்க அவர்களுடைய விருப்பப்படி கீறினால் அவர்களுடைய கவர்ச்சியை இன்னுங் கூடப்பெறலாம். ஆகவே பிள்ளை தன் எண் ணங்களை வெளிப்படுத்த எப்படிக் கீறுவானோ அப்படியே நாமுங் கீற வேண்டும். இவன் கீறும்பொழுது தேவையில்லாதவற்றை விடுத்துத் தான் கீறும் அடையாளங்களுடன் திருப்தியடைகின்றான். எனவே இவனுடைய சித்திரத்திலுள்ள ஒவ்வொரு கீறுகளும் அவன் கருத் துக்களை வெளியிடுகின்றன.

நாங்களும் இக்கருத்துக்களை மனத்தில் வைத்துக்கொண்டு எங் களுடைய சித்திரங்களையும் கீறவேண்டும். பிள்ளைகள் யாவரும் நாங் கள் கீறுவனவற்றை அவதானித்துக் கொண்டிருப்பார்களாகையால் மிகவும் விரைவாகக் கீறவேண்டும். இப்படிச் செய்வதினால் அவர்கள் மனத்தில் அவற்றைப்பற்றிய கருத்தை மிகவும் விரைவாக உதிக்கச் செய்யலாம். உதாரணமாக "இது ஒரு தோட்டம். இங்கே சில மரங்கள் நிற்கின்றன. இங்கே ஒரு பன்றி ஓடுகின்றது" என்னும் காட்சியைக் கீறும்பொழுது நாங்கள் விரைவாகக் கீறுவதோடமை யாது சிலவிதிகளையுடையதாயு மிருக்கக் கீறவேண்டும். பாடத்தை விளக்குவதோடமையாது பிள்ளையின் மனத்தில் அதைப்பற்றிய சிந் தனையையும் உதிக்கச் செய்யவேண்டும்.

250041

கரும்பலகைகள் யாவும் கூடிய அளவு கருமையாய் அல்லது இருண்ட பச்சையாயிருத்தல் வேண்டும். அழுத்தமில்லாதனவும் சொறி குட்டைகளுள்ளனவும் தவிர்க்கப்பட வேண்டும். எப்படி யொரு சங்கீத வித்துவான் உடைந்த கிருமபோன் தட்டுகளை வெறுப் பானே அப்படியே ஒருநல்ல ஆசிரியனும் குறைகளுள்ள கரும்பலகை களையும் வெறுப்பான். எனவே நல்ல கரும்பலகையினுதவியோடு நல்ல இன வெண்கட்டியைக் கொண்டு நாங்கள் கரும்பலகையில் காட்ட எடுத்துக் கொள்ளும் விஷயங்களை மிகவும் திறமையோடும் புத்தியாகவும் விளக்கவேண்டும். இப்படி விளக்கும்போது விளக்கங் கள் யாவும் சிலவிதிகளுள் அமைந்தவைகளாயிருக்க வேண்டும். அவை:—1. விளக்க எடுத்துக்கொள்ளும் விஷயம் தனியனுயிருந்தால் அதைக் கரும்பலகையின் நடுவில் மேல் அரைவாசியில் கீறவேண்டும். 2. பலவிஷயங்களை விளக்க வேண்டுமாயின் அவற்றை விளக்குவதற் கேற்றவண்ணமாய் வகுக்கவேண்டும்.

ஆரம்பத்தில் மிருகங்களின் உருவங்களையும் மனிதரின் உருவங் களையும் கீறும்பொழுது சில கஷ்டங்கள் ஏற்படக்கூடும். இக்கஷ்டங் களில் சிலவற்றை மாணவர்களுக்கு உருவங்களைக் கீறும்பொழுது அவை இன்ன உருவம் என்று சொல்வதினுல் நீக்கலாம். அநேக சனங்களின் உருவங்களைக் கீறும்பொழுது முழு நேரத்தையும் அவ் வுருவங்களைக் கீறிக் கழிக்கக்கூடாது. இப்படிப்பட்ட விளக்கங்கள் விளக்கும்போது சிலரின் தலையைமாத்திரம் கீறி அவை ஒரு கூட்டம் என்று தெரிவிக்கலாம். மூன்று மனிதர்கள் ஒரு இடத்தில் நிற் கிருர்களென்ருல் அவர்களின் உருவங்களைச் சமதூரத்தில் கீருமல் அவற்றைக் கீறும் விதத்தால் அவ்வுணர்ச்சியைத் தெளிவாக உதிக்கச் செய்யவேண்டும். மூன்று கப்பல்கள் மேற்குப் பக்கமாகச் சென் றன என்பதைக் கீறும்பொழுது சூரியனைக் கீறி அக்கப்பல்கள் சூரி யனை நோக்கிச் செல்வனவாகக் காட்டவேண்டும்.

தகட்டில் வெட்டிய சில உருவங்களையும் உபயோகிக்கலாம். இத்தகடுகளைக்கொண்டு கீறுவதினுல் வெண்கட்டி ஏராளமாகச் செல வழியக்கூடும். இதனைத் தடுப்பதற்கு அழுத்தமான கரும்பலகை களே சிறந்தவை. ஆங்கிலக் கதைகளை விளக்குவதற்கு இப்படிப் பட்ட தகடுகள் அநேகம் உண்டு.

நாங்கள் விளக்கும்பொழுது எப்பொழுதும் அப்படங்களைப் பற்றித் தெளிவான விளக்கத்தை உண்டாக்கவேண்டும். இப்படிச் செய்து பயிற்சியடைவதினுல் நாங்கள் ஓவியத்தை ரசிக்கும் தன்மை

யுடையவர்களாகலாம். ஏனென்றால் எங்களுடைய விளக்கங்கள் கதையைமாத்திரம் விளக்குவதோ டமையாது பிள்ளைகளுடைய மனத்திலே சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய அமைப்பையும் உண்டுபண்ணும். இவ்வமைப்பு அப்படத்தைக் கரும்பலகையி லிருந்து அழித்த பின்பும், அப்பதிவு பின்பு அவர்கள் கதையைச் சொல்லும்பொழுது அப்படத்தைப்பற்றிய ஞாபகத்தை ஊட்டும்.

ஒரு பாடத்தைப் படிப்பிக்கும்பொழுது இதைக் கரும்பலகையில் கீறுவோம் என்று சொன்னவுடன் பிள்ளைகள் யாவரும் மிகவும் ஊக்கத்துடன் அவதானித்துக்கொண் டிருப்பார்கள். கரும்பலகையில் விளக்கும்பொழுது இதை எப்படி விளக்குவதென்று ஒருபொழுதும் பயப்படக்கூடாது. ஆனால் போதிய பயிற்சியினால் இக்கஷ்டத்தை நிவர்த்திசெய்யலாம். இப்படிப் பயிற்சி செய்தபின்பு பிள்ளைகள் ஒரு விஷயத்தை எப்படி அவதானிப்பார்களோ அப்படிக் கீறுவதே அவர்களுக்கும் விருப்பமாயிருக்கும். ஆனால் இப்படி ஒரே முறையில் விளக்குவதிலும்பார்க்க விஷயத்தைக் கற்பிக்கும்பொழுதே அவற்றின் அம்சத்தைக் கரும்பலகையில் விளக்குதலே பிள்ளைகளின் கவர்ச்சியைப் பெரும்பாலும் கவரும்.

---

காட்டில் வாழுங் கழுகின் தயிலமும்
  கையி லூத்தையு மெய்யில் வேர்வும்
கோட்டு நாகத்தின் பூவும் துடரிக்
  கொழுந்துங் கூன லமுங்கின் தசையும்
வேட்டை வாளியின் கூடு மடவியில்
  வேடன் பாடலிச் சாற்றி லரைத்து
ஊட்டியே பள்ளன் தேட்டமெல் லாம்பறித்
  துண்ட கள்ளி யிவள்காணு மாண்டே.

[க. ம. ப: செய். 58]

# தெரிவதிகாரம்

(வீ. மார்க்கண்டு)

1 உறவுமுறை பேசி ஊண்உறக்கங் கொள்வர்
மறைவி லபேட்சகர்தாம் வந்து.

2 தாந்தம் புகழைத் தலையளவு மேபுகழ்வர்
போங்கால மில்லா தவர்.

3 மடங்கேணி யோடுகுள மாய பணிக்கும்
மடங்கும் தெரிவிற் பணம்.

4 ஊண்உறக்க மின்றி ஓடித் திரிந்திடுவர்
சாணளவிற் கள்ளை விடின்.

5 கட்கடைக்கு நற்காலம் காணும் கவுன்சிலரின்
மிக்குள்ள தேர்தல் தினம்.

6 புத்திரனின்கல்விப் பொருட்செலவை யான் பொறுப்பேன்
எத்திறத்தும் வோட்டெனக்கே போடு.

7 பலவிதத்தில் ஓட்டப் பயிலு நற்பாகன்
கலைபயிற்சி காண்தேர்தல் நாள்.

8 குடியான் குடித்திடுநாள் கொல்லோ குடும்ப
மிடிகொள்ளும் தேர்தல் தினம்.

9 யாருக்கும் சீட்டைப் போடுங்கள் இக்காரில்
ஏறுங்க ளிப்பொழுதென் பார்.

10 பெட்டியுட் சீட்டைப் பிழைபடவும் போட்டாரே
முட்டிக்கள் மிக்கார் பலர்.

# பாலர் பகுதிச் சித்திரம்

## DRAWING IN THE INFANT-CLASS

(இ. பொன்னையா.)

நம் தமிழ் மக்கள் சித்திரக்கலையின் அத்தியாவசியகத்தையும், அதனை விருத்திசெய்யும் முறையையும், அதனாலாம் பயனையும் நெடு நாளாகக் கவனித்தார்களில்லை. இவ்விஷயத்தில் தற்போதைய மேலைத் தேயத்தவரின் முயற்சி மிகப் போற்றப்படத்தக்கது. அவருள் "பெஸ்ரலோஜி" "புறொபெல்" முதலிய கீர்த்திபெற்ற ஆசிரியர்களாற் பாலருக்குச் சித்திரம் கற்பிப்பதன் உபயோகம் வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றது. இவர்கள் சிறாரின் அபிவிருத்திக்காக அதிகம் பிரயாசை யெடுத்துத் தங்கள் வாழ் நாட்களைக் கழித்துக் குழந்தைகளின் சுபாவங்களையும், செயல்களையும் நன்கு கவனித்து அவற்றைச் சீர்திருத்தஞ் செய்யச் சரியான மார்க்கம் அவர்க்குச் சித்திரத்தை நன்கு கற்பித்தலே எனக் கண்டு அதை அனுசரித்து அனேக குழந்தைகளை அறிவிலும், பலத்திலும், ஒழுக்கத்திலும் சிறந்தவர்களாக்கி யிருக்கிறார்கள்.

ஆராய்ச்சியாளரின் கருத்து.

சித்திரம் வரைதலின் முக்கிய நோக்கம் எல்லாவிதமான விஷயங்களையும் புத்திசாலித்தனமாகவும், ஜாக்கிரதையாகவும் எடுத்துக்காட்டுதற்குக் காரணமான கவன சக்தியையும், ஒப்பிட்டுப்பார்க்கும் சக்தியையும், ஞாபக சக்தியையும், புதிய விஷயங்களைக் கண்டு பிடிக்கும் சக்தியையும் பாலரிடத்தில் விருத்தி செய்வதேயாம். சித்திரம் வரைதல் பாலருக்கு முறையாகக் கற்பிக்கப் படுமாயின் அவர்க்குக் கட்பழக்கம், கைப்பழக்கம், கற்பனாசக்தி, ஞாபகசக்தி ஆகியவற்றில் விருத்தி உண்டாவதுடன் ஒழுக்கம், சுத்தம் முதலிய நற்குணங்களும் விளைவனவாகும்.

நோக்கமும் பயனும்.

குழந்தைகளின் செயல்களை நாம் கவனிப்போமாயின் அவர்கள் தங் கையில் எதுகிடைப்பினும் அதைப்பிடித்துத் தரையிற் றேய்ப்பதும் சுண்ணக் கட்டியினாலும், கரியினாலும் தரையிலும், சுவரிலும் கோடு

கள் கீறிப் பல உருவங்களைக் காண்பிக்க முயல்வதும் புலப்படும்.

**பாலர் இயல்பு.**

இதிலிருந்து நாம் அறிந்துகொள்ளக் கூடியதாக இருப்பதெதுவாயின் பாலரின் கைகள் துடுக்கென அசையவும், ஏதோ ஒரு தொழிலைச் செய்யவும் விரும்பும் சுபாவ முடையன என்பதே. அவரது புத்தி, பொருட்களின் வடிவங்களைக் கவனித்து அவற்றை அமைக்குஞ் சுபாவமுடையது. குழந்தைப் பருவத்திற்குரிய இவ்வித சுபாவங் களையும், செயல்களையும் சீர்திருத்துவதற்குரிய மார்க்கம், அவர்களைச் சித்திரம் வரையச் செய்வதாகும்.

**ஆசிரியர் இயல்பு.**

பாலருக்கு வரைதல் கற்பிக்குமிடத்து நாம் அவர்களிடத்து அனுதாபமுடையவர்களாய் எமது இனிய விளக்க உரைகளாலும், அன்புஅளாவிய செயல்களாலும் அவர்களை ஊக்கமுடையவர்களாக்கி வரையச் செய்தல்வேண்டும். எப்பிள்ளையினுடைய சித்திரத்தையும் தகுதி அற்றதெனக்கூறி அவர் மனதை அதைரியப்படுத்தலாகாது. ஆரம்பத்திலேயே அவர்களிடத்து மிகுந்த சாமர்த்தியத்தை எதிர்பாராது "சித்திரமுங் கைப்பழக்கம்" என்பதை மனத்திற் கொண்டு வேண்டிய அளவு பயிற்சி கொடுக்கவேண்டும்.

**பாடப் பிரிவும் சாதனமும்.**

பாலர் வகுப்புச் சித்திரம், பொருள்களைப் பார்த்து வரைதல், ஞாபக வரைதல், கற்பனாரூப வரைதலென மூன்றாகப் பகுக்கப்பட்டுக் கற்பிக்கப்படவேண்டும். இவற்றைக் கற்பிப்பதற்குக் கற்பலகை (Slate), கற்கூர் (Slate Pencil), சுண்ண வரைதற் கொப்பி (Pastel Drawing Copy), வர்ணச் சுண்ணம் (Pastel Colours) என்பன சாதனங்களாகக் கொள்ளற்பாலன.

**1. பொருள்களைப் பார்த்து வரைதல். (Object Drawing)**

பொருள்களைப் பார்த்து வரைதற்குச் சுண்ணவரைதற் கொப்பிகளும், வர்ணச் சுண்ணங்களுமே தகுந்த சாதனங்கள். இவற்றை மாணவர் பெற்றுக்கொள்ள இயலாத பாடசாலைகளிற் கற்பலகை உபயோகிக்கத்தக்கது. பாலர்வகுப்புப் பிள்ளைகள் வைத்திருக்கும் வர்ணச் சுண்ணப் பெட்டிகளிலுள்ள கருநிறக் கட்டியையும், வெண்ணிறக் கட்டியையும் எடுத்துவிடுதல் நன்று. சுண்ணங்களால் வரையும்போது பெருவிரல், சுட்டுவிரல், நடுவிரல்களால் வர்ணக்கட்டியை மெதுவாகப் பிடித்து வரைவதே தகுந்த முறையாகும். பாலப் பருவத்தில் இவ்வரைதலில்

பொருள்களைப் பருமட்டான தட்டை ரூபங்களாக (flat mass drawing) நிறங்கொடுக்கச் செய்வதேயன்றி உயர்ந்த இடம், பதிந்த இடம், வளைவுகள், சாய்வுகள் என்பவற்றைக் குறிக்கும்படி கேட்டல் தகாது. பாலருக்குத் தொடக்கத்தில் சித்திரத்தைப்பற்றிய அறிவின்மையால் ஒரு உருண்டை வடிவமான பொருளையே (தோடம் பழம், எலுமிச்சம்பழம், பந்து) முதற் பாடத்துக்கு எடுத்துக்கொள்ளல்வேண்டும். இரண்டாம், மூன்றாம் பாடங்களாக உருண்டை வடிவத்திலும் சிறிது மாற்றம் உள்ளவைகளான சுரைக்காய் மாதுளங்காய் முதலியவற்றை எடுத்துக்கொள்ளலாம். மாணவர்க்கு வரைதலுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட பொருளை ஆசிரியர் மேசையின் மேல் அவர்களது கண்மட்டத்தில் வைக்கவேண்டும். பொருளை மேசையின்மேல் வைத்து ஒழுங்குசெய்தபின் அப்பொருளைப்பற்றி மாணவருடன் சில நிமிஷங்களுக்குச் சம்பாஷித்து அவர்கள் மனசைக் கவரச்செய்து பின்பு வரையச் செய்யவேண்டும். அதன்பின் ஒவ்வொருவருடைய இடங்களுக்குஞ் சென்று அவர்கள் பொருள்களை நேரே பார்க்கிறார்களோவென்றும் தமது அப்பியாசப் புத்தகங்களை மேசை விளிம்புக்குச் சமாந்தரமாக வைத்திருக்கிறார்களோவென்றும், வரையும்போது நடுவிற் றொடங்கி விருத்தரூபவிருத்தியாக நிறங் கொடுக்கிறார்களோ வென்றும் கவனித்துக்கொள்ளவேண்டும். அதுவன்றி மாணவர் வரைவதிற் கஷ்டப்படுவாராயின் அல்லது வரைய முடியாத நிலையி லிருப்பாராயின் ஆசிரியர் ஒரு மாதிரி ரூபத்தை வரைந்து காட்டலாம்.

**2. ஞாபக வரைதல்.** ஞாபக வரைதலுக்குக் கொடுக்கப்படும் பொருள்கள் மாணவரின் வகுப்பறை, அவர்கள் வரும் வழி அல்லது அவர்களின் வீடு இவற்றில் உள்ள பொருள்களா யிருத்தல் வேண்டும். ஞாபகத்திலிருந்து வரையும்படி கேட்கும் பொருள்களைச் சில நிமிஷங்களுக்கு அவர்களுக்குக் காட்டி மறைப்பது நல்லது. இவையேயன்றிச் சிறு கதைகளையும், கடதாசிக் கொடி விடுதல், காவடியாட்டம் முதலிய காட்சிகளையும், புகையிரதம், தேர், கிளி, மீன், யானை முதலிய இயங்கியற் பொருள்களையும் வரையச்செய்தல்வேண்டும். பாலருக்கு இயங்கும் பொருள்களில் அதிக கவர்ச்சி உண்டு. ஆதலால் அவர்கள் இவற்றைக் காணும் நேரங்களில் மிகக் கவனமாக அவதானித்திருப்பார்கள். இவற்றைக் கீறிக் காட்டுவதிலும் அவர்களுக்கு அதிக ஆர்வமுண்டு.

கற்பனுருபங்களை வரையக் கற்பிக்கும்பொழுது, தொடக்கத்தில் நேர் ரேகைகளா லானவற்றையும், பின்னர் வளைந்த ரேகைகளா லானவற்றையும் கற்பிக்கவேண்டும். பாலர் தொடக்கத்தில் நேர் ரேகைகளைச் சரியாகக் கீறமாட்டார்கள். ஆதலால் அவர்கள் வரைதலுக்கு உபயோகிக்கும் கற்பலகையின் ஒரு பக்கம் முழுவதிலும் கால் அங்குலச் சதுரங்கள் வரத்தக்கதாக நிலையான ரேகைகள் கீறுவித்து அவற்றின் உதவிகொண்டு நிறுதிட்டரேகை, திகாந்தரேகை, சாய்ந்தரேகை ஆதியவற்றில் நல்ல பயிற்சிபெறப் பழக்கவேண்டும். இவ்விதமாக நேர்ரேகைகளைப் பலமுறையும் வரைவதில் அவர்களுக்கு அவ்வளவு விருப்பமிராது. ஆகையால் விரைவில் பலவிதமான உருவங்கள், கரைச்சித்திரங்கள், மாதிரிச்சித்திரங்களைக் கற்பலகையிலுள்ள சதுரக் கோடுகளின் உதவிகொண்டு வரையச்செய்து அவற்றுக்கு நிறங்கள் ஊட்டச்செய்யவேண்டும். கற்பனுருபவரைதல் பயிற்றும்போது ஆசிரியரும் சில மாதிரிகளை வரைந்து நிறமூட்டிக் காட்டவேண்டும். இதற்குதவியாக ஆசிரியர் இரண்டு அங்குலச் சதுரங்கள் வரத்தக்கதாகச் சதுரரேகைகள் வரையப்பெற்ற ஒரு கரும்பலகை வைத்திருக்கவேண்டும். இதுவன்றி இன்னும், ஆசிரியர் தமக்குத் தேவையான உபகரணங்களையும், முறைகளையும் உபயோகித்து மேல்நாட்டவரைப்போல நம் நாட்டிலும் சித்திரக்கலையை நன்னிலைக்குக் கொண்டுவர முயலவேண்டும்.

**3. கற்பனுருப வரைதல்**

---

கான வேடரைக் கண்டு நின்றாங்கே
கனகம் போல மலர்ந்தொரு வேங்கை
தான தாய்நின்ற தென்கதி ரைப்பதிச்
சண்முகன் குகன் தன்பண்ணை தன்னில்
போன மாடுங் கலப்பை நுகமும்
பொதுக்கில் லாமலே நானெப்புத் தாறேன்
ஆன செந்நெல் பயிர்செய்து தாறேன்
அடியேற் காக விடும்பள்ள னுரை.

[க. ம. ப: செய். 80]

*

# எமது பிரயாணம்

(இ சரவணமுத்து.)

எமது கலாசாலை மாணவர்கட்கிடையில் மூன்று நான்கு வருடமாகத் தோன்றியதோர் அவாவானது பல இடையூறுகளின் காரணமாக நிறைவேருதாயிற்று. அந்நிறைவேரு அவா எங்களையுந் தொடர்ந்தது. அதற்கு முன்போலவே பல இடையூறுகள் உண்டாயின. ஆயினும் இறைவன் திருவருளாலும் எங்கள் ஒற்றுமை நயத்தினலும் அவ்வவா நிறைவேறுதற்குரிய சுபதினம் 1935-ம் ஆண்டு புரட்டாதிமாசம் 29-ம் திகதி ஞாயிற்றுக்கிழமையாயிற்று. அன்று காலை 9 மணியளவில் எமது இலங்கைச் சுற்றுப்பிரயாணத்திற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்து கொண்டோம். மாலை 3 மணி 35 நிமிஷயளவில் மூன்று மோட்டோர் இரதங்களில் நாங்களும் எங்கள் போாசிரியர்களிற் சிலருமாகப் புறப்பட்டோம்.

இரதங்கள் யாழ்ப்பாணம்-கண்டிப்பாதை மார்க்கமாக ஓடத் தொடங்கின. நகரமாந்தரும் மற்றையோரும் தம் மனை வாயில்களிலும் தெருவீதிகளிலும் நமக்கு விடைதருபவர்போலத் தோற்றினர். அன்று மாலை 6 மணியளவில் சாவகச்சேரியை யடைந்து சிற்றுண்டியருந்தினேம். பின்பு இரதங்கள் நெல் விளை நிலங்கட்கும், தென்னந் தோட்டங்கட்கு மூடாகச் சென்று ஆனையிறவுப்பாலத்தை யடைந்தன. ஆனையிறவுக்கும் அநுராதபுரிக்கு மிடைப்பட்டவிடம் அடர்ந்த காடாயிருந்தமையின் இரதங்கள் கூடிய வேகத்துடன் சென்றன. இடையில் ஓமந்தை முறிகண்டி என்னுமிடங்களிலுள்ள தேவாலயங்களைத் தரிசித்துப் பூசைகள்செய்து அநுராதபுரியை இரவு 11 மணியளவிலடைந்தோம். அங்குமுன் அறிவித்தலின்படி விவேகானந்த சபையாரின் ஆதரவைப் பெற்றுத்துயின்றேம்.

மறுநாள் காலைக்கடன் முடித்துக்கொண்டு 7 மணியளவில் புறப்பட்டு அங்குள்ள புராதன கட்டடங்களைப் பார்த்தோம். புத்தரின் விசேஷ பத்தித்தலமாய மகாவிகாரையையும், வெள்ளரசு மரத்தையுந் தரிசித்தோம். பின்பு 8½ மணியளவில் புத்தளவழியே எங்கள் இரதங்கள் சென்றன. அவ்வழியும் அடர்ந்த காடாயிருந்தமையின் இரதங்கள் மிகவேகமாக ஓடின. எங்களிற்சிலர் பாடினர். சிலர்

காட்டிலுள்ள குரங்கு, யானை, மான் முதலிய மிருகங்கள் போவதை மற்றையோர்க்குக் காட்டினர். சிலர் இரதவேகத்தை நாடினர். இவ்வித சந்தோஷத்துடன் 10 மணி 20 நிமிஷமளவில் இரதங்கள் புத்தளத்தையடைந்தன. அங்குநின்றும் புறப்பட்டுத் தென்னந் தோட்டங்கட்கூடாகச் சென்று 12 மணிக்கு முன்னேசுவரன் கோவிலிற் றங்கிச் சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு மத்தியானப் போசனமுண்டோம். பின்பு சலாப மார்க்கமாக நீர்கொழும்பை யடைந்தோம். பின் செழித்த விடங்கட்கூடாகக் கொழும்பு நகருட் புகுந்தோம். சூரியனும் மறைந்து போயினன். வீதிகள் வீடுகளென்ற வித்தியாசமின்றி மின்சார விளக்குகள் நட்சத்திரங்கள்போல் பிரகாசித்தன. அவ்வீதிவழியே இரதங்கள் அபாயமின்றி 7 மணியளவில் விவேகானந்த சபையாரின் மண்டபத்தை யடைந்தன. அவர்கள் எங்கட்குப் போதிய இடவசதி யளித்தனர். பின் வீதிகள் வழியே உலாவி விட்டு 10 மணியளவில் அங்கு நித்திரை செய்தோம்.

செவ்வாய்க்கிழமை காலை தெகிவலை மிருகக்காட்சிச் சாலைக்குச் சென்று அங்குள்ள நூதனமான பிராணிவர்க்கங்களைப் பார்வையிட்டோம். அங்கு பிறநாட்டு நூதனமான மிருகங்களும் பறவைகளும் உள்நாட்டு மிருகங்களும் பறவைகளும் சுயேச்சையற்றிருப்பதைக் கண்டோம். பின் நூதனசாலை, அவதானசாலை, சித்திரகலாமண்டபம் என்னுமிடங்களை யடைந்து ஆங்காங்கு பார்த்து அவதானிக்க வேண்டியவற்றை எமது குறிப்புப் புத்தகங்களிற் குறித்துக்கொண்டோம். பின் ஒலிபரப்புஞ் சாலையில் நூதனமாய் ஒலிபரப்பலையும் கேட்டலையும் கண்டு மகிழ்ந்தோம். பின் விக்ரோறியாப் பூந்தோட்டத்திலுள்ள பலவித பூக்களையும் மரங்களையுங்கண்டு ஆனந்தித்தோம். பின் மத்தியான போசனம் முடித்துக்கொண்டு கொழும்புத் துறைமுகத்தை யடைய அங்குள்ள பாரிய கப்பல்களும், சிறு வள்ளங்களும் எங்கள் கண்களைக் கவர்ந்தன. காலிமுகக்களரி என்னுமிடத்தில் ஆடவரும் பெண்டிரும் சிறுவரும் சிறுமியரும் உல்லாசமாகப் பொழுது போக்கினர். நாங்களும் அவ்விடத்திலிருந்து சிறிதுநேரங் கடற்காற்றின்பம் சுகித்தோம். பின் அரசாங்கசபை மண்டபத்தைப் பார்த்துவிட்டு எங்கள் கொழும்பு விடுதியை யடைந்தோம்.

புதன்கிழமை காலை மருதானை, கோட்டை என்னுமிடங்களைப் பார்த்துவிட்டு மாலை 1 மணியளவில் கண்டிக்குப் போகப் புறப்பட்டோம். பெரிய மேட்டுப்பாதைகளையும் மூலை முடக்கான விடங்களையுங் கடந்து கண்டியை யடைந்தோம். கண்டியில் நாலு ஐந்து மாதம்

இல்லாதிருந்த மழை அன்று பெய்தது. பின் இராப்போசன மருந்தி விட்டு இருபகுதியினராகப் பிரிந்து ஸ்ரீமான் அம்பலவாணரவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட இரு விடுதிகளிற்றங்கினேம். மறுநாட் காலை போதனைத் தோட்டத்தை யடைந்து கண்களைக் கவரும் மலர்களையும் காட்சிக்கினிய மரங்களையுங் கண்டோம். மாலையில் புத்தரின் பக்திக் குரிய தாலத மாளிகையையும், பழைய அரண்மனைகளையும், கண்டி நூதனசாலையையும் கண்டுகளித்தோம். பின் நாவலப்பிட்டிக்கு மாலை 5 மணியளவில் புறப்பட்டு அநேக றப்பர், தேயிலைத் தோட்டங்கட் கூடாகப் பிரயாணம் செய்து 7½ மணியளவில் அடைந்தோம். அங்கு கதிரேசன் வித்தியாசாலையிற் றங்கினேம். ஷெ வித்தியாசாலை ஆசிரியர்கள் எங்களை வரவேற்றனர்.

காலை 6 மணியளவில் நுவரெலியாவுக்குச் செல்லப் புறப்பட் டோம். மலை நாட்டில் எங்கள் இரதங்கள் மூன்றும் வேகங் குறைந்த நிலையிற் சென்றன. முதுகில் தொங்குங் கூடையுடன் இந்திய கூலிச் சனங்கள் தேயிலைத்தோட்டங்களில் வேலை செய்யும் நிலை பரிதபிக்கத் தக்கதே. காலை 7½ மணியளவில் வட்டவளை நீர் வீழ்ச்சியையும் பார்த்துவிட்டு நுவரெலியாவை யடைந்தோம். அங்கு எங்களை வர வேற்க ஓவர்சியர் ஸ்ரீ தம்பிப்பிள்ளை அவர்கள் காத்து நின்றார்கள். நுவரெலியாப் பூந்தோட்டத்தைப் பார்வையிட்டபின் அவர்களால் அளிக்கப்பட்ட விருந்திற் பங்குபற்றினேம். பின் குளிர் மிகுதியால் அதி சீக்கிரம் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு மாலை 5 மணியளவில் 'குவீன்ஸ்பெரி' என்னும் தோட்டத்துத் தேயிலைத் தொழிற்சாலை களைப் பார்வையிட்டபின் அத்தோட்டத் தலைவரது சிற்றுண்டியிற் பங்குபற்றினேம். 7½ மணியளவில் நாவலப்பிட்டியை யடைந்து எங்களுடன் பிரயாணஞ்செய்த ஆசிரியர் பண்டிதர் அவர்களால் நிகழ்த்திய சொற்பொழிவையுங் கேட்டின்புற்றோம்.

மறுநாட் சனிக்கிழமை காலை 7½ மணிக்குப்புறப்பட்டு 12 மணிக்கு மாத்தளைப் பாக்கிய வித்தியாசாலைக்குச் சென்றோம். அங்கு அவ்வித்தியாசாலை மானேஜராலும் அவர் பாரியாராலும் அளிக்கப் பட்ட விருந்து பெரிதும் பாராட்டத்தக்கது. பின் மாலை 2 மணிக்கு அநுவிகரை, நாலந்தா, டிம்புலா என்னுமிடங்களைப் பார்த்துவிட்டு மீண்டும் ஷெ வித்தியாசாலைக்கு மாலை 7 மணிக்கு வந்தோம். அவ் விடத்திலும் பண்டிதர் அவர்களால் ஷெ அநாத பெண் பாடசாலை யதும் அப்பாடசாலை மானேஜரதும் சிறப்புத் தோன்றும்படி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. இங்கு எங்கட்கு நடந்த உபசா

ரம் எப்பொழுதாயினும் மறக்கத்தக்கதன்று. அன்றிரவு 5 மணியளவில் காலைப்போசனம் அருந்திக்கொண்டு 8 மணிக்குச் சிகிரியாவை யடைந்தோம். அம்மலையை ஏறிப்பார்வையிட்டபின் பொல்லநறுவைக்குக் காலை 11 மணிக்குச் சென்றோம். அங்குள்ள புராதன கட்டடங்களைப் பார்வையிட்டபின் இரவு 9 மணியளவில் திரிகோணமலையை யடைந்து அவ்விடத்துச் சரஸ்வதிபூசைச் சிறப்பைக் கண்ணுற்றோம்.

திங்கட்கிழமை காலை 7 மணிக்குக் கன்னியா என்னும் வெந்நீரூற்றுக் கிணறுகளில் ஸ்நானஞ் செய்துவிட்டுப் பின் துறைமுகம், கோணேசர்மலை என்பனவற்றைப் பார்வையிட்டோம். அன்றைய தினம் அவ்வூரவர்களின் விசேஷ திருவிழாவாகிய மானம்பூவிற்காக ஆடிக்கொண்டுவந்த அநேக கரகக்கூட்டங்களைக் கண்டு ஆனந்தித்தோம். செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டோம். சமதரையானபடியால் இரதங்கள் தங்கள் தங்கள் வேகங்களைக் காட்டின. வழியில் குரங்காட்டிக் குடும்பத்தாரால் காட்டப்பட்டபல ஆட்டங்களையுங்கண்டு மகிழ்ந்ததின்பின் வவுனியாவிலுள்ள தமிழ்ப்பாடசாலைக்கு வந்தோம். அங்கு மத்தியான போசன மருந்தியபின் யாழ்ப்பாணத்தை நோக்கிப் புறப்பட்டு மாலை 6 மணிக்கு எங்கள் கலாசாலையை யடைந்தோம்.

---

மெய்யில் நாவிச் செவியினில் மாசுடன்
வேங்கைப் பல்லுந்தே வாங்கினிற் பித்தும்
பைய ராவின் தலைதனின் மூளையும்
பன்றி முள்ளுமொ ருள்ளியுங் கூட்டிக்
கையி னுலேயரைத் துண்டைபண் ணிவெங்
கள்ளுஞ் சுள்ளுடன் பள்ளனுக் கிட்டாள்
பொய்யு மிந்திர மாசால வித்தையும்
பூரை யென்னவும் கற்றுள்கா ணுண்டே.

[க. ம. ப: செய். 59]

# தமிழரும் ஆரியரும்

(சே. துரைசிங்கம்)

"பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரண மென்ப"

என்பது தொல்காப்பியச் சூத்திரம். "பொய்யும் வழுவுமின்றி நடைபெற்றுவந்த புராதன ஒழுக்கமாகிய தமிழ் மணத்தில் அவை மிக்குத் தோன்றிய பிற்காலத்திலே பெரியோர்கள் சடங்குமுறைகளை அமைத்தனர் என்ப" என்பதே அதன் கருத்து. எனவே, தொல்காப்பியர் காலத்துக்கு முன் தமிழ்நாட்டார் கையாண்டுவந்த விவாக முறைகளில் பொய்யும் வழுவும் புகுந்ததினுல் புதிய சடங்குமுறைகள் பெரியோர்களால் வேறு வேருக விதிக்கப்பட்டனவென்பது புலனுகின்றது. இதுவே சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியரவர்களின் கருத்துமாகும்.

இஃதிங்ஙனமாக, இக்காலத்திலே தமிழ்நாட்டிற் காணப்படும் முதல் மூன்று வருணத்தாராகிய அந்தணர், அரசர், வணிகர் என்பவர்கள் ஆரியசாதியினரென்றும், வேளாளராகிய நான்காம் வகுப்பார் மட்டுமே தமிழர் என்றும் ஓர் ஆதாரமில்லாத கொள்கையை திரு மு. இராகவஐயங்கார் வைத்துக்கொண்டு அதற்கு ஆதாரந் தேடுகின்றவர், மேற்கூறிய "பொய்யும் வழுவும்" என்ற சூத்திரத்திலுள்ள 'ஐயர்' என்பதற்குத் 'தமிழரல்லாத பெரியோர்—ஆரியர்' எனப் பலாற்காரப் பொருள் கூறுகின்றனர். ஐயர் என்ற சொல் பெரியோர் என்ற பொருளிலேயே சிந்தாமணி சிலப்பதிகாரங்களில் வழங்குதலானும், அது ஒரு தனித்தமிழ்ச் சொல்லாதலானும், 'ஆரியர்' என்ற சொல் அத்தானே 'ஐயர்' எனத் திரிந்ததாகக் கொண்டாலும் ஆரியர் என்ற சொல் நூல்வழக்கில் பெரியோர் என்ற பொருளில் வழங்குவதே யொழிய ஒரு சாதியை வரைந்து சுட்டும் பெயராகக் கொள்ளுதற்கு ஆதாரமின்மையானும், சாதியை வரைந்து சுட்டாமை இராமனை ஆரியனென வழங்குவதுபோல இராவணனையும் ஆரியன் என்று கம்பர் இராமாயணத்தில் வழங்குவதாற் பெறப்படுதலானும், இலங்கையின் வடபகுதியை யாண்ட தென்னிந்தியத் தமிழரை ஆரிய அரசர் என்று வழங்கிய வழக் குண்மையானும், 'ஐயர்' என்பது தமிழரல்லாத

ஒரு சாதியை யுணர்த்துமென்பது பொருந்தாது. அன்றியும், 'ஆரியர்' என்றொரு வகுப்பாரையே குறிப்பது ஆசிரியர் கருத்தாயின் பல பொருளில் வழங்கும் 'ஐயர்' என்ற சொல் லொழித்துப் பொருளினிது விளங்கும்பொருட்டு பிறபாஷைச் சொல்லென்றுங் கருதாது, ஆரியர் என்ற சொல்லையோ அல்லது அப்பொருளை வரைந்துணர்த்தும் மற்றொரு சொல்லையோ தலைப்பெய்து பொருளினிது விளங்கச் சூத்திரிப்பாராதலானும், 'ஐயர்' என்பதற்கு ஒருவித இயைபுமில்லாமல் "தமிழரல்லாத" என்னும் அடையை வருவித்துத் "தமிழரல்லாத பெரியோர்—ஆரியர்" எனப் பொருள் கூறுதல் கூடாமையானும் 'ஐயர்' என்பதற்குப் 'பெரியோர்' என்று பொருள் கொள்வதே சால்புடைத்தென்க. அது நிற்க,

ஐயங்கார், தமிழ்நாட்டிற் காணப்படும் அந்தணர் அரசர் வணிகர் ஆரிய வகுப்பினரேயென்றும் வேளாளர் தமிழர் என்பது படவும் கூறுவது தமிழ்நூல்கட்கும் மனச்சாட்சிக்கும் முரணுவதொன்றென்க. தமிழ்நாடோ நாகரீகத்தில் பண்டைக்காலந் தொடங்கியே மேம்பட்டு விளங்கிவருகின்றது. அது கடைச்சங்க நூல்களாலும் அந்நூல்களிற் காணப்படும் முதவிடை கடைச் சங்க வரலாறுகளாலும் அறியப்படும். பண்டை நூல்களிற் காணப்படும் அரசியல் அமைச்சியல் விஷயங்களை நோக்கும்பொழுது அவ்விஷயங்கள் அநுபவத்தோடும் வியுற்பத்தியோடும் கூறப்பட்டன என்றே கொள்ள வேண்டும். இன்றேல் அவை எத்தேசத்தாராலும் எச்சமயத்தாராலும் கைக்கொள்ளக்கூடிய உண்மைகளாக விளங்கமாட்டா. திருக்குறளும் அதுபோன்ற வேறு தமிழ்நூல்களும் பிற பாஷையிலே மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் நோக்காது தாம் கொண்டதையே சாதிப்பாராய்த் தமிழர் தம்மை யாளுவதோர் அரசின்றியும் அந்தணர் வணிகர் இன்றியும் இருந்தனர் என்று கூறுகின்றனர். நிலையாக ஒரு இடத்திலேயே இருந்து சீவியத்தை நடத்தாத—நாகரீகமற்ற—நாடோடிகளும் தமக்கொரு தலைவனை யுடையவர்களாகியும் நாகரீகமடைய ஆரம்பிக்கிற காலத்திலே கோயிற் பூசகரையும் வணிகரையும் உடையவர்களாகியும் விளங்கினர் என்பது சரித்திர வாயிலாக அறியக்கூடிய உண்மை. அதையும் அவர் நோக்கிற்றிலர். அந்தோ! அவர் மதிதா னென்னே!

அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்ற நான்கு வகுப்பாரும் தமிழ்நாட்டின்கண்ணே பண்டைக்காலந் தொடங்கியே வசித்து வந்த நாற்பெருஞ் சாதியினரென்க. நான்கு வகுப்பாரும் தமிழ்நாட்



எங்கள் புதிய சாதனை பாடசாலை

Plâte Ltd.

டாரே என்பதும் அந்நான்கு வகுப்பாருக்கும் பொதுவான மண முறை பண்டைக்காலத்திலே நிகழ்ந்த தென்பதுந் தொல்காப்பியர் கருத்து. அது,

"மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க்காகிய காலமு முண்டே" என்பதனுல் விளங்கும்.

கீழோர்க்காகிய காலமு முண்டெனவே தொல்காப்பியர் காலத்துக்கு முன்பு பொதுவாக விவாகமுறை யிருந்ததால் அம்முறை கீழோராகிய வேளாளராலும் கையாளப்பட்ட தென்பதும், அது பிற காலத்திலே பொய்யும் வழுவும் புகுந்ததினுல் நீக்கப்பட்டு வேறு வேறு முறைகள் பெரியோரால் விதிக்கப்பட்டனவென்பதும் புலனுகின்றன ஈண்டுக் கீழோர் என்பது பெருமை, அறிவு, ஆற்றல், ஒழுக்கங்களில் வழுவினேரைக் குறியாது நாலாம் வகுப்பினரையே குறிக்கும். அஃது "ஆங்கவ்விரண்டு மிழிந்தோர்க் குரிய" என்ற இறையனு ரகப்பொருளானும் அதனுரையானும் நன்கு விளங்கும். இங்ஙனம் இச்சூத்திரத்துக்குச் செம்பொருள் காண அறியாது, 'மேலோர் மூவர்' என்பதற்கு அந்தணர் அரசர் வணிகர் என்ற ஆரிய வகுப்பார் எனப் பொருள் கூறுகின்றனர். அவர், ஓரினப் பொருட் களேயே ஒருங்கெண்ணுவதுபோல ஒரு நிலமென்ற இயைபுபற்றி அந்நிலத்து மக்களேயே மேலோர் கீழோர் என ஒருங்கெண்ணிப் பிரித்தல்வேண்டும் என்பதையும் நோக்கிற்றிலர். அன்றியும் ஒரு நிலத்து மக்களேப் பகுக்காது இருவேறு நிலத்து மக்களாகிய ஆரியர் தமிழரையே மேலோர் கீழோர் எனப் பகுத்துக் கொள்ளுவது கருத்தாயின் அது ஆரியர் எக்காரணத்தினுல் மேலோர் தமிழர் எக்காரணத்தினுற் கீழோர் என ஐயத்துக்கிடமாகிக் கற்பவர்களுக்குப் பொரு ளினிது விளங்காமையால் ஆசிரியர் பொருளினிது விளங்கக் கற்பவர்களுக்கு மயக்கங்கள் நேரக்கூடிய வேறிடங்களிலே "உயர்திணை யென்மனுர் மக்கட் சுட்டே" எனவும் "அஃறிணை யென்மனுர் அவரல பிறவே" எனவுந் தெளிவாக எடுத்தோதியனபோல மேலோராவார் இவர், இக்காரணத்தினுல் எனவும் சூத்திரிப்பர், இங்ஙனம் மயங்கக் கூறமாட்டார். மேலோர் என்பது ஆரியரையே குறித்த தாயின் மூவர் என்பது பயனில் கூற்ருய் நின்று வற்றுவதுங் காண்க. ஐயங்கார் தம் கொள்கைக்கு ஆதாரமாக்குவதற்கே இங்ஙனம் நலித்துப் பொருள்கொள்ளுகின்ருர் என்க.

இதுகாறுங் கூறியவற்ருல் இக்காலத்தில் தமிழ்நாட்டில் வழங்குகின்ற நான்கு சாதி வகுப்புக்களும் சரித்திரகாலத்துக்கு முன்

தொடங்கியே நிலைத்துள்ளனவென்பது விளங்கும். தமிழ்நாடு மேம்பட்டு விளங்கிய காலத்திலே - துவாபர யுகத்திலே - பாரதயுத்தந் தொடங்குவதற்கு முன்னரே வடநாடும் நாகரீகத்தில் மேம்பட்டு விளங்கியது. இரு நாட்டாரும் ஒரு தர்மமுடையவர்களாயே விளங்கினர். சுயம்வரம் முதலிய விவாகமுறைகளும் யாகவகைகளும் அவற்றின் கிரியைமுறைகளும் இருநாடுகளிலும் பேதமின்றி ஒரே தன்மையாகவே வழங்கிவந்தன. இவை பழைய நூல்கொண்டு அறியக்கூடிய உண்மைகளாம். அன்றியும் தமிழ்நாட்டுச் சோழவரசரைச் சூரியகுலத்தோரென வழங்கியதுபோல் வடநாட்டையாண்ட தசரதனையும் அவன் சந்ததியாரையும் சூரியகுலத்தவரென்று வழங்கினர் என்பதைப் பல சான்றுகள் புலப்படுத்துகின்றன. மிருதிகளும் தென்னாடு வடநாடென்ற பேதமின்றி இரு நாட்டாருக்கும் பொதுவாகவே இயற்றப்பட்டிருக்கின்றன. விருந்து திருவிழாப்போன்ற கொண்டாட்டங்களில் இரு நாட்டாருந் தத்தமக்கியைந்த வகுப்பினரோடு கலந்து உறவுமுறை கொண்டாடினர். சாதிவிஷயத்திற் சிறிதேனும் வழுவுதலின்றி ஒழுகிவந்த இந்நாட்டினர்கள் தென்னாடு வடநாடு என்ற பேதமின்றி உறவுமுறை கொண்டாடியது கவனிக்கற்பாற்று. அதுமட்டோ, விவாகங்கள் கூட இருநாட்டாருக்குமிடையில் நடந்துவந்தன. அதுவும் அருச்சுனனுதியோர் வரலாறுகளால் நன்கு விளங்கும். புறநானூற்றுள் இரண்டாஞ் செய்யுளில்,

> "அலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ
> யீரைம்பதின்மரும் பொருதுகளத் தொழியப்
> பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்"

எனப் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதனை முரஞ்சியூர் முடிநாகராயர் பாடியிருக்கின்றனர். இதிலிருந்து மகாபாரத யுத்தத்தில் இருதிறத்தார் சேனைகளுக்கும் சேரனொருவன் சோறு கொடுத் துதவினனென்பது பெறப்படுவதினாலும், பெருந்தேவனாராற் செய்யப்பட்டதென வழங்கும் பாரதத்தில் சேர சோழ பாண்டியர் தருமருக்காக யுத்தத்தில் ஈடுபட்டனரெனவும் சில இடங்களிலன்றிப் பலவிடங்களிலும் பயின்றுவருதலினாலும் யுத்தங்கள் ஏற்பட்ட காலங்களிலேயும் ஒரு நாட்டார் மற்ற நாட்டாருக்கு உதவிபுரிந்தனரென்பது விளங்குகின்றது.

இஃதிங்ஙனமாகவும் இரு நாட்டாரும் வேறுவேறான சாதியினரென்றும் அந்தணர் அரசர் வணிகர் என்ற மூன்று வகுப்பினரும்

வடநாட்டு ஆரியரென்றும் வேளாளர்மாத்திரமே தமிழரென்றுங் கூறுவதென்னை? நான்கு வகுப்பும் தமிழ்நாட்டுக்கும் பண்டைக்காலந் தொடங்கியே உரியனவென்க. அற்றேல் இக்காலத்திலே ஐரோப்பியரால் குறிக்கப்படும் ஆரியர் என்ற வகுப்பார் யாவரெனிற் கூறுதும்:—பாரதயுத்தம் பஞ்சபாண்டவர்களுக்கும் துரியோதனனுதியோருக்கு மிடையில் ஆரம்பமாயிற்று. அவ் யுத்தத்திற் சிநேகபான்மையாலும் நீதியாலும் இரக்கத்தாலும் வடநாட்டார் பலரும் ஈடுபட்டனர். முனிவர்களும் ஏழைகளும் ஈடுபடவில்லை. வடநாட்டார் ஈடுபட்டதுபோலவே தென்னுட்டாருந் திரள் திரளாகச் சென்று இருபகுதியினருடனுஞ் சேர்ந்திருப்பர். அது முற்கூறியவற்றுனும் பெறப்படும். இவ் யுத்தத்தில் உயிர்ச்சேத மதிகமானதால் வடநாட்டோரில் வலிமையுடைய யாவரும் தென்னுட்டோரில் சென்றவர்களிற் பலரும் இறந்திருத்தல்வேண்டும். வேண்டவே தென்னுட்டிலும் வடநாடு மிகவும் வலி குன்றி ஏழைகளுக்கும் முனிவர்களுக்குமே வாசஸ்தானமாய் எவராலுந் தாக்கக்கூடிய நிலைமையை அடைந்துவிட்டதென்பது பெறப்படும்.

வடநாடு வலிகுன்றியிருந்த அக்காலத்திலே அதற்கு அண்மையில் வசித்துவந்த நாடோடிகள் அந்நாட்டிற் புகுந்து அங்குள்ளவர்களது நாகரீகத்தைக் கைக்கொண்டு அவர்களை அடக்கிக் குற்றேவல் செய்யுஞ்சூத்திரராக வைத்துக்கொண்டு தங்களைப் பிராமண க்ஷத்திரிய வைசியர் என வகுத்து வலிமையுற்று விளங்கினர். நிகண்டில் ஆரியரின் பெயர் வரிசையில் ஒன்றுக அநாரியர் என்பது காணப்படுதலாலும் இக்கொள்கை வலியாகின்றது. வடநாட்டிற் குடியேறிய நாடோடிகளாகிய ஆரியர் அந்நாட்டு முனிவர்களையும் தம்பக்கமாக்குகிறதற்காகப் பலவித சூழ்ச்சிகளையும் கையாண்டிருக்கக்கூடும். அதனுல், அந்நாட்டிலுள்ள முனிவர்கள் தங்கள் கோட்பாடுகளை மாற்ற முடியாதவர்களாய்த் தாங்கள் வைத்துப் பூசைபண்ணிய லிங்கங்களோடு தென்னுடு நோக்கிவந்து பல இடங்களிலும் அவ்விலிங்கங்களை வைத்து வணங்கிச் சீவியத்தைக் கழித்தனர். அவர்களால் வைத்து வணங்கப்பட்ட லிங்கங்களே பிற்காலத்தவர்களாற் கண்டுபிடிக்கப்பட்டு அரசர்களுக்கு அறிவித்தபோது அரசர்கள் காட்டை வெட்டிச் சீர்திருத்திக் கோயில்களைக் கட்டினரென்க. இது தென்னுட்டில் வடநாட்டிலும்பார்க்க அதிகமாகக் கோயில்களிருப்பதினுலும் தென்னுட்டுக் கோயில் வரலாறுகளை எடுத்துக் கூறும் புராணங்களாலும் அறியக்கூடிய உண்மையாம்.

வடநாட்டிற் குடியேறி வலிமை மிகுந்த பிராமண க்ஷத்திரிய வைசியர்கள் காலகதியில் தென்னாடு நோக்கி வந்து பல இடங்களிலும் குடியேறித் தமிழரோடு விவாகம் முதலியவற்றுள் கலந்து, அதிகா ரத்தை யடைந்து, தம்நாட்டுக் கொள்கைகளைத் தமிழ்நாட்டிலும் பரப்பினர். பண்டைத் தமிழ்நாட்டோர் அவர்களுடன் விவாக முத லிய முறைகளிற் கலந்துகொண்டதனாலும், அவர்களது ஆதிக்க வலி மையினாலும் அவர்கள் கொள்கையை ஏற்றுக்கொள்ளவேண்டியவர்க ளானார்கள். வடநாட்டார் கொள்கையைக் கைக்கொள்ள விரும்பாத தென்னாட்டுப் பிராமணர்கள் வடநாட்டுப் பிராமணர்களிலிருந்து பிரித் தற்குப்போலும் தங்களை ஆதிசைவரென வழங்கலாயினரென்க.

---

அருக்குவாள் சற்றே விழிக்குமை யெழுதுவாள்
அழகான கூந்தலை யள்ளி முடிவாள்
செருக்குவாள் சற்றே செல்லங்கொண் டாடுவாள்
தேனுடன் கொஞ்சம் பாலுங் கலப்பாள்
உருக்குவா ளூரில் பள்ளரெல் லோரையும்
உச்சியாம் பொழு தானுக் கழைப்பாள்
நருக்குவேன் கையில் மண்வெட்டி யாலே
நாட்டுக்காகப் பொறுத்தேன் நான் காணே.

[க. ம. ப: செ. 63]

---

என்னடி பள்ளி யேகாந்தக் காரிநீ
இந்நேரம்மட்டு மென்னடி செய்தாய்?

[க. ம. ப: செய். 64]

ஆறு போந்தங்கே தண்ணீரு மள்ளி
அழுத பிள்ளைக்குப் பாலும் புகட்டி
சேறு போந்த சிறுநெல்லுக் குத்தித்
தீட்டி யாக்கவும் சென்றதோ பள்ளி!

[க. ம. ப: செய். 65]

# சிசு வளர்ச்சி

## THE GROWTH OF A CHILD

(அ. குமாரசுவாமி.)

ஓர் சரீரசுகமுள்ள சிசு பிறந்தவுடன் ஏழு இருத்தல் வரை நிறையுள்ளதாகக் காணப்படும். அதின்கை, கால்கள் கஷ்டமின்றி அசையக்கூடியனவாயிருக்கும்; கைகளில் ஏதும் பொருள்களை முட்ட வைத்தவுடன் கைகளை மூடிக்கொள்ளும். அது புறத்துணையின்றி நிமிர்ந்திருக்க மாட்டாது. குழந்தை திரும்பும் பக்கத்திற்குத் தலை சரிந்துவிடும். கண்ணிமைகள் நன்ருக விழித்திரா. காலம் செல்லச் செல்லக் குழந்தையின் உருவம் மாறுபடும். தலை பெரிதாகவும் தலையின் சுற்றளவு மார்புச் சுற்றளவிலும் பார்க்கக் கூடியுமிருக்கும். முகம், தலையின் ஏனைய பகுதியோடு ஒப்பிடும்போது சிறிதாக விருக்கும். கால்களோடு கைகளை உற்றுநோக்கும் பொழுது கைகள் பெரிதாகக் காணப்படும்.

குழந்தை ஜெனனமாய்த் தொடரும் சில நாட்களுக்குத் தன் நிறையிற் சில அவுன்சுகள் குறைந்துகொண்டே வரும். சிசு பிறந்து இரண்டு கிழமை முடியும் வரையிலே குறைவடைந்த நிறை பழையபடி கூடிவிடும். பின்னர் நிலையாகவும் படிப்படியாகவும் நிறை கூடிக் கொண்டே வரும். குழந்தையின் நாளாந்த அல்லது வாராந்த நிறையின் அட்டவணை பெரிதும் நன்மை பயக்கும். ஓர் குழந்தையின் நிறை குறைவடைந்திருப்பின் அல்லது படிப்படியாகக் கூடிவராவிட்டால் பிள்ளை நோய்வாய்ப்பட்டு அல்லது தகுந்த உணவில்லாமல் இருக்கின்றது என்பதை அறிந்து ஏற்ற பரிகாரத்தைச் செய்து கொள்ளலாம். குழந்தையை ஸ்நானம் செய்வதற்காக எடுக்கும் நேரத்தில் அதனை நிறுப்பதற்கெனவே செய்யப்பட்ட தராசிற் படுக்கவைத்து நிறுக்கலாம். ஓர் குழந்தையின் நிறையில் முதல் ஐந்து மாதத்திற்கும் நாள்வீதம் சராசரியாக மூன்றிலிரண்டு அவுன்ஸ் தொடக்கம் ஒரு அவுன்ஸ்வரையும், அடுத்த ஏழுமாதத்திற்கும் மூன்றிலொரு அவுன்ஸ் தொடக்கம் நாலில் மூன்றவுன்ஸ்வரையும் அதிகரிப்புக் காணப்படும். குழந்தையின் நாலாம் அல்லது ஐந்தாம் மாசத்தில் நிறை தொடக்கத்திலிருந்ததிலும் பார்க்க இரு மடங்காக விருக்கும், ஒரு வருஷ முடிவில் மூன்று மடங்காக விருக்கும். சிசுவின் நிறை இரண்டாம் வருடத்தில் 6 இருத்தலும் மூன்ரும் வருஷத்தில் நாலரை இருத்தலும் பின்னர் சில வருஷங்களுக்கு வருஷம் நாலு இருத்தலும், எட்டாம் வருடத்திற்கும் பதினேராம் வருஷத்திற்குமிடையில் சராசரியாக வருஷம் ஆறு இருத்தலும் என்ற வீதப்படி கூடிக்கொண்டுவரும். பதி

னோராம் பிராயத்திற்குமுன் பெண்பிள்ளைகளிலும் பார்க்க ஆண்பிள்ளைகளும் பின் பதினைந்தாம் வயதுவரை ஆண்களிலும் பார்க்கப் பெண்களும் நிறையிற் கூடியிருப்பார்கள்.

குழந்தை பிறந்ததும் இருபது அங்குலங்கள்வரை உயரமுடையதாக விருக்கும். முதலிரண்டு மூன்று மாசங்களிலும் சிசுவின் வளர்ச்சி அதிகமாகக் காணப்படும். முதலாம்வருட முடிவில் ஓர் குழந்தை பிறந்த பொழுதுள்ள உயரத்திலும் பார்க்க எட்டங்குலங்கள்வரை கூடிய உயரமும் ஆறும் வருடமுடிவில் இருமடங்குயரமுமுடையதாகவும் காணப்படும். ஆண்பிள்ளைகள் ஏழாம் வயது தொடக்கம் பதின்மூன்றும் வயதுவரை உயரத்திற் குறைந்த வீதத்திலும் பின்னர் பதினேழாம் வயதுவரை கூடிய வீதத்திலும் வளருவார்கள். பெண்பிள்ளைகளும் இவ்வாறே உயரத்திற் பன்னிரண்டு வயது தொடக்கம் பதினான்கு வயதுவரை குறைந்த வீதத்திலும் பின்னர் பதினாறு வயதுவரை கூடின வீதத்திலும் வளருவார்கள். கீழ்க் குறிக்கப்படும் அட்டவணை பெண்பிள்ளைகளும் ஆண்பிள்ளைகளும் பதினைந்தாம் வயதுவரை பெற்றிருக்கவேண்டிய உயரத்தின் அளவையும் நிறையின் அளவையும் காட்டுகின்றது.

| வயது. | ஆண்கள்: உயரம். | ஆண்கள்: நிறை. | பெண்கள்: உயரம். | பெண்கள்: நிறை. |
|---|---|---|---|---|
| பிறந்தவுடன் | 20·6 அங். | 7·55 ரு. | 20·5 அங். | 7·16 ரு. |
| 6 மாதங்கள் | 25·4 ,, | 16· 0 ,, | 25·0 ,, | 15· 5 ,, |
| 12 ,, | 29·0 ,, | 20· 5 ,, | 28·7 ,, | 19· 8 ,, |
| 18 ,, | 30·0 ,, | 22· 8 ,, | 29·7 ,, | 22· 0 ,, |
| 2 வருஷங்கள் | 32·5 ,, | 26· 5 ,, | 32·5 ,, | 25· 5 ,, |
| 3 ,, | 35·0 ,, | 31· 2 ,, | 35·0 ,, | 30· 0 ,, |
| 4 ,, | 38·0 ,, | 35· 0 ,, | 38·0 ,, | 34· 0 ,, |
| 5 ,, | 41·7 ,, | 41· 2 ,, | 41·4 ,, | 39· 8 ,, |
| 6 ,, | 44·1 ,, | 45· 1 ,, | 43·6 ,, | 43· 8 ,, |
| 7 ,, | 46·2 ,, | 49· 5 ,, | 45·9 ,, | 48· 0 ,, |
| 8 ,, | 48·2 ,, | 54· 5 ,, | 48·0 ,, | 52· 9 ,, |
| 9 ,, | 50·1 ,, | 60· 0 ,, | 49.6 ,, | 57· 5 ,, |
| 10 ,, | 52·2 ,, | 66· 6 ,, | 51·8 ,, | 64· 1 ,, |
| 11 ,, | 54·0 ,, | 72· 4 ,, | 53 8 ,, | 70· 3 ,, |
| 12 ,, | 55·8 ,, | 78· 8 ,, | 57·1 ,, | 81· 4 ,, |
| 13 ,, | 58·2 ,, | 88· 3 ,, | 58·7 ,, | 91· 2 ,, |
| 14 ,, | 61·0 ,, | 99· 3 ,, | 60·3 ,, | 100· 3 ,, |
| 15 ,, | 63·0 ,, | 110· 8 ,, | 61.4 ,, | 108. 4 ,, |

ஜீரணக் கருவிகளுள் ஒன்ருகிய பல்லும், மாப்பொருளை ஜீரணிக்கச் செய்யும் தன்மையும் குழந்தைகட்கிருக்க மாட்டா. பாலில் குழந்தைகட்கேற்ற உணவுவகைகள் அமைத்திருத்தலால் பத்துப் பன்னிரண்டு மாதம்வரை அதையே இயற்கை முறையில் ஊட்ட வேண்டும். குழந்தை பிறந்து சிலகாலத்தில் உமிழ்நீர் மிகக்குறைவாகச் சுரக்கும். பற்கள் முளைக்கும்வரை மாப்பொருள்களை ஜீரணிக்கச் செய்யுந்தன்மை உண்டாகமாட்டாது. குழந்தை பிறந்ததும் பற்கள் முரசிற்குள் முளைத்திருக்கும். ஆறு மாதத்தின்பின் பாற்பற்கள் முளைக்க வாரம்பிக்கும். சாதாரணமாகக் கீழ்த்தாடையிலுள்ள முன் பற்களே முதன் முளைக்கும். மேல்வாய் முன் பற்கள் பிறந்து எட்டு அல்லது பத்து மாதத்திற்குள் முளைத்துவிடும். பின் நான்கு அசனப் பற்கள் முளைத்து பிராயம் இரண்டரை வருஷம்வரை முடிந்ததும் பாற் பற்களான இருபதும் முளைத்து விடும். ஆனுல் பிராயத்தில் உண்மையான பற்களாகிய நிலைபெறும் பற்களில் அசனப்பற்கள் முளைக்க ஆரம்பித்து வருஷவீதம் நான்கு பற்கள் தோன்றி; பன்னிரண்டாம் பிராயம்வரை, பதினேழாம் வயதிற்கும் இருபத்தைந்தாம் வயதிற்கு மிடையில் முளைக்கும் ஞானப்பற்கள் தவிர்ந்த, ஏனையபற்கள் முளைத்துவிடும். பிள்ளையின் சுகத்தைப் பேணுதற்காகப் பற்களைப் பேணிக் காப்பாற்றல் வேண்டும். பற்கள் வெளியே கிளம்பும்போது உண்டாகும் ஓர்வித உணர்ச்சியால் குழந்தையானது தன் பெருவிரலை அல்லது வேறு ஏதும் பொருள்களை வாயுள் வைத்துக் கடிக்க வாரம்பிக்கும். இவ்வாருய செயல்கள் பழக்கங்களாக மாருவண்ணம் ஜாக்கிரதையாகவிருக்கவேண்டும். உணவருந்தி முடிந்தவுடன் படுக்கைக்குப் போகும் போது பற்களை நன்ருகக் கழுவவேண்டும். பற்களுக்கிடையிலிருக்கும் மாப்பொருள் சர்க்கரைப்பொருள் இராக்காலத்தில் புளிப்புத் தன்மை யடைவதனுல் படுக்கப்போகும்போது பற்களைச் சுத்தமாகக் கழுவவேண்டும். பாற்பற்கள் அல்லது நிலையுள்ள பற்கள் ஒன்றிலேனும் ஏதும் நோயுண்டானுல் மறுபற்களிலும் தொற்றிக் கூடிய கெடுதியை விளைவிக்குமுன் பல் வைத்தியரின் உதவியைப் பெறவேண்டும்.

பிள்ளையின் சுவாசாசயம் பிறந்தவுடன் குழந்தை அழ ஆரம்பிக்கும்பொழுதே விரியத் தொடங்குகின்றது. சுகமும் திடமும் வாய்ந்த சுவாசப்பையைக் குழந்தை பெற்றிருப்பதற்காக வெளியிடங்களில் விரைவப்பியாசங்களைச் செய்யவிடவேண்டும். குழந்தை ஓடி யுலாவும் பொழுது விரைவாகவும் அதிகமாகவும் சுத்த பவனத்தை உட்செலுத்துகின்ருன். வளரும் பெண்குழந்தைகள் விரைவப்பியாசங்களி

வீடுபடும் பொழுது அவர்களுடைய சிறிது தளர்ந்திருக்கவேண்டும். ஒரு குழந்தை தன் சப்தத்தைத் திருத்துவதற்கும் சுவாசாசயத்தை விரியச் செய்வதற்கும் பாடுதலும் உரத்து வாசித்தலும் ஏற்ற அப்பியாசங்களாகும். குழந்தைக்கு மூளையின் வளர்ச்சி படிப்படியாகக் கூடி அதிகமான வளர்ச்சியையுடைய ஏழாம் பிராயத்தின்பின் சிறிதாகவே வளர்ச்சி நடைபெறும்.

குழந்தைகளுக்கு மூளையை யடுத்து கரேகை யென்னும் வேறு வேருன எட்டுக் கருக்கு என்புகள் உண்டு. இவை வாலிவப் பருவத்தில் வளர்ந்து ஒன்ருகச் சேர்ந்து காணப்படும். மூளையின் வளர்ச்சி யென்பது பருப்பத்தில் அல்லது தோற்றத்தில் அதிகரிப்பதன்று. சிசுப்பருவத்தில் நரம்புத் தளர்ச்சி யிருத்தலினுலே நரம்பு மண்டலத்தை யடக்கி யாளும் சக்தி யிருக்கமாட்டாது. ஆகவே அக்காலங்களில் நரம்பு சம்பந்தமான வியாதிகள் உண்டாகக்கூடும். நரம்பு மண்டலம் சாதாரண வளர்ச்சியை யடையவேண்டுமாயின் பயம் திடுக்காட்டம் முதலியவற்ருற் ருக்கப்படாமலும் அருந்து முணவு நன்ருக ஜீரணிக்கக்கூடியதாகவும், தேனி, காப்பி, மதுபானம் முதலியவற்றை அருந்தாமலும் ஜாக்கிரதையாக அவர்களை மேற்பார்வை செய்யவேண்டும். சுற்றுடல் சாதுவாகவும் அமைதியாகவு மிருத்தல் நல்லது. இவ்வாறு பிரதானமாக நரம்புத்தளர்ச்சி யுடையவர்களும் பாரம்பரியமாக நரம்பு சம்பந்தமான நோய்களை யுடையவர்களும் நரம்பு சம்பந்தமான நோய்கள் தமக்கு இலகுவில் ஏற்படுதல் கூடுமாதலால் மிகவும் கவனமாக இருத்தல்வேண்டும். இரவில் நெடுநேரம் விழித்திருந்து கல்வி பயிலுதல் கேட்டுக் கேதுவாகும். படுக்கைக்குப் போகுமுன் அரைமணித்தியாலம்வரை ஆறியிருக்கவேண்டும்.

கண்கள் மிகவும் சுலபமாக நோய்வாய்ப்படத் தக்கன. கண் நோய்கள் கண்களை அதிகமாக உபயோகிப்பதனுல் உண்டாகாது; பிழையான முறையில் உபயோகிப்பதனுலேயே யுண்டாகின்றன. சிறுபிள்ளைகளின் கண்கள் வாலிபர்களின் கண்களிலும் பார்க்கக் கூர்மையாகவும் மிகவும் கிட்டவுள்ள பொருள்களை நன்ருக அறியக் கூடியனவாயுமிருக்கும். குழந்தைகளுக்குக் குறும் பார்வை அதிகமாக வருதலால் அவர்களை நுட்பமான முயற்சிகள் செய்யவும் சிறு அச்செழுத்துக்களுள்ள புத்தகங்களை வாசிக்கவும் மஞ்சள் வெளிச்சத்தில் வாசிக்கவும் விடலாகாது.

ஒரு குழந்தை சரீர சுகமுடையதா யிருந்தால் அது தன் சரீர நிலைக்கு வேண்டிய உறக்கத்தை இயற்கை முறையில், தாலாட்டு

தொட்டிலாட்டு முதலிய செயற்கை முறைகளா லன்றிப் பெற்றுக் கொள்ளும் எச்சந்தர்ப்பத்திலேனும் தொட்டிலிலிட்டாவது தாலாட்டியாவது உறக்கத்தை வருவிக்கும் பழக்கத்தை உண்டாக்கிக்கொள்ளலாகாது. தானே வருகின்ற உறக்கம் அமைதியும் போதிய ஆறுதலும் உடையதாயிருக்கும். சடுதியாக ஏற்படுந் திடுக்காட்டத்தை வருவிக்கக்கூடிய ஒலிகளினாலே நித்திரைவிட் டெழுதல் கேட்டை விளைத்தற் கேதுவாகும்.

ஒலிகளை உணர்தலே முதல் விருத்தியாகக்கூடிய புலனாம். பின் உருசியை அறியும் வன்மை யுண்டாகும். பரிச உணர்ச்சியும் கந்த உணர்ச்சியும் பின்னரே உண்டாகும். ஆரம்பத்திலே குழந்தைகளிடும் ஒலிக்குறிப்பெல்லாம் கிளிப்பிள்ளைப் பேச்சுப்போலச் சில கருத்துக்களை அடக்கியிருக்கும். இது சிசுப்பாஷை அறியாதார்க்கு விளங்கமாட்டாது.

---

காலமே சென்று பாலுங் கறந்து
கமுகம் பூப்போ லரிசியுந் தீட்டிக்
கடுகவே வைத்துக் காய்ச்சிய பாற்கஞ்சி
காலாலே தட்டி யூற்றினா னண்டே.

[க. ம. ப: செய். 66]

இப்படிக் கொத்த நாடங்கப் பள்ளனுக்
கெப்படிக் கஞ்சி காய்ச்சுவே னண்டே.

[க. ம. ப: செ. 67]

# எனது கனவு

## வருங்காலத்திற்காய கல்வித்திட்டம்

(மு. சுப்பிரமணியம்)

### 1. நம் நாட்டுச் சிறப்பு

இவ்விலங்கைத்தீவானது நீர்வளமும் நிலவளமும் மிகுந்தது காரணமாக மேல்நாட்டவராலும் கீழ்நாட்டவராலும் போற்றிப் புகழப்பட்டது. அன்றியும் கீழைத்தேசங்கட்கெல்லாம் மத்திய தானமாகவும் மேலைத்தேசங்களின் சந்தையாகவும் விளங்குகின்றது. மேல்நாட்டவரின் நடமாட்டங் காரணமாக மேலைத்தேசக் கல்வியும் நாகரீகமும் மிகப்பெற்றது. இப்படியான இத்தீவின் சுதேச பாஷை சிங்களமுந் தமிழுமாகவும் அரசபாஷை ஆங்கிலமாகவும் இருக்கின்றது. ஒரு தேசத்தின் முன்னேற்றம் அந்நாட்டுச் சுவபாஷைக கல்வியிலேயே பெரிதும் பொறுத்திருத்தலின், எம் சுவபாஷைக் கல்வியை எவ்வெவ் வகையில் திருத்தியமைத்தால் நம் நாட்டை முன்னோக்கச் செய்யலா மென்பதையிட்டுச் சிறிது ஆராய்வாம்.

### 2. கல்வியின் நோக்கம்

மக்களின் வாழ்க்கைக்கும் காலப் போக்கிற்கு மேற்றபடியாகக் கல்வியின் நோக்கம் காலத்திற்குக் காலம் மாறுபடுவது சகசம். முன்னைநாட்களில் செந்தமிழ்க் கல்வியறிவின் பொருட்டுக் கற்பிக்கப் பட்டு வந்தது. அந்நாட்களில் கல்வியின் நோக்கம் அறிவு விருத்தியாகவே யிருந்தது. ஆயின் பிற்காலத்தில் கல்வி சீவனோபாயத்தையே பிரதான நோக்கமாகக் கொண்டெழுவதாயிற்று. அதுகாரணமாகக் கல்வியில் பல மாற்றங்களேற்படத் தமிழ் வரவர க்ஷீண நிலையடையத் தொடங்கிற்று. ஆயின் சீவனோபாயத்தையே பெருநோக்காகக் கொண்டெழுந்த கல்வி தன்னோக்கத்தை நிறைவேற்ற ஒருவழியையே கண்டுபிடித்தது. அது தமிழ் உபாத்தியாயர்களைச் சிருட்டித்தல் என்று சொல்லப்படுவது. இத்தொழில் இதுவரை குறைவற நடைபெற்றுவந்தாலும் தற்போது இரண்டு வழிகளில் பின்னப்படுவதாயிற்று. அவையாவன:—

1. தமிழ் உபாத்தியாயர்கள் போதியவளவு தமிழில் பயிற்றப் படாமை;

2. எல்லாரும் தமிழ் உபாத்தியாயர்களாக வரத்தலைப்பட்டமை யின் உத்தியோகத்திற்குப் போதிய இடங்களில்லாமை;

என்பனவேயாம்.

ஆகவே வருங்காலத்தில் இவ்விரண்டு குறைகளையும் சீர்ப்படுத் தற்கேற்ற கல்வித்திட்டம் எமக்கு வேண்டிய தாகின்றது. எனவே, அதனையிட்டுச் சிறிது நோக்குதல் சாலப் பொருத்தமுடைத்தாம்.

## 3. தற்போதுள்ள கல்வித்திட்டத்திலுள்ள குறைகளும் அதைத் திருத்தியமைத்தலும்

தற்போது இலங்கையின் எப்பாகத்திலும் கட்டாயக் கல்வி கற் பிக்கப்பட்டு வருகின்றது. இத்துடன் உபாத்திமைத் தொழிலுக்காய மேற்பரீக்ஷைகளும் நடைபெற்று வருகின்றன. எப்படியாயினும் இக்கல்வித்திட்டங்களெல்லாம் ஆரம்ப வகுப்புமுதல் சர்வகலாசாலைப் பரீக்ஷைவரை பாடத்திட்டங்களாற் கட்டுப்படுத்தப்பட்டனவே. இதுவே இக்கால கல்வித்திட்டத்தினுள்ள குறையாம். அஃதாவது; பாடசாலைப் படிப்பின் இறுதிக் காலத்தில் சர்வ கலாசாலைப்பட்டதாரி களாயும், உபாத்திமாராகவும் வரப் போகின்ற நாலிரண்டு மாணவர் கட்காக முழுமாணவர்களினதும் வாழ்க்கை பலியிடப்படுகின்றது. எனினும், இக்கால பாடதிட்டத்தில் வாழ்க்கைக் கல்வி சுத்தமாக இல்லை யென்று சொல்லமுடியாது. ஆயின், அதுவும் பேரளவில் மாத்திரமே இருந்து வருகிறது. உதாரணமாக, கைவேலை, நாட்டுச் சீவன சாஸ்திரம் போன்ற பாடங்கள் பேரளவில் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டிருப்பனவாகக் கருதப்பட்டாலும் உண்மையில் அப் படியில்லை யென்பதை எல்லா ஆசிரியர்களும் மாணவர்களும் அறிவார் கள். நியாயம், பரீக்ஷைகளின் கொடுமையே.

ஆகவே வாழ்க்கை நிலை சீர்ப்படுவதற்காய கல்வியும் உத்தியோ கத்திற்காய கல்வியும் ஆரம்பபாடசாலை இறுதி வகுப்புக்களிலிருந்தே தொடங்கப்பட வேண்டும். ஆயின் இறுதியில் ஒவ்வொரு பகுதியா ருக்கும் கல்வி சிறப்புவகையானமைய வேண்டும். அதிலும் வாழ்க் கையில் உபயோகப் படுகின்ற தொழிற்கல்வி ஆண் பெண் பாலார்க்கே வேறு வேறாக அமைய வேண்டும்.

அது; 1. ஆரம்பக்கல்வி 6 வருடமும்

2. A. தொழிற் கல்வி

1. ஆண்களுக்கு } 3 வருடமும்
2. பெண்களுக்கு }

B. உத்தியோகத்திற்காகிய கல்வி 5 வருடமும்

3. A. ஆசிரியபயிற்சி 2 வருடமுமாக நடைபெறலாம்.

B. சர்வகலாசாலைப் பட்டங்கள்.

## இவற்றிற்காய பாடத்திட்டம்

### 1. ஆரம்பக் கல்வி

ஆரம்பத்தில் எல்லா மாணவர்க்கும் சமமாக ஆறுவருடங்கள் வரை ஆரம்பக்கல்வி போதிக்கப்படலாம். இதில், முதல் மூன்று வருடங்கட்கும் தற்போதுள்ள முறையையே பின்பற்றலாம். அடுத்த நாலாவது வருடத்தொடக்கத்தில், இந்நாட்களில் சில வித்தியாசாலை களில் ஆங்கிலம் படிப்பிப்பது போன்று எல்லாமாணவர்க்கும் ஆங்கி லம் ஒரு பாடமாகக் கற்பிக்கவேண்டும். இத்துடன் பேச்சுப்பாடத் திலும் தொழில் முறைகளைப்பற்றிப் பேசவும் எழுதவும் அறியவேண் டும். கைவேலைப்பாடத்தில், விதைகளிலிருந்தும் பஞ்சை வேறுக்கல், நூல்நூற்றல், நூல்சுற்றல் போன்ற விஷயங்கள் படிப்பிக்கவேண்டும். ஏனெனில் பிற்காலத்தில் வரப் போகின்ற தொழிற் கல்விக்கு இளமை யிலேயே அத்திபாரம் போட்டு வைப்பது அவசியமல்லவா? இது மாத்திரமல்ல, சிறுவர் அயலில் தொழில் நடைபெறும் ஸ்தாபனங் களைச் சென்று பார்வையிடவும் வேண்டும். இப்படிச் செய்வதினால் மாணவர்கட்குத் தொழில்களைப்பற்றிய பொது அறிவும் நன்னோக்க மும் உண்டாவதுடன் ஊக்கமும் ஆசையும் ஏற்படலாம். இத்துடன் இம்மூன்று வருடங்களிலும் ஆங்கிலத்தில் 2-ம் வருடவகுப்பு (Second year)க் குரிய பாடங்கள் படிப்பிக்கப்பட்டு முடிய வேண் டும். இவருக்கு இலக்கியம் படிப்பிக்க வேண்டியதில்லை. ஆயினும், இலக்கியச்சுவை உண்டாவதற்காகக் கம்பர் காளமேகப் புலவர் போன்ற புலவர்களின் சரித்திரங்களைச் சொல்லிக் கொடுக்கவேண்டும். இலக்கணத்தில் எழுத்துக்களினிலக்கணம் படிப்பிக்கப்பட்டாற் போது மானது. ஆயினும் பிழையின்றி யெழுதவும் வாசிக்கவும் நன்றாகப் பயிற்ற வேண்டும். இவைகளேயன்றி, இளமையிலேயே தம் நாட் டின்மீது அபிமான முண்டாவதற்காக இந்து தேசத்துச் சிறந்த வீரர் களின் (தேசிங்கு, அக்பார், சோழன் செங்குட்டுவன்) சரித்திரக் கதை களையும் போதித்து வரலாம். ஆறுவது வருட முடிவில் ஆசிரியர்கள் இம்மாணவர்களைப் பரீக்ஷித்து உயர்தரக்கல்வி கற்றற்குரிய விவேகி

களை வேறாகவும் தொழிற் கல்வி கற்றற் குரியவர்களை வேறாகவும் பிரிக்க வேண்டும். இப்படிப் பிரித்தற்குரிய பரீக்ஷையை ஒரு குறிச்சியிலுள்ள பல பாடசாலைகள் ஒன்றுசேர்ந்து நடத்துவது சிறந்ததாகும். எப்படிப் பிரிக்கப்பட்டபோதினும் உத்தியோகக் கல்விக்குத் தெரியப்படுபவர்கள் முழுமாணவரின் தொகைக்கு எட்டிலொன்றுக்கு மேற்படக் கூடாது.

## 2. A. தொழிற்கல்வி.

தொழிற்கல்வி கற்பிக்கும் பாடசாலைகள் ஆரம்பக்கல்வி கற்பிக்கும் பாடசாலைகளுக்கு அயலிலேயே அமையவேண்டும். இக்கல்வி 3 வருடங்கள் வரை படிப்பித்தாற் போதுமானது. கல்வி கற்பவரில் நூற்றுக்குத் தொண்ணூறு வீதமானவர்களும் தொழிலிற் பிரவேசிக்க வேண்டி யிருத்தலினால் அவர்கள் பெரும்பாலும் பதினெட்டு வயசிலேயே தொழிலிற் றொடங்கற்கேற்ற ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். ஆயின் இக்கல்வி ஆண்பாலார்க்கும் பெண்பாலார்க்கும் வேறு வேறாக அமைவது சிறப்புடைத்து.

### 1. ஆண்கள்.

ஒரு நாளில் ஏறக்குறைய 6 பாடநேரங்களுண்டு. ஒரு பாடநேரத்தில் இலக்கண இலக்கியம் கற்பிக்கப்படவேண்டும். அதாவது வாரத்தில் 3 நாட்களுக்கு இலக்கியமும் 2 நாட்களுக்கு இலக்கணமும் படிப்பித்தாற் போதுமானது. மற்றொரு பாடநேரத்தில் இப்படியே கணிதமும் பூமிசாஸ்திரமும் படிப்பிக்கப்படலாம். இன்னொரு பாட நேரத்தில் என்றைக்கும் ஆங்கிலம் படிப்பிக்கப்படவேண்டும். எஞ்சிய 3 பாடநேரங்களில் ஒரு நேரம் தொழிலுக்குரிய விஷயங்களைப் பற்றி யறிதலும் 2 பாட நேரம் அவற்றைச் செய்கைமுறையிற் செய்தறிதற்கும் போக்கவேண்டும். ஆயின் ஊரிலுள்ள எல்லாரும் ஒரே வகைத் தொழிலைப் பழக முயற்சிக்கக்கூடாது. சாதாரணமாக ஒரு கிராமத்தில் 5 பாடசாலைகளுண்டாயின் 5 இடத்திலும் 5 வகையான தொழிலே சிறப்பாகவும் ஏனைய பொதுவாகவும் கற்பிக்கப்படவேண்டும். குறித்த குறித்த தொழில்களைப் பயில விரும்புவோர் அவ்வவற்றிற்குரிய பாடசாலைகளிற் சென்று பயிலலாம். சாதாரணமாக, கிருஷிகத் தொழில் (இதிலேயே பலவகை யுண்டு:- பழமரச்செய்கை, தானியச்செய்கை, கிழங்குச்செய்கை, பாற்பண்ணை வைத்தல், கோழிவளர்த்தல் என்பன.) நெசவு, மட்பாண்டம் வனைதல், தச்சுவேலை செய்தல், கொல்வேலை செய்தல் முதலிய பலவகைத்

தொழில்களையும் செய்யப் பழகலாம். இஃதன்றி இவர்களுட் சிலர் வியாபார முறைகளையும் கற்றுக்கொள்வது உசிதமாகும்.

## 2. பெண்கள்.

முன் ஆண்களுக்குக் கூறியபடி 3 பாடநேரத்திலும் இலக்கண இலக்கியம், கணிதம், பூமிசாஸ்திரம் ஆங்கிலம் ஆதிய பாடங்களைப் பயிற்றவேண்டும். இம்மூன்று நேரங்களிலும் இருபாலாரும் ஒன்று சேர்ந்தும் படிக்கலாம். அடுத்த 3 பாட நேரங்களிலும் முறையே தையல், சங்கீதம், வரைதல், வீட்டுப்பணியாதியவற்றைப் படிப்பிக்க வேண்டும்.

இப்படியாகப் பாடங்கள் முடிந்தபின் இருபாலாரும் அரை மணித்தியாலம் இவற்றைப்பற்றிக் கலந்து பேசவும், உற்சாகமான கதைகளைக் கேட்கவும், அரசியல் விஷயங்களை யறியவுந் தக்க வசதிகளிருக்க வேண்டும்.

## 2. B. உத்தியோகத்திற்காய கல்வி.

(சாதாரணமாக 6 மைல் தூரத்திற்கொரு பாடசாலை போதுமானது.)

உத்தியோகத்திற்காய கல்வி ஆரம்பக்கல்வி முடிந்த பின் 5 வருடங்களுக்குப் படிப்பிக்கப்படலாம். இதில் முதல் மூன்று வருடங்களிலும் தொழிற் கல்வியுஞ் சேர்த்தே படிப்பிக்கப்படுதல் சிறந்தது. இக்காலத்தில், முதல் மூன்று பாட நேரத்திலும் முறையே கணிதமும் பூமிசாஸ்திரம், நாட்டுச் சீவனசாஸ்திரம், சரித்திரம் என்னும் பாடங்களில் ஏதாவதிரண்டும், இலக்கண இலக்கியமும், மற்றிரு பாடநேரங்களில் வரைதலும் தொழிலும் (தொழில் இந்நாட்களில் நடைபெறுவதிலும் உயர்ந்த படியில்) ஆங்கிலமும் கற்பிக்கப்படலாம். இதில் பெண்களுக்கு விசேட தையலே போதுமானது. ஒரு பாட நேரத்திற்குத் தோட்டவேலை செய்விக்க வேண்டும். அப்பால் மற்றிரு வருடத்திலும் முதல் நான்கு பாட நேரத்தில் முன்னே மூன்று பாட நேரத்தில் படிப்பித்த பாடங்களையும், மற்றிரு பாட நேரத்தில் வரைதல் தொழிலையும், ஆங்கிலத்தையும் கற்பிக்கலாம். இப்படிக் கற்பிக்கப்பட்டுச் சித்தி யடைந்தவர்களையே ஆசிரியப் பயிற்சிக் கனுப்ப வேண்டும் இவ்வைந்து வருடமும் கற்றுத் தேறியவர்களை ஆங்கிலத்தில் கனிஷ்ட விடுகை வகுப்புப் (Junior School Certificate) பரீக்ஷையில் இலக்கண இலக்கியம் (Language & Literature) எடுத்துச் சித்தியடையச் செய்யவேண்டும்.

## 3. A. ஆசிரியப் பயிற்சி.

தற்போது நடைபெறுவதைப் போலல்லாமல் பாஷையிலும், தொழிலிலும், கற்பிக்கும் முறைகளிலும் விசேட ஊக்கஞ் செலுத்தப் பட்டுக் கூடிய பகுதியைக் கற்பிக்க முயற்சிசெய்யப்படவேண்டும். அஃதாவது இப்பயிற்சியை முடித்து வெளிப்படுபவர்கள் தமிழில் தற்போது பாலபண்டித பரீக்ஷையில் சித்தியடைந்தவர்களைக் காட்டிலும் கூடிய அறிவும், தொழில் தொழிற்கல்விப் பள்ளிக்கூடங்களில் படிப்பிக்கத்தக்க அளவுடன் தமக்கு வேண்டியவற்றைத் தாமே செய்து முடிக்கும் ஆற்றலும், கற்பித்தலில் இந்நாட்களிலும் விசேட முறைகளைக் கையாளத்தக்க ஆற்றலும் பெறவேண்டும். இப்படி இரண்டு வருடம் படித்து வெளிப்படுபவர்கள் ஆரம்ப பாடசாலைகளில் தலைமை யாசிரியராகவும் மற்றைய பாடசாலைகளில் உதவி யாசிரியராகவும் இருக்கலாம். தொழிற் கல்விப் பாடசாலைகளில் தலைமை யாசிரியராதற்குரியோர் முந்திய பயிற்சியுடன் இன்னுங் கூடிய விதமாக ஒரு வருடத்திற்குத் தொழிலிற் பயின்றவர்களாதல் அவசியம்.

## 3. B. சர்வகலாசாலைப் பரீக்ஷைகள்

தமிழ் வளர்ச்சிக்காகத் தமிழ்நாட்டில் தமிழிற்காகவும் சர்வகலாசாலைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். அப்படி ஏற்படுத்தப் படுகின்ற சர்வகலாசாலைகளில் மூன்று பரீக்ஷைகள் நடத்தப்படலாம். இப்பரீக்ஷைகளுக்கு, கணிதம், இலக்கியம், இலக்கணம் என்னும் மூன்று பாடங்களும் கட்டாய பாடங்களாகவும், பூமிசாஸ்திரம், சரித்திரம், மானத சாஸ்திரம், விஞ்ஞானசாஸ்திரம் என்னும் சாஸ்திர பாடங்களில் எவையேனும் இரண்டும், சம்ஸ்கிருதம், ஹிந்தி, சிங்களம் என்னும் பிறபாஷைப் பாடங்களில் ஏதாவதொன்றும் விருப்பப் படியான பாடங்களாகவும் அமையலாம். இப்பாடங்கட்காக ஆங்கிலத்திலுள்ள நல்ல நூல்கள் செந்தமிழில் மொழிபெயர்க்கப்படல் வேண்டும். முதலில் பிரவேச பரீக்ஷை நடத்தப்பட்டே வகுப்புக்களில் சேர்ந்து படிக்க அநுமதி கொடுக்கப்படல் வேண்டும். இதுவே சர்வகலாசாலை முதற் பரீக்ஷை. இவ்வகுப்பைக் கலாசாலையிலும் வைத்து நடத்தலாம். இதற்குப் பாடங்களாகத் தற்போது பால பண்டித பரீக்ஷைக்குரிய அளவில் இலக்கண இலக்கியங்களும், கணிதம் சாஸ்திரமாதிய பாடங்களும், சில பாஷைகளும் பாடங்களாக அமையலாம். இதனை ஆங்கிலத்திலுள்ள "இன்ரர் மீடியேட்" பரீக்ஷைகளோடு (Inter Seience or Inter arts) ஒப்பிடலாம்.

அடுத்த படியாக இரண்டாவது பரீக்ஷைக்குரிய பாடங்களை ஆராய்வாம். இதுவும் இதற்குமேல் பரீக்ஷையும் கட்டாயம் கலாசாலையிலேயே படித்துச் சித்தியடையவேண்டும். இதற்குப் பாடங்களாகத் தற்போது பண்டித பரீட்சைக்குரிய அளவு இலக்கண இலக்கியம், கணிதம், சாஸ்திரம், சம்ஸ்கிருதம் அல்லது மறுபாஷைகளில் ஒன்று என்பன அமையலாம். இப்பரீக்ஷையில் தேறுபவர்களுக்கு "இளந் தமிழ்ப்புலவர்" போன்ற பட்டங்க ளளிக்கப்படல் வேண்டும். இதனை ஆங்கிலத்தில் B. A. பரீக்ஷையோ டொப்பிடலாம்.

சர்வகலாசாலைக் கடைசிப்பரீக்ஷைக்கு உயர்தர இலக்கண இலக்கியமும் தருக்கம், கணிதம், சாஸ்திரம் முதலியனவும் பாடங்களாகலாம். இப்பரீக்ஷையில் சித்தியடையுங்கால், "முது தமிழ்ப்புலவர்" போன்ற பட்டங்களளிக்கப்படலாம். இது ஆங்கிலத்திலுள்ள M. A. பரீக்ஷையோ டொப்பிடத்தக்கது.

இவைகளேயன்றி ஒவ்வொரு துறையிலும் விசேட ஆராய்ச்சி செய்து நூல்க ளெழுதுவார்க்கு "டாக்டர்" (Doctor) போன்ற பட்டங்களும் வழங்கப்படலாம்.

ஆகவே மேற்கூறிய பரீக்ஷைகள் ஏதாவ தொன்றிற் சித்தியடைந்து பட்டம் பெற்றவர்களையே உத்தியோகக் கல்விப் பாடசாலைகளில் தலைமை யாசிரியராகவும், பட்டத்தோடு ஆசிரியப் பயிற்சியும் பெற்றவர்களை ஆசிரிய கலாசாலை ஆசிரியர்களாகவும் நியமிக்கலாம். இவர்களெல்லாரையும் அரசாட்சியார் ஆங்கிலத்தில் மேற்கூறிய பரீக்ஷைகளில் சித்தியடைந்தவர்களைச் சன்மானிக்குமாறு போலச் சன்மானிக்க வேண்டும்.

இப்படியாக எம் நாட்டுக் கல்வி மேலோங்கிய ஞான்று இன்னும் வேண்டிய திருத்தங்களை அறிஞர்கள் ஆராய்வார்களாக.

---

"சுயபாஷையில் பயிற்சிபெறாத ஒருவனுக்கு அந்நிய பாஷையைக் கற்பித்தல், நடக்கத்தெரியாத குழந்தைக்குத் துவிசக்கரவண்டி ஓட்டக் கற்பிப்பதை யொக்கும்".

"கொமினியஸ்"

# யாண்டு பலவாக நரையிலவாகுதல்

(ச. வேலுப்பிள்ளை)

இடம்: காடு

சோழமன்னன் வடக்கிருத்தல்

[அரசனைச் சூழ அந்நாட்டுச் சான்றோர், புலவர் முதலியோர் இருக்கின்றனர். பிசிராந்தையார் என்னும் புலவர் அரசனை அடைகின்றனர்.]

அரசன்: முத்தமிழ் வல்ல புலவீர்! தங்கள் வரவு நல்வரவாகுக.

புலவர்: மனுநீதிதவறாத அரசே! நினது செங்கோல் நெடுங்காலம் வாழ்வதாக.

அர: தாங்கள் இங்கே வர யான் செய்த தவமே தவம்.

புல: அரசே! நினதுதிருமேனிவாட்டமுற்றதற்குக்காரணம்யாதோ?

அர: புலவ! யான் அரசவாழ்வைநீத்து வடக்கிருக்க விரும்பினேன்.

ஓர் முதியோன்: புலவீர்! யான் எனது இளமைப்பொழுதிலேயே தங்களைப் பார்த்திருக்கிறேன். தற்போது யான் முதுமை யெய்தியுள்ளேன். ஆனால் தாங்கள் அற்றைநாள் தோற்றத்துடன் இன்றும் திகழ்கிறீர்கள். நரை, திரையென்பன தங்களை யணுகவில்லையே. இவற்றிற்கெல்லாம் காரணம் யாவையோ?

புலவர்: அன்புடையீர். யாண்டுபலவாகியும் நரையிலவாகுதல் யாது காரணம் என்று கேட்பீராயின் சொல்லுகிறேன் கேளும். மாட்சிமைப்பட்ட என்னுடைய மனைவியும் மக்களும் அறிவு நிரம்பினவர். என் ஏவலாளரும் யான் எதனை யெண்ணுகிறேனோ அதனையே யெண்ணிச் செய்வர். நம்மை யாளுகின்ற வேந்தனும் நீதியல்லனவற்றைச் செய்யாது காவல்புரிவான். நான் வாழுகின்ற ஊரின்கண் நற்பண்புகளிற் சிறந்து ஐம்புலன்களையு மடக்கிய கொள்கையினையுடைய சான்றோர் பலர் இருக்கின்றனர். இவர்களுடன் பல்காலும் பழகுகிறேன். இந்நன்மைகளினால் துன்பமென்பதே கிடையாது. எனவே அத்துன்பத்தாலுண்டாகும் நரையும் என்னை அணுகவில்லை.

> "யாண்டு பலவாக நரையில வாகுதல்
> யாங்கா கியரென வினவுதி ராயின்
> மாண்டவென் மனைவியொடு மக்களும் நிரம்பினர்
> யான்கண் டனையர் என்னிளையரும் வேந்தனும்
> அல்லவை செய்யான் காக்கும் அதன்றலை
> ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
> சான்றோர் பலர்யான் வாழு மூரே."

# பாடசாலையும் தேகப்பயிற்சியும்

(சே. ஐயாத்துரை)

## 1. பாடசாலைகளில் தேகப்பயிற்சியி னவசியம்

பாடசாலைகள் அறிவைமாத்திரம் வளர்ப்பதன்றி உடலையும் ஒழுக்கத்தையும் வளர்ப்பனவா யிருக்கவேண்டும். இம்மூன்றும் மிகத் தொடர்புடையவா யிருத்தலால் தேகப்பயிற்சியில் அதிக கவன மெடுக்காதவிடத்து மற்றைய இரண்டிற்கும் தடை யேற்படும். இத் துணைச் சிறந்த தேகாப்பியாசத்தின் பிரதான அம்சங்களைப்பற்றிச் சிறிது ஆராய்வாம்.

பிள்ளையின் உள வளர்ச்சி அவன் தேக வளர்ச்சியையே அத்தி வாரமாகக் கொண்டது. பிள்ளையின் பெலக்குறைவு அறிவைக் குறைப்பதுமன்றி புது அறிவு வளர்ச்சியையுந் தடைசெய்யும். ஆத லால் பள்ளிக்கூடங்களில் தேகப்பயிற்சி செய்வதன் நோக்கம் தேகத்தை வளர்த்துச் சுகமாகவும் பெலனுகவு மிருக்கச் செய்வது மன்றி உளவளர்ச்சிக்கும் நல்லொழுக்க விருத்திக்கும் உதவிசெய்வ தாயு மிருக்கவேண்டும். தேகாப்பியாசம் உடலை வளர்ப்பதன்றி பிழையான தேகநிலையைத் திருத்தி மீண்டும் பிழைவாராமற் தடுக்கும். தேகப்பயிற்சி அறிவுவளர்ச்சியில் ஒழுங்கைப் பயிற்றுவதன்றிக் கீழ்ப் படிவையும் கட்டளையை மேற்கொள்ளுந் தன்மையையும் சுய அடக் கத்தையும் வளர்க்கும். மேற்கூறிய நன்மைகளைக் கொடுப்பதன்றி ஒருவனை மற்றவர்களுடன் ஒற்றுமையுடன் சேர்ந்த சந்தோஷமான உலகசீவியத்தி லீடுபடவுஞ் செய்கிறது. பெரும்பாலான பள்ளிக் கூடங்களில் போதியவளவு தேகாப்பியாசம் செய்வதற்குஏற்ற வசதி யில்லாதிருத்தல் யாவரு மறிந்ததே. தேகப் பயிற்சியைக் கற்பித் தற்கு அதில் திறமைவாய்ந்த ஆசிரியரும் விளையாட்டுக் களரிகளும் போதிய இடவசதிகளும் நீந்துவதற்கேற்ற தொட்டியும் அவசியம் வேண்டப்படுவன. எப்படியிருந்தாலும் ஒவ்வொரு பள்ளிக்கூடத் திலு மிவை இயன்றவளவு கற்பிக்கப்படவேண்டும்.

## 2. தேகாப்பியாசத்தி லடங்கியுள்ளன

சிரமப்பயிற்சி (Drill), விளையாட்டு (Games), மல்யுத்தம், நீந்துதல், நாட்டியமாடல் என்பனவும் தேகத்தை வளர்க்கும் மற்

றைய எவையும் தேகாப்பியாசமென்பதில் அடங்கும். தேக வளர்ச்சியில் பூரணமடைய இவற்றில் ஒன்றைமாத்திரம் மேற்கொள்ளல் போதியதன்று. ஒவ்வொன்றும் ஒவ்வொரு பகுதியைமாத்திரம் வளர்க்கும். ஆதலால் ஒவ்வொன்றையும் மற்றவற்றோடு தொடர்பு படுத்தி விளையாடவேண்டும். ஒழுங்கான சிரமப்பயிற்சி தேகத்திற்குச் சில நன்மைகளையே செய்யும். விளையாட்டுக்களில் உடனுக்குடன் தேகநன்மையைக் காண முடியாது. ஒவ்வொரு விளையாட்டும் தேகத்தின் ஒவ்வொரு உறுப்புக்களைமாத்திரம் வளர்க்கும். இதனால் மற்றைய உறுப்புக்களிலும் சில உறுப்புக்களை வீதத்தில் கூட்டிவிடுவதால் சிரமப்பயிற்சியும் விளையாட்டுக்களுடன் செய்யப்படவேண்டும். விளையாட்டுகள் தேகத்தை வளர்ப்பதுமல்லாமல் மன வளர்ச்சிக்கும் அதிக உதவி செய்வதனால் அவற்றை ஒவ்வொருவரும் மேற்கொள்ளல் இன்றியமையாதது.

3. தேகத்தின் சரியான நிலை

தேகம் சரியானநிலை யடைதற்குத் தசைநார்கள் சரியாக வளர்க்கப்பட்டும் பயிற்றப்பட்டு மிருக்கவேண்டும். அப்படி வைத்திருப்பதே தேகத்திற்கு இயற்கையான நிலையையும் களைப்பற்ற நிலையையுங் கொடுக்கும். இந்நிலையில் சொற்ப சக்தியுடன் அதிகமான மன வேலையையும் தேகவேலையையுஞ் செய்யலாம். ஒழுங்கற்ற நிலையிலிருந்து வேலை செய்வது ஒரு இயந்திரத்தினுறுப்புகள் அதிக முரண்பட்டுச் சிறு வேலையைச் செய்ய அதிகம் சக்தியை நாடிநிற்பதை யொக்கும். பிழையான நிலையினால் களைப்பும் களைப்பினால் பிழையான நிலையு முண்டாகும். விளையாடும்போதுமாத்திரமன்றி மற்றைய நேரங்களிலும் தேக நிலை கவனிக்கப்படவேண்டும். பாடசாலைகளில் பாடநேரங்களைக் குறைத்து இரத்தோட்டத்தையும் சுவாசத்தையும் அதிகரித்தற்கு ஏற்றவிதமான வேலைகளை மாறி மாறி அமைக்கவேண்டும். இப்படிச் செய்வதற்குத் தேகாப்பியாசத்தில் அதிகம் திறமைவாய்ந்த ஆசிரியர் தேவையில்லை. மாணவர் தங்கள் வகுப்பறையிலே நின்று அப்பியாசங்களை அதிகமுறை உற்சாகமாகச் செய்யவேண்டும். அப்பொழுது ஜன்னல்கள் திறக்கப்பட்டிருக்கவேண்டும்.

4. ஒழுங்கான சிரமப் பயிற்சி

தேகத்தை ஒரே அளவாய் வளர்ப்பது அவசியம் வேண்டற்பாலது. தேகத்தை வளர்க்கும் மற்றை விளையாட்டுக்களுக்கும் பேசி

களைத் தன்வசப்படுத்துவதற்கும், பெலனை எற்றவிதமாய் உபயோகிப்பதற்கும் இதுவே முதல்தரமானது—அதிக வேலை செய்யும் போது இருதயத்துடிப்பு அதிகமாக இராவண்ணம் செய்வதற்குச் சிரமப்பயிற்சி உதவியானது. சிரமப்பயிற்சி இரத்தாசயத்துடிப்பை மட்டாகக் கூட்டிச்செல்ல உதவும். இதனால் பெலவீனர்களையும் வருத்தமானவர்களையும் விளையாட்டுக்களில் ஈடுபடுத்தற்கு உதவி செய்யும். இதனை ஒவ்வொருநாளும் ஒழுங்காக நடாத்திவந்தால் தான் இதன் நன்மையை அடையலாம்.

5. விளையாட்டுக்கள்

விளையாட்டிற்குத் தேவையான பொருட்கள் பாடசாலையிலேயே குறைவின்றி யிருக்கவேண்டும். பிள்ளைகள் விளையாட்டில் திறமை யடையாவிட்டால் அஃது அவர்களை அவ்விளையாட்டின் விருப்பத்தைக் குறைக்கும். இதனால் அதன் நன்மையுங் குறையும். பிள்ளையின் வயதிற்குத் தக்கதாயும் தகுதிக்குத் தக்கதாயும் விளையாட்டுகளமையவேண்டும். நல்ல திறமை யடையவேண்டின் விளையாட்டுகளைப் பிரித்துச் சுகமானதிலிருந்து கஷ்டமானவற்றிற்குச் செல்ல வேண்டும். கெட்டித்தனமும் ஒற்றுமையு மமைந்தபின்பே கிறிக்கற், கைப்பந்து, உதைபந்து முதலிய பெரிய ஆட்டங்களைத் தொடங்க வேண்டும். ஒற்றுமையை உண்டாக்கும் இவ்விளையாடல்கட்குப் போதிய இடவசதி இல்லாவிட்டால், ஒற்றுமை யுண்டாக்கக்கூடிய சுதேச விளையாட்டுக்களை விளையாடலாம். விளையாட்டுகள் அறிவு சம்பந்தமான உண்மையையும் ஒற்றுமையையும் வெற்றி தோல்விகளை ஒரே அளவாக மதிக்கும் தன்மையையும் உண்டாக்கும். உபாத்தியாயரும் சேர்ந்து விளையாடுதல் பிள்ளைகட்கு அதிக ஊக்கத்தைக் கொடுக்கும். இவ்விளையாட்டுக்களின் நோக்கம் பாடசாலை மாணவர் எல்லாரையும் நன்மையடையச்செய்வதே. மாணவர்களைக் கூட்டமாய்ப் பிரித்துவிடுவதால் ஒவ்வொருவரும் தங்கள் திறமையைக் காட்ட முயற்சிப்பர். இதனால் பிள்ளைகளைக் கூட்டங் கூட்டமாய்ப் பிரித்துவிடுதல் நன்று. பள்ளிக்கூடங்கட்கிடையில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவும் வேண்டும்.

6. நீந்தல்

பிள்ளைகளை நிலவிளையாட்டிலன்றி நீர் விளையாட்டுக்களிலும் திறமையடையச் செய்வது ஆசிரியர் கடனாகும். எல்லோரும் நீந்த அறிந்திருத்தல் வேண்டும். பிரதானமாகத் தீவுப்பகுதிகளில் இருக்

கும் பிள்ளைகட்கு நீந்துதல் அத்தியாவசியகம் கற்பிக்கப்பட வேண்டும். இதனுற் கடற்பிரயாண விருப்பமுண்டாகும். நீந்துதலால் தேகத்தின் எல்லா உறுப்புக்களும் வளர்ச்சியடையும்.

7. கூத்தாடுதல்

இராகத்திற்கும் தாளத்திற்கும் அமையத் தேகத்தின் சுய அசைவே ஆடல் எனப்படும். இது புலப்பயிற்சியையும் தேகவளர்ச்சியையும் ஒருங்கே விருத்தி செய்யும் தன்மையது. இதைப்படிப்பிக்குமாசிரியர் இராகத்திலும் அதற்கேற்ற ஆட்டத்திலும் போதிய பயிற்சியுள்ளவராக விருக்கவேண்டும். இப்படியமையாவிடின் ஒடி விளையாட்டில் மாணவர் அலட்சியங் கொண்டு அதன்பயனை யடையாது விடுவர். காலைமாத்திரமசைப்பதன்றி உடம்பின் எல்லா உறுப்புக்களையும் ஒருங்கே சம அளவாக அசைப்பதே, ஏற்ற நடிப்பாகும். இவ்வித நடிப்பு மனத்தினுலும் விவேகத்தாலும் மற்றை உறுப்புக்களை இயக்கக்கூடியதாயும், இரசிக சமுதாய அறிவுப் பயிற்சியையும் கொடுக்கக்கூடியதாயும் இருக்கும். இவ்விளையாட்டைப் புழுதியற்ற பசுந்தரைபோன்ற விடத்தில் விளையாடவேண்டும். பிள்ளை தன் சுயேச்சைப்படி ஓடி நடமாடும்போதே நடிப்புக்கு ஏற்றவனுகின்றுன். சுதேசநாட்டியங்கள் இருபாலார்க்கும் பொதுவானவைபாய் அமைந்துள்ளன. எனவே இந்நாட்டியங்களை ஆண் பெண் என்னும் இருபாலாரும் சேர்ந்து மனவித்தியாசமின்றி நடிப்பதால் இருபாலாருக்குமிடையில் ஒருவித பரஸ்பர உணர்ச்சி உதிக்கும். நாட்டியத்தால் நன்மையுண்டாகா தென்பாரு முளர்.

8. உடை

விளையாட்டிற்கு ஏற்ற உடையின்மையால் விளையாட்டில் தடையுண்டாகும். ஒவ்வோர் ஆட்டத்திற்குமேற்ற உடைகளை அணிந்து விளையாடவேண்டும். உடை பொதுவாகக் குறைவாயிருக்கவேண்டும்.

9. தகுதியற்ற மாணவரை அறியும் முறை

பிள்ளைகளால் சாதாரணமாய் விளையாடக்கூடிய விளையாட்டுக்களை எவன் விளையாட முடியா திருக்கின்றுனே அவன் தகுதியற்றவன் என்பதை ஆசிரியர் அறியவேண்டும். அன்றியும் விளையாட்டின்பின் அதிக களைப்படைபவனும், மூச்சுவிடுவதில் கஷ்டப்படுபவனும் விளையாட்டிற் குறைந்தவனென்று அறியவேண்டும். அவர்களை வைத்தியருக்குக் காட்டி அவர்களின் சிபார்சைப் பெறும்வரையும்

அவ்விளையாட்டிற் பங்குபற்ற விடக்கூடாது. வளர்ந்த பெண்பிள்ளைகள் பெண் ஆசிரியராலும், வளர்ந்த ஆண்கள் ஆண் உபாத்தியாயராலும் கற்பிக்கப்படவேண்டும். தேகநிலை குறைந்த பிள்ளைகட்கு விளையாட்டோடு கூடிய சிரமப்பயிற்சி கொடுக்கவேண்டும். இவர்களை அதிகநேரம் வெளியான இடத்தில் உலாவ விடவேண்டும். இங்ஙனஞ் செய்வதால் இவர்கள் தகுந்த தேக அமைப்பை விரைவிலடைவர்.

---

துய்ய தென்கதி ரைப்பதி வேலவர்
சூரை வெல்லத் தொடங்கிய போது
அய்ய மாக வெருண்டோடிக் கானில்
அடைந்து போனதொ ராயிரங் காளை
வைய மீது கவிப்புல வோர்க்கும்
மறைவல் லோர்க்குமீ ராயிரங் காளை
கையி ராறுடை யானையன் துய்யன்முக்
கண்ண னேறெனக் காளையொன் றுண்டாண்டே.

[க. ம. ப: செய். 70]

---

வெற்றி சேர்கதி ரைக்கும ரேசர்க்கு
வேத நூற்படி கோவி லுண்டாக்க
உற்ற போது நிலம்பரி சோதிக்க
உழுது தேய்ந்த தொராயிர கோடி
மற்ற தெல்லாம் வயலுழும் போதினில்
மாணிக்கம் பட்டுத் தேய்ந்தன போக
அற்பு தன்னறு மாமுகன் மாதுலன்
அண்ணன் பாலொர் கலப்பையுண் டாண்டே.

[க. ம. ப: செய். 71]

# திருக்குறள் விகடம்

(த. சுப்பிரமணியம்)

ஒருநாள் ஒரு வழிப்போக்கன் தான் உடன் கொண்டு சென்ற ஆகாரத்தை, ஒரு தடாகக்கரையிலுள்ள மாநிழலில் இருந்து உண்ணத் தொடங்கினன். அப்பொழுது அவ்வழியே வந்த மற்றொரு வழிப்போக்கன் அவ்வுணவிற் சிறிது பெற விரும்பி, அவனைப் பார்த்து,

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று"

என்று கூறிவிட்டுப் பக்கத்தே உட்கார்ந்தான். உடனே முந்திய வழிப்போக்கன் ஒரு இலையை அவன் முன்னிலையில் இட்டு ஒரு சோற்றவிழை அதில் தெறித்துத்

"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன் றெரிவார்"

என்று கூறி விட்டு அப்பால் தன் காரியத்தை நடாத்தினன்.

*　　*　　*　　*

ஒரு குருவிற்குப் பத்துச் சீடப்பிள்ளைகளிருந்தனர். ஒரு நாட் சீஷர்கள் குருவை வணங்கி ஐயா! இவ்வுலகத்தே;

"மனத்தது மாசாக மாண்டார் நீராடி
மறைந் தொழுகு மாந்தர் பலர்"

இருக்கின்றனரே. இவர்களால் உலகம் பாழடைந்துபோமே. இவர்களை யாம் பிரித்தறிவ தெங்ஙனம்? என்று கேட்டனர். குரு சீடர்களைப்பார்த்துச் சீடர்களே!

"கணை கொடிது யாழ்கோடு செவ்விதாங்கன்ன
வினைபடு பாலாற் கொளல்" என்றார்.

*　　*　　*　　*

செம்படவ னொருவன் மீன் பறியுடன் வீதியிலே நடந்துபோவதையும்; பறிக்குளிருக்கும் மீன்கள் துடித் தெழுந்து விழுந்ததையையுங் கண்ட தாவரபோசனி யொருவன்; ஐயையோ!

"அவி சொரிந்தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர் செகுத்துண்ணாமை நன்று"

என வேதங்களிலும் கூறப்பட்டிருக்கின்றதே. இப்படி யெல்லாம் நீ செய்தல் நன்றல்லவே யெனக் கூறினன். இதைக்கேட்ட செம்படவன்;

"தினற பொருட்டாற் கொல்லாதுல கெனின்யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவா ரில்"

என, விடைகூறிவிட்டு அப்பாற் சென்றான்.

# சதுரங்கத்தின் கல்விப்பயன்

## EDUCATIVE VALUE OF CHESS

(சே. சரவணமுத்து)

### இது பள்ளிக்கூடங்களில் போதிக்கப்படவேண்டுமா?

சதுரங்க விளையாட்டை யறியாதவர்களுக்கு இது கற்பித்தலில் எவ்வாறு பயன்படுகின்றதென்று மிகவும் திகைப்புண்டாக்கும். தேக அபிவிர்த்தி சம்பந்தமற்ற விளையாட்டு கற்றலிற் பயன்படுமோவென் றாராய்வது நூதனமாயிருக்கும். இக்காலத்தில் இது போதனையிற் பயன்படத்தக்கதென்பது ஐரோப்பாவிலுள்ள நாடுகளிலும் ஐக்கிய மாகாணங்களிலும் உணரப்படுகின்றது.

ருஷியாவே சதுரங்கபோதனையை முதன்முதல் ஆரம்பித்த நாடெனலாம். 1925-ம் ஆண்டில் ருஷியாவின் மத்திய சதுரங்க சங்கம் 223 சங்கங்களைத் தாபித்து ஏறக்குறைய 7000 அங்கத்தவர்களுக்கு இவ்விளையாட்டைப்பற்றி அக்காலத்திருந்த பிரபல மேதாவிகளைக்கொண்டு போதிப்பித்துவந்தது. இப்படிப் போதிக்கப்பட்டவர்கள் யாவரையும் ருஷியாவிலுள்ள பள்ளிக்கூடங்களில் இவ்விளையாட்டைப் போதிப்பதற்காக அமர்த்தினார்கள். இக்காலத்தில் ஆங்குள்ள வித்தியாசாலைகளில் இது ஒரு கட்டாய பாடமாகப் போதிக்கப்பட்டு வருகின்றது. இப்பொழுது அச்சதுரங்க சங்கத்தின் ஆதரவின்கீழ் ஆயிரக்கணக்கான சனங்களும் இலட்சக்கணக்கான சனங்களும் அங்கத்தவர்களு மிருக்கிறார்கள்.

சென்ற சில ஆண்டுகள் தொடக்கமாக ஜேர்மனியிலுள்ள உயர்தர பாடசாலைகளில் இது ஒரு விசேட பாடமாகப் போதிக்கப்பட்டு வருகின்றது. இதைப் பயிலும் மாணவர்கள் யாவரும் அச்சதுரங்கம் விளையாடும் பலகைகளைத் தங்களுடைய ஏனைய புஸ்தகங்களுடன் கொண்டு செல்கின்றார்கள். இதைப்பற்றி ஸ்றோபெக் என்னும் ஆசிரியர் பின்வருமாறு கூறுகின்றார்: "ஒவ்வொருவரும் இவ்விளையாட்டில் பங்குபற்றுகிறார்கள்; ஏராளமான சனங்கள் ஜேர்மனியில் இது விளையாடு மிடங்களைத் தரிசிக்கின்றார்கள்; காரண மென்னவென்றால் இவ்விளையாட்டின்மேலுள்ள நாட்டமே இவர்களை இப்படிச் செய்கின்றது".

இங்கிலாந்திலே இவ்விளையாட்டு போதனு விஷயமாகவும் சமுக முன்னேற்றத்திற்குரிய விஷயமாகவும் கருதப்பட்டு வருகின்றது. ஐரோப்பாவிலுள்ள ஏனைய தேசத்திலுள்ளவர்களும் இந்த நவீன விளையாட்டில் ஈடுபடுகின்ருர்கள். ஜெனிவாவிலே கூடிய 6ம் தொழிலாளர் மகாநாட்டிலே எல்லாத் தொழிலாளர்களும் சதுரங்கவிளையாட்டில் பங்கு பெறவேண்டுமென்றும் அப்படிப் பங்குபற்றுவதினுல் தங்கள் சமுகம் முன்னேறுமென்றும் அம்மகாநாட்டிலே குறிப்பிட்டார்கள்.

இதனை விளையாடப் பயிற்றுவது தருக்கசம்பந்தமாக நினைப்பதில் விசேட பயிற்சியைக் கொடுக்கின்றது. இதனை விளையாடுவதினுல் ஒருவன் யோசிக்கத் தூண்டப்படுகின்ருன். அது அவனை எப்பொழுதும் ஆயத்தமுடையவனு யிருக்கச் செய்கின்றது. ஏனென்ருல் அவனுடைய எதிரி அக்கட்டைகளை யாக்குந்தோறும் தானும் அக்கட்டைகளைத் தடுப்பதற்குரிய ஆயத்தத்தோ டிருத்தல்வேண்டும். இன்னும் பொறுமையோடு தன் முறை வருமளவும் பொறுத்திருத்தல் வேண்டும். "சீவிக்கும் காலம்" (Living Age) என்னும் பத்திரிகை சதுரங்கத்தைப்பற்றிப் பின்வருமாறு கூறுகின்றது: "மானத சம்பந்தமாகப் பயிற்சி கொடுப்பதினுல் இது ஒரு போதனுசம்பந்தமான விளையாட்டெனலாம்".

இது தர்க்க அறிவையும் கற்பனுசக்திவிருத்தியையு முண்டாக்குவதினுல் இவ்விளையாட்டிற் போதிய வல்லப முடையவர்கள் பெரிய அறிவாளிகளாகக் கருதப்பட்டுவருகின்ருர்கள். சூதுவிளையாட்டுகள் யாவற்றிற்கும் இது ஒரு மாற்றுமருந்தாகுமென்று ஒரு பத்திரிகை கூறுகின்றது. இது உண்மையே. ஏனென்ருல் சூதுவிளையாட்டில் காணப்படும் 'அதிர்ஷ்டம் என்பது இவ்விளையாட்டில் எள்ளளவும் இடம்பெருது. ஆகவே இது ஒருவனின் அதிர்ஷ்டத்தைப் பொறுத்ததன்று. ஒருவனின் விவேகத்தையே பொறுத்தது. எனவே சூதாட்டத்தில் வெறிகொண்டவர்களுக்கு இது ஒரு மாற்றுமருந்தாகும்.

இது இக்காலத்தில் தொடங்கிய ஒரு விளையாட்டன்று. இது பல நூற்றுண்டுகளுக்குமுன் னிருந்த அரசர்களாலும், பிரபுக்களாலும், பொதுஜனங்களாலும் விளையாடப்பட்டு வந்தது. "எங்களுக்குத் தெரிந்த விளையாட்டுகளில் இதுவே மிகவும் பழையது இது எங்கள் காலம்வரைக்கும் உயிரோ டிருந்துவிட்டது. முன்னேற்ற

முடைய சாதியார்களால் விளையாடப்பட்டு வருகின்றது. இது பிற் காலத்தில் போதிய ஆதாரவைப் பெறும்'' என்று டாக்டர் லஸ்கர் கூறுகின்றார்.

ஆகவே இதைப் பள்ளிக்கூடங்களிலும் விசேடமாக உயர்தர பள்ளிக்கூடங்களிலும் பயிற்றுவதற்குரிய ஆசிரியர்களைக்கொண்டு மாணவர்களுக்குப் பயிற்றி அவர்களின் கற்பனைசக்தியையும், தர்க்க அறிவையும், பொறுமை முதலிய நற்குணங்கள் யாவற்றையும் விருத்திசெய்தல் வேண்டும்.

---

''இயற்கை தனது தொழிலை நடத்திக்கொண்டு போவதில் மயக்கமடைவதில்லை. அது தன் வளர்ச்சியில் ஒவ்வொரு அம்சமும் தெளிவாகத் தோற்றுமாறு வளர்ந்துகொண்டுபோகும்.


உதாரணம், ஒரு பட்சி உண்டாகும்போது அதன் எலும்பு இரத்தக் குழாய்கள் நரம்பு மண்டலங்கள் என்பன வேறு வேறான காலங்களி லுண்டாக்கப்படுகின்றன.

இவ்விதியைப் பின்பற்றியே ஒரு மேஸ்திரி ஒரு கட்டிட அத்திவாரம் இட்ட அதே நேரத்தில் சுவர்களையும் எழுப்புகின்றானில்லை; கூரையையும் வேய்கின்றானில்லை; ஆனால் அக்கட்டிடத்திற்குரிய ஒவ்வொரு செயலையும், அதற்கேற்ற காலத்தையும், இடத்தையும் நோக்கிச் செய்வான்.


ஆசிரியர் இவ்விதிக்கு மாறாகப் போய்ப் பள்ளிக்கூடங்களில் பல விஷயங்களை ஒரே நேரத்தில் பிள்ளைகளுக்குப் புகட்டுவதினால் மயக்கங்கள் ஏற்படுகின்றன. இவை உண்டாகாமல் தடுப்பதற்கு மாணவர் ஒரு குறித்த நேரத்தில் கற்றலுக்குரிய ஒரே யொரு விஷயத்தில் ஈடுபடத்தக்கதாகப் பள்ளிக்கூடங்கள் நடத்தப்பட வேண்டும்''.

''கொமினியஸ்''


## விசேஷ சித்தி அடைந்த மாணவர்கள்



பண்டிதர் ப. சிவானந்தையர்
(மதுரைப் பண்டித பரீக்ஷை)
1935.



பண்டிதர் சு. ஏரம்பு
(கொழும்பு விவேகானந்த
சபை சைவ சித்தாந்தப்
பண்டித பரீக்ஷை)
1935.



திரு. பொ. சின்னத்துரை
(கொ.வி.சபை.சை.சி.
பாலபண்டிதர் பரீக்ஷை தங்கப்
பதக்கம் பெற்றவர்)
1935.

# தமிழ்

(அ. சோமசுந்தரஐயர்)

நேரிசை ஆசிரியப்பா

தன்னே ரில்லாத் தமிழெனும் பாவாய்
நின்னேர் தன்னை நீணிலத் தறைவேன்
நீரில் நிலைத்தனை நெருப்பில் நின்றனை
பாரில் மலயப் பெருங்கலிற் பிறந்து
தென்ற லுடனே தெளிவுற விளங்குவை
மன்றன் மணாளன் தென்றிசை யாடி
வந்த தன்மையு நின்னை வேண்டியே
நந்தலி லமிழ்தே நாமிசைப் பாவாய்
வள்ளுவன் முதலா வல்லோர் புலவரைக்
கொள்கவிம் மண்ணெனக் கொடுத்து வைத்தனை
இன்னுங் கேளாயுன் பெருமக் களாய்த்
துன்னிய துளுவும் தூய தெலுங்கும்
கன்னிமலை யாள மென்னும் மொழியும்
கன்னடர் மொழியுங் கவினுறத் தந்தாய்
என்னை பெருமை சொன்னலம் பொருணலம்
தன்னே ரில்லாப் பூணெனப் பூண்ட
நின்கழ லேத்துவ தல்ல
திசைத்த னென்னுவுக் கடங்குவ தெவனே

# திருவள்ளுவர்

நேரிசை ஆசிரியப்பா

மலர்தலை யுலகின் மன்னுயிர்க் கெல்லா
முலைவற நின்று முண்மை விளக்கியுஞ்
செய்வதுந் தவிர்வது முறுவது மெல்லா
முய்வகை நாடி யோதிய நூல்களுள்
ஆதிசீர் பரவு மாரண மொழியோ
பேதியா வதன் காரண மொழியோ

வெண்ணில் சீர்த்தித் தொல்காப் பியமோ
பண்ணருஞ் சிறப்பிற் பஞ்சகா வியமோ
வொத்த புலன்களை மெச்சத் தொகுத்த
பத்துப் பாட்டோ எட்டுத் தொகையோ
பதினெண் கீழ்க் டவிர்ந்தவை தாமோ
விதிமுறை நாட வெழில்நலம் பெற்று
பாதி மாதுடைப் பரமன் முதலா
வேதி னுவலோ ரெண்ணி யளித்த
கோதின் மாலை கொண்டு குலாவித்
திருக்குறள் முப்பால் திருவள் ளுவர்பயன்
திருவள் ளுவரெனும் தெய்வநூல் வைப்பு
பொதுமறை பொருளுரை பொய்யா மொழியொடு
முதுமறை முதலாப் பல்வேறு பெயருந்
தெருளுறு நவமாந் தெளிவுக ளுடைய
திருவாங் குறளைத் தெய்வம் மெச்ச
வுலகுக் கருளிய வுத்தம குணத்தோய்
பல்கலை யுதவும் பான்மைசேர் மதுரை
திருப்பதி தானோ திருமா மயிலையோ
வுருக்கொள வுன்னை யுதவிய மூதூர்
தெய்வச் சமயமாஞ் சிவநெறி தானோ
யாதோ சமயம் யாதோ வுறுபொரு(ள்)
ஏதென விளம்பாய் பொதுமறை யருளிய
புண்ணிய சீல! உன்னைப் பெற்று
வுண்மகிழ்ந் திருந்த வுத்தமப் புலவோ
ரெங்ஙனம் பிரிந்தனர் எதுசெய் திருந்தனர்
நன்மைசேர் நாளி னுங்க ளுவப்ப
வுய்தி யருளு முவப்பொடு நாடி
யெய்தவந் தருளனு மியைவ தாமோ!
பெருநா வலனே பெரிய
திருநா டதனின் செய்தவ மென்னே.

# மாதிரி விவேகப் பரீட்சைகள்

## SAMPLE TESTS OF INTELLIGENCE

(அ. குமாரசுவாமி)

மேலைத்தேசத்துப் பண்டிதர்கள் விவேகத்தை அளந்தறிதற் பொருட்டு வெவ்வேறு வயதுக்கேற்ற விவேகப் பரீக்ஷைகளை அமைத்திருக்கின்றார்கள். ஒவ்வொரு வயதுக்கும் பல தொகுப்புக்களுண்டு. இக்கட்டுரையில் மூன்றும் வயது தொடக்கம் பதினைன்காம்வய தீறாக ஒவ்வொரு வயதுக்கும் ஒவ்வொரு தொகுப்பும் வளர்ந்தவர்களுக்கு ஒரு தொகுப்பும் காட்டப்படும்.

### III-ம் பிராயம்

பரீக்ஷை படங்களிலுள்ள பொருட்களைத் தொகுத்தல்

நடாத்தும் முறை ஆற்றுக்காட்சி, தபாற்கந்தோர் என்பவற்றைக் குறிக்கும் படங்களை எடுத்து "நான் அழகான படங்கள் காட்டுவேன், அவற்றில் என்னவுண்டு என்பதை நீங்கள் பார்த்துச் சொல்ல வேண்டும்" என்று மாணவர்களை ஊக்கப்படுத்தி படங்களைத் தனித்தனி காட்டவேண்டும். அவர்கள் விடை கொடுப்பதற்கு முடியாமற் கஷ்டப்பட்டால், "படத்தைப் பார்த்து அதிற் காணக்கூடிய யாவற்றையும் கூறுங்கள்" என்று கேட்கவேண்டும். விடைபெறுவதற்கு இன்னும் முடியாவிட்டால், படத்திலுள்ள சில பொருட்களைச் சொல்லி அவற்றைக் காட்டும்படி விடவேண்டும். இவ்வித வினா ஒன்றுமாத்திரம் கேட்கலாம். இப்படியிற் பிள்ளைகள் பொருட்களைக் காட்டினால் அவர்களை ஊக்கப்படுத்தி படத்திலுள்ள மற்றைய பொருட்களைச் சொல்லும்படி கேட்கவேண்டும். அவர்கள் ஒன்றல்லது இரண்டு பொருட்களின் பெயர்களை மாத்திரம் சொன்னால் ஏனையவற்றின் பெயர்களையும் பெற முயற்சிக்கவேண்டும்.

சித்தி ஒவ்வொரு படத்திலும் மும்மூன்று பொருட்களுக்கு மிகுதியாகக் கூறக்கூடியதா யிருந்தாற் பரீக்ஷை சித்தியாய் முடிந்ததெனலாம்.

நோக்கமும் அபிப்பிராயமும் இந்தப் பிராயத்தில் இந்தப் பரீக்ஷையின் நோக்கம் பூரணமாக அறியப்பட்ட பொருட்களின் பெயர்களைப் படத்திற் கண்டமாத்திரத்தே நினைவுகூரச்செய்தல். இன்னும் இப்பிராயத்தார்க்குச் சரீரத்தின் அங்கங்களைச் சொன்ன மாத்திரத்தே அவற்றைக் காட்டச் செய்தலும் அவர்களுடன் தொடர்புடைய பொருட்களைக் காட்டி அவற்றின் பெயரைச் சொல்லச் செய்தலும், ஆறு அல்லது ஏழு சீர்களைத் திருப்பிச் சொல்லச் செய்தலும், மூன்று எண்களைச் சொன்ன முறைப்படி திருப்பிச் சொல்லச்செய்தலும் ஏற்ற பரீக்ஷைகளாம்.

## IV-ம் பிராயம்.

பரீக்ஷை கிரகிக்கும் சக்தியில் முதலாம் படி.

நடாத்தும் முறை பிள்ளையின் மனத்தை ஒருவழிப்படுத்தி (i) நித்திரைத்தூக்க மேற்படின் என்ன செய்வாய்? (ii) குளிராயிருந்தால் என்ன செய்வாய்? (iii) பசியாயிருந்தால் என்ன செய்வாய்? என்ற வினாக்களைத் தனித்தனி கேட்கவேண்டும். அவசிய மேற்படின் வினாக்களைத் திருப்பிச் சொல்லலாம். ஒவ்வொரு வினாவிற்கும் இருபது செக்கன்வரை நேரம் கொடுத்து விடையைக் கேட்கவேண்டும்.

சித்தி மூன்று வினாக்களுள் இரண்டிற்குத் திருப்தியான விடை பெற்றாற் பரீக்ஷை சித்தியாய் முடிந்ததெனலாம். இவற்றிற்கு விடை ஒரேமாதிரித்தான் இருக்கவேண்டுமென்ற நியதியில்லை. முதலாவதற்கு: படுத்துக்கொள்வேன், நித்திரைகொள்வேன், என் தாயாரைப் படுக்கை விரிக்கச்செய்வேன், சத்தமிடாது படுத்துக்கொள்வேன் என்பனவும்; இரண்டாவதற்கு: போர்வையால் மூடிக்கொள்வேன், நெருப்புச்சட்டி தயார்செய்வேன் என்பனவும்; மூன்றாவதற்கு: ஏதும் சாப்பிடுவேன், பால் குடிப்பேன், தாயாரை அப்பம் தரும்படி கேட்பேன் என்பனவும் பிறவும் ஏற்ற விடைகளாகும். இவற்றிற்குச் சாதாரணமாகக் கொடுக்கப்படும் பிழையான விடை "அழவேண்டும்" என்பதே.

நோக்கமும் அபிப்பிராயமும் பிள்ளை இங்கிலைபரங்களைச் சிந்தித்து ஏற்ற விடைகளைக் கொடுக்கச்செய்தலே இப்பரீக்ஷையின் நோக்கம். இதிற் பாஷையை விளங்கிக்கொள்ளும் வன்மை முதல் வேண்டப்படும். இரண்டாவதாக அங்கிலைபரங்களை எவ்வாறு பூரணமாக்கிக்கொள்ளலாம் என்பதை அறிதலே.

இன்னும் இப்பிராயத்தார்க்குப் பன்னிரண்டு அசைகளையும் நான்கு இலக்கணங்களையும் திருப்பிச் சொல்லச்செய்தலும், வரிகளை ஒப்பிடச்செய்தலும், நாலு சதங்களை எண்ணச்செய்தலும் ஏற்ற பரீக்ஷைகளாம்.

## V-ம் பிராயம்.

பரீக்ஷை ஒப்பித்த கருமம் மூன்று.

நடாத்தும் முறை கதிரையினின்றும் எழுந்து பிள்ளையுடன் அறையின் மத்தியை யடைந்து "நீ இப்பொழுது எனக்கொரு கருமம் செய்யவேண்டும். இங்கே திறப்பு இருக்கின்றது; எடுத்துக் கொள்; அப்பாலேயிருக்கும் கதிரையில் திறப்பை வைத்து, கதவை மூடி, அப்பாலே யிருக்கும் பெட்டியை எடுத்துவருவாயாக" என்று பொருட்களைக் காட்டிக் கூறவேண்டும். இவற்றை இந்த முறையிற் றப்பாது சொல்லவேண்டும். இவற்றைத் திருப்பிச் சொல்லக் கூடாது.

சித்தி இக்கருமங்கள் மூன்றும் மேற்குறிக்கப்பட்ட அதே ஒழுங்கில் நடைபெறின் பரீக்ஷை சித்தியாயிற்றெனலாம். இவற்றில் எவற்றையாவது செய்யாது விடினும் முறை மாறிச் செய்யினும் பரீக்ஷை பிரதிகூலமாகும்.

அபிப்பிராயமும் நோக்கமும் இதிற் பெறும் சித்தி முதலாவதாக இடப்பட்ட கட்டளைகளை விளங்கிக்கொள்வதிலும் இரண்டாவதாக அவற்றை மனத்தி லமைத்தலிலுமே தங்கியிருக்கின்றது. இது நாளாந்த சீவியத்திற்குப் பொருத்தமுள்ளதா யிருத்தலின் இது ஓர் சிறந்த பரீக்ஷையாகும்.

இன்னும் இப்பிராயத்தார்க்கு நிறைகளை ஒப்பிடுதலும், நிறங்களைப் பார்த்துச் சொல்லுதலும், தொடர்புடைய பொருட்களுக்கு வரைவிலக்ஷணங் கூறுதலும் ஏற்ற பரீக்ஷைகளாம்.

## VI-ம் பிராயம்.

பரீக்ஷை கிரகிக்கும் சக்தியில் இரண்டாம் படி.

நடாத்தும் முறை (i) பாடசாலைக்குப் புறப்படும்பொழுது மழை பெய்தால் என்ன செய்வாய்? (ii) உமது வீட்டில் நெருப்புப் பிடித்தால் என்ன செய்வாய்? (iii) பிற இடங்கட்குப் புறப்படும் பொழுது புகையிரதம் முந்திப் புறப்பட்டால் என்ன செய்வாய்? என்ற வினாக்களைத் தனித்தனி கேட்கவேண்டும். விடை கொடுக்கத்

தவறியவிடத்தும் திகைப்பேற்பட்டவிடத்தும் வினுக்களை ஒருமுறை யாவது இருமுறையாவது திருப்பிச் சொல்லலாம்; ஆனல் வினுக்களை இடையிலே மாற்றக்கூடாது.

சித்தி மூன்று வினுக்களுள் இரண்டிற்குப் பூரண விடை கொடுக்கப்பட்டால் பரீக்ஷை சித்தியாயிற்றெனலாம். முதலாம் வினு விற்கு: குடையை எடுத்துக்கொள்வேன், றப்பர் ஆடையை அணிந்துகொள்வேன் என்பனவும்; இரண்டாம் வினுவிற்கு: மற் றவர்களை உதவிக் கழைப்பேன், நெருப்பவிக்கும் இயந்திரகாரரை அழைப்பேன், தண்ணீர் ஊற்றுவேன் என்பனவும்; மூன்ரும் வினு விற்கு: அடுத்த புகையிரதம் வரும்வரை காத்திருப்பேன், வேறு மார்க்கமாகப் பிரயாணஞ் செய்வேன் என்பனவும் ஏற்ற விடைக ளாகும். வீட்டிலே நின்றுகொள்வேன், எனறமாதிரியான விடை களும் வேருெரு வீட்டைக் கட்டுவேன், வேற்டத்திற் கோடிவிடு வேன், துக்கப்படுவேன் என்பனவும்; நடந்து செல்லுவேன், அடுத்த புகையிரதஸ்தானத்திற்குப் போவேன், ஓடிச் சென்று புகையிரதத் தைப் பிடிப்பேன் என்பனவும் முறையே இவ்வினுக்களுக்குத் திருப்தி யற்ற விடைகளாகும். இன்னும் இப்பிராயத்தார்க்கு வலம் இடம் என்பவற்றைப் பிரித்தறிதலும், படங்களில் வரையாது விடப்பட்ட பகுதிகளைப் பார்த்துச் சொல்லலும், பதின்மூன்று சதங்களை எண்ண லும், பதினுறு அசைகளைத் திருப்பிச் சொல்லலும் ஏற்றனவாம்.

## VII-ம் பிராயம்.

பரீக்ஷை ஞாபகத்திலிருந்து இரு பொருட்களுக்குள்ள பேதத் தைச் சொல்லல்.

நடாத்தும் முறை ஈக்கும் வண்ணுத்திப்பூச்சிக்குமுள்ள பேத மென்ன? என்று வினுவவேண்டும். பிள்ளைக்கு வினு விளங்காதிருந் தால் ஈயைக் காணவில்லையா? வண்ணுத்திப்பூச்சியைக் காணவில் லையா? இவற்றிற்குள்ள வேறுபாடென்ன? என்று கேட்கவேண்டும். ஈயா அல்லது வண்ணுத்திப்பூச்சியா பெரியது? என்ருற்போன்ற வினுக்களை வினவினுல் அவர்கள் ஆராயாது விடையிறுப்பாராதலின் இவ்வகைப்பட்ட வினுக்கள் தவிர்க்கப்படல்வேண்டும். ஒன்று மற் றையதிலும் பெரியது என்ற விடையை அவர்கள் சொன்னுல், எது பெரிது? எது சிறிது என்று கேட்கவேண்டும்.

சித்தி இவ்வினுவுடன் இதைப்போன்ற இன்னும் இரண்டு வினுக்களுள் இரண்டிற்குப் பூரண பேதங்கள் காட்டப்படின் பரீக்ஷை

சித்தியாய் முடிந்ததெனலாம். இதற்கு வண்ணாத்திப் பூச்சி பெரியது; பெரிய இறக்கைகளுண்டு. ஈ கரியது; எங்களைக் கடிக்கும். வண்ணாத்திப்பூச்சி எங்களைக் கடிக்கமாட்டாது. ஈ நோாகப் பறக்கும். வண்ணாத்திப்பூச்சி வீட்டின் புறத்தே யுள்ளது; ஈ வீட்டின் உட்புறத்தேயுள்ளது. எம் தேக சௌக்கியத்திற்கு ஈ இடையூறுயிருக்கும். ஈ தேனைச் சேகரிப்பதில்லை. வண்ணாத்திப்பூச்சி ஈயைப் போன்று நெடுங்காலம் ஜீவிக்கமாட்டாது என்பன போன்ற விடைகள் திருப்தியானவை

அபிப்பிராயமும் நோக்கமும் ஒப்பிடும் பொருட்கள் புலன்கள் முன் இல்லாமையே இதில் ஏற்படக்கூடிய கஷ்டத்திற்குக் காரணம். ஈயிலும் வண்ணாத்திப்பூச்சி பெரியது என்பதைப் பின்பற்றி மரத்துண்டையும் கண்ணாடிச்சில்லையும் ஒப்பிடச் சொல்லும்பொழுது மரம் கண்ணாடியிற் பெரியது அல்லது கண்ணாடி மரத்திற் பெரியது என்றாற்போலப் பொருத்தமில்லாத விடைகளைச் சொல்ல முற்படுவார்கள்.

இப்பராயத்தார்க்கு, கையிலுள்ள விரல்க ளெத்தனை? காலிலுள்ள விரல்க ளெத்தனை? கையிலும் காலிலுமுள்ள விரல்களெத்தனை? என்று எண்ணவிடாது வினவுதலும், படங்களை விஸ்தரிக்கச் சொல்லுதலும், ஐந்து தனி எண்களைத் திருப்பிச் சொல்லச் செய்தலும், வாரத்திலுள்ள நாட்களைச் சொல்லச்செய்தலும் ஏற்ற பரீக்ஷைகளாம்.

## VIII-ம் பிராயம்.

பரீக்ஷை இரு பொருட்களுக்குள்ள ஒத்த தன்மைகளைக் கூறுதல்.

நடாத்தும் முறை "நான் இப்பொழுது இரண்டு பொருட்கள் சொல்லுவேன்; அவற்றின் ஒத்த தன்மைகளை நீங்கள் கூறவேண்டும்" என்று சொல்லி அப்பொருட்கள்தாம் மரமும் கரியும் என்று வற்புறுத்திப் பின்னும் இவற்றின் ஒத்த தன்மைகளெவை? என்று வினவவேண்டும். மரத்தை நாம் எவ்வாறு உபயோகப்படுத்துகின்றோம்? கரியை எவ்வாறு நாம் உபயோகப்படுத்துகின்றோம்? என்றாற்போன்ற வினாக்கள் தவிர்க்கப்படல்வேண்டும். இதிற் சாதாரணமாக ஒத்த தன்மைகளை விடுத்து வேறுபாடான தன்மைகளைச் சொல்லும் வழக்கம் உண்டாகும். வேறுபாடான தன்மைகளைச் சொன்

னல் அவைகள் எத்தன்மைகளில் ஒத்திருக்கின்றன என்று வினவ வேண்டும்.

சித்தி இதையொத்த நான்கு சோடி பொருட்களில் இரண்டு சோடிகளுக்குள் ஒத்த தன்மைகள் சொல்லக்கூடியதா யிருந்தாற் பரீக்ஷை சித்தியாய் முடிந்ததெனலாம். இரண்டும் எரியக்கூடும்; இரண்டும் தாவர பிரயோசனங்கள்; இவற்றை இயந்திரங்கட்கு உபயோகிக்கலாம்; இரண்டும் விலையுள்ளன என்ற மாதிரியான விடைகள் திருப்தியானவை.

அபிப்பிராயமும் நோக்கமும் இது உறுதியற்ற மனதின் மூலதாரமான மெலிவைக் காட்டும். சாதாரணமாக இப்பிராயத்தார் இப்பரீக்ஷையிற் பிரதிகூல மடைவார்கள், ஆனல் உறுதியற்ற மனநிலை யுடையவர்கள் புத்திக் கொவ்வாத பல விடைகளைக் கொடுப்பார்கள்.

இப்பராயத்தார்க்கு இருபதிலிருந்து ஒன்றுவரை பின்னே எண்ணுதலும் சொல்லுவதை அவதானித்து எழுதுதலும் ஏற்ற பரீக்ஷைகளாகும்.

## IX-ம் பிராயம்.

பரீக்ஷை மூன்று சொற்களை ஒரே வாக்கியத்தில் உபயோகித்தல்.

நடாத்தும் முறை (i) பையன், பந்து, குளம் (ii) முயற்சி, பணம், மனிதர் (iii) வனந்தரம், குளக்கரை, வாவிகள் என்ற கூட்டமான சொற்களைச் சொல்லமுன் உங்களுக்கு ஒரு வாக்கியம் என்னவென்று தெரியும் என்று ஊக்கப்படுத்தி அதுதான் சில கருத்துக்களைக் கொடுக்கும் சில சொற்களால் ஆக்கப்படுவது என்று அறியச்செய்யவேண்டும். பின் சொற்கூட்டங்களை முறை முறையாகக் கொடுக்கலாம். மூன்று சொற்களும் மாத்திரந்தான் வாக்கியத்திலிருக்கவேண்டுமென்று கொண்டு கஷ்டப்பட்டால் வேறு சொற்களையும் சேர்க்கலாம் என்பதை அறியச்செய்யவேண்டும். ஒரு நிமிஷத்திற்கிடையில் முதலாம் வாக்கியம் அமைக்கத் தவறினல் அவ்வினவிற்கு விடை பிரதிகூலமானதென்று கொண்டு அடுத்த வாக்கியங்களிற் தொழிற்பட விடவேண்டும்.

சித்தி ஆக்கவேண்டிய மூன்று வாக்கியங்களில் இரண்டு வாக்கியம் ஏற்றதாயிருந்தால் பரீக்ஷை அநுகூலமாய் முடிந்ததெனலாம்.

பையன் தன்னுடைய பந்தைக் குளத்தி லெறிந்தான். பையனின் பந்து குளத்தில் விழுந்தது. பையன் குளத்திற் றன் பந்தை எடுக்க நீங்கினன் என்ற வாக்கியங்கள் முதலாம் வினவிற்கு ஏற்றன. இதற்கு: ஒரு பையனிருந்தான்; அவன் ஒரு பந்து வைத்திருந்தான்; அது குளத்தில் விழுந்தது என்றதுபோன்ற வாக்கியங்கள் பொருத்த மற்றன.

அபிப்பிராயமும் நோக்கமும் இப்படி வாக்கியங்கள் இயற்றச் செய்து அவ்வாக்கியங்களைக்கொண்டு மந்தபுத்தி யுடையோர்க்கும் கூர்மையான புத்தி யுடையோர்க்குமுள்ள பேதத்தை அறிதல் இலகு வாயிருக்கும். கூர்மையான புத்தியுடையோர் முயற்சி, பணம், மனிதர் என்ற சொற்க ளமைத்து வாக்கியம் அமைக்கும்பொழுது மனிதர் பணம் பெறும்பொருட்டு முயற்சி செய்வார்கள் என்றும், மந்தபுத்தியுடையோர்: மனிதர் முயற்சி செய்வார்கள், அவர்க ளதிக பணம் பெறுவதில்லையென்றும் அமைப்பார்கள். இது பிள்ளைகளில் ஆக்கும் வன்மையை அல்லது புதிதாகக் கண்டுபிடிக்கும் வன்மையை யுண்டாக்கும்.

இப்பிராயத்தார்க்கு ஐந்து பொருட்களை நிறைப்படி ஒழுங்கு செய்தலும் நாலு தனி எண்களை ஞாபகத்தில் வைத்திருந்து சொல் லுதலும் கொடுக்கப்பட்ட சொல்லோடு எதுகை மோனையில் ஒத்த சொற்களைக் கூறுதலும், மாதங்களின் பெயர்களை ஒழுங்காகச் சொல் லுதலும் ஏற்ற பரீக்ஷைகளாம்.

## X-ம் பிராயம்.

பரீக்ஷை பிழைகளைக் கண்டுபிடித்தல்.

நடாத்தும் முறை பிள்ளைகளை அழைத்து "நான் உங்களுக்கு ஒரு வாக்கியம் சொல்லுவேன்; அதிலே ஒரு வீண் வார்த்தை யிருக் கின்றது; அதை அவதானித்துச் சொல்லுங்கள்" என்று கூறவேண் டும். பின்னர் தனித்தனி (i) ஒருவன் தன் வீட்டிலிருந்து நகருக் குப் போகும்பொழுது இறக்கப்பாதையிலும் நகரிலிருந்து வீட்டிற் குத் திரும்பும்போது இறக்கப்பாதையிலும் பிரயாணம் செய்யக்கூடிய ஒரு பாதை யுண்டென்றான். (ii) ஒரு இயந்திரகாரன் தன்னுடைய புகையிரதத்தி லிருக்கும் இரதங்களின் தொகை கூடக் கூடப் புகை யிரதத்தின் கெதி கூடும் என்றான். (iii) ஒரு குழந்தை பதினெட் டுத் துண்டுகளாக வெட்டுப்பட்டுக் கிடப்பதைக் கண்டு அது தற் கொலை செய்துகொண்டது என்று பலர் நம்பினார்கள். ஒவ்வொன்

திற்கு முரிய விடை தனித்தனி முப்பது செக்கன்களிற் கூறப்படல் வேண்டும். பிள்ளை விடை கொடுக்கப் பிந்தினால் வசனங்கள் மீண்டும் சொல்லப்படல்வேண்டும். ஆனால் விடை சொல்லுவதற் குதவியாகக் கூடிய எவ்விளக்கவுரையும் தவிர்க்கப்படல்வேண்டும்.

சித்தி இரண்டு வசனங்களிலுள்ள பிழைகளைக் கண்டுபிடித்தால் பரீக்ஷை அநுகூலமாய் முடிந்ததெனலாம். முதலாவதற்கு ஒருகால் இறக்கப்பாதையாயின் மறுகால் ஏற்றப்பாதையா யிருக்கவேண்டும்; இரு திசைகளிலும் இறக்கப்பாதை யிருக்கமாட்டாது; இப்படி ஒரு பாதை யிருக்கமாட்டாது, என்பனவும் இரண்டாவதற்கு அதிகமான இரதங்க ளிருந்தால் விரைவாகச் செல்ல முடியாது; அவன் விளங்காமற் சொல்லிவிட்டான்; அவன் தன்னுடைய வசனத்தில் விரைவென்ற சொற்குப் பதிலாக ஆறுதலாக என்ற சொல்லை உபயோகிக்க வேண்டும் என்பனவும், மூன்றாவதற்கு அது தன்னைப் பதினெட்டு துண்டுகளாக வெட்ட முடியாது; அதை வேறு யாராவது வெட்டியிருக்கவேண்டும் என்பனவும் ஏற்கக்கூடியன.

அபிப்பிராயமும் நோக்கமும் பிழைகளைக் கண்டுபிடிக்கும் வன்மை ஒருவனுடைய உண்மையான சாமர்த்தியத்திலும் அநுபவத்திலுமே தங்கியிருக்கின்றது. இவ்வன்மை பாடசாலைச் சீவியத்தாற் சிறிது விருத்தியடையும். இவ்வித பரீக்ஷை மற்றெவற்றிலும் பார்க்க இளமைதொட்டு வரும் சாதாரண விவேகத்தை அளவிடக்கூடியது.

இப்பிராயத்தார்க்கு மூன்று நிமிஷங்களில் அறுபது சொற்களைத் தாமே நினைத்துச் சொல்லச் செய்தலும், ஆறு தனி எண்களை ஞாபகத்தில் வைத்திருந்து சொல்லுதலும், இருபத்திரண்டு அசைகளை ஞாபகத்தில் வைத்திருந்து சொல்லுதலும் ஏற்ற பரீக்ஷைகளாம்.

## XI-ம் பிராயம்.

பரீக்ஷை குணப்பண்புச் சொற்கள் சிலவற்றை வரையறுத்தல்.

நடாத்தும் முறை இரக்கம், பழி, நீதி என்ற சொற்களை வரையறுத்தல். இரக்கம் என்றால் என்ன? இரக்கம் என்ற சொல்லால் நாம் கருதுவ தென்ன? என்று வினுவவேண்டும். இப்படியே ஏனைய சொற்களுக்கும் வினுக்கள் உண்டாக்கவேண்டும். இரக்கம் என்றாற் பிறர்மேல் இரக்கங்கொள்ளுதல் என்றதுபோன்ற விடைகளைப் பெற்றால் இரக்கங்கொள்ளுதல் என்றால் என்ன? அவற்றை விளக்குக? என்று வினுவவேண்டும்.

சித்தி இரண்டு சொற்கள் பூரணமாக வரையறுக்கப்பட்டால் பரீக்ஷை அநுகூலமாயிற்றென்று சொல்லலாம். வரையறை தர்க்க ரீதியாய் பாஷை திருத்தமா யிருக்கவேண்டுமென்ற நியதியில்லை. வரையறை செய்வதைக் கொண்டு சொல்லின் கருத்து விளக்கமா யிருக்கிறதென்று நாம் அறிந்தால் அவ்வளவும் போதியது.

அபிப்பிராயமும் நோக்கமும் இப்பிராயத்திற்குமுன் மாணவர்கள் இச்சொற்களை வீட்டிலும் பாடசாலையிலும் தெருவிலும் பலர் உபயோகிப்பதைக் கேட்டிருப்ப ராதலால் இவ்வகைப்பரீக்ஷை இப் பராயத்தார்க்கு ஏற்றது.

## XII-ம் பிராயம்.

பரீட்சை ஒழுங்கற்ற வாக்கியத்தைப் பொருள் தரும்படி ஒழுங்கு செய்தல்.

நடாத்தும் முறை (i) மணித்தியாலம் ஒரு முன் புறப்பட்டோம் நாங்கள். (ii) விடைப்பத்திரத்தை என்னுடைய கேட்டேன் நான் ஆசிரியரைத் திருத்தும்படி. (iii) எசமானை தன் நல்ல நாய் தைரியமாகக் காப்பாற்றும் நின்று. இவ்வாக்கியங்களைத் தனித்தனி சொல்லி ஒழுங்கு செய்ய விடவேண்டும். வசனத்திலேயுள்ள முதற் சொல்லைப் பார்த்த மாத்திரத்தே பிடிக்க முடியாதபடி எல்லா எழுத்துக்களும் ஒரே தன்மையாக எழுதப்படல் வேண்டும். முதலாம் வசனத்தைச் சொல்லி இந்தச் சொற்கள் இவ்வளவும் முறையாக ஒழுங்கு செய்யப்படின் ஒருகருத்தை வெளிப்படுத்தும். இதை ஒழுங்கு செய்குக என்று கூறவேண்டும். கூடியளவு விரைவிற் சொல்லும்படி தூண்டினுல் மனத்தடுமாற்ற முண்டாகுமாகையால் அப்படிச் சொல்லுதல் தவிர்க்கப்படல் வேணடும். ஒரு நிமிஷத்தில் முதலாம் வசனம் ஒழுங்காகச் சொல்லத் தொடங்கா விட்டால் அதை ஒழுங்கான முறையில் ஆறுதலாகச் சொல்லி அடுத்த வசனத்தை ஒழுங்குபடுத்த விட வேண்டும். பிள்ளை கொடுக்கப்படாத சொற்களையும் சேர்த்தால் அப்படிச் சேர்க்கப் படாதென்பதை வற்புறுத்த வேண்டும்.

சித்தி இரண்டு வசனங்கள் ஒழுங்காகப் பொருள்தரும்படி நிரைப்படுத்தப் பட்டால் பரீக்ஷை சித்தியாய் முடிந்ததென்று சொல்லலாம். ஒரு வசனத்தைச் சொல்லும் பொழுது ஏதும் சொற்கள் உபயோகியாது விடப்பட்டாலும் மாற்றப்பட்டாலும் புதிதாக வைக்கப்பட்டாலும் பொருள் தெளிவாக விராவிட்டாலும் அது சரியென்று எடுத்துக்கொள்ளப் படமாட்டாது. நாங்கள் நகரத்திற்கு ஒரு மணித்

தியாலம் முன் புறப்பட்டோம். நான் என்னுடைய விடைப்பத்திரத்தை ஆசிரியரைத் திருத்தும்படி கேட்டேன். நல்ல நாய் தன் எசமானைத் தைரியமாக நின்று காப்பாற்றும் என்ற வசன ஒழுங்கை முறையே ஏற்றதென்று கொள்ளலாம்.

அபிப்பிராயமும் நோக்கமும் இப்பரீக்ஷையின் அநுகூலம் அநுபவத்தை அதிகம் பொறுத்ததல்ல. இதில் ஏற்படும் சித்தி நூல்களை அதிகமாக வாசிப்பதனால் ஓரளவிற்குத் தாக்கப்பெறும் இப்பரீக்ஷை விவேகப்பரீக்ஷையின் முக்கிய இலட்சணத்தை நிறைவேற்றக் கூடும். இப்பரீக்ஷையின் இன்னொருவகை ஒரு வசனத்திற் குறைவாயிருக்கும் அல்லது கிறிட்ட பகுதியை நிரப்புதலாம். உறுதியற்ற மனமுடையவர்களில் அதியுயர்ந்த நிலையிலுள்ளவர்கள் இப்பரீக்ஷைகளில் நிச்சயமாகப் பிரதிகூலமடைவார்கள்.

## XIII-ம் பிராயம்.

பரீக்ஷை யோசனைக்குரிய வினாக்கள்.

நடாத்தும் முறை "நான் கூறுவது விளங்குகின்றதோ என்று கவனித்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி (i) ஒரு மனிதன் நகரின் புறத்தே காட்டினோரத்தில் நடந்து செல்லும் பொழுது ஒருமரத்தில் ஏதோ தூங்குவதைச் சடுதியாகக் கண்டு திகைத்துப் பயந்து கிராமாதிகாரியிடஞ் சென்று தான் கண்டதை அறிவித்தான். அவன் கண்டதென்ன? (ii) அயல் வீட்டிற்கு வைத்தியனும் நொத்தாரிசும் குருவும் முறையே வந்தார்கள். வீட்டில் என்ன நடந்தது? (iii) ஒரு வேடுவன் முதல் முறை காட்டினின்றும் வெளிப்பட்டு ஒருவன் தெருவாற் போகும்பொழுது "இவன் சோம்பேறியாயிருக்கின்றான். இவன் எவ்வாறு உட்கார்ந்து நடந்து செல்கின்றான்" என்று ஐயுற்றான். தெருவாற் சென்றவன் எப்படிச் சென்றான். மாணவர் விரும்பினால் வாக்கியங்களை பின்னுமொருமுறை சொல்லலாம்.

சித்தி இவற்றில் இரண்டிற்குப் பூரண விடையிறுத்தால் பரீக்ஷை அநுகூலமாயிற்றெனலாம். முதலாவதற்குச் சரியான விடை யாரோவொருவன் மரத்திலே தூங்கிக்கொண்டான் என்பதே. அவன் கண்டது பாம்பு, குரங்கு, கள்வன், காடி, பூனை, யானை, பறவை, சீலை, காசுப்பை என்றவாறாகப் பல பிழையான அபிப்பிராயங்களைக் கொள்ளலாம். இரண்டாவதற்குச் சொல்லக்கூடிய விடை அவ்வீட்டிலொருவன் இறந்திருக்க வேண்டுமென்பதே. இதற்காக ஏன் நொத்

தாரிசு, குரு வரவேண்டும் என்று பிள்ளைகளை விளக்கும்படி சொல்ல வேண்டும். மூன்றாவதற்குப் பெறக்கூடிய சரியான விடை அவன் துவிசக்கர வண்டியிற் பிரயாணஞ்செய்தான் என்பதே. இதற்குக் குதிரையிற் பிரயாணஞ் செய்தான், கழுதையிற் பிரயாணஞ் செய்தான் என்ற பிழையான விடைகளைப் பலர் கூறுவார்கள்.

அபிப்பிராயமும் நோக்கமும் இதை ஓர் சர்வலட்சணங்களும் பொருந்திய பரீக்ஷை என்று சொல்லலாம். ஒரு நிலையின் அமைவை விபரிக்கும் பொழுது அந்நிலையை ஆராய்ந்தறிதலே இதில் நடைபெறக் கூடியது.

## XIV-ம் பிராயம்.

பரீக்ஷை மணிக்கூட்டின் கம்பிகளை நிலைமாற்றி விடுதல்.

நடாத்தும் முறை "இப்பொழுது ஆறு மணி இருபத்திரண்டு நிமிஷங்கள் என்பதை நினையுங்கள் என்று சொல்லி இந்த நேரத்தில் மணிக்கம்பி நிற்கவேண்டிய விடத்தையும் நிமிஷக்கம்பி நிற்கவேண்டிய விடத்தையும் நிமிஷக்கம்பி நிற்கவேண்டிய விடத்தையும் நீங்கள் மனதில் அமையுங்கள்'' என்று கூறவேண்டும். பின் மணிக்கம்பி நின்ற விடத்தில் நிமிஷக்கம்பியும் நிமிஷக்கம்பி நின்ற விடத்தில் மணிக்கம்பியும் நிற்கிறதாயிருந்தால் பிந்திய நேரமென்ன? இந்தமுறையில் எட்டுமணி பத்து நிமிஷங்களிலும் இரண்டுமணி நாற்பத்தாறு நிமிஷங்களிலும் முதற்கம்பிகள் நின்று பின் கம்பிகள் இடம் மாறினாற் பின்னைய நேரங்ளென்ன வென்று வினவவேண்டும். மாணவரை மணிக்கூட்டைப் பார்க்கவாவது மணிக்கூட்டு முகப்பொன்று வரைந்து அதில் அவதானிக்கவாவது விடாது முற்றாக மனதில் ஆலோசிக்க விடவேண்டும். ஒவ்வொரு வினாவிற்குமுரிய நேரம் இரண்டு நிமிஷங்களாம்.

சித்தி மூன்று யோசனைக் கணக்குகளுள் இரண்டிற்குரியவிடை ஏற்கக்கூடியதாயின் பரீக்ஷை சித்தியாய் முடிந்ததெனலாம். முதலாவதற்குரிய விடை 4 மணி 30 நிமிஷத்திற்கும் 4 மணி 35 நிமிஷத்திற்கு மிடையிலும் இரண்டாவதற்குரிய விடை 1 மணி 40 நிமிஷத்திற்கும் 1 மணி 45 நிமிஷத்திற்குமிடையிலும் மூன்றாவதற்குரிய விடை 9 மணி 10 நிமிஷத்திற்கும் 9 மணி 15 நிமிஷத்திற்கு மிடையிலும் இருந்தால் விடைகளைச் சரியென்று கொள்ளலாம்.

அபிப்பிராயமும் நோக்கமும் இதற்குரியவிடை புதிதாக ஒன்றை ஏற்படுத்தி அதிலிருந்து விடையைப் பார்ப்பதற்குதவும் இலக்கணையிற்

பொருந்திய சுவாதீனமான அதிகாரத்தைக்கொண்டே ஆராயத்தக்கது. விடையைப் பார்ப்பதற்குதவும் இலக்கணையின் குறைவு வளர்ந்தவர்கள் இதிற் பிரதிகூலமடைவதற் கேதுவாகும்.

## வளர்ந்தவர்குரியவை.

பரீக்ஷை சூழ்ச்சிக்குரிய பரீக்ஷை

நடாத்தும் முறை ஒரு பெண் தனது மகனிடம் ஒரு மூன்று பைன்ற் அளவையும் ஒரு பைன்ற் அளவையும் மாத்திரம் கொடுத்து இவற்றை எடுத்துச் சென்று வேறு எவ்வித பாத்திரங்களுமின்றி ஏழு பைன்ற் நீர் அளந்து கொண்டுவரும்படி சொன்னாள். முதல் நிரப்பு ஐந்து பைன்ற் அளவையாயிருக்க வேண்டுமென்றும் சொன்னாள். இது எப்படி. இது வாய்மூறையான பரீக்ஷையாயும் வேண்டுமாயின் திருப்பிச் சொல்லியும் பரீக்ஷிக்க வேண்டும். ஒரு பாத்திரத்தை நிரப்பி மற்றைப் பாத்திரத்தில் ஊற்றவேண்டுமென்ற முறையை எவ்விதத்திலும் சொல்லக் கூடாது. ஆனால் அப்படிச் செய்யலாமோவென்று வினவினால் மாத்திரம் ஆமென்ற விடையைச் சொல்லலாம். இதற்குரிய நேரம் மூன்று நிமிஷம். இரண்டாவது ஐந்து பைன்ற் ஏழு பைன்ற் அளவைகளைக் கொடுத்து ஐந்து பைன்ற் அளவை முதல் நிரப்பச் சொல்லி எட்டுப் பைன்ற் நீர்கொண்டுவரும்படி சொல்லல். மூன்றாவது நாலு பைன்ற் ஒன்பது பைன்ற் அளவைகளைக் கொடுத்து முதல் நாலு பைன்ற் அளவையை நிரப்பச் சொல்லி ஏழு பைன்ற் நீர் கொண்டுவரும்படி சொல்லல்.

சித்தி மூன்று வினாக்களில் இரண்டிற்குரிய விடை ஏற்றதாயின் பரீக்ஷை சித்தியாய் முடிந்ததென்று கொள்ளலாம்.

அபிப்பிராயமும் நோக்கமும் இது ஓர் சூழ்ச்சிக்குரிய பரீக்ஷையில் ஈடுபடுவோர் முடியாதென்று வெறுத்தாலும் பின்னர் தாமே ஆலோசித்து ஏற்படும் கஷ்டத்தை நீக்கிப் பின் விடையை அறிவார்கள். தடைகளை நீக்குவதற்குரிய வழிகளை ஆராய்ந்தறிதலே இதன் நோக்கம். இதற்கு அநுபவவாயிலான மதிக்கும் சக்தியும் சூழ்ச்சிகளை ஆராய்ந்தறியும் வன்மையும் வேண்டப்படும்.

# பள்ளன் சேர்த்த கள்

(போ. சின்னத்துரை)

## நிலைமண்டில ஆசிரியப்பா

பல்கலை பதித்தற்குப் பாவலர் கொண்ட
நல்லிசை பொறுத்த நனியுயர் பெண்ணையின்
அகலிரு வட்டின் கவரிலை யவற்றை
மட்டையொடு வெட்டி மடிவற மிதித்து
மட்டை புறமமைய இட்டுவேய் வட்டச்
சிறுகுடிற் றிண்ணையிற் பனைப்பாய்த் துயின்று
காலையிற் றுவர்த்துகில் யாத்தவிருங் கொடுக்கொடு
நுண்ணிய வாய்தலி னுழைந்து வெளிப்பட்டு
நாடாப் போற்பனை நாரைவார்ந் திழைத்த
கத்தியும் பாளை தட்டியு மகத்துடை
ஏறு பெட்டியை இடுப்பினி லிறுத்துத்
தளைநார்ப் புரியைத் தன்றலை யிட்டுக்
குறுங்கழுத்துச் சுரைக் குடுக்கைக டூங்கக்
காவுதடி யழுத்திய கடுந்தோட் பள்ளன்,
பறவையிற கன்ன பரூஉப்பெரு மட்டையுண்
முன்னுட் டோன்றி முற்றுப் பாளையை
மெல்லிய நாரான் மிசைமிசை வரைந்து
பக்குவ மியையப் பாளையைத் தட்டி
நனிகூர்ங் கத்தியான் நுனிக்கட் சீவி
வழியுங் கள்ளை வாங்குதற் காகப்
பாளை நுனியைப் பாங்குறக் கவித்த
குயவரியற் றுமண் முட்டிகள் கவினும்
நீடாள் முதுமரம் நிரம்பிய தென்னந்
தோப்பினுட் சென்று, தோளினுறு காவைப்
பதத்தாற் படியைப் பகுத்ததின் நிறுத்தி
ஓர்சுரைக் குடுக்கையை ஒள்ளரைத் தூக்கித்
தளைநார்ப் புரியைத் தாளினிற் றழீஇ,
நெஞ்சிடை மீதோல் நின்றுபுறங் காப்ப

நெஞ்சினை மரத்தொடு நிலைபெறச் சார்த்தித்
தளைநார்ப் பிணைத்த தாளிரண் டோடு
கரங்க ளிரண்டுங் கட்டித் தழுவக்
கால்மேற் றூக்கிக் கைமேற் றூக்கி
நெஞ்சினு னூர்ந்து நிமிர்ந்து நிவந்து
தவளைப் பாய்த்தாந் தன்மைய தாய்த்தாய்
மட்டையைப் பற்றி வட்டினி லிவர்ந்து,
நார்வரி முகப்பு நலியச் சீவிய
பாளையின் றலையிற் பரந்து சுரந்த
பசும்பா லன்ன பல்லெறும் பிறந்த
வெறிமணம் முதிரா வெம்மைய கள்ளைத்
தன்னரைத் தூங்குந் தனிச்சுரைக் குடுகில்
நன்னரன் போடு நயந்துள் வார்த்து
முன்னிலைப் படுத்து முன்னிவர்ந் தாங்குப்
பின்னிலை யாகப் பின்ன ரிழிந்து
அச்சுரைக் குடுக்கையை அகற்றிக் காவிற்
றொன்னிலைப் படுத்துத் தூக்கிப் பெயர்ந்துதம்
இல்லின் முன்றிலின் இன்னிழல் தரூஉம்
மரக்கிளை வெட்டிமுன் மடிந்த கொம்பரிற்
றூக்கி வைத்திடத் துள்ளித் துள்ளிக்
கீழ்மே லாகப் புள்ளியொடு பெயரும்
கண்ணடி யன்ன கட்காண் குவிரே!

---

கன்னல் சேர்வயற் றென்கதி ரைப்பதிக்
　　கந்தன் கோவிலில் மாமதில் செய்ய
மின்னுஞ் சுண்ணமில் லாமால்வி சாரிக்கும்
　　வேளை யில்வந்து காட்சி கொடுத்தோன்
சொன்ன தோரிடத் திற்சுதை வெட்டித்
　　தொலைந்து போனதொ ராயிர கோடி
என்னி டத்தினில் வேறொன்று மில்லை
　　இந்த மண்வெட்டி யொன்றுந்தா னுண்டே.

[க. ம. ப: செய். 72]

# நிஜ-மத்திய காலாந்தரம்

## EQUATION OF TIME

(மு. பொன்னம்பலம்.)

நாங்கள் ஒரு நாள் 24 மணித்தியாலங் கொண்டதாகவே எண்ணிவருகிறோம். எங்கள் கடிகாரங்களும் அவ்வாறே காட்டுகின்றன. ஆனால் உண்மையில் வருடத்தில் நாலு நாட்கள் தவிர மற்றைய நாட்களெல்லாம் 24 மணியிலும் சில செக்கன்கள் கூடி அல்லது குறைந்தே இருக்கும். இதை நாங்கள், சூரிய உச்சம் எப்பொழுதும் 12 மணிக்கு நிகழாது முந்தியும் பிந்தியும் நிகழ்வதால் அறியலாம். உதாரணமாக ஏப்பிரல் மாதம் 13-ந் திகதி சூரிய உச்சம் யாழ்ப்பாணத்தில் 12 மணி 0 நிமி. 23 செக்கனிலும், 14-ந் திகதி 12 மணி 0 நிமி. 17 செக்கனிலும் நிகழ்கின்றது. இடைப்பட்ட காலம் 23 மணி 59 நிமி. 44 செக்கன். ஆகவே இத்தினம் (24 மணியிலும்) 16 செக்கன்கள் குறைவுடையது. நவம்பர் மாதம் 16-ந் திகதி 11 மணி 44 நிமி. 40 செக்கனிலும், 17-ந் திகதி 11 மணி 44 நிமி. 50 செக்கனிலும் சூரியன் உச்சமாகிறது. இடைப்பட்ட காலம் 24 மணி 0 நிமி. 10 செக்கன். ஆகவே இத்தினம் (24 மணியிலும்) 10 செக்கன் கூடியது. இவ்வாறே ஏனைய தினங்களும் இருக்கும். வருடத்திலுள்ள எல்லாத் தினங்கட்கும் இவ்வாறே கண்டு அவற்றைக் கூட்டி வருட நாட் தொகையினாற் பிரித்தால் ஒரு தினம் சராசரி 24 மணித்தியாலங்கள் கொண்டதாயிருக்கும். இதையே எமது சௌகரியத்தின் பொருட்டு மணிக்கூட்டிலும் குறித்து வழங்கி வருகிறோம். இவ்வாறு சராசரியாய் 24 மணி கொண்ட தினங்களை மத்திய (சராசரி) தினம் (Mean Solar day) என்பர். 24 மணியிலும் கூடிய அல்லது குறைந்த காலத்தை யுடைய தினத்தை நிஜ தினம் (Apparent Solar day) என்பர்.

எப்பொழுதும் ஒரே சீராய் ஓடுகின்ற எமது மணிக்கூட்டின்படி சூரிய உச்சம் பகல் 12 மணிக்கு முன்னும் பின்னும் நிகழ்கின்றது. அப்பொழுது சூரிய கடிகாரம் (Sun dial) 12 மணியைக் காட்டும். உதாரணமாக நவம்பர் 16-ந் திகதி எமது மணிக்கூட்டின்படி 11

மணி 44 நிமி. 40 செக்கனுக்குச் சூரியன் உச்சமாகிறதென்று முன் குறிப்பிட்டோம். அப்பொழுது சூரிய கடிகாரத்தின்படி 12 மணிக்குச் சூரிய உச்சம் நிகழ்வதைக் காண்போம். ஆகையால் சூரிய கடிகாரம் நிஜ நேரத்தையும் (Apparent Time) சாதாரண கடிகாரம் மத்திய நேரத்தையும் (Mean Time) காட்டுகின்றன. சூரிய உச்சம் 12 மணிக்கு நிகழுமெனக் காட்டும் சூரிய கடிகார நேரத்துக்கும், சூரிய உச்சம் 12 மணிக்கு முன்னும் பின்னும் நிகழ்வதாகக் காட்டும் மணிக்கூட்டு நேரத்துக்கும் உள்ள வித்தியாசம் நிஜ மத்திய காலாந்தரம் (Equation of Time) எனப்படும்.

ஆகவே,

நி. ம. காலாந்தரம் = மணிக்கூட்டு நேரம் — சூரிய கடிகாரநேரம்.

நி. ம. காலாந்தரம் = மத்திய நேரம் — நிஜ நேரம்.

இக்காலாந்தரம் இரு காரணங்களால் உண்டாகின்றது.

I. சூரியனுடைய கதி நாளுக்கு நாள் வேறுபட்டிருத்தல்.
II. சூரியவீதி (Ecliptic) நிரட்சரேகைக்கு $23\frac{1}{2}^0$ சரிந்திருத்தல்.

## I. சூரியனின் வித்தியாசமான கதிவேறுபாட்டால் உண்டாகும் காலாந்தரம்.


நாம் வசிக்கும் பூமியானது சூரியனைச் சுற்றிவரும் பாதை சரியான வட்டமாயிராமல் சிறுக விகற்பித்து நீள் வட்டமாயமைந்திருக்கின்றது. நீள் வட்டங்களுக்கு இரு மையங்களுள. நீள்வட்டமான பூமியின் பாதைக்கும் அவ்வாறே இரு மையங்களுண்டு. அவற்றிலொன்றிலேயே சூரியன் இருக்கிறது. அப்படியிருத்தலால் பூமி சில காலங்களில் சூரியனுக்குச் சமீபத்திலும், சில காலங்களில் தூரத்திலும் சுற்றிவரும். பூமிக்குச் சமீபத்தில் வருங்காலம் டிசெம்பர் மாதம் 31 - ந் திகதி. அதிக தூரத்திற் செல்லுங்காலம் ஜூலை மாதம் 1-ந் திகதி. டிசெம்பர் மாதம் 31-ந் திகதியில் பூமியின் கதி $1^0$. 1'.9''. ஜூலை மாதம் 1 - ந் திகதி பூமியின் கதி 57'. 11''. மற்றைய நாட்களிற் பூமியின்கதி இவற்றிற் கிடைப்பட்டிருக்கும். பூமி தன் பாதையில் $1^0$ சென்றால், பூமியிலுள்ள எமக்குச் சூரியன் தனது வீதியாகிய கிராந்தி விருத்தத்தில் (Ecliptic) $1^0$ நகர்ந்ததாகத் தோற்றும். ஓர் தேசாந்தரத்துக்குச் சூரியன் ஓர் குறித்த தினத்தில் 12 மணிக்கு உச்சங் கொடுப்பதாக வைத்துக்கொள்ளுவோம். பின் பூமி தன்

னிற்ருன் ஒருமுறை (360$^{0}$) சுற்றியதும், முன் சூரிய உச்சத்தைப் பெற்ற குறித்த தேசாந்தர ரேகை முதல் நாள் நின்ற நிலையத்தை அடைந்து விடும். அப்பொழுது சூரியன் உச்சியிற் ருேற்ருது. சூரியன் கிராந்தி விருத்தத்திற் சென்றதாகத் தோற்றிய 1$^{0}$ அளவு தூரம் கிழக்கே காணப்படும். இக்குறித்த தேசாந்தரம் சூரிய உச்சத்தைப் பெறுதற்கு இன்னும் 1$^{0}$ (கிழக்கு முகமாக) சுற்ற வேண்டும். ஆனல் பூமியின் வேகம் 1$^{0}$ 1' 9" ஆக அதிகரிக்கும்பொழுது சூரியனும் அவ்வளவு தூரம் சென்றதாகத் தோற்றும். அப்பொழுது பூமி தன்னிற்ருன் ஒருமுறை சுற்றுவதுடன் சூரியன் சென்றதாகத் தோற்றும். 1$^{0}$ 1' 9" பையும் சுற்றவேண்டும். பூமி ஜுலைமாதம் 1-ந் திகதி 57' 11" செல்லுகிறது. ஆகவே அன்றைக்குச் சூரியன் கதி 57' 11" ஆகத் தோற்றும். அன்றைக்குப் பூமி தன்னையும் சுற்றி 57' 11" யையும் சுற்றியவுடன் சூரியஉச்சத்தைப்பெறும். இதற்கு முன்னரிலும் குறைந்த காலமே வேண்டப்படும். ஆகவே இந்நியாயத்தினல் ஒரு தினம் 24 மணியிலும் சிறிது குறைந்தும், கூடியும் வருமென்பது புலனுகிறது. டிசெம்பர் மாதம் 31-ந் திகதிக்கு முன் 3 மாதமும், பின் 3 மாதமும் நாட்கள் 24 மணியிற் சிறிது கூடியும், ஜுலை மாதம் 1-ந் திகதிக்கு முன் 3 மாதமும் பின் 3 மாதமும் 24 மணியிற் சிறிது குறைந்தும் வருமென அறிந்து கொள்ளலாம்.


ஜுலை மாதம் 1-ந் திகதி நாங்கள் உபயோகிக்கும் மணிக்கூட்டில் பகல் 12 மணியாயிருக்கும்போது சூரியன் உச்சமாகிறதென்று வைத்துக்கொள்ளுவோம். இக்காலத்தில் தினங்கள் 24 மணியிலும் குறைந்தனவாகையால் அடுத்தநாள் மணிக்கூட்டில் 12 மணியாவதற்கு சில செக்கன்கள் முன்பாகவே சூரியன் உச்சத்தை யடைந்துவிடும். அதற்கடுத்த தினங்களில் இன்னுஞ் சில செக்கன்கள் முந்தி முந்தி உச்சமாகும். இவ்வாருக 3 மாதங்களுக்குச் சூரியன் முந்தி முந்தி உச்சங் கொடுத்துவந்து 3 மாத முடிவில் அதாவது ஒக்டோபர் 1-ந் திகதியளவில் 7 நிமிஷங்கள் முந்தி, மணிக்கூட்டில் 11 மணி 53 நிமிஷமாயிருக்கும்போது சூரியன் உச்சம் கொடுக்கும். அத்தினத்திற்குப் பின்னுள்ள நாட்கள் 24 மணியிலும் சில செக்கன்கள் கூடியனவாகையால் அடுத்தடுத்த தினங்களில் 11 மணி 53 நிமிஷத்தின்மேல் சில செக்கன்கள் சென்றபிறகு உச்சமாகும். அதற்கடுத்தநாள் முதல்நாளிலும் சில செக்கன்கள் பிந்தி உச்சமாகும். இவ்வாறே 3 மாத காலத்திற்குப் பிந்திப் பிந்தி உச்சமாய் மூன்ரும் மாத முடிவில், அதாவது டிசெம்பர் 31-ந் திகதியில் திரும்பவும் 12

மணிக்கு உச்சம் கொடுக்கும். பின்னர் 12 மணியின்பிறகு உச்சம் கொடுக்கத் தொடங்கி 3 மாத முடிவில் அதாவது மார்ச்சு 31-ந் திகதியளவில் 12 மணி 7 நிமிஷத்திற்கு உச்சம் கொடுக்கும். அந் தினத்திற்குப் பின் உள்ள நாட்கள் 24 மணித்தியாலத்திலும் குறைந் தனவாகையால் 12 மணி 7 நிமிஷத்திற்குமுன் உச்சம் கொடுக்கத் தொடங்கி ஜூலை 1-ந் திகதியில் மறுபடியும் 12 மணிக்கு உச்சமாகும்.

மேற்கூறிய நியாயத்தால் உண்டாகிற காலாந்தரம் ஒக்டோபர் 1-ந் திகதி —7நிமிஷமாகவும், மார்ச்சுமாதம் 31-ந் திகதி +7நிமிஷமாகவும் இருக்குமென்பது புலனாகும். இதனைப் பின் வரும் இக்காலாந்தரத்தின் ஏற்றத்தாழ்ச்சியைக் காட்டும் படத்தினால் அறியலாம்.




## II. சூரியவீதி நிரட்சரேகைக்கு 23½ பாகை சரிந்து இருப்பதினால் உண்டாகும் காலாந்தரம்





நிரட்சரேகைக்குச் சூரியவீதி $23\frac{1}{2}^{0}$ சரிவாக இருப்பதையும் அது நிரட்சரேகையை இரு இடங்களிற் சந்திப்பதையும் இப்படத்திற் காணலாம்.

"V" மேஷாயனாரம்பஸ்தானத்தையும் (Vernal Equinox) 'A' துலாயனாரம்பஸ்தானத்தையும் (Autumnal Equinox) குறிக்கின்றன. 'V' ல் மார்ச்சு 21-ந் திகதியிலும், 'A' ல் செப்டெம்பர் 23-ந் திகதியிலும் சூரியன் வருதலால் வருடத்தில் இரண்டு நாட்களிலேயே சூரியன் நிரட்சரேகையிற் காணப்படும். சூரியவீதி $23\frac{1}{2}^0$ சரிந்திராது நிரட்சரேகையுடன் ஒன்றியிருந்தால் சூரியன் வருடம் முழுவதும் நிரட்சரேகையிலேயே காணப்படும். அப்பொழுது அதன் வேகமும் முன் நாமறிந்ததற்கு மாருக, ஒரேமாதிரியிருந்தால் நாட்களெல்லாம் 24 மணி கொண்டனவாய் அமையும். சூரியனும் எப்பொழுதும் 12 மணிக்கே உச்சமாகும். ஆனால் சூரியவீதி $23\frac{1}{2}^0$ சரிந்திருத்தலினால் அதிற் சூரியன் செல்லும்பொழுது நாட்களின் அளவு வேறுபடுதற்கு நியாயமுண்டு. இதை நாம் விளங்கிக்கொள்வதற்கு நிரட்சரேகையிலே ஒரு கற்பனசூரியனும் (Fictitious Sun) சூரியவீதியிலே எமது நிஜசூரியனும் (Real Sun) ஒரே வேகத்தில் கிழக்குமுகமாகச் செல்வதாக கற்பித்துக்கொள்ளவேண்டும்.


இவ்விரண்டும் 'V' ல் தொடங்கிக் கிழக்கு முகமாகத் தத்தம் வீதியில் செல்லவிட்டால் குறித்த சில தினங்களின் பின் படத்திற் காட்டியபடி நிஜ சூரியனும் (S) கற்பன சூரியனும் (S') 'V' ல் இருந்து சமதூரத்திற் காணப்படும். அப்பொழுது துருவத்திலிருந்து நிஜ சூரியனுக்கூடாக, நிரட்சரேகைக்கு உச்ச ரேகை (Meridian) வரைந்தால், அது நிரட்ச ரேகையிலுள்ள கற்பன சூரியனைச் சந்தியாது, அதற்கு மேற்கேயுள்ள ஓர் இடத்திலேயே (K) நிரட்சரேகையைச் சந்திக்கும். இதிலிருந்து கற்பனசூரியன், நிஜ சூரியனுக்குக் கிழக்கே இருக்கிறதென்பது தெளிவாகும். பூமி கிழக்கு முகமாய்ச் சுற்றும்பொழுது அதிலுள்ள ஓர் தேசாந்தரரேகை முதலில் நிஜ சூரியனை 12 மணிக்கு முன்னும், பின் கற்பனசூரியனை 12 மணியிலும் உச்சமாகப் பெறுகிறது. சூரிய வீதி சரிந்திருத்தலாகிய இந்நியாயத்தால் நிஜசூரியன் அதிகம் முந்தி யுச்சம் கொடுக்கும்பொழுது 10 நிமிஷத்துக்கு மேல் வித்தியாசம் உண்டாவதில்லை. ஆகவே இதனால் வரும் காலாந்தரம் இவ்விடத்தில் — 10 நிமிஷம் ஆகிறது. இது ஏறக்குறைய மே மாதம் 5-ந் திகதியில் நிகழும். பின்னர் இவ்வித்தியாசம் குறைந்து குறைந்து போய் ஜூன் 21 ல் அற்றுப்போய் விடும். அதாவது இரு சூரியர்களும் 12 மணிக்கு உச்சங் கொடுக்கும். ஏனெனில், உத்தராயணாந்தத்தில் (Summer Solstice) நிஜசூரியன் நிற்கும்போது துருவத்திலிருந்து அதற்கூடாய்

வரையப்படும் உச்சரேகை (Meridian) நிரட்சரேகையிற் சஞ்சரிப்பதாகப் பாவித்த கற்பனைச்சூரியனைச் சந்திக்குமாகையால் காலாந்தரம் இல்லை யென்க.

சூரியன் கர்க்கடகரேகையி லிருந்து நிரட்சரேகை நோக்கித் திரும்பியதும் 12 மணிக்குப்பின் உச்சம் கொடுக்கத் தொடங்கி ஆகஸ்ட் 7-ந் திகதிவரையில் 10 நிமிஷம் பிந்தி உச்சம் கொடுக்கும் அதன்பின் இவ்வித்தியாசம் குறைந்துபோய் செப்டெம்பர் 23 ல் காலாந்தரம் அற்றுப்போகும். ஆகவே இக்காலத்தி லேற்பட்ட, கூடிய காலாந்தரம் +10 நிமிஷம் ஆகிறது. இவ்வாறே செப்டெம்பர் 23 க்கும் டிசெம்பர் 21 க்கும் இடையில் கூடிய காலாந்தரம் —10 நிமி. ஆகவும், டிசெம்பர் 21க்கும் மார்ச் 21க்கும் இடையில் +10 நிமி. ஆகவும் அமையும். பின் வரும் படம் சூரியவீதி $23\frac{1}{2}^0$ சரிந்திருத்தலினால் வரும் காலாந்தர வேறுபாட்டைக் காட்டுகிறது.




மேற்கூறிய இரு நியாயங்களினால் ஏற்படும் அன்றன்றைக்குரிய காலாந்தரங்களைக் கூட்டினால் வருஷத்தில் ஒவ்வொருநாளுக்குமுரிய— நாங்கள் அவதானிக்கக்கூடிய — நிஜ-மத்திய காலாந்தரத்தை அறியலாம். பின் வரும் படம் இரு நியாயங்களாலும் ஏற்பட்ட நிஜ-மத்திய காலாந்தர வேறுபாட்டைக் காட்டுகிறது.




இப்படத்திலிருந்து வருஷத்தில் ஏப்ரில் 16, ஜூன் 15, செப்டெம்பர் 1, டிசெம்பர் 25 என்னும் நான்கு திகதிகளில் காலாந்

தரம் அற்றுப்போகிறதென அறியலாம். ஆகவே அத்தினங்களில் சூரியன் 12 மணிக்கு உச்சமாகும். பிப்ரவரி 11-ந் திகதியிலே அதிகம் பிந்தி உச்சம் கொடுக்கிறது. அன்று 14 நிமி. 28 செக்கன் பிந்தி உச்சம் கொடுக்கும். அதாவது 12 மணி 14 நிமி. 28 செக்கனுக்கு உச்சமாகும். நவம்பர் 3-ந் திகதியில் அதிகம் முந்தி உச்சம் கொடுக்கிறது. அன்று 16 நிமி. 21 செக். முந்தி உச்சம் கொடுக்கும். அதாவது 11 மணி 43 நிமி. 39 செக்கனில் உச்சம் கொடுக்கும். இன்னும் மே 15-ந் திகதி 3 நிமி. 50 செக்கன் முந்தியும், ஜுலை 27-ந் திகதி 6 நிமி. 18 செக்கன் பிந்தியும் உச்சம் கொடுக்குமென அறியலாம். இடைப்பட்ட காலங்களுக்கு இக்கணன் ரேகைப் படமூலம் சுமாராக காலாந்தரத்தை அறிந்துகொள்ளலாம்.

இக்காலாந்தர சூரிய கடிகாரத்தில் 12 மணியா யிருக்கும் பொழுது அன்றைக்குரிய காலாந்தரத்தை நாம் அறிந்துகொண்டால் எமது மணிக்கூட்டை நாம் சுத்தமாகத் திருத்திக்கொள்ளலாம். ஆனால் இதற்குச் சூரிய கடிகாரம் நுட்பமாக அமைக்கப்பட்டிருத்தல் அவசியம். உதாரணமாக, மார்ச்சு 1-ந் திகதி நி. ம. காலாந்தரம் 12 நிமி. 35 செக். ஆகவே சூரிய கடிகாரம் 12 மணி காட்டும் பொழுது மணிக்கூடு காட்டவேண்டிய நேரம் 12 மணி 12 நிமிஷம் 35 செக்கனுகும். அந்நேரத்துடன் சுதேச நேரத்துக்கும் பொது நேரத்துக்குமுள்ள வித்தியாசத்தைக் கூட்டி நாம் உபயோகிக்கும் பொது நேரத்தைப் (Standard Time) பெற்றுக் கொள்ளலாம். இவ் வித்தியாசம் யாழ்ப்பாணத்துக்கு +10 நிமிஷம். ஆதலின் அதைக் கூட்ட 12 மணி 22 நிமிஷம் 35 செக்கனுகும். இதுவே மார்ச்சு மாதம் 1-ந் திகதி எமது மணிக்கூட்டின்படி சூரியன் உச்சமாகும் நேரம்.

---

மனித வர்க்கத்தின் விருத்திக்குரிய இயற்கை வழிகளையே குழந்தை கடைப்பிடிக்கின்றது.

"மொன்றி சூரி"

# பாடசாலையின் நான்கு உப பருவங்கள்

# THE FOUR STAGES OF SCHOOL LIFE

(க. நவரத்தினம்)

உலகக் கவிச் சிரேஷ்டருளொருவராகிய செகசிப்பியார் (Shakespeare) மானிடரின் வாழ்க்கையை ஏழு பருவங்களாக வகுத்தனர். அவ்வேழு பருவங்களுள் பாடசாலைப் பருவமுமொன்று. பாடசாலைப்பருவத்தை மேலைத்தேச வித்துவசிரோமணிகள் உளவிருத்தியின்படி நான்கு உப பருவங்களாகப் பிரித்திருக்கின்றனர்.

முதலாம் உபபருவம்:—மேல் நாட்டிலுள்ள தனவந்தரும் அறிஞரும் தம் பிள்ளைகளை மூன்றாம் வயதிலே போஷிப்புப் பாடசாலைகளுக்கனுப்புகின்றனர். குழந்தைகள் ஐந்து வயதாகும் வரைக்கும் இங்கே கல்வி பயிலுவர். உளநூல் வல்லுனர் இப்பருவத்தை மிகவும் முக்கியமானவோர் பருவமெனக் கூறுகின்றனர். எவ்வாறெனில் பிள்ளையின் உள்ளம் சிலவற்றில் விருப்பும் சிலவற்றில் வெறுப்புங் கொள்வதால் உளச்சுவைகள் தோன்றித் திடமாகின்றன. அன்றியும் பிள்ளைகள் இப்பருவத்தில் ஓடி விளையாடக்கூடியதாய் வந்துவிடுகிறபடியால் தாங்கள் காணும் பொருட்களின் ஒற்றுமை வேற்றுமைக் குணங்களை அறிந்து அவற்றைப்பற்றி வினவத் தொடங்குகின்றனர். ஆகவே பிள்ளையின் நூதனப் பிரியமும், விடுப்பும் இயற்கைப் பொருட்களை அறிவதில் நல்ல பதிவியக்கம் பெறும். பிள்ளை விடுப்பினால் பல கேள்விகளைக் கேட்டு விடை பெறுவதினால் தாய்ப் பாஷையில் விருத்தியடைகின்றான். பின்பற்றுதல், தன்னலங்கருதல், விளையாடல், நூதனப் பிரியம், அன்பு காட்டல், உள்ளக்கருத்தை உரைத்தல் ஆகியன இப்பருவத்தாரிடத்திற் காணப்படும். ஆனால் நடித்த லூக்கமோ இப்பருவத்தில் மிகவும் முனைத்து விளங்கும். பாவைகளையும், விளையாட்டுச் சாமான்களையும், பெரியவர் செயல்களையும் நடிப்பர். கதிரையைக் குதிரையாகப் பிரயோகித்து நடிப்பர் சிலர். பாவைகளைப் பிள்ளைகளாகப் பிரயோகித்துப் பாலூட்டுவது போல் நடிப்பர் சிலர். பாலர்தம் நேர அனுபவத்திற்கெட்டாத விடயங்களை மனதில் நிரூபிக்கும் வல்லபமும் முனைத்து விளங்கும்.

இக்காரணத்தினுல் இப்பாடசாலை ஆசிரியர் உபகதைகள், கட்டுக் கதைகள், கற்பனு கதைகள் ஆகியனவற்றைப் படிப்பிப்பர். மனே வளர்ச்சியை விருத்தி செய்வதற்குக் குழந்தைகளை இனிமையாகவும், பிழையறவும் பேசும்படி பழக்குவர். கேள்வி கேட்கும் பழக்கத் தைத் தூண்டிவிடுவர். வினுக்களுக்கு மரியாதையாக விடையளிக்க வும், கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்கவுஞ் செய்வர். இக்காலத்தில் வாசிப்பு, எழுத்து, எண் இடம்பெரு. சங்கீதமும், பாட்டும் பேச் சைப் பயிற்றுவதற் குதவிசெய்யும். மனேவளர்ச்சியை விடுத்துத் தேக வளர்ச்சியைக் கவனிக்குமிடத்து ஆசிரியர் பிள்ளைகளுக்கேற்ற தேகாப்பியாசங் கொடுக்கின்ருர். ஒளிபடுஞ் சுத்தமான காற் றில் நடமாடச் செய்கின்ருர். குறித்த நேரங்களிற் றூங்கவும், இளைப்பாறவும், செவ்வையான நிலையில் நிமிர்ந்திருக்கவும் பயிற்று கின்ருர். குழந்தைகள் தாங்களாகவே தங்கள் பற்களைத் தீட்டவும், தேகத்தையும் வசிக்கும் அறைகளையும் சுத்தமாக வைத்திருக்கவும் வழிகாட்டுகின்ருர். சுத்தமான உணவை ஊட்டுகின்ருர். ஆனுல் இப்பருவத்தி லநேகர் நோய்க்காளாகின்றபடியால் வைத்திய அதி காரி பாலர் நோய்க்கு ஆளாகாவண்ணந் தக்க கவனஞ் செலுத்து கின்ருர். ஆகவே பாடசாலை வைத்தியப் பகுதியாருடன் நெருங்கிய தொடர்புடையதாயிருக்க வேண்டும்.

இரண்டாம் உப பருவம்:—நாகரீக மடைந்த எத்தேசத்தவரும் பாலர் ஐந்து வயதானவுடன் பாடசாலைகளுக் கனுப்புகின்ருர்கள், ஆனுற் பிள்ளைகள் மூன்று வயது தொடக்கம் பயின்றுவரும் பால ருடன் ஒத்துழைக்கக் கஷ்டப்படுவார்கள். பாலர் இப்பருவத்தின் ஆரம்பத்தில் விளையாட்டுமூலம் கல்வி பயிலுவர். விளையாட்டென்பது ஒரு பேற்றைக் கருதாத இயல்பான இன்பச்செயல். வேலையென்பது ஒரு பேற்றைக் கருதிக் கட்டளை அல்லது கடமை யென்று செய்யப் படுவது. ஆனுல் பாலர் பகுதிக் கல்வி பூர்த்தியானவுடன் விளை யாட்டுக்கும் வேலைக்குமுள்ள பேதந் தெரியவரும். பேதந் தெரியவே பிள்ளை பள்ளிக்கூடத்திற்குத் தானுகப் போகத் தொடங்குகின்ருன். இப்பருவத்தில் பாலர் எண், வாசிப்பு, முதலியவற்றிற் சிறிது ஆர் வங் காட்டுவார்கள். ஆசிரியர் தாமே தொடங்காமற் பாலரையே பாடங்களில் அடியெடுத்து வைக்கும்படி விடவேண்டும். பாலர் விளையாடும்போது பிரயோகிக்கும் உபகரணங்களிலிருந்தும், சாதாரண வாழ்க்கையிற் காணப்படும் பொருட்களிலிருந்தும், தொகை, பரு மன், நிறை முதலியவற்றைப்பற்றிய ஓர் பொதுவான அறிவை

உண்டாக்கிவிடலாம். தகுந்த உபகரணங்கள் மூலமும் படிமுறையான அப்பியாசங்கள் மூலமும் எண், வாசிப்பு முதலியன பயிற்றலாம். பேச்சுப் பயிற்சியே இப்பருவத்தின் முக்கிய இலக்காயிருக்கவேண்டும். குழந்தையின் மழலைப் பருவத்தில் நின்றே "பேச்சு" ஆரம்பிக்கின்றது. பாலரை ஆறுதலாயும் தொடர்பாயும் பேசப் பயிற்றவேண்டும். பின் கதை சொல்லல், கதை வாசித்தல், சம்பாஷணை, முதலியவற்றால் மாணவர் தேர்ச்சி அடைவர். இப்பருவத்தி னிறுதிப் பகுதியிற் பாலர் சுயேச்சையாகவும், சாதுரியமாகவும், தொடர்பாகவும் பேசுவர். இப்பருவப் பாலருக்குக் கதைகளிற்றான் அதிக இச்சையுண்டு. பாலரும் வளர வளரக் கதைகளும் படிமுறையாக மாற்றமடைய வேண்டும். மிருகங்கள், பூதங்கள் முதலியவற்றின் கதைகளிலிருந்து இலக்கியம், இதிகாசம் முதலியவற்றிலிருக்கும் பூர்வீகக் கதைகளைச் சொல்லல்வேண்டும். வீரச்செயல்கள் நிறைந்த கதைகளையும், புதிய தேசங்களைக் கண்டுபிடித்த அற்புத வரலாறுகளையுங் கற்பிக்கவேண்டும். இஃது பூமிசாஸ்திர பாடத்திற்கு ஓர் அஸ்திபாரமென்று கூறலாம். கைவேலை, சித்திரம், சங்கீதம், நடனம் முதலியன பிள்ளையின் விவேகத்திற்கு ஆர்வத்தை உண்டாக்கும். மேற்படி பாடங்களில் உபயோகிக்கும் உபகரணங்களிலிருந்தும், ஏனைய காட்சிப் பொருட்களிலிருந்தும், வாசிப்பு, எழுத்து, எண் படிப்பித்தல் நன்று. எட்டாம் பராயம் வரையுமுள்ள பாலர் இப்பருவத்திற் குரியர்.

மூன்றும் உபபருவம்:—இப்பருவத்திலுள்ளவர்கள் பகுத்தறிவு, அவயவங்களின் உபயோகம், கிரகிக்குந் திறமை, ஞாபகசக்தி என்பவைகளிலே முற்பருவங்களிலும் அதிக விருத்தியுடையவராவர். இப்பொழுது வீட்டுள்ளிருக்கும் விஷயங்களைமாத்திரமன்றி அயல் விஷயங்களையுங் கண்டும், கேட்டும், அறிந்துங்கொள்வர். இப்பருவத்தில் ஞாபகம் சிறந்து விளங்குமென்ற ஓர் கொள்கை யுண்டு. ஆனால் உண்மை யெதுவெனில் இப்பருவத்திலுள்ள சரீர அமைப்பு ஞாபகத்திற்குச் சிறந்ததாயிருக்கிறது. ஞாபகசக்திக்குறையை வளர்ந்தவர்கள் நியாயரீதியாலும், எண்ணங்களைத் தொடர்பாக அமைத்துக்கொள்வதினாலுஞ் சமப்படுத்துவர். தேவதைகளைப்பற்றிய கதைகளிலும், ஏனைய கற்பனைக்கதைகளிலும் பிள்ளைக்கு இன்னும் பிரியமிருந்தபோதிலும் மனம்போனபடி விஷயங்களை ஆலோசியாமற் றீர்ப்புச் செய்கிற குணம் அற்றுப்போகிறது. ஆதலால் இப்பருவத்திலே சாஸ்திர உண்மைகளைத் தெளியவும், கட்டுக்கதைகளை ஆக்கவும், விஷயங்களைப்பற்றித் தொடர்பாக நியாயிக்கவும், சம்பவங்களை

யுங் காட்சிகளையும் விவரிக்கவும், தேசவாழ்க்கையைத் தெளிந்து அபிமானிக்கவும், கருதியன செய்யுங்கால் சோம்புத லில்லாமையையும், பாஷையைத் தக்கவாறு பிரயோகிக்கும் வன்மையையும், பொறுப்பை உணர்ந்து வாய்ப்பான செயல்முறைகளை மேற்கொள்ளுந் தன்மையையும் அடைவர். மாணவர்களுக்கு அதிக அறிவைப் புகட்ட முயற்சிப்பதிலும் பார்க்கக் கொஞ்சமேனுந் திட்டமான அறிவைப் புகட்டல் நலம். அவர்களுக்கு அத்தியாவசியகந் தேவையெனக் கருதுஞ் சில உண்மைகளை மனப்பாடஞ் செய்வித்தல்வேண்டும். மாணவர் தம் எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கு இப்போது வாசிப்பு, கணிதம், எழுத்து உதவும். இப்பருவத்திலும் முற்பருவத்திற்போலவே உடல் வளர்ச்சி நன்கு நடைபெறும். ஆனல் முன்பருவத்தில் ஆண்களும் இப்பருவத்திற் பெண்களுங் கூட வளருவார்கள். கீழைத் தேசங்களிற் பெண்கள் ருதுவாகிப் பெரும் மாற்ற மடையுங் காலம் இதுவே. இப்பருவத்தில் உடம்பை வசப்படுத்துவது இலகுவாதலால் சிலம்பவிளையாட்டு முதலிய தேகப்பயிற்சிக்கு அஸ்திபாரமிடுவது நலம். சங்கீதம், சிற்பம், ஓவியம், பிறபாஷையை நன்கு உச்சரித்தல் ஆதியன இப்பருவத்திலே பயிற்றுதல் நலம். ஏனெனில் இப்பருவங் கடந்தால் அவை பிள்ளைக்குத் தக்க வல்லபமாக விளங்க மாட்டா.

நான்காம் உபபருவம்:—மாணவர் ஆரம்ப பாடசாலைகளிலிருந்து விலகி உயர்தர பாடசாலைகளை நாடுவார்கள். ஆசிரியர் வினக்கள் மூலம் மாணவர் இதுகாறும் பெற்ற அறிவை மட்டிடல் வேண்டும். சுவநம்பிக்கையும், சுவமுயற்சியுமே மாணவரின் முக்கிய இலக்கா யிருக்கவேண்டும். ஆசிரியருந் தக்க மேற்பார்வை யிடவேண்டும். பாடசாலை நூல்நிலையம் அத்தியாவசியகம் வேண்டப்படும். பாஷைத் திருத்தத்திற்காகச் சிறந்த இலக்கியங்களை ஆராய்ந்து படிக்கச் செய்தல்வேண்டும். கணிதம், இதிகாசம், பூமிசாஸ்திரம் சென்ற பருவங்களிற் படித்ததிலும்பார்க்க ஆராய்வாகச் செயல்முறையிற் பயிலுதலே இப்பருவத்தின் இறுதி யிலக்கு. இப்பருவ மாணவருக்கு நேரசூசி வித்தியாசப்படும். பாடங்களின் நேரத்தைச் சிறிது கூட்டலாம். தேகப்பயிற்சி, சங்கீதம் தினமுங் கொள்ளற்பாலன. தையல், கைவேலைக்கு அதிகநேரங் கொடுக்க வேண்டும். உயர்தரவகுப்பு மாணவருக்குச் சில சௌகரியங்கள் கொடுக்கவேண்டும். அவர்களை மாணவர் தலைவராகவும் பாடசாலை நூல்நிலையப் பொறுப்பாளராகவும் நியமிக்கலாம். அன்றியும் விளையாட்டிடத்திற் பாலரை மேற்பார்வைசெய்ய விடுதலும் உசிதம்.

பெரும்பாலும் இப்பருவத்தில் விடுகை வகுப்பு தலைமை ஆசிரியரின் பொறுப்பிலிருக்கவேணடும். மாணவர் இப்பருவத்தின் முடிவிற் சமுதாய வாழ்விலும், உலகவிஷயங்களிலும் ஈடுபடவேண்டியிருப்ப தாற் தலைமையாசிரியர் தகுந்த கவனமும் மேற்பார்வையுஞ் செலுத்த வேண்டும். இப்பருவ மாணவர் மனதில் மேலான தத்துவங்கள் விரிந்து விளங்கத் தொடங்கும். புத்தி கூர்மையடையும். ஆரம்பத் திற் புத்தியைச் சூழ உளச்சுவை அல்லது மெய்ப்பாடுகள் ததும்பி விளங்கும். இதுகாறுந் தோன்றி மறைவாய்க் காணப்பட்ட மெய்ப் பாடுகள் தடித்து நிலையானவைகளாய் மாறும். உதாரணமாக நூத னப்பிரியம் காரியங்களைச் சரியா யறிய விரும்பும் ஆர்வமாகவும், பின் பற்றுதல் ஒழுக்கமாகவும், போட்டி போரவாவாகவும், மயங்குந் தன்மை காரணகாரியங்களை அறியவும், சிறு பிராயத்திலிருக்கும் பொருளாசை நியாயமான வழியிற்றேடிய உடைமையாகவும் மாறும். இவற்றைவிட மனமானது மனோராச்சியத்து (மனக்கோட்டை)க் குரிய எண்ணங்களாலும், நம்பிக்கையாலும், வேறும் உளச்சுவை அவாக்களாலும் நிரம்பியிருக்கும். ஆதலால் மனமானது நிகழ் காலத்திலும் பார்க்க எதிர்காலத்திலேயே சீவிக்கின்றது. இவ்வித மாகப் பல துறைகளிலுந் தாக்கப்படும் இப்பருவத்தைப் "புயற்பரு வம்" என்பர்.

---

மாறில் லாத புகழுடை யோனரன்
மைந்தன் மாவலி கங்கை வயலில்
ஏரும் பூட்டி யிணைக்கிணை சால்விட்
டிணங்க வேநின் றுழுகின்ற நேரம்
ஆறு பாயக் குதிக் கொள்ள
அஞ்சி யேபுள்ளிக் காளை வெருண்டு
சீறியே யெங்கள் பள்ளன்மேற் பாயத்
தியங்கிச் சேற்றில் விழுந்தான்கா ணுண்டே.

[க. ம. ப: செ. 87]

*

# தசமபின்னங் கற்பிக்க மூன்று முறைகள்

(க. சிவலிங்கம்)

ஆரம்ப பாடசாலைகளிற் பிள்ளைகள் தசமபின்னங் கற்கத் தொடங்கும்பொழுது மிகவுங் கஷ்டப்படுகின்றனரென்பதை யாமறிவோம். அது திருந்திய முறையிற் கற்பியாமையினாலேயே பெரிதும் நிகழ்கின்றது. இப்பாடத்தைக் கற்பிப்பதற்கு மாணவரின் முன்னறிவையே உதவியாகக் கொள்ளுதல்வேண்டும். அவர்களின் முன்னறிவிற்கேற்கப் பாடத்தைத் தொடங்கினால் அப்பாடம் அவர்களுக்கு மிகவும் இன்பகரமானதா யிருக்கும். இவ்விதம் பிள்ளைகளின் முன்னறிவை யொட்டிக் கற்பிக்கும் முறைகள் பல உளவேனும், பின்வரும் மூன்று முறைகள் மூன்று படியான முன்னறிவையுடைய பிள்ளைகளுக்குத் தனித்தனி ஏற்றனவாகும்.

## 1-வது முறை:

### சாதாரண பின்னந் தெரியாத பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் முறை

இவர்களுக்கு முதன்முதல் கரும்பலகையில் ஒரு இலக்சத்தை, உதாரணமாக 7ஐ எழுதிப் பின் இடப்பக்கமாக இன்னொரு 7 எழுதி (77), இப்படியே இடப்பக்கமாக ஏழுகளை எழுதி, அவை ஒவ்வொன்றன் 10 மடங்கு எனவும், பின் அத்தானங்களையே வலப்பக்கமாகப் பார்த்தால் $\frac{1}{10}$ மடங்குடையனவெனவுங் காட்டுதல்வேண்டும். பின்னர் முன் எழுதப்பட்ட 7க்கு வலப்பக்கத்தில் ஒரு 7 எழுதினால் அது 7இன் $\frac{1}{10}$ ஆகுமென்றும், ஆகவே அதை ·7 என (7·7) எழுதவேண்டுமெனவும், இப்படியே வலப்பக்கம் செல்லச் செல்ல முன் தானங்களின் $\frac{1}{10}$ ஆக இருக்குமெனவும் காட்டுதல்வேண்டும். கூட்டல் கழித்தல் படிப்பிப்பதாயின் தசக்குற்றுக்கள் நேரே இருக்க எழுதிச் செய்யவேண்டுமென்று கூறிச் செய்துகாட்டுக.

2-வது முறை:

## சிறிது பின்னமறிந்த பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் முறை

இந்த முறைப்படி 4-ம் 5-ம் வகுப்புக்களிற் படிப்பிக்கலாம். இவர்களுக்கு $\frac{1}{2}$, $\frac{1}{4}$, $\frac{1}{10}$ என்பனபோன்ற சிறு பின்னங்கள் தெரியுமாதலின் இவைகளையே முன்னறிவாகக் கொள்ளுதல் வேண்டும். இதனை ஆதாரமாகக் கொண்டு பின்வருமாறு படிப்பிக்கலாம்; 10சதம் 1 ரூபாவின் என்ன பங்கு என்று மாணவரைக் கேட்டால் அவர்கள் 1 ரூபாவின் $\frac{1}{10}$பங்கு என்று சொல்லுவர். அதை இன்னொருமுறையாக எழுதினால் ·1 ரூபா என எழுதலாமென எழுதிக்காட்டி, 30 சதம் ஒரு ரூபாவின் என்ன பங்கு என்று கேட்டால் $\frac{3}{10}$ ரூ=·3 ரூபாவெனக் கூறுவர். 70 சதம் 1 ரூபாவின் என்னபங்கு என்று கேட்டால் $\frac{7}{10}$ ரூ=·7ரூபா வெனக் கூறுவர். இதை ரூபாவோடு சம்பந்தப்படுத்திக் காட்டுமிடத்து,

| | ரூபா.ச. |
|---|---|
| ·1 ரூபா | —10 |
| ·3 ரூபா | —30 |
| ·7 ரூபா | —70 |
| 1·1 ரூபா | 1—10 |

என எழுதலாமெனச் செய்துகாட்டி, 1·1 ரூபாவை வேறெப்படிச் சொல்லலாமென்று கேட்டால் 1 ரூபா 10 சதம் என்பர். கூட்டல் கழித்தல் செய்யும்பொழுது தசமக்குற்று நேரே இருக்க எழுதிச் செய்யும்படி செய்து காட்டவும் முதலில் ·9 க்குள் கூட்டல் கழித்தல் இருக்க வேண்டும்; பின்பே இரண்டு, மூன்று தசமதானங்களுக்கு வரவேண்டும். அடிமட்டத்திலும் வைத்து ·1,·2,·3,·4, என்பவற்றை விளக்கிக் காட்டவேண்டும். இவற்றிற் பல அப்பியாசங்கள் கொடுக்க வேண்டும்.

3-வது முறை:

## சாதாரண பின்னம் நன்கறிந்த பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் முறை

$\frac{3}{10}+\frac{3}{100}+\frac{3}{1000}$ இவற்றைச் சுருக்கமாக எழுதும் முறை ஒன்றுண்டெனக் கூறி, அது ·333 என எழுதிக் காட்டி, முத

லாவது 3, $\frac{3}{10}$ என்றும், 2-வது 3, $\frac{3}{100}$ என்றும், 3-வது 3, $\frac{3}{1000}$ என்றும் கூறி, இத்தசமக் குற்றுப் பகுதிகளாய 10, 100, 1000 என்பவற்றையும் இடையேயுள்ள சக அடையாளங்களையும் அடக்கியிருக்கிறதெனக் கூறவேண்டும். பின் $\frac{3}{10}+\frac{5}{100}+\frac{9}{1000}$ ஐ எழுதி, இவற்றைத் தசமபின்னங்களாகச்செய்து பின்னும் ஒவ்வொரு தசமதானங்களைப்பற்றியும் வற்புறுத்தவேண்டும். இவ்விதம் பல அப்பியாசங்கள் கொடுத்தபின் இதனுண்மையை, ·491, ·573 என்னும் தசபின்னங்களைச் சாதாரணபின்னமாக்குதல் மூலம் விளக்கலாம். அதாவது, $\cdot 491 = \frac{4}{10}+\frac{9}{100}+\frac{1}{1000}$ என்று எழுதுவதிலும் பார்க்க $\frac{400+90+1}{1000}=\frac{491}{1000}$ எனச் சுருக்கமாக எழுதலாமெனக் கூறி, ·573 ஐயும் இவ்வாறே செய்து காட்டிப் பல அப்பியாசங்கள் மூலம் தாடனப்படுத்தல்வேண்டும்.

ஆகவே, சாதாரணபின்னமாக்கும்பொழுது, பகுதிக்கு 1உம், தசமதானங்களெத்தனையோ அத்தனை சுன்களும் இடவேண்டும்; தொகுதி தசமதானத்தின் எண்களே.

அப்பியாசங்கள் கொடுக்கும்போது படிப்படியாகப் பின்னங்களைச் சுருக்கிச் சொல்வதையும் சேர்க்கலாம். இறுதியில் வரும் சுன்களுக்கு விலையில்லையென்பதையும் கடைசியாகக் காட்டிக்கொடுக்கலாம்.

அதன்பின் சாதாரண பின்னத்தைத் தசமபின்னமாக்குதல் படிப்பிக்கலாம்.

## சதாரண பின்னத்தைத் தசமபின்னமாக்கப் பொதுமுறை.

$\frac{1}{8}=\frac{x}{10}$

$x=1\frac{1}{4}$

பின்னம் $=\frac{1}{10}+\frac{1}{40}$

$\frac{1}{40}=\frac{x}{100}$

$x=\frac{100}{40}=2\frac{1}{2}$

பின்னம் $=\frac{2}{100}+\frac{1}{200}$

$\frac{1}{200}=\frac{x}{100}$

$x=5$

பின்னம் $=\frac{5}{1000}$

$$\text{முழுப்பின்னம்} = \frac{1}{10} + \frac{2}{100} + \frac{5}{1000}$$
$$= \frac{125}{1000}$$
$$= \cdot 125$$

இம்முறைக்குரிய இக்கிரியைவழியை மேல் வகுப்புகளிலன்றிக் கீழ்வகுப்புகளிற் காட்டிக்கொடுத்தல் கூடாது. அவ்வகுப்புக்களில் விதிமாத்திரம் படிப்பிக்கப்படல் வேண்டும்.

சாதாரணபின்னமறிந்த பிள்ளைகளுக்குத் தசமபின்னத்தின் ஏனைய பாகங்கள் படிப்பிக்குமுறைகளை இவ்வாறே ஆராய்ந்தறியலாம்.

---

"இயற்கை தனது வளர்ச்சியில் பாய்ந்து பாய்ந்து செல்வதில்லை. அது படிப்படியாக வளர்ந்துகொண்டே போகும்.

உதாரணம், ஒரு முட்டைக்குள் ளிருக்கும் வஸ்துக்கள் குஞ்சாகும்வரை படிப்படியான குறித்தஅளவான மாற்றங்களை யுடையனவா யிருக்கும். அந்தக் குஞ்சு முட்டையின் ஓட்டை உடைத்து வெளி வரும்வரையில் அம்மாற்றங்களில் ஒன்ருவது நடைபெருமல் விடமாட்டாது.

இதேமாதிரியாகவே ஒரு மேஸ்திரியும் தன் கட்டிடத்தை வளர்த்துக்கொண்டுபோவான்.

ஆசிரியர்கள் தங்கள் சுகத்தையும் பிள்ளைகள் சுகத்தையும் நோக்கிப் படிப்பிக்கப்போகும் பள்ளிப் பாடங்களை வகுக்காது விடுவது பெரிய மடமைத்தனமாகும்.

ஆனபடியால்,

1. பள்ளிக்கூடங்களில் படிப்பிக்கப்படும் பாடங்களை எல்லா வகுப்புக்களுக்குமாகக் கிரமப்படி வகுக்கவேண்டும். ஒரு வகுப்பில் படிப்பிப்பன அடுத்தவகுப்புக்குரிய பாடவிஷயங்களுக்கு முன்னறிவைக் கொடுப்பனவா யிருக்கவேண்டும்.
2. பாடங்களை வகுத்தமாதிரியாகவே அவ்வகுப்புக்குரிய முழுக் காலங்களையும் வகுத்து ஒவ்வொரு நேரத்துக்கும் இன்ன இன்ன வேலையெனக் குறிக்கவேண்டும்.
3. வகுக்கப்பட்ட நேரத்தையும் அதற்குரிய பாடத்தையும் தவருது ஒழுங்கின்படி நடத்தவேண்டும். அவற்றில் ஒன்றையேனும் தவிர்க்கவும் மாற்றவுங் கூடாது."

"கொமினியஸ்"

# பாலர் கழக வரலாறு

(மு. இராசதுரை)

பாலர் பயிற்சி முறையை நன்கு அறியவேண்டின் பாலர் கழக வரலாற்றை யறியவேண்டியது முறையும் அவசியமுமாகும். பாலர் கழக வரலாற்றைச் சுருக்கமா யறியுமுகத்தான், அதனை வளர்த்த வர்களையும் அவர்கள் நோக்கத்தையும், குழந்தைகட்கு வளர்ந்தவர் களினும் வேருன தனிப்பட்ட முறையிற் பயிற்றவேண்டிய காரணத் தையும் நாமறிதல் கூடும். அன்றியும் பாலர்பயிற்சி சம்பந்தமான பழைய தவருன முறைகளைக் கைவிடவும் புதிய நல்ல முறைகளை அனுசரிக்கவும் தூண்டக்கூடியது பாலர் கழகங்களின் வரலாறே யாகும்.

## உற்பத்தியும் வரலாறும்

இங்கிலாந்திலே அன்ட்றூபெல் (Andrew Bell) யோசேவ் லன்காஸ்ரர் (Joseph Lencaster) என்ற இவ்விருவரும் ஏழைகள் கற்றற்குரிய பாடசாலைகளை அமைத்து மொனிற்றர் (சட்டாம்பிள்ளை) முறையாய்க் கல்வியை ஊட்டிவந்த காலத்திலே பாலரும் விருத்த ரும் ஒருசேர ஓர் அறையில் ஒரே முறையில் ஒரு நோத்தில் கற்பிக் கப்பட்டுவந்தனர்.

இப்போதுள்ள பாலர் பயிற்சிக் கழகம் இற்றைக்கு ஏறக்குறைய நூறுண்டுகளுக்கு முன்னே ஸ்கொத்திலாந்து தேசத்திலே முதன் முதலாகத் தோன்றியது. அதன் தந்தை றெபேட் ஒவென் (Robert Owen) என்பவராவர். அவர் அப்போது 'நீயூலார்னுக்' என்ற இடத்தில் உள்ள பஞ்சு ஆலைக்குத் தலைவராய் இருந்தார். பஞ்சு ஆலை யில் வேலைசெய்யும் பெண்கள் தம் குழந்தைகளை வீட்டிலே தனிமை யாய் விட்டுச் செல்வர். அதனுல் அவர்க ளடையும் கஷ்டங்களை நிவர்த்திசெய்வதே இவரின் நோக்கமாகும். தாய்மார் வேலைசெய் யும்பொழுது குழந்தைகளை ஒரு பெரிய அறையில் விட்டு அவர்களைப் பாதுகாக்க ஒரு ஸ்திரீயை நியமித்தனர். இவ்வாறிருக்கையில் விளை யாட்டுச்சாமான்கள், படங்கள், சங்கீதம் ஆதியன இன்றிப் பிள்ளை கள் சந்தோஷமாய்ப் பொழுதுபோக்க முடியாதென அறிந்தார்.

ஆகையால் அவர்களுக்கு அப்பொருள்கள் அளிக்கப்பட்டன. அப்பொழுதும் குழந்தைகள் வீண்நேரம் அதிகமாகப் போக்கிக்கொண்டிருந்தனர். அந்நேரத்தை உபயோகப்படுத்த அட்சராப்பியாசந் தொடங்கினர். பின் படிப்படியாய் விளையாட்டுகளும் பராமரிப்புச் சாலைகளும் அருகப் படிப்பித்தலே கூடியது. பராமரிப்புச்சாலை காலகெதியில் ஒரு பள்ளிக்கூடமாய் மாறியது.

## முதலாவது தலைமையாசிரியர்

ரொபேட் ஓவன் அப்பாடசாலைக்குத் தலைமைஆசிரியராய்ப் புச்சானன் (Buchanan) என்பவரை அமர்த்தினர். உவாட்டலூச் சண்டை நடந்த அடுத்த வருடமாகிய 1846-ம் ஆண்டில் இவ்வித்தியாசாலை மிக வூக்கமாய் நடத்தப்பட்டுவந்தது. லோட்பிறவ்ஹாம் (Lord Brougham) இப் பாடசாலையைப் பார்த்தபோது அவர் அங்கு கண்டனவெல்லாம் அவர் மனத்திலே அழுந்தியன. அதன் பயனாக பாலர் கல்விமுறையை அபிவிர்த்திசெய்ய ஒரு சங்கமும் லண்டனில் புறூவேர்ஸ் கிறீன் (Brewer's Green) என்னும் இடத்தில் பாலரைப் பயிற்றும் மாதிரிப் பாடசாலை யொன்றும் ஸ்தாபிக்கப்பட்டன. அப்பாடசாலைக்குத் தலைமையாசிரியராய் லாணுக்கி லிருந்த 'புச்சானன்' என்பவரையே நியமித்தனர். இப்பாடசாலை மிகுந்த பயன் அளித்தமையைக் கண்டு 'ஸ்பீற்றர் வீல்டஸ்' என்றவிடத்தில் அதுபோன்ற வேறோர் பாடசாலையுந் தொடங்கினர். அதை நடத்துவதற்கு புச்சானன் தமது பாடசாலையை மிகுந்த ஊக்கத்துடன் அடிக்கடி தரிசித்துவந்த உவில்டர் ஸ்பின்ஸ் என்னும் ஒரு வாலிப விகிதரை நியமித்தார். இவரின் நியமனம் பாலர் கல்வியில் புதிய சகாப்தத்தைத் தொடக்கிய தெனலாம். உ.வில்டர் ஸ்பின்ஸ் தானகவே ஒரு புதிய முறையை வளர்த்து அதனை யாவருமறிய வெளியிட்டனர். இவர் பாலர் கழகங்களைப் பரப்பவந்த தூதரெனலாம். இவர் பிரித்தானியாவின் எப்பாகங்களிலும் சென்று தமது அபிப்பிராயங்களை யாவருக்கும் பிரசங்கித்து அவ்விடங்களிலெல்லாம் பாலர் பள்ளிக்கூடங்களைக் கட்டுவித்தனர். அற்ப ஊதியம் வந்தபோதிலும் அதைப் பொருட்படுத்தாது தாம் இயற்றிய புதிய பாடசாலையிலுள்ள மாணவரும் ஆசிரியரும் தமது புதுமுறைகளை நன்கறிதற்காய் ஆறு கிழமைகளுக்குமேல் தங்கிநின்று தாமாகவே முன்மாதிரியாய்க் கற்பித்துவருவார். இவ்வாறு முந்நூறு பாலர் பள்ளிக்கூடங்களுக்கு மேல் தொடங்கினர். 19-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சாகிய நிலைமையால் ஏற்பட்ட பாலர் பயிற்சிக்கழகங்கள் 20-ம் நூற்றாண்டின்

தொடக்கத்தில் பாலர் பராமரிப்புக்கழகங்கள் (Nursory Schools) தோன்றுவதற்குக் காலாயிருந்தன. நெப்போலியன் யுத்தத்தில் தொடங்கிய பயிற்சிக் கழகங்கள் மகாயுத்தத்தில் பராமரிப்புக் கழகங்களாய் மாறியதெனலாம்.

உவில்டர் ஸ்பின்ஸ் காலத்தில் அவரால் ஏற்படுத்தப்பட்ட பாடசாலைகள் அக்காலத்தவரால் வியக்கப்பட்டனவாயினும் தற்காலத்துள்ள பாடசாலைகளிலும் பார்க்கமிகவும் குறைந்த நிலையிலிருந்தன. அக்காலப்பாலர் பாடவும் தேகாப்பியாசம் செய்யவும் பொழுது போக்கான விளையாட்டில் பங்குபற்றவும் பாடங்களைப் பொருட் குறிப்பாக விளங்கவும் விடப்பட்டார்கள், ஆனல் எல்லாம் ஒரு பெரிய அறையில் நிகழும் தலைமை ஆசிரியரும் அவர் பாரியாருமே அப்பள்ளிக்கூடத்தில் பராயமடைந்தவராவர். பாடங்கள் மாணவர் தலைவராலேயே பெரும்பாலும் நடாத்தப்படும். உண்மையில் மாணவரை வேறுமாணவர் படிப்பித்தனர்.

## மாணவ தலைவர்.

உவில்டர் ஸ்பின்ஸ் பாடசாலை ஒரு பெரிப அறையாகும். அதன் ஒரு அந்தத்தில் எல்லாமாணவரும் சேர்ந்து இருக்கக்கூடிய படிக் கட்டாசனம் (gallery) உண்டு. அதற்குமுன்னே இரண்டு அல்லது மூன்று மாணவதலைவர்கள் நிற்கக்கூடிய ஒரு மேடைகட்டப் பட்டு இருக்கும். மேடையைச்சுற்றி மாணவாசிரியர்கள் தட்டுண்டு விழாவண்ணம் இருப்புச்சலாகைகள் வரிசையாய் அடிக்கப்பட்டிருக்கும். அறையைச்சுற்றிவரச் சுவர் ஓரங்களில் சமதூரத்தில் நாலு அடி உயரமான கம்பங்களிருக்கும். இவை வேண்டியபோது கரும் பலகை வைக்கவும் பாட அட்டவணைகள் தொங்கவிடவும் உபயோகமாகும்.

## உவில்டர் ஸ்பின்ஸ்—விரேபெல்

## (Wilder Spins Froebel)

ஆரம்பகாலத்தில் பிரதம பாடசாலைகள் தொடங்கியதுபோலவே பாலர் பாடசாலையுந் தொடங்கி மாணவதலைவர்களால் கற்பிக்கப்பட்டு வந்தது. 1846-ம் ஆண்டில் மாணவதலைவர் முறைபோய் மாணவாசிரியர் முறைவந்தது. அப்பொழுது ஒரு ஆசிரியர் அல்லது இரு ஆசிரியரால் பள்ளிக்கூடம் நடாத்தப்பட்டது. வகுப்பாசிரியர்கள் வாலிபராகவே இருந்தனர். 1870-ல் பள்ளிக்கூடங்கள் சங்கமூலமாக நடை

பெறத் தொடங்கியபோது படிப்படியாக வகுப்பறைகள் அடங்கிய பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு வந்தன. மாணவதலைவரிலிருந்து காலகதியில் வயது முதிர்ந்த ஆசிரியர்கள் கற்பிக்கத் தொடக்கினர். பாடசாலை ஒழுங்குமுறையிலும் கல்விமுறையிலும் அதிகமாற்றம் ஏற்பட்டது. பாலரின் சுபாவ குணங்களும் யோசிக்கும் ஆற்றலும் நன்ருக ஒருவருக்கும் விளங்கவில்லை. உவில்டர் ஸ்பின்ஸ் கேத்திரகணித உருவங்களையும் மகாகோடிவரையில் எண்மானத்தையும் இக்காலத்தில் ஏழுவயதுக்குட்பட்ட மாணவரின் சக்திக்கு அப்பாற்பட்டன வென்று மதிக்கப்படும் பல விஷயங்களையும் கற்பிக்க முயற்சித்தார். இதிலும் பார்க்கத் தவருக நடந்தது யாதெனில், பாலர்களும் மேல் வகுப்பு மாணவருக்குரிய முறையில் கற்பிக்கப்பட்டு வந்ததேயாகும். ஆனால் ஆசிரியர் விரோபெல் என்பவரின் போதனையின்பின் பெரு மாற்றங்க ளேற்படத்தொடங்கின.

## விரோபெல் (Froebel.)

விரோபெல்முறை 1854-ம் ஆண்டு இங்கிலாந்தில் ஆரம்பமானது. இம்முறை தொடங்கிய அடுத்த ஆண்டு சாள்ஸ்டிக்கன்ஸ் என்ற நூலாசிரியர் இதைப்பற்றிப் பத்திரிகைகளில் வெளியிட்டனர். சிறிது காலத்தில் பாலர் பயிற்சிக் கழகங்களின் அத்தியாவசியத்தை அநேகர் உணர்ந்தனர். லண்டனில் உள்ள ஒரு பாடசாலை முகாமைச் சங்கத்தார் வித்தியாதரிசிப் பதவி அளிப்பதற்காக ஆறு மாணவரைத் தெரிந்து (Kindergarten) கின்டர்காடின் (பாலர்தோட்டம்) முறையைப்பற்றி வினக்கள் வினவியபோது ஒருவராயினும் அச்சொல் என்ன குறிக்கிறதென்பதுகூடத் தெரியாதவராயிருந்தனர். 19-ம் நூற்ருண்டின் இறுதிக்காலத்திலே விரோபெலின் நன் முறைகள் இங்கிலாந்தில் ஒருவாறு பரம்பலாயிற்று. இருபதாம் நூற்ருண்டின் ஆரம்பத்திலே இக்காலத்துள்ள சுயாதீனத்தையும் மனச் சந்தோஷத்தையும் அளிக்கக்கூடிய சிறந்த முறையிற் பயிற்றும் பாடசாலைகள் ஏற்பட்டன.

## குழந்தை வயதானவர்களிலும் வேருயது

சிலகாலஞ் சென்றபின்பே குழந்தையானது சிறிய அமைப்பு அல்ல என்ற உணர்ச்சி தோன்றியது. அதன் விருப்பு வெறுப்புக்களும் கற்கும் விதமும் கற்கும் அளவும் வயதேறினவரிலும் பார்க்க வித்தியாசமானது. வகுப்பறை யொழுங்கும் அவர்களுக்கு முற்றும் வித்தியாசமானது. எல்லாவற்றிலும்பார்க்க அவர்களின் ஊக்க மிகுதியும் கைச் சுறுசுறுப்பும் எவராலும் அங்கீகரிக்கப்பட்டன.

முன்னே சந்தோஷமின்றி மிக அமைதியாயிருந்த பாடசாலை இப்பொழுது சிறந்த தொழிற்சாலையாயும் மகிழ்ச்சிக்குரிய இடமாயும் விளங்கியது. கட்டுப்பாட்டுக்கு அமையவேண்டிய நேரம் ஒழிந்த ஏனைய நேரங்களில் பேச்சுக்களும் சத்தம்செய்தலும் மிக விருப்பத்தோடும் ஊக்கப்படுத்தப்பட்டன. பாலருக்குரிய இயற்கை ஆற்றல்களும் முயற்சிகளும் ஆரம்பிக்கப்பட்டன. அங்கு மாணவர் சிரித்தலும் பேசுதலும் விளையாடுதலும் ஆசிரியரால் அங்கீகரிக்கப்பட்டதன்றி ஊக்கப்படுத்தப்பட்டும் வந்தன. கணிதம், வாசிப்பு, எழுத்து என்ற பிரதான பாடங்களில் கவனஞ் செலுத்துவது படிப்படியாய்க் குறைய சாகிய ஒழுக்கம், சுயகுணம், பழக்க வழக்கம், கை, நா என்பவற்றை வன்மையாய் உபயோகித்தல் ஆதியனவற்றில் கூடிய கவனஞ் செலுத்தத் தொடங்கினர். விறொபெலின் விளையாட்டு மூலங் கற்கும் முறையே பாலர் பயிற்சிக் கழகங்கள் முழுவதிலும் இடம் பெற்றது.

விறேபெல் — மொன்றிசூரி (Montessori) இருபதாம் நூற்றுண்டு தொடங்கிப் பத்து வருடங்களின்பின் ஒரு புதிய கிளர்ச்சி தோன்றியது. 1912ல் பண்டிதை மொன்றிசூரி என்பவரின் புகழும் அவருடைய முறையும் இங்கிலாந்தில் பரவியது. இடையிடையே அவரின் முறையும் பரிசீலனைக்கு விடப்பட்டது. ஈற்றில் பண்டிதை தாகைவே இங்கிலாந்து சென்று பல பிரசங்கங்களில் தனது முறையை விளக்கினர். அவருடைய உபகரணங்களும் முறைகளும் அதே முறையில் முற்றுய் அநுசரிப்புக் கெடுத்துக்கொள்ளப்படாதபொழுதிலும் அவருடைய முறையின் சில பொதுவான அம்சங்கள் பாலர் பள்ளிக்கூடங்களில் புத்துணர்ச்சியை உண்டாக்கின. மொனறிசூரி முறையின் இரு பிரதான அம்சங்கள் சுயாதீனமான ஒழுங்கும் மாணவரைத் தனித்தனி பயிற்றும் முறையுமாகும். மொன்றிசூரியைப்பற்றிக் கேள்விப்படமுன்னரே சுயாதீனமான கல்விமுறை ஒழுங்கும் இங்கிலாந்தில் இருந்தது. ஆயினும் அவரால் சுயாதீனத்தைப்பற்றிய எண்ணம் யாவர் மனத்திலும் நன்றாகப் பதிப்பிக்கப்பட்டது.

## தனி முறை

மொன்றிசூரி என்பவர் இங்கிலாந்துக்கு அளித்த ஒரு பெரிய கொடை பாலரைத் தனித்தனிமுறையிற் பயிற்றலாகும். அதன் சிறப்பு இத்துணை என எடுத்துச் சொல்லவும் முடியாது. பன்னிரண்டாண்டுகளில் அது பாலர்பயிற்சிக் கழகங்களில் பெரு மாற்றங்

களை ஏற்படுத்தியது. உவில்டர் ஸ்பின்ஸ் காலத்தில் பள்ளிக்கூட நேரத்தில் மாணவர்கள் படிக்கட்டாசனத்தில் இருந்து பகிரங்கக் கூட்டமாகவோ இன்றேல் சிறிய சிறிய கூட்டங் கூட்டமாகிப் பாட அட்டவணை தொங்கவிடப்பட்டிருக்கும் கம்பங்களைச் சூழ்ந்துநின்று கிளிப்பிள்ளைப்பாடம்போல மாணவதலைவன் சொல்லிக்கொடுப்பன வற்றை விருப்பின்றிக் கற்றுக்கொண்டு பொழுதுபோக்குவர். உவில்டர் ஸ்பின்ஸ் காலத்துக்கும் இப்போதுள்ள காலத்துக்கும் சொல்ல முடியாத வித்தியாசமுண்டு. ஒருமுறை வந்து இன்னொரு முறையை முற்றாய் மாற்றியதென்று கூறவும் முடியாது. உவில்டர் ஸ்பின்ஸ் முறையிலிருந்து விரேபெல்முறையும் பின் மொன்றி சூரி முறையும் தோன்றின. தற்காலத்துள்ள பாலர்பயிற்சிக் கழகம் இம்மூன்று முறைகளிலும் உள்ள சில விஷயங்களோடு தனக்குரிய சிறப்பான முறையில் நடந்துவருகிறது.

இன்னும் சரியான நிலையை அடையவில்லை. இன்னும் தீர்மானிக்கப்படவேண்டிய விஷயங்கள் அநேகம் இருக்கின்றன.

---

ஆகமு முயிரும் போலே யொன்றாய்
அவளிட மாசை யாகிய போது
காகமும் வில்லும் போலவே யென்னைக்
கண்ட கண்ணுங் கடலிற் கழுவித்
தாகமேறிப் பகிர தாகங் கைத்
தனிவயற் பள்ளி தன்குடிற் கேகிப்
போக வென்சலிப் புங்காலிலே தொழுப்
பூண்டி ரோசொல் புலைப்பள்ள ரே.

[க. ம. ப: செய். 77]

# பாலர்பகுதிக்குக் கூட்டல் கற்பிக்கும் முறை

(வே. தம்பு.)

## 1-ம் பகுதி.

கூட்டல் கற்பிப்பதன் நோக்கம் எண்ணும் வேலையைக் குறைத்தலாகும். எண்ணிப் பழகியபின்பே கூட்டல் கற்பிக்கப்படுகின்றது. 5 பொருளும் 3 பொருளு மெத்தனையென அறிதற்கு ஐந்து, ஆறு, ஏழு, எட்டு என்று ஒரு பிள்ளை எண்ணுவானுனல், அவன் எண்ணி யறிகிறுனென்று சொல்லுகிறோம். 5 பொருளையும் 3 பொருளையும் கண்டபொழுது, அல்லது அவ்வெண்களைச் சொல்லக் கேட்டபொழுது அவன் அவற்றின் மறுமொழியை ஞாபகத்திலிருந்து உடனே சொன்னுல், அவனைக் கூட்டிச் சொன்னுனென்று சொல்லுகிறோம். ஆனுற் றொடக்கத்தில் எண்ணுதல்மூலமறிந்ததையே பின்பு எண்ணும் வேலையைக் குறைத்தலின்பொருட்டு ஞாபகத்தில் வைத்திருக்கிறுன். கூட்டிச் சொன்ன விடை சரியோவென வறிதற்கும், கூட்டலைச் சரியாய் விளங்கிக்கொள்வதற்கும் எண்ணி யறிதலே வழியாகும்.

கூட்டலைப் படிப்பித்தற்கு:—

(1) அங்குலக் கனங்களாக வகுக்கப்பட்ட எண்கட்டைகள் அல்லது அங்குலச் சதுரங்களாக வகுக்கப்பட்ட காகித அட்டைகள்


(2) எண்ணுற்கேற்ற மணிகள், (Counter or loose beads)

(3) மணிச்சட்டங்கள்


என்பன மிகவும் உபயோகமான உபகரணங்களாகும்.

தொடக்கத்தில் நடைபெறும் அப்பியாசமெல்லாம் சம்பாஷணை மூலம் நிகழும். பிள்ளைகளின் முன்னிலையில் 3 பொருள்களைக் காட்டி அவற்றின் பக்கத்தில் இன்னுமொரு பொருளை வைத்தால் நான்கு என்று சொல்லுவார்கள். இவ்வாறே மனக்கணித அப்பியாசம் நடக்கும். முதன்முதலுபாத்தியாயர் 2உம் 1உம் எவ்வளவு என்றும்,

பின்பு 2 உடன் 1ஐக் கூட்டு என்றும் பேசுவர். இப்படியே மேலும் கணிதபரிபாஷையைச் சிறிது சிறிதாக அறிவிப்பர். பிள்ளைகள், பொருட்கள் அல்லது மணிகளைக்கொண்டு 3 உடன் 2 ஐச் சேர்த்தால் எவ்வளவென் றறிவார்கள். மணிகள் அல்லது பொருள்களை உபயோகிக்கும்பொழுது முன் எண்ணுங்கால் படித்த எண்படங்களை உபயோகித்தல் மிக நல்லது. ஒவ்வொன்றாக கூட்டி எண்படங்களையெல்லாம் அவர்கள் அமைக்கக்கூடும். உதாரணமாக 4 மணிகளைப் பின் வரும் படமாக அமைத்து, அதனுடன் ஒரு மணியைச் சேர்த்து அடுத்துள்ள 5ன் படத்தை அமைப்பார்கள்.



கீழே காட்டியவாறு அமைக்கப்பட்ட எண் கட்டைகள் அல்லது காகித அட்டைகள் கூட்டல் கற்பிப்பதற்கு மிகவுமேற்றவை.




9 அங்குலக் சட்டையுடன் 1 அங்குலக் கட்டையைச் சேர்த்தால் 10 அங்குலக் கட்டைக்குச் சமனாகுமென்பதை இதன் மூலம் இலகுவாகக் காட்டலாம். அதன்பின் அம்மாணவன்

| | | | |
|---|---|---|---|
| 8உம், | 2உம், | 10க்குச் | சமன் |
| 7உம், | 3உம், | 10க் | ,, |
| 6உம், | 4உம், | 10க் | ,, |
| 5உம், | 5உம், | 10க் | ,, |

என்றிவ்வாறே அமைத்துக் காட்டுவான்.

இவ்வாறாகக் கூட்டும்பொழுது, கட்டையில் உள்ள சதுரங்களைப் பெரும்பாலும் எண்ணியே காண்பான். வளர்ந்தவர்களுக்குக் கூட 9 அங்குலக் கட்டையையும், 8 அங்குலக் கட்டையையும் பார்த்த மாத்திரத்திற் பிரித்தறிவது கஷ்டமாய் இருக்கும். ஆனால், மேலே படத்திற் காட்டியபடி ஒவ்வோர்கட்டையின் அந்தத்திலும், இலக்கம் குறித்தல் நன்று. மணிச்சட்டங்களு மிவ்வாறு உபயோகப் படுத்தப்படலாம்.

| | |
|---|---|
| 2+1 | சமன் |
| 2+2 | சமன் |
| 1+2 | சமன் |
| 3+2 | சமன் |

"சக" அடையாளத்தை அறிவித்தற்குக் கரும்பலகையில், காட்டப்பட்ட விதமாக எழுதி மணிகள் அல்லதுகட்டைகள்கொண்டு, கூட்ட விடப்படல் வேண்டும். அப்பொழுது உபாத்தியாயர் 2 உடன் 1 ஐக் கூட்ட எவ் வளவிற்குச் சமன், என்று கரும்பலகையில் எழுதிய கணக்குகளை வாசிப்பார். சிறிது காலஞ் செல்லச் = என்னுமடையாளம், சமன் என்று எழுதியதற் குப் பதிலாக உபயோகிக்கப்படும்.

கணக் கெழுதிய காகித அட்டைகள் கொடுக்கப்படின் பிள்ளை கள் தனித்தனி கணக்குச் செய்யச் சந்தோஷப் படுவார்கள். பின் காட்டப்பட்டுள்ள வகையான காகித அட்டைகள் செய்து கொடுக்க லாம். அவர்கள் எண்கட்டைகள் அல்லது அங்குலமாக வகுக்கப் பட்ட காகித அட்டைகளைக்கொண்டு கணக்குச் செய்வார்கள்.

| | + | | கூட்டு |
|---|---|---|---|
| 9 | + | = | 10 |
| 8 | + | = | 10 |
| 7 | + | = | 10 |
| 6 | + | = | 10 |
| 5 | + | = | 10 |

| | + | | கூட்டு |
|---|---|---|---|
| 8 | + | = | 9 |
| 7 | + | = | 9 |
| 6 | + | = | 9 |
| 5 | + | = | 9 |

[இவ்வாறு கூட்டல் கற்பிக்கும்பொழுது, முதல் ஐந்திற்குள்படி முறையாகவும், பத்திற்குள் படிமுறையின்றியும் கூட்டல் படிப்பிக் கலா மென்றும், 10 வரையும் படிமுறையாகப் படிப்பிக்க வேண்டு மென்றும், ஆனு லிம்முறை விவேகமுள்ள பிள்ளைகளுக்கு சுவை யற்றதாயிருக்குமாதலின், படிமுறையின்றிப் படிப்பித்தல் நல்ல

தென்றும், பலவாகக் கூறுகின்றனர். இவ்விஷயத்தை ஆராய்வதற்கு, (Mac Lellen, Dewey என்பவர்கள் எழுதிய "The Psychology of Number and its Application to Methods of Teaching") என்னும் புஸ்தகம் துணைபுரியும்.]

எண் கட்டைகள் மூலம் கணக்குச் செய்தற்குக் கணக்கெழுதிய காகித அட்டைகள் கொடுக்கும் காலத்திலேயே, எண்கட்டைகளில்லாமல் கணக்குப்பார்க்கக்கூடிய, பின்வருமாறு இலகுவான கணக்கெழுதிய காகித அட்டைகள் அப்பியாசமாகக் கொடுபடலாம்.

| | |
|---|---|
| 1 + 1 | 3 + 1 |
| 2 + 1 | 3 + 2 |
| 2 + 2 | 1 + 3 |
| 1 + 2 | 2 + 3 |

இவ்வாரம்ப அப்பியாசங்களை நடத்தும் காலங்களில் பெரிய எண்ணுடன் சிறிய எண்ணையும், சிறிய எண்ணுடன் பெரிய எண்ணையும் கூட்டப்பயிற்ற வேண்டும் ஏனெனில் 7+2=9 எனப் பிள்ளை அறிந்து விட்டால் 2+7=9 என்பதை அறிந்துவிட்டானென்று எண்ணக் கூடாது.

பாலர் எண்கட்டைகளைச் சேர்த்து எண்ணுங்கால் 7 அங்குலக் கட்டையுடன் ஒரு அங்குலக் கட்டையையும், ஒரு அங்குலக் கட்டையுடன் 7 அங்குலக் கட்டையையும் சேர்ப்பார்களாகையால் 7+1=1+7=8 என்ற உண்மையைத் தாமாகவே அறிந்துகொள்வார்கள். கீழமைக்கப்பட்ட படத்திற் காட்டியமாதிரியான கூட்டலப்பியாசம், பிள்ளைகளுக்குக் கணிதபாடத்தை ஓர் விருப்பமுள்ள பாடமாக்குமென எண்ணப்படுகிறது. ஆனால், கூட்டும் வல்லமையைப் பெற்றதும், அவர்கள் எண்களையே விரும்புகிறார்கள். அநேக படங்கள் பிள்ளைகளின் மனத்தை வேறு வழியிற் திருப்பும் தன்மை வாய்ந்தன.



குழந்தைகள் எழுத்துவேலை செய்யாதகாலம்வரையில் மறுமொழியை வாயினாலேயேசொல்லுவார்கள். அல்லது மணிகள், மணிச்

சட்டம் முதலியவற்றுற் காட்டுவார்கள். சில சந்தர்ப்பங்களில் மறுமொழியைமாத்திரம் எழுதிக் காட்டவும் கூடும். ஆனுற் கணக்கு முழுவதும் எழுதுவதில்லை.

ஆறுவயதானவர்கள் கூடிய எழுத்துவேலை செய்யவேண்டும். அவர்கள் கணக்குகளைச் சொல்ல எழுதவும் கரும்பலகையில் வெண் கட்டிகொண்டு கணக்குச்செய்யவும் முயலல்வேண்டும். ஆறுவய தில் வழக்கமான கூட்டல்வேலை செய்யவேண்டும். அதாவது எண் களை ஒன்றின்கீழ் ஒன்ருக எழுதிக் கூட்டுதல். திகாந்தமாக எழுதிக் கூட்டுதலிலும், லம்பமாக எழுதிக் கூட்டுதல் மிகவும் முக்கியமானது. சில ஆசிரியர்கள் லம்பமுறையிற்ருன் விலையைப்பற்றிய கஷ்டம் நேரு மாகையால் திகாந்தமுறையாகவே அதிக காலத்திற்குக் கூட்டல் கற்பிக்கின்றனர். இதே காரணத்தால் 10 என்னும் எண்ணைக் கற்பித்தலைப் பின்போடுகின்றனர். ஆனுலிது சரியான முறையல்ல.

## II-ம் பகுதி.

பிள்ளைகள் ஆறுவயதானதும், 1-ம் பகுதியிற் காட்டிய மனக் கணித அப்பியாசங்களில் நன்ருகப் பயின்றிருப்பர். இப்பொழுது முன்னையிலும் கூடிய படியான கூட்டலப்பியாசங்கள் செய்தல் வேண்டும். இப்பருவத்தில் கணக்குகளை, எண்களின் கூட்டங்களை அல்லது கூட்டலின் உண்மைகளை, ஞாபகித்தற்கேற்றதாக ஒழுங்கு செய்யவேண்டும். கூட்டல் சம்பந்தமான உண்மைகள் நாற்பத் தைந்து உண்டு. அதாவது 1...........9 முடியவுள்ள எண்களை நாற்பத்தைந்து முறைகளில் சேர்க்கலாம் என்பதைக் கற்கவேண்டும். சுன்னையும் சேர்த்தால் 55 முறைகளிற் சேர்க்கலாம். 6 வயதிற்கும் 7 வயதிற்கு மிடைப்பட்ட பிள்ளைகள் குறைந்தபட்சம் 25 கூட்டல் முறைகளை அறியவேண்டும்.

### முதல் இருபத்தைந்து கூட்டல்முறைகளையும் படிப்பித்தல்

இவ்விருபத்தைந்தில் முதல் 9 உண்மைகளும் ஒன்றுட னென் றைக் கூட்டுதலால வருவது. எண்ணும் முறையில் அடுத்த இலக்கங் களைச் சொல்லுவதே ஒன்றின் கூட்டல் என்பதை இலகுவாக உணரச் செய்யலாம். பல பொருட்களை உபயோகித்து இவ்வுண்மைகளைக் கற்பிக்கவேண்டு ர. பொருட்களைக் காட்டியவுடன் அவற்றைக்

குறிக்கும் இலக்கங்களைக் கரும்பலகையில் லம்பவரிசையாகவும் பின்பு காகித அட்டையில் கீழ்க் காட்டப்பட்டபடியும் எழுதவேண்டும்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 6 | 2 | 5 | 9 | 7 | 4 | 8 |
| $\frac{1}{2}$ | $\frac{1}{4}$ | $\frac{1}{7}$ | $\frac{1}{3}$ | $\frac{1}{6}$ | $\frac{1}{10}$ | $\frac{1}{8}$ | $\frac{1}{5}$ | $\frac{1}{9}$ |

பிள்ளைகள் இதனைப் பிரதிபண்ணவும் விடல்வேண்டும்.


கழித்தற்பாடத்திற்கு அஸ்திவாரமாக இலக்கங்கள் தவறிய கணக்குகளும் கீழ்க்காட்டியவாறு கொடுக்கப்படலாம்.


| | | | | |
|---|---|---|---|---|
| * | * | * | * | * |
| $\frac{1}{2}$ | $\frac{1}{3}$ | $\frac{1}{6}$ | $\frac{1}{8}$ | $\frac{1}{5}$ |

1உம் 1உம் இரண்டு என்று சொல்லித் தவறிய எண்ணை எழுதலாம்.

## இரண்டைக் கூட்டல்:

இப்பொழுது 3உம் 2உம் எவ்வளவென்றவிடத்து, மூன்று, நான்கு, ஐந்து என்றெண்ணி அறிந்தவர்கள் பார்த்தமாத்திரத்தில் ஐந்து என எழுதுவதற்கு அதிகபயிற்சி பெறவேண்டும். இச்சமயத்திற் பிள்ளைகள் ஞாபகித்துக் கொள்ள வேண்டிய உண்மைகளைச் சரியானமுறையில் பெற்றுக்கொள்ளுகிறார்களோ வென்று கவனித்துக் கொள்ள வேண்டும். வகுப்பிற்குறைவான பிள்ளைகளுக்கு கீழ்க்காட்டப்படும் படங்கள் மிகவும் உபயோகமானவை. மாணவன் அதிக புள்ளியுள்ள





அட்டையின் புள்ளிகளின் தொகையைச்சொல்லிப் பின்னர், மூன்று, நாலு, ஐந்து என்று எண்ணி இரண்டையும் கூட்டிச் சொல்லுவான்.

பின்பு மேற்குறித்த படங்களிலுள்ள புள்ளித் தொகையின் இலக்கங்களையும், மறுமொழியையும், கரும்பலகைகளிலும், நிரந்தரமாக வைத்துக் கொள்வதற்குக் காகித அட்டையிலும், எழுதிக்கொள்ள வேண்டும். நிரந்தரமாக உள்ள காகித அட்டைகளை அடிக்கடி உபயோகிப்பதனால், எண்ணுமலே மறுமொழியைச் சொல்லத்தக்கதாகப் பயிற்சி பெற்றுவிடுவார்கள். உதாரணமாகக் காகித அட்டையில் பின்வருமாறு குறித்துக் கொள்ளுக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 |
| — | — | — | — | — | — | — |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

கூட்டலிற் றொடக்க அப்பியாசங்கள் நடத்தும் பொழுது, பிள்ளைகளை எண்ணிக் கூட்டத்தான் விடவேண்டும். ஏனெனிற் பொருட்களுடன் எண்களைத் தொடர்புபடுத்தும்பொழுது அவ்வாறு எண்ணியறிதல் இயற்கைமுறையாகின்றது. ஆனால் அவ்வெண்ணும் பயிற்சியை மாணவர்களிப்பொழுது கைவிடவேண்டும். விவேகமுள்ள பிள்ளைகள் இரண்டின் மூன்றின் படங்களைப் பார்த்தமாத்திரத்தே எண்ணுமற் சொல்லக் கூடியவர்களாயிருப்பார்கள். ஆனால் சிறிது கடினமான எண்களைக் கூட்டும்பொழுது, எண்ணுதற்கு மணிகள் கொடுபடாவிட்டால், அவர்கள் கைவிரலை எண்ணி அறியப்பார்ப்பார்கள். கைவிரல்கள், எண்ணுதற்கேற்ற மணிகளைப்போல் நல்ல உபகரணமே. இப்பருவத்தில் எண்ணிக் கூட்டுவதற்கு மணிகள் கொடுப்போமானல் அவர்கள் விரலை எண்ணியறிவதற்கும், அநுமதிக்கலாம். இவ்வெண்ணும் பழக்கத்தைக் கைவிடப் பண்ணுதற்கு மாணவர்களைக் குறித்த இலக்கங்களைச் சிறிது நேரம் பார்க்கவிடவேண்டும். அவர்கள் கண்ணையும் காதையும் பயிற்றக்கூடிய இம்முறையை அநுசரிக்குங்கால் சில பிள்ளைகள் கண்ணிலும் பார்க்கக் காதின் பயிற்சியினுல் சீக்கிரமாக அறிந்து கொள்வதைக் காணலாம். இவை சம்பந்தமாக மறுமொழியை மூடிக்கொண்டு மேலுள்ள இலக்கத்தைக் கூட்டிச் சொல்லச் செய்தல் வேண்டும். குழந்தை பிழைவிட்டால் உடனே மறுமொழியைக் காட்டுதலும், அவனெண்ணத் தொடங்குவானுனல் எண்ணுவதை உடனே நிறுத்தலும் வேண்டும்.

இக்கணக்குகளையும் பிள்ளைகள் பிரதிபண்ண விடவேண்டும். அதனால் உறுப்பான இலக்கங்களை எழுதவும் மறுமொழிகளை நினைத்திருக்கவும் வசதியாகும்.

பிள்ளைகள் எண்ணாமலே சரியான கூட்டலைப் பயிலுவதற்கு பின் வரும் முறையும் மிக விசேடித்ததொன்றாகும். ஆசிரியர் மூன்று மணிகளை எண்ணிக் காட்டி அவற்றைப் புஸ்தகத்தால் மூடிவிட்டு பின்பும் இரண்டு மணியைக் காட்டி முந்திய மணிகளுடன் புஸ்தகத்தின்கீழ் வைத்துவிட்டுப் 'புஸ்தகத்தின்கீழ் எத்தனை மணிகள் இருக்கின்றன?' என்று கேட்பார். மறுமொழி சொன்னபின் பிழையோ சரியோவென மணிகளை எண்ணச்செய்து அறியச்செய்வார். இவ்விதமாகப் பல அப்பியாசங்கள் கொடுக்கப்படலாம். இரண்டைக் கூட்டுமிடத்து பிள்ளைகளறியும் கூட்டல் உண்மைகளையெல்லாம், இவ்வாறாகச் சோதித்துச் சரி பிழை யறியவேண்டும். மூன்று நாலு முதலிய எண்களைக் கூட்டும்பொழுதும் இம்முறையில் சோதித்துச் சரி பிழை யறியலாம். இம்முறையால் இரண்டு கூட்டமான பொருட்களைப் பார்த்து மறுமொழியை நிதானிக்காது எண்ணி மறுமொழியைக் காணும் போலிக் கூட்டல் முறையைப் பிள்ளைகள் கைவிடக்கூடும்.

ஒரு பிள்ளை இரண்டு எண்களை வாயாலும் மனத்தாலும் கூட்டப் பயின்றுவிட்டால், அறிந்த உண்மைகளடங்கிய மூன்று இலக்கங்களையும் கூட்டக்கூடியவனாவான். அதாவது அவன் பின் வரும் கூட்டல்களைச் செய்யக்கூடும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | 1 | 3 | 5 | 7 | 6 |
| 1 | 2 | 2 | 2 | 1 | 2 |
| 2 | 2 | 1 | 2 | 2 | 2 |
| — | — | — | — | — | — |

மூன்று எண்களை எப்படிக் கூட்டுவதென்று காட்டுவதற்கு கரும்பலகையில் கணக்கை எழுதி கீழ் இலக்கத்தைக் கடதாசி அட்டையினால் மறைத்துக்கொண்டு மேலிரு இலக்கங்களையும் கூட்டச்செய்தல்வேண்டும். அவ்விரு எண்களும் கூட்டப்பட்டபின் மூன்றாம் எண்ணைக் காட்டி (கீழ் எண்) அதனையும் கூட்டச்செய்தல்வேண்டும்.

செயல் வேறுபாட்டிற்காகவும், கழித்தலுக்காதாரமாகவும் கீழ்க் காட்டப்படும் வகையாக கூட்டற் கணக்குகளை திகாந்தமாகவும் லம்ப

மாகவும் எழுதிக் கூட்டச்செய்க. பிள்ளைகள் இவற்றைப்பார்த்து இரண்டும் இரண்டும் நான்கு, இரண்டும் நான்கும் ஆறு என்று சொல்லி எண்களை எழுதவேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | + | | = | 4 |
| | + | 4 | = | 6 |
| 2 | + | | = | 9 |
| | + | 2 | = | 7 |
| 2 | + | | = | 10 |
| | + | 2 | = | 8 |
| 2 | + | | = | 5 |
| | + | 1 | = | 3 |

| | | | |
|---|---|---|---|
| * | 2 | * | 2 |
| 2 | * | 2 | * |
| — | — | — | — |
| 4 | 6 | 9 | 7 |

இரண்டு என்னும் எண்ணின் கூட்டல் சம்பந்தமாகக் கீழ் உள்ள உண்மைகளை மாணவர் படித்தல் வேண்டும். இது ஒரு உபயோகமான அட்டவணை (chart) ஆகும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | 6 | 4 | 5 | 2 | 7 | 8 |
| 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 |
| — | — | — | — | — | — | — |
| 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 |
| 3 | 6 | 8 | 5 | 1 | 7 | 4 |
| — | — | — | — | — | — | — |
| 2 | 1 | 3 | 1 | 1 | 6 | 1 |
| 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 7 |
| 2 | 6 | 2 | 5 | 2 | 2 | 2 |
| — | — | — | — | — | — | — |
| 2 | * | 2 | * | 2 | * | 2 |
| * | 2 | * | 2 | * | 2 | * |
| — | — | — | — | — | — | — |
| 5 | 8 | 6 | 10 | 7 | 4 | 9 |

## மூன்றின் கூட்டல்

ஒன்றை மூன்றுடனும் இரண்டை மூன்றுடனும் முன்கூட்டிப்பிள்ளை அறிந்துவிடுமாகையால் மூன்றின் கூட்டலில் இன்னும் ஐந்துண்மைகளையே அறியவேண்டும் அவை 3+3, 3+4, 3 + 5, 3 + 6, 3 + 7, என்பவைகளாம். 'அறியவேண்டும்' என்பதின் கருத்து எண்ணாமல் மறுமொழியை யூகித்து அறியவேண்டும் என்பதாம். பின்வரும் படம் மூன்றின் கூட்டலுக்கேற்றது.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | 6 | 3 | 5 | 7 | 1 | 2 |
| 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 |
| — | — | — | — | — | — | — |
| 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 |
| 9 | 6 | 3 | 5 | 7 | 1 | 2 |
| — | — | — | — | — | — | — |
| * | 3 | * | 3 | * | 3 | * |
| 3 | * | 3 | * | 3 | * | 3 |
| — | — | — | — | — | — | — |
| 7 | 4 | 6 | 8 | 10 | 4 | 5 |

இவ்வுண்மைகளை நன்றாய் அறியும் வரையும் பிள்ளைகள் நன்றாய்ப் பயிற்சி பெறவேண்டும். இரண்டின் கூட்டலுக்கு காட்டிய மற்றைய அப்பியாசங்களெல்லாம் மூன்றின் கூட்டலுக்கும் உபயோகிக்கலாம். இவ்வப்பியாசங்களின் நோக்கம் எண்ணியறிதலைத் தவிர்த்தலேயாகும். இதில் மனக்கணித அப்பியாசங்களே பெரும்பான்மையாய் நடைபெறும்.

## நான்கினதும் ஐந்தினதும் கூட்டல்

முற்கூறிய இருபத்தைந்து உண்மைகளில் இன்னும் ஐந்து உண்மைகளே படிப்பிக்கப்பட வேண்டியன. அவை 4+4, 4+5, 4+6, 5+5. இவற்றைப் பயிற்றுதற்குப் பின்வரும் அட்டவணையை மாணவர் போதிய பயிற்சி பெறும்வரை நன்கு உபயோகப்படுத்தவேண்டும்.

கூட்டல்:

| | | | |
|---|---|---|---|
| 4 | 4 | 4 | 5 |
| 4 | 5 | 6 | 5 |
| 8 | 9 | 10 | 10 |

மூன்றின் கூட்டலுக்குக் காட்டிய படத்தைப் போல நான்கிற்கும் ஆக்கிக் கொள்க.

### சுன்னக் கூட்டல்

சுன் கூட்டலைப்பற்றி இதுவரையும் ஒன்றும் சொல்லப்படவில்லை மற்ற உண்மைகளைப்போல நன்கு படிப்பிக்கப்படாவிட்டால் சுன்னக் கூட்டுதல் அதிக கஷ்டத்தைக் கொடுக்கும். சுன்னின் விலையை மற்ற எண்களின் விலையைப் படிப்பித்தபின் படிப்பித்திருந்தால் சுன்னக் கூட்டவும் பயிற்றலாம். வெற்றி பெறும் விளையாட்டுக்களில், முதலாம் ஆட்டத்தில் மூன்று வெற்றி பெற்றபிள்ளை இரண்டாம் ஆட்டத்தில் ஒன்றும் பெருவிட்டால் மொத்தத்தில் அப்பிள்ளையின் வெற்றி மூன்றுதலை 3+0=3 என்று விளக்கலாம். இப்படியே வெற்றி விளையாட்டுக்கள் மூலம் (Scoring Games)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |

இக்கூட்டல் உண்மைகளைப் பயிற்றலாம். பின்னர் 3+0+2 என்ற மூன்றிலக்கக் கூட்டலையும் லம்பமாக எழுதி வெற்றி விளையாட்டுக்கள் மூலம் விளக்கலாம்.

## III-ம் பகுதி

### 45 கூட்டல் உண்மைகளில் இரண்டாம் பிரிவில் வரும் 20 உண்மைகள்

முற்கூறிய இருபத்தைந்து கூட்டல் உண்மைகளையும் மாணவர்கள் அறிந்தபின் முன்னரிலும் கஷ்டமான அப்பியாசங்களுக்குத் தகுதியானவர்களாவார்கள். முந்திய எண்ணல் அப்பியாசங்களில் 13, 14, 16 என்று பத்தின், மேற்பட்ட எண்களை யெண்ணி அறிந்திருப்

பார்கள். அவற்றைச் சொல்லும் பொழுது பத்தோடு கூடிய 3, பத்தோடு கூடிய 4, பத்தோடுகூடிய 6 என்ற கருத்தை விளக்கும் 'பதி'என்ற சொல் முன்னிருக்தலை விளக்கவேண்டும். அதாவது பத்தும் ஆறும் பதினாறு என்று விளக்க வேண்டும். மணிகள் மூலம் அல்லது வேறு பொருள்கள் மூலம் 10............19 முடிய உள்ள எண்களை யெண்ணி அவற்றில் 10உம் 1உம், 10உம் 2உம், என்று முறையே பாகுபாடு செய்து 10+1=11 10+2=12 என்று எழுதிப் படிப்பிக்க வேண்டும். இப்பொழுது பிள்ளை மணிச்சட்டங்களைத் தங்களுக்குள் மாற்றிக்கொள்ளச் செய்வதின் மூலம் குறித்த உண்மைகளைப் படிப்பிக்கலாம். உதாரணமாக ஒருபிள்ளை எட்டு மணிகளுள்ள சட்டத்தையும் ஏழு மணிகளுள்ள சட்டத்தையும் ஒரு பிள்ளையிடம் கொடுத்துப் பத்துமணிகளுள்ள பெரிய சட்டம் கேட்டால் அந்தப் பிள்ளை இரண்டையும் எண்ணி, ஒரு பத்துமணிகளுள்ள சட்டத்தையும் ஒரு ஐந்துமணிகளுள்ள சட்டத்தையும் கொடுக்க வேண்டுமென அறிவான். அப்படியே 9, 5, 8 உள்ள மணிச்சட்டங்களை மாற்றித் தரும்படி கேட்டால் இரண்டு பத்து மணிச்சட்டத்தையும், ஒரு இரண்டு மணிச்சட்டத்தையும் கொடுக்க வேண்டும். இத்தகைய விளையாட்டுக்களை மகிழ்ச்சியோடும் நாளடைவில் விரைவாகவும் செய்ய முயலுவார்கள். இத்தகைய அப்பியாசம் நடைபெற்ற பின்பே வழக்கமான பெரிய எண்களின் கூட்டல் நடைபெறும்.

## பத்தின் கூட்டல்


பிள்ளைகள் முன் பெற்ற பயிற்சியினால் பின்வரும் அப்பியாசத்தைப் பார்த்தமாத்திரத்தே சேர்த்து 16, 17 என்று சொல்லக் கூடியவர்களாவார்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | 7 | 8 | 4 | 3 | 5 |
| 10 | 10 | 10 | 10 | 10 | 10 |
| — | — | — | — | — | — |

## ஒன்பதின் கூட்டல்

ஒன்பதுடன் எண்களைக் கூட்டுதல் கற்கப்புகும் 20 உண்மைகளில் மிக இலகுவானவை. 9 மணிகளுடன் 4 மணியைக்கூட்டுவதா

னால் 9 மணியை 10 ஆக்கி 10உம் 3உம் 13 என்று 10ன் கூட்டலிற் பெற்ற பயிற்சியினால் மிக இலகுவாகச் சொல்லி விடுவார்கள். இந்த உண்மையை 9 மணிச் சட்டத்தையும், 4 மணிச்சட்டத்தையும் கொடுத்து, 10 மணிச்சட்டத்தையும், 3 மணிச்சட்டத்தையும் பெற்றுக்கொண்ட காலத்தில் அறிந்திருப்பார்கள். மேலும் பின்வருமாறு கரும்பலகையில் அல்லது கடதாசியில் எழுதியும் விளக்கலாம்.




9+4 = 10+3

பத்தாக்கிக் கூட்டும் இம்முறையை விளக்கியதும் பின்வருமட்டவணை குறித்த கூட்டல் உண்மைகளை அறிதற்கு உபயோகப்படுத்தப்படவேண்டும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9 | 9 | 9 | 9 | 9 | 9 | 9 |
| 6 | 8 | 5 | 7 | 9 | 4 | 3 |
| 15 | 17 | 14 | 16 | 18 | 13 | 12 |

மேற் கூட்டல்களில் பதினைந்திலுள்ள 5 ஐயும் பதினேழில் உள்ள 7 ஐயும் மேலுள்ள 8 ஐயும் கூட்டி 10 உடன் ஒன்று குறைந்த எண்ணைக் கூட்டுவதே 9 உடன் அவ்வெண்ணைக் கூட்டுதலாகுமென்று காட்டிவிட்டால் 9ன் கூட்டல் உண்மைகளைச் சுலபமாக ஞாபகித்துச் சொல்லுவார்கள். இவ்வுண்மையிற் போதிய பயிற்சியடையும் வரை

யும் பலவித அப்பியாசங்கள் செய்தல் வேண்டும். உதாரணமாகக் கீழ்க்காட்டிய கணக்குகளையும் முன்போற் செய்விக்கவேண்டும்.

| | |
|---|---|
| 9+ | =15 |
| +9 | =17 |
| 9+ | =14 |
| +9 | =16 |

| | |
|---|---|
| 9+ | =18 |
| +9 | =13 |
| 9+ | =12 |
| 0+ | = 9 |

விரைவாகக் கூட்டும் பிள்ளைகளுக்கு அவர்களறிந்த உண்மைகளுள்ள பின்வரும் அப்பியாசத்தைக் கொடுக்கலாம். முதலிரு எண்களைக் கூட்டும்வரை மூன்றாம் எண் மறைபட்டிருக்க வேண்டும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | 3 | 2 | 8 | 4 | 3 | 1 |
| 5 | 6 | 7 | 1 | 5 | 1 | 2 |
| 6 | 8 | 5 | 7 | 9 | 9 | 9 |
| — | — | — | — | — | — | — |

## எட்டின் கூட்டல்

முதல் 10 எண்களுடனும் எட்டைக் கூட்டுதலை முன் காட்டிய பொதுவான முறைப்படியே படிப்பிக்கலாம். ஆறு வயதுள்ள விவேகமுள்ள பிள்ளை எட்டைப் பத்தாக்குவதற்கு எட்டுடன் கூட்டப்படும் எண்ணிலிருந்து இரண்டு எடுக்கப்படுதலை அறிந்து கொள்வான். எட்டுடன் கூட்டப்படுமெண்ணில் இரண்டு குறைந்தால் எதுவோ அதுவே பத்துடன் கூட்டிய எண்ணாகும். இவ்வப்பியாசங்களையும் மணிச்சட்டங்கள் கொண்டு செய்து காட்டவேண்டும். உதாரணமாக 8 மணிச் சட்டத்தையும், 6 மணிச் சட்டத்தையும் கொடுத்து, ஒரு 10 மணிச் சட்டத்தையும், ஒரு 4 மணிச் சட்டத்தையும் பெறுதல்.

இவ்வாறு கற்பிக்கப்படும் எட்டின் கூட்டலுண்மைகளைப் பின்வருமாறு எழுதிக்கொள்க,

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | 8 | 8 | 8 | 8 | 8 |
| 6 | 8 | 4 | 7 | 5 | 3 |
| 14 | 16 | 12 | 15 | 13 | 11 |

உபாத்தியாயர் முதலாம் கணக்கிலுள்ள 6ல் 2குறைந்து 4 வருவதையும், 2ம் கணக்கில் 8ல் 2குறைந்து 6 வருவதையும் காட்டினால் பிள்ளைகள் இலகுவில் அறியக்கூடும். இவ்வாறே வெவ்வேறு எண்களுடன் கூட்டப்படும் பலவகையான அப்பியாசக்கணக்குக்களையும், முன்னறிந்த உண்மைகளுள்ள 2, 3, இலக்கக் கூட்டல்களைத் திகாந்தமாகவும் லம்பமாகவும் எழுதியும், கூட்டப்பயிற்றவேண்டும்.

உதாரணம் $3 + 5 + 6 =$

$3 + 5 + 6 =$ $7 + 1 + 8 =$

$6 + 2 + 8 =$ $4 + 4 + 7 =$

## ஆறு ஏழு என்னும் எண்களைக் கூட்டல்

கூட்டலில் இன்னும் ஆறு உண்மைகளே படிப்பிக்கப்படவேண்டியன. பிள்ளைகள் இவற்றை எண்ணி ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். அல்லது பின்வரும் கூட்டல் உண்மைகளை ஞாபகப்படுத்தும்படி கொடுக்கவேண்டும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அவை | 7 | 7 | 7 | 6 | 6 |
| | 4 | 5 | 7 | 5 | 6 |

மேற்காட்டிய இலகுவான கூட்டலில் கவனிக்கவேண்டிய குறிப்புக்கள்:

1. பெரும்பான்மையான அப்பியாசம் மனக்கணிதமாக நடைபெறும். கூட்டலுண்மைகளை மனத்திற் பதித்தற்கு, ஏற்றபல விளையாட்டுக்களைக் கைக்கொள்ளல் அவசியம்.

2. பிள்ளைகள் கைவிரலை மடித்து எண்ணுதலை உபாத்தியாயர் தடுக்கவேண்டும். இப்பொழுதும் பிள்ளைகள் எண்ணியேஅறிய வேண்டியவர்களாயிருந்தால் மணிகளை எண்ணுவதுபோல, கைவிரலையும் எண்ணக்கூடும். கைவிரலை மடித்து எண்ணுவதைத் தடுத்தற்குரிய ஒரே வழி கூட்டலுண்மைகளைப் படிப்படியாக நன்கு

பயிற்றுவதேயாகும். கூட்டாமல் அவ்வுண்மைகளையெல்லாம் தடையின்றிச் சொல்லத்தக்கவிதமாகப் போதிய அப்பியாசம் செய்ய விடப்படல்வேண்டும்.

3. பின்வரும் கூட்டல் உண்மைகளைக் காட்டும் அட்டவணையொன்றைச் செய்துகொள்க.

| (a) | (b) | (c) | (d) | (e) |
|---|---|---|---|---|
| 0 + 1 | 0 + 2 | 0 + 3 | 0 + 4 | 0 + 5 |
| 1 + 1 | 2 + 2 | 3 + 3 | 4 + 4 | 5 + 5 |
| 2 + 1 | 3 + 2 | 4 + 3 | 5 + 4 | |
| 3 + 1 | 4 + 2 | 5 + 3 | 6 + 4 | |
| 4 + 1 | 5 + 2 | 6 + 3 | | |
| 5 + 1 | 6 + 2 | 7 + 3 | | |
| 6 + 1 | 7 + 2 | | | |
| 7 + 1 | 8 + 2 | | | |
| 8 + 1 | | | | |
| 9 + 1 | | | | |
| 0 + 9 | 0 + 8 | 0 + 6 | 0 + 7 | 0 + 0 |
| 2 + 9 | 3 + 8 | 5 + 6 | 4 + 7 | |
| 3 + 9 | 4 + 8 | 6 + 6 | 5 + 7 | |
| 4 + 9 | 5 + 8 | 7 + 6 | 7 + 7 | |
| 5 + 9 | 6 + 8 | | | |
| 6 + 9 | 7 + 8 | | | |
| 7 + 9 | 8 + 8 | | | |
| 8 + 9 | | | | |
| 9 + 9 | | | | |

ஐந்துவயதான பிள்ளை மேற்படி அட்டவணையில் உள்ள (a) (b) அட்டவணைகளை மனனம் செய்யக்கூடும். ஆறுவயதான பிள்ளை முழுவரிசைகளையும் கற்கக்கூடுமாயினும் (a) (b) (c) (d) (c) என்னும் ஐந்து வரிசைகளையே மனனம் செய்யக்கூடும். ஏழுவயதான பிள்ளை எல்லாவரிசைகளிலுமுள்ள உண்மைகளையும் நன்றாக ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டும்.

4. திகாந்தமாகவும், லம்பமாகவும் எண்களை எழுதிக் கூட்டப்பயிற்றவேண்டும். எனினும் லம்பமாக எழுதிக்கூட்டலில் கூடிய கவனஞ் செலுத்தவேண்டும். ஏனெனில் அம்முறை தானவிலையை அறிதற்கு உதவுவதுடன் வாழ்க்கையிலும் அதிகம் உபயோகப் படுகிறது.

## இருபதின் மேற்பட்ட எண்களின் கூட்டல்

ஆறுவயதான விவேகமுள்ள பிள்ளைகளும், ஏழுவயதுப் பிள்ளைகளும் இரு தானக்கூட்டல் செய்யக் கூடியவர்களாய் இருப்பார்கள். தொடக்கத்தில் 2 தானங்களுடன் ஒருதான எண்ணைக் கூட்டுவதில் போதிய அப்பியாசம் கொடுப்பது நன்று. இக் கணக்குகளைச் சீக்கிரமாகச் செய்வதற்கு முதலாந்தானத்தைக் கூட்டிவரும் மறுமொழி அவர்கள் முன்னறிந்த உண்மைகளாயிருத்தலை அவதானிக்கச் செய்யவேண்டும். உதாரணமாக 4உம், 2உம் ஆறுவதுபோல 12ஐயும் 4ஐயும் கூட்டும்பொழுது 16 எனக் கடைசியில் ஆறுவருவதைக் கவனிக்கச்செய்யவேண்டும்.

பின்வரும் கணக்குக்கள் போன்ற பல கணக்குக்களைச் செய்ய ஏவலாம். இவற்றில் உள்ள உண்மைகள் பாலர் அறிந்தனவாயும் பத்துக்கள் மாறுபடாமலும் இருக்கும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 42 | 34 | 23 | 13 | 14 |
| 3 | 2 | 4 | 5 | 5 |
| — | — | — | — | — |

இவற்றை மணிச்சட்டத்திலும் பிள்ளைகள் செய்துபார்க்கலாம். அப்பொழுது அவர்கள் 42+3 என்பது 4 பத்து மணிச்சட்டங்களும் ஒரு 5 மணிச்சட்டமுமென அறிவார்கள். இவ்வித அப்பியாசம் முடிந்தபின், பின்வருமப்பியாசம்போன்ற கணித அப்பியாசங்கள் கொடுக்கலாம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | 12 | 22 | 4 | 14 | 34 |
| 8 | 8 | 8 | 6 | 6 | 6 |
| — | — | — | — | — | — |
| 10 | 20 | 30 | 10 | 20 | 40 |

இதிலும் முதலாந் தானக்கூட்டலில் உள்ள உண்மைகள் அவர்களறிந்தனவே. ஆனால் முந்திய பத்துக்களுடன் ஒவ்வோர் பத்துக் கூட்டப்பட்டிருத்தலை மறுமொழியிற் காண்பார்கள். உதாரணமாக 12ல் ஒருபத்து இருந்தது. அதனுடன் 8ஐக் கூட்ட வரும் மறுமொழியில் இன்னோர்பத்துக்கூடுகிறது. இவ்வப்பியாசங்களையும் மணிச்சட்டத்தில் செய்யவேண்டும்.

அடுத்தபடியாக பின்வரும் வகையான கணக்குக்கள் கொடுக்கவேண்டும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | 12 | 22 | 5 | 15 | 35 |
| 9 | 9 | 9 | 6 | 6 | 6 |
| — | — | — | — | — | — |
| 11 | 21 | 31 | 11 | 21 | 41 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | 14 | 44 | 5 | 15 | 25 |
| 4 | 8 | 8 | 7 | 7 | 7 |
| 12 | 22 | 52 | 12 | 22 | 32 |

இவற்றையும் முன்போலவே மணிச் சட்டத்திற் செய்துபார்க்க வேண்டும்.

இவ்வப்பியாசங்களில் பெரும்பான்மையானவை மனக்கணித மானவை. ஆனால் சிறிதளவான எழுத்துவேலையும் இடையிடையே அவர்கட்கு விருப்பத்தை ஊட்டக்கூடும். பின்வரும் வகையான அப்பியாசங்கள் இனிமேற் கற்பிக்கப்படலாம்.

| ப . | ஒ |
|---|---|
| 1 | 8 |
| +1 | 5 |
| 3 | 3 |

| ப . | ஒ |
|---|---|
| 2 | 4 |
| 1 | 8 |
| 4 | 2 |

| ப . | ஒ |
|---|---|
| 3 | 8 |
| 2 | 3 |
| 6 | 1 |

இவற்றைப் படிப்பிக்கும்பொழுது $8+5=13$ என அவர்கள் அறிவார்கள் அது ஒருபத்தும் ஒரு மூன்றும் சேர்ந்ததெனவும் அறிவர். அம் மூன்றைக் கீழே எழுதி ஒருபத்தை மற்றைய பத்துக்களுடன்சேர்த்து மூன்று பத்தாக்கவேண்டும். இம் முறையிற் கூட்ட நன்றாக அறியும்வரையும் இவ்வாறே சொல்லிச் சொல்லிக் கூட்டவேண்டும். அதற்கேற்ற இலகுவான கணக்குக்கள் கொடுபடலவசியம். இக் கூட்டல்களில் பிள்ளைகள் ஓர் புதிய உண்மையையும் படிக்கவில்லை. அவர்கள் அறிந்ததைப் பிரயோகித்தலே நடைபெறும். பின் வரும் கணக்குக்களைக்கொடுத்து இரண்டுபத்தைமற்றையபத்துக்களுடன் சேர்த்தலையும் காட்டவேண்டும். இன்றேல் எப்பொழுதும் ஒருபத்தைத்தான் பத்துக்களுடன் கூட்டவேண்டுமென எண்ணிக்கொள்வார்கள்.

| ப . | ஒ |
|---|---|
| 3 | 8 |
| 2 | 7 |
| 1 | 8 |
| 8 | 3 |




ஆசிரியரும் ஆசிரிய (விடுகை வகுப்பு) மாணவரும் (1934-1936)

# நாவலன் பிள்ளைத்தமிழ்

(வி. சுப்பிரமணியம்)

திருவா ரணியு முயர்திருநெல் வேலியதனி லாசிரியர்
செல்வக்கழக வெளியீடே தெய்வத்தமிழே செந்தமிழே
பரிவா ரணியும் கலைத்தொடையே பண்பாய் நீயாண்டாறதனிற்
பயிலுங்கையா லெழுதவெழு பண்பார்தமிழே யீராண்டிங்
குருவா ரணியு மச்சேறி யுலகோர் போற்ற வோங்குநெறி
உவந்தே வருநற் றமிழ்த்தேனே யுண்மைத்திருவே வருகவுன
தொருவா ரணிசிற் றிற்பருவ முடையாய் வருக வோங்குமணி
யுண்மைத் திருவார் நாவலனே யுவந்தோம் வருக வருகவே.

---

# திருநெல்வேலி சைவாசிரியகலாசாலை
## மாணவ சங்க அறிக்கை 1935—1936.

இச் சங்கம் சென்ற ஆண்டுகளைப்போலவே இவ்வாண்டும் உழைத்து வருகின்றது. மானிடனின் பருவம் எப்படி ஏழுவருடங்களுக்கொருமுறை மாறுகின்றதோ அப்படியே இச்சங்கமும் தனது ஏழாவது ஆண்டு நிறைந்தவுடன் அநேக மாற்றங்களை யடைந்தது. அங்கத்தவர்கள் தொகை 61 ஆக மாறியது. இம்மாற்றமும் இச்சங்கத்தின் வளர்ச்சிக்கு மிகவும் உதவியாயிருந்தது. இதுகாறும் அங்கத்தவர்களுக்கிடையில் இருந்த வகுப்புவாதமும் நீங்கி விட்டது. விசேடமாகச் சென்ற ஆண்டு இருந்த வகுப்பு வாதத்தையே இங்கு குறிப்பிட்டாம். முதலாம் வருடம் இரண்டாம் வருடம் என்ற வகுப்பு வித்தியாசமின்றி இருவகுப்புமாணவர்களும் எல்லா விஷயங்களிலும் பங்குபற்றினார்கள். விசேடமாக முன் "இரண்டாம் வருட மாணவர் ஒருவர்க்கே அக்கிராசன பதவி உரித்து" என்றமுறை கையாளப்பட்டு வந்தது. ஆனால் சென்ற வருடம் அம்முறை, நியமிக்கப்பட்ட அக்கிராசனரன்றி "இரண்டாம் வருட மாணவருள் தெரியப்பட்ட ஒருவர் பொதுக் கூட்டங்கட்கு அக்கிராசனராகலாம்" என மாற்றப்பட்டது. அம்மாற்றத்தைத் துணையாகக்கொண்டு முதலாம் வருடமாணவர்க்கும் அவ்வுரித்திருத்தல் வேண்டுமென வாதிக்கப்பட்டது. அதனை இவ்வருடமுதல் கூட்டத்திலேயே மாற்றி இருவித அக்கிராசன பதவிக்கு எவருமிருக்கலாமெனத் தீர்மானிக்கப்பட்டுக் கையாளப்பட்டு வருகின்றது.

இவ்வாண்டில் எட்டுக் கூட்டங்களே நடைபெற்றன. இவற்றில் இரு கூட்டங்களில் "நாவலன்" பத்திரிகையும் எஞ்சிய ஆறு கூட்டங்களில் அநேக கல்விபயிற்றல் சம்பந்தமான விஷயங்களும் எடுத்துக்கொள்ளப்பட்டன. யாழ்ப்பாணக் கல்லூரிப் பிரதமாசிரியராயிருக்கும் Rev. John Bicknell அவர்கள் "கல்வி" என்னும் விஷயமாகக் கார்த்திகை மாதம் 4-ந் தேதி ஓர் அரிய விரிவுரை நிகழ்த்தினர். அன்றி இவ்வாண்டு வைகாசி மாதம் 26-ந் தேதி அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தலைமைத் தமிழ்ப்போதகாசிரியராகக் கடமைபார்க்கும் சைவத்திருவாளர் K. சோமசுந்தரபாரதி M. A., B. L. அவர்கள் "சைவமும் தீண்டாமையும்" என்னும் பொருள்பற்றி ஓர் அரிய விரிவுரை நிகழ்த்தினர். இப்பெரியார்கட்கு இச்சங்கத்தாரின் நன்றியறிதல் எக்காலத்தும் உரியதாக.

த. விநாயகமூர்த்தி
செ. சரவணமுத்து
செயலாளர்கள்.

———

## 1935 ஐப்பசி மீ — 1936 வைகா

### இச்சங்க ஆதரவின்கீழ் நடைபெற்ற கூட்

| தேதி | அக்கிராசனர் | நிகழ்ச்சிகள் |
|---|---|---|
| 23-10-35 | அதிபர் | சங்க உறுப்பினர்கள் தெரிவு |
| 4-11-35 | அதிபர் | விரிவுரை: "கல்வி" |
| 7-11-35 | திரு. கா. தம்பிப்பிள்ளை | 1 "கலிங்கத்துப்பரணி" 2 "புறநானூறும் தமிழர் நாக 3 "விவேகப்பரீட்சை" |
| 28-11-35 | திரு. அ. வ. சுப்பிரமணியம் | 1 "திருவாசகம்" 2 "நாவலன்" (பத்திரிகை) 3 "ஒருசடையும் திரிசடையும் |
| 4- 2·36 | திரு. கா. தம்பிப்பிள்ளை | 1 "பாலரும் புலப்பயிற்சியும்" 2 "கம்பர் கவிநயம்" |
| 3- 3-36 | திரு. கா. தம்பிப்பிள்ளை | தர்க்கம்: "தனித்தமிழ்இயக்கம்பொருத்தப |
| 12- 5-36 | திரு. சு. கந்தசுவாமி | 1 "கௌதமபுத்தர்" 2 "நாவலன்" (பத்திரிகை) 3 "தமிழரும் அரசாங்கசபையும் |
| 25- 5-36 | திரு. மு. ஆறுமுகம் | 1 "செய்ந்நன்றி" 2 'ராவ்பகதூர்சி.வை.தாமோதரப் |
| 26- 5-36 | அதிபர் | விரிவுரை: "சைவமும் தீண்டாமையும்" |

— 1936 வைகாசி மீ வரைக்கும்

...ின்கீழ் நடைபெற்ற கூட்டங்களின் விபரம்.

| | நிகழ்ச்சிகள் | பேச்சாளர் |
|---|---|---|
| | சங்க உறுப்பினர்கள் தெரிவு | |
| | விரிவுரை:<br>"கல்வி" | Rev. J. Bicknell |
| | 1 "கலிங்கத்துப்பரணி"<br>2 "புறநானூறும் தமிழர் நாகரீகமும்"<br>3 "விவேகப்பரீட்சை" | திரு. வ. நடராசா<br>திரு. ஆ. சிதம்பரப்பிள்ளை<br>திரு. அ. குமாரசுவாமி |
| ...பம் | 1 "திருவாசகம்"<br>2 "நாவலன்" (பத்திரிகை)<br>3 "ஒருசடையும் திரிசடையும்" | திரு நா. கந்தையா<br>பத்திராதிபர்<br>திரு. கா கதிரிப்பிள்ளை |
| | 1 "பாலரும் புலப்பயிற்சியும்"<br>2 "கம்பர் கவிநயம்" | திரு. செ. ஐயாத்துரை<br>திரு. வே. கணபதிப்பிள்ளை |
| | தர்க்கம்:<br>"தனித்தமிழ்இயக்கம்பொருத்தமானது" | வாதிகள்<br>1 திரு. சு. கந்தையா<br>2 திரு. நா. கந்தையா<br>பிரதிவாதிகள்:<br>1 திரு. த. சுப்பிரமணியம்<br>2 திரு. த. பாலசுப்பிரமணியம் |
| | 1 "கௌதமபுத்தர்"<br>2 "நாவலன்" (பத்திரிகை)<br>3 "தமிழரும் அரசாங்கசபையும்" | திரு. கா. தம்பிப்பிள்ளை<br>பத்திராதிபர்<br>திரு. க. அருணாசலம் |
| | 1 "செய்ந்நன்றி"<br>2 'ருவ்பகதூர்சி.வை.தாமோதரப்பிள்ளை' | திரு. மு. இராசதுரை<br>திரு. ச. வேலுப்பிள்ளை |
| | விரிவுரை:<br>"சைவமும் தீண்டாமையும்" | திரு. க. சோமசுந்தரபாரதி<br>M.A., B.L. |

த. விநாயகமூர்த்தி

சே. சரவணமுத்து

செயலாளர்கள்.

# பத்திராசிரியர் குறிப்புக்கள்

சங்கீதம்: வட இலங்கைச் சங்கீதசபையாரின் ஆதரவில் ஸ்ரான்லி அரசினர் பாடசாலையில் நடத்தப்பட்ட சங்கீத வகுப்பிற்கு, சென்ற வருடம் தராதரப்பத்திரங்கள் வழங்கப் பெற்றவர்களுட் சில ரும் புதிய வருட மாணவருட் சிலருமாக 24 பேர் சென்று படித்து ஒருவர் முதலாம் பிரிவிலும் ஆறுபேர் இரண்டாம் பிரிவிலும் ஏனை யோர் மூன்றாம் பிரிவிலும் சித்தியடைந்து தராதரப்பத்திரங்கள் வழங்கப் பெற்றனர்.

சித்தாந்தம்: கொழும்பு விவேகானந்த சபையாரால் 1935-ம் ஆண்டு வைகாசியில் நடாத்தப்பட்ட சித்தாந்த பாலபண்டித பரீ சைஷக்கு 24 பேர் தோற்றினர். 16 பேர் சித்தியடைந்தனர். அவர் களுள் ஒருவராகிய திரு. பொ. சின்னத்துரை சபையாரால் வழங்கப் படும் தங்கப்பரிசிலுக்கு உரித்தாளியானுர்.

கிருஷிகபாடசாலை: வழக்கம்போல இவ்வருட 2-ம் வருட மாணவர் சனிக்கிழமைதோறும் கிருஷிக பாடசாலைக்குச் சென்று நாட்டுச்சீவன சாஸ்திரத்தில் விசேட கல்வி கற்று வருகின்றனர். இதற்காக திரு. குணரத்தினம் அவர்களுக்கு எமது நன்றி உரியதாக.

விரிவுரைகள்: (1) யாழ்ப்பாணக்கல்லூரி அதிபராகிய Rev. J. Bicknell அவர்கள் "கல்வி சம்பந்தமாய் ஆகாரமற்ற நம் பிக்கைகள்" என்னும் விடயம் பற்றி ஓர் விரிவுரை நடத்தினுர்கள். வேண்டிய விஷயங்கள் உதாரணமுறையாக நன்கு அறிவுறுத்தப்பட் டன. இதற்காக எமது சமது சங்கம் அப்பெரியார்மாட்டு விசேட நன்றி பாராட்டுகிறது.

(2) பேராசிரியர் திரு. சோமசுந்தர பாரதி M. A., B. L. அவர்கள் வைகாசிமீ 26உ "சைவமுந்தீண்டாமையும் என்னும் பொருள் பற்றி எமக்கு நல்லறிவூட்டியமைக்காக எமது சங்கம் விசேட நன்றியைச் செலுத்துகிறது.

புதிய கட்டிடம்: சைவாசிரிய கலாசாலைப் புதிய கட்டிடம் மலாய்நாட்டன்பர்களின் பேருதவியால் சென்ற கார்த்திகைமீ 5உ இரவு 12 மணியளவில் யோகர்சுவாமி அவர்களால் அத்திவாரக்கல்

இடப்பட்டது. இப்பொழுது அத்திவாரம் வெட்டப்பட்டு N. வைத்தியலிங்கம் கம்பனியாரின் மேற்பார்வையின்கீழ் கட்டிடவேலை நன்கு நடைபெறுகிறது. அவ்வேலை விரைவில் முடிந்து நமக்கு இன்பமளித்து சைவாசிரிய கலாசாலையின் புகழை மேன்மேல் வளர்க்குமென்பதற்கு யாதொரு ஐயமுமின்று. இக்கட்டிடம் அவசியமெனக் கண்ட அன்பர்கட்கும் பொருளுதவிய நன்மக்கட்கும் சை. வி. வி. சங்கம் யாது கைம்மாறு செய்யவல்லது. அவர்களுதவி கைம்மாறு வேண்டா மாரியது உதவியை ஒத்தது.

புதியமாணவர்கள்: இவ்வருடம் ஆசிரியமாணவர்கள் 37 பேர் புதிதாகக் கல்விபயில்கின்றனர். அவர்களுள் 36பேர் "மற்றிக்குலேசன்", "சீனியர்", "பிறிலிம்" முதலிய ஆங்கில பரீக்ஷைகளிற் றேறினோராவர். ஒருவர் ஆசிரிய தராதரப் பத்திரப் பரீக்ஷையிற் றேறியவர். ஆங்கிலங்கற்றவர்கட்குரித்தாய குணங்களுட் டலைநின்ற விசேட ஒற்றுமை இவர்கள்மாட்டு நிரம்ப உண்டு. அவர்களது ஊக்கத்தினுலும் இவ்வெளியீடு தூண்டப்பெற்றது. இவ்வாறு ஒற்றுமையுடையவரெனக் கூறின் அவரின் பிரிந்து நின்று கூறுகிறோம் என்னும் குற்றத்தின்பாற்பட நேரிடும். ஆனுல் நம்மாட்டில்லாத விசேட தன்மையுண்மையாற் கூறினேமென்க.

புதிய ஆசிரியர்கள்: நமது கலாசாலைக்கு திரு. ம. வயித்திலிங்கம் அவர்கள் ஆசிரியராக 2 வது தவணையில் நியமிக்கப்பட்டு தமது வசதியீனங்காரணமாகப் பாடசாலையினின்றும் நீங்க திரு. R. நடராசா அவர்கள் நமது ஆசிரியராகக் கடமைபார்த்து வருகின்றனர். புதிய ஆசிரியர் செய்யும் தொண்டு நற்றெண்டாகுக.

தேகாப்பியாசம்: எமது சிரமப்பயிற்சிப் பரீக்ஷை முடிவு பெற்றது. திரு. சி. வைத்திலிங்கம் அவர்கள் கைம்மாறுவேண்டாது, வேண்டிய உதவி செய்ததற்காக நாம் நன்றி பாராட்ட வேண்டியவர்களாகிறோம்.

ஆரியதிராவிட பரீக்ஷை: யாழ்ப்பாணம் ஆரியதிராவிடபாஷாபிவிருத்திச்சங்கத்தாரால் நடத்தப்படும் பாலபண்டித பரீக்ஷைக்கு 2-ம் வருடமாணவருள் 9 பேர் தோற்றியிருக்கின்றனர். பிரவேச பரீக்ஷைக்கு 1-ம் வருடத்தவருள் ஒருவர் தோற்றியிருக்கின்றனர்.

சாதனுபாடசாலை: சாதனுபாடசாலைக் கட்டிடம் நமது கலாசாலைக்கு அண்மையில் புதிகாக அமைக்கப்பட்டிருக்கிறது. அப்பாட

சாலையில் நாலாம் வகுப்பிற்கு மேற்பட்ட பிள்ளைகள் கல்வி கற்று வருகின்றனர். நமக்கு அண்மையிலிருப்பதால் மிக வசதியுடையதாயிருக்கிறது. எஞ்சிய வகுப்புமாணவர்களும் விரைவில் ஆசிரியகலாசாலைக்குக் கிட்டிய இடத்தை அடைவார்கள் போலும்.

நூல் நிலையம்: சைவாசிரியகலாசாலை மாணவர்கள், ஆசிரியர்களின் உபயோகத்துக்காக இக்கலாசாலையில் 800க்கு அதிகமான புஸ்தகங்களுண்டு. அவை

| | | |
|---|---|---|
| 1. | இலக்கிய நூல்கள் | 263 |
| 2. | கல்விபயிற்றல் நூல்கள் | 102 |
| 3. | மானதசம்பந்தமான நூல்கள் | 18 |
| 4. | சுகாதார தேகப்பயிற்சி நூல்கள் | 15 |
| 5. | கணிதநூல்கள் | 33 |
| 6. | சாஸ்திர நூல்கள் | 66 |
| 7. | பூமிசாஸ்திரம் | 80 |
| 8. | வரைதல் | 6 |
| 9. | கைவேலை | 2 |
| 10. | சமயம் | 30 |
| 11. | அகராதி | 41 |
| 12. | Encyclopedia Brittanicca (தொகுதிகள்) | 35 |
| 13. | வேதாந்தகேசரி, வேதாந்தம் பிரபுத்தபாரத முதலிய சமயசஞ்சிகைகளும் வேறு சஞ்சிகைகளும் | 96 |

இவைகளேயன்றி நமது வாசிகசாலை சரித்திர சம்பந்தமான படங்களுக்கும் வேறு படங்களுக்கும் புதிய முறையான பூகோளத்துக்குமாக ஏறக்குறைய 1000 ரூபாவரையில் செலவழித்து அமெரிக்காவிலிருந்து பெற்றிருக்கிறது.

இவைகளன்றி தமிழ்ப்பத்திரிகைகளும் ஆங்கிலப்பத்திரிகைகளும் சென்ற வருடம் வந்ததுபோலவே இம்முறையும் வருகின்றன. வாசிகசாலை ஒழுங்கும் சென்றமுறைபோலவே நடைபெற்று வருகிறது.

ஆராய்ச்சிக் கட்டுரைகள்: சென்றவருட மாணவரால் எழுதப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பெற்றுச் சென்ற வித்தியாபகுதியார் அவைகளைப்பற்றிய முடிவுகளை நமக்கு அறிவியாமையான் மாண

வர் ஆராய்ச்சிக்கட்டுரைகள் விஷயமாக ஊக்கம் கொள்ளாது குழூஉ முறையாக நாலு ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியிருக்கின்றனர். அவை:—

1. விவேகப்பரீக்ஷை,
2. விருத்திக்கிரமம்,
3. தேனீ வளர்த்தல்,
4. பண்டைக்காலத் தமிழரின் சுதேச விளையாட்டு என்பன.

பழைய மாணவர் நன்றி: நமது ஆசிரிய கலாசாலை வெளியீடு இனிது நடைபெறுதற்கு, முற்பட்டு விஷயங்கள் எழுதி உதவிய பழைய மாணவர்கட்கு நாம் நன்றி செலுத்தக் கடப்பாடுடையேம். அன்றி அநேக விஷயங்கள் இலக்கிய சம்பந்தமாக நமக்கு அனுப்பப் பட்டமையின் அவ்விஷயங்களெல்லாம் பத்திரிகையில் இடம்பெறின் இலக்கிய விஷயங்க ளதிகப்படுமாகையால் சில விஷயங்கள் பத்திரி கையில் இடம்பெறாது, முற்பட்ட சில விஷயங்கள் இடம் பெற்றன.

வித்தியாதிகாரி: சென்ற மாசிமீ 18உ ஆசிரிய கலாசாலை களின் வித்தியாதிகாரி திரு. W. R. உவாற்சன் B. A., B. SC; அவர்கள் தமது உத்தியோக கடமை காரணமாக நமது கலாசாலைக் குச் சமுகமளித்து, ஆசிரிய கலாசாலைகளில் இலக்கணம் கற்பிக்கப் படவேண்டுமென்று தாம் விரும்புவதாகக் கூறினர். பின் மாதிரிப் பாடம் நடைபெற்றது. வேண்டிய குறிப்புக்கள் சொல்லி தமது பாலர் அனுபவ ஆராய்ச்சியையும் விளக்கி எமக்கு விசேட நல்லறி வூட்டியும் ஊக்கமளித்தும் சென்றனர்.

வெளியீட்டு வரவு: எங்கள் கலாசாலைக்கு யாழ்ப்பாணக் கல் லூரியி லிருந்தும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியி லிருந்தும், தெல் லிப்பழை மகாஜன ஆங்கில வித்தியாசாலையி லிருந்தும் வெளியீடுகள் வந்தன. வெளியீடு அனுப்பிய கல்லூரி அதிகாரிகட்கு நன்றி கூறு கின்றோம்.

# கற்றுத் தேர்ந்த மாணவர்கள்

## 1935

1 மு. சுப்பிரமணியம்
2 கா. கதிரிப்பிள்ளை
3 வ. செல்லத்துரை
4 இ. சின்னையா
5 க. சுப்பிரமணியம்
6 சி. கதிரவேலு
7 வ. சிதம்பரப்பிள்ளை
8 அ. இராசையா
9 மு. ஆறுமுகம்
10 இ. பொன்னையா
11 இ. நமசிவாயம்
12 சு. நாகலிங்கம்
13 க. கதிர்காமர்
14 கு. நடராசா
15 இ. நாகலிங்கம்
16 சு. ஏகாம்பரம்
17 க. இரத்தினம்

## 1936

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | வ. நடராசா | ஆ. தி. பாலபண்டிதர், | | கொ. வி. ச. சித்தாந்த [பாலபண்டிதர் | |
| 2 | அ. முருகேசு | ,, | பிரவேசம் | ,, | ,, |
| 3 | க. பரமசிவம் | ,, | ,, | — | — |
| 4 | செ. ஐயாத்துரை | ,, | ,, | கொ. வி. ச. சி. பா. ப | |
| 5 | பொ. சின்னத்துரை | ,, | ,, | ,, | ,, |
| 6 | மு. இராசதுரை | ,, | ,, | ,, | ,, |
| 7 | வி. சுப்பிரமணியம் | ,, | ,, | — | — |
| 8 | வே. கணபதிப்பிள்ளை | ,, | ,, | ,, | ,, |
| 9 | க. சிவலிங்கம் | ,, | ,, | ,, | ,, |
| 10 | வீ. மார்க்கண்டு | ,, | ,, | — | — |
| 11 | ஐ. சிவலிங்கபிள்ளை | ,, | ,, | — | — |
| 12 | க. நவரத்தினம் | — | — | — | — |
| 13 | த. பாலசுப்பிரமணியம் | | ,, | ,, | ,, |
| 14 | இ. கைலாயர் | ,, | ,, | ,, | ,, |
| 15 | கா. கதிரிப்பிள்ளை | ,, | ,, | ,, | ,, |
| 16 | த். சுப்பிரமணியம் | ,, | ,, | ,, | ,, |
| 17 | அ. குமாரசுவாமி | ,, | ,, | — | — |
| 18 | சு. முருகேசு | ,, | ,, | ,, | ,, |
| 19 | வே. தம்பு | — | — | — | — |
| 20 | க. ஐயாத்துரை | — | — | ,, | ,, |
| 21 | செ. சரவணமுத்து | ,, | ,, | ,, | ,, |
| 22 | இ. சரவணமுத்து | ,, | ,, | ,, | ,, |
| 23 | இ. கந்தையா | ,, | ,, | — | — |
| 24 | கா. தம்பிப்பிள்ளை | — | — | ,, | ,, |

## சங்கித பரீக்ஷை

| | | |
|---|---|---|
| 1 | க. பரமசிவம் | I-ம் வகுப்பு |
| 2 | சு. சரவணமுத்து | ,, |
| 3 | இ. கைலாயர் | II-ம் வகுப்பு |
| 4 | செ. ஐயாத்துரை | ,, |
| 5 | ஐ. சிவலிங்கபிள்ளை | ,, |
| 6 | மு. சி. சிவசுப்பிரமணியம் | ,, |
| 7 | கி. நாராயணபிள்ளை | ,, |
| 8 | சி. இராசரத்தினம் | ,, |
| 9 | க. ஐயாத்துரை | III-ம் வகுப்பு |
| 10 | இ. சரவணமுத்து | ,, |
| 11 | பொ. சின்னத்துரை | ,, |
| 12 | வி. சுப்பிரமணியம் | ,, |
| 13 | த. சுப்பிரமணியம் | ,, |
| 14 | அ. குமாரசுவாமி | ,, |
| 15 | சு. முருகேசு | ,, |
| 16 | க. சுப்பையா | ,, |
| 17 | சு. கந்தசுவாமி | ,, |
| 18 | ஆ. சிதம்பரப்பிள்ளை | ,, |
| 19 | ச. விஞசித்தம்பி | ,, |
| 20 | தா. வேலுப்பிள்ளை | ,, |
| 21 | வே. செல்லையா | ,, |
| 22 | சி. வன்னித்தம்பி | ,, |

UNIVERSITY OF JAFFNA
250041
ARCHIVES

University of Jaffna
250044
Library

ARCHIVES